# தமிழ்ப் பாடநூல்

( செய்யுள் – உரைநடை )

ஒன்பதாம் வகுப்பு

*தீண்டாமை ஒரு பாவச்செயல்*
*தீண்டாமை ஒரு பெருங்குற்றம்*
*தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்*


தமிழ் நாட்டுப்
பாடநூல் கழகம்
கல்லூரிச் சாலை, சென்னை – 600 006

© தமிழ்நாடு அரசு
முதற் பதிப்பு–2003

**குழுத்தலைவர்**

முனைவர் **பெ. அர்த்தநாரீசுவரன்**
தமிழ் இணைப்பேராசிரியர்
மாநிலக் கல்லூரி ( தன்னாட்சி )
சென்னை – 600 005

**மேலாய்வாளர்கள்**

முனைவர் **த. பரசுராமன்**
விரிவுரையாளர்
புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்
புதுவை – 605 001

புலவர் **இல. செய்யது கமால்**
தலைமையாசிரியர்
அரசு உயர்நிலைப்பள்ளி
பம்மதுகுளம்
சென்னை – 600 052

**நூலாசிரியர்கள்**

திரு. மா. **பெரியசாமி**
தமிழாசிரியர்
எம்.எஸ்.பி. சோலைநாடார் நினைவு மேல்நிலைப்பள்ளி
திண்டுக்கல் – 624 005

முனைவர் மொ. **குணசேகரன்பிள்ளை**
முதுகலைத் தமிழாசிரியர்
கொமரப்பா செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி
சென்னிமலை – 638 051

புலவர் **மா. செகதீசன்**
தமிழாசிரியர்
பெண்ணாத்தூர் சுப்ரமணியம் உயர்நிலைப்பள்ளி (வடக்கு)
சென்னை – 600 004

திருமதி **ச. சந்திரா**
முதுகலைத் தமிழாசிரியை
பி.எஸ். ஜி.ஜி. கன்யாகுருகுலம் மகளிர் மேல்நிலைப்பள்ளி
கோயம்புத்தூர் – 641 014

விலை : ரூ.

இந்நூல் 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

# தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

*- மகாகவி இரவீந்திரநாத தாகூர்*

# நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.
நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.
நின் திருப்பெயர் விந்திய, இமய மலைத்தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.
அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.
இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

# தேசியப் பாடல்

வந்தே மாதரம் !
ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஸீதலாம்
ஸஸ்ய ஸ்யாமலாம் மாதரம்
ஸுப்ர ஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
புல்ல குஸுமித த்ரும் தள ஸோபிநீம்
ஸுஹாஸிநீம், ஸுமதுர பாஷிநீம்
ஸுகதாம், வரதாம், மாதரம் !
வந்தே மாதரம் !
வந்தே மாதரம் !

*- பங்கிம் சந்திர சாட்டர்ஜி*

# உறுதிமொழி

'இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறப்புகள்.

எனது நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்பிற்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன். எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்'.

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும், ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், 'சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்,
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!

உன் சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– '*மனோன்மணீயம்*' பெ. சுந்தரம் பிள்ளை

# பொருளடக்கம்

## செய்யுள்


| | | | |
|---|---|---|---|
| **1. வாழ்த்து** | | | பக்கம் |
| (அ) | இறை வாழ்த்து | ... | 1 |
| (ஆ) | மொழி வாழ்த்து | ... | 3 |
| **2. அறவுரை** | | | |
| (அ) | திருக்குறள் | ... | 6 |
| (ஆ) | நான்மணிக் கடிகை | ... | 20 |
| **3. தொடர்நிலைச் செய்யுள்** | | | |
| (அ) | மணிமேகலை | ... | 25 |
| (ஆ) | பெரிய புராணம் | ... | 33 |
| (இ) | பாஞ்சாலி சபதம் | ... | 43 |
| (ஈ) | இராவண காவியம் | ... | 49 |
| **4. மொழிபெயர்ப்புப் பாடல்** | | ... | 55 |
| **5. பல்சுவைப் பாடல்கள்** | | | |
| (அ) | புறநானூறு | ... | 58 |
| (ஆ) | கலிங்கத்துப் பரணி | ... | 60 |
| (இ) | தமிழ்விடு தூது | ... | 63 |
| (ஈ) | முக்கூடற்பள்ளு | ... | 66 |
| (உ) | திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் | ... | 68 |
| (ஊ) | இரட்டுற மொழிதல் | ... | 70 |
| **6. மறுமலர்ச்சிப் பாடல்கள்** | | | |
| (அ) | உலகம் உன்னுடையது | ... | 74 |
| (ஆ) | சுதந்தரப் பொங்கல் | ... | 76 |
| (இ) | பழைய மனமே புதிய உலகம் | ... | 78 |
| (ஈ) | புத்துலகை உருவாக்க முயலவேண்டும் | ... | 79 |
| (உ) | வியர்வையில் விளைந்த செல்வம் | ... | 80 |
| (ஊ) | வாழ்வின் அனுபவம் வழிநடத்தும் | ... | 82 |
| **7. வழிபாட்டுப் பாடல்கள்** | | | |
| (அ) | சிவபெருமான் | ... | 85 |
| (ஆ) | திருமால் | ... | 86 |
| (இ) | கிறித்து | ... | 88 |
| (ஈ) | அல்லா | ... | 89 |

# மனப்பாடப் பகுதிகள்


| | | அடிகள் |
|---|---|---|
| **1. வாழ்த்து** | | |
| (அ) | இறை வாழ்த்து | 4 |
| (ஆ) | மொழி வாழ்த்து | 4 |
| **2. அறவுரை** | | |
| (அ) | திருக்குறள் | 40 |
| | வான் சிறப்பு : முதல் 5 குறள்கள் | |
| | வாய்மை : முழுமையும் | |
| | வினைத் தூய்மை : இறுதி 5 குறள்கள் | |
| (ஆ) | நான்மணிக் கடிகை ( 4 ஆம் பாடல் ) | 4 |
| **3. தொடர்நிலைச் செய்யுள்** | | |
| (அ) | மணிமேகலை ( அடி 43 முதல் 49 முடிய ) | 7 |
| (ஆ) | பெரிய புராணம் ( 4, 9 ஆம் பாடல்கள் ) | 8 |
| (இ) | பாஞ்சாலி சபதம் ( 6 ஆம் பாடல் ) | 4 |
| (இ) | இராவண காவியம் ( 2, 4 ஆம் பாடல்கள் ) | 8 |
| **4. பல்சுவைப் பாடல்கள்** | | |
| (அ) | புறநானூறு | 6 |
| (ஆ) | கலிங்கத்துப் பரணி ( முதற்பாடல் ) | 4 |
| (இ) | இரட்டுற மொழிதல் | 4 |
| | மொத்த அடிகள் | **93** |


# உரைநடை


| | | |
|---|---|---|
| 1. | தமிழ் மறுமலர்ச்சி ( முனைவர் சி. இலக்குவனார் ) | 93 |
| 2. | பிறந்த நாள் கடிதம் ( பண்டித ஜவஹர்லால் நேரு – தமிழாக்கம் : திரு. ஓ.வி. அளகேசன் ) | 100 |
| 3. | மதுரை மாநகரம் ( முனைவர் ரா.பி. சேதுப்பிள்ளை ) | 107 |
| 4. | உளநலமும் உடல்நலமும் ( பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் ) | 114 |
| 5. | அறிவியல் பார்வை ( முனைவர் வா.செ. குழந்தைசாமி ) | 120 |
| 6. | பெருந்தலைவர் காமராசர் ( திரு. முருக. தனுஷ்கோடி ) | 125 |
| 7. | நடைமுறை அறங்கள் ( முனைவர் வ.சுப. மாணிக்கம் ) | 133 |
| 8. | மழைநீர் சேகரித்தல் ( திரு. சு. பரமசிவன் ) | 139 |
| 9. | மனிதநேயக் காவலர்கள் ( திருமதி பா. கோமளீசுவரி ) | 146 |
| 10. | வென்றது தமிழே ! [ இலக்கிய நாடகம் ( திரு. க. சிவமணி )] | 153 |

# ஆசிரியப் பெருமக்களே !..

செய்யுள் பகுதியைக் கற்பிக்கும்பொழுது கீழ்க்காணும், செய்யுள் பாட மொழிக் குறிக்கோள்கள் நிறைவேறும் முறையில் கற்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

செய்யுளுக்குரிய மொழிக் குறிக்கோள்கள்:

1. செய்யுளுக்குரிய ஓசையை அறியச் செய்தல்
2. செய்யுளுக்குரிய ஓசையோடு செய்யுளைப் படிக்கச் செய்தல்
3. செய்யுளிலுள்ள சொற்களைப் பிரித்துப் படிக்கச் செய்தல்
4. செய்யுளை அன்வயப்படுத்த (கொண்டுகூட்ட) அறிந்து கொள்ளச் செய்தல்
5. செய்யுளில் உள்ள பொருட் செறிவு வாய்ந்த சொற்களை அறிந்து கொள்ளச் செய்தல்
6. செய்யுளின் சுவையான பகுதிகளை அறிந்துகொள்ளச் செய்தல்
7. சொல்லாட்சித் திறனை அறியச் செய்தல்
8. அருஞ்சொற்களின் பொருள் அறியச் செய்தல்
9. செய்யுளில் அமைந்த எதுகையை அறியச் செய்தல்
10. செய்யுளில் அமைந்த மோனையை அறியச் செய்தல்
11. செய்யுளில் அமைந்த அணியை அறியச் செய்தல்
12. செய்யுளின் பா வகையை அறியச் செய்தல்
13. செய்யுளின் பொருள், உணர்ச்சிக்கு ஏற்ற குரல் ஏற்றத் தாழ்வுடன் படித்தலை அறியச் செய்தல்
14. சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குப் பயிற்சி அளித்தல்
15. செய்யுளில் வரும் சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு அறியச் செய்தல்
16. அணியாலும், ஓசையாலும், கருத்தாலும் ஒத்த பிற பாடல்களை அறியச் செய்தல்

மேற்குறித்த குறிக்கோள்களோடு, ஆசிரியர் தம் நுண்மாண் நுழைபுலத்திற்கேற்பவும் மாணக்கர்தம் கொள்திறனுக்கு ஏற்பவும் மேலும் குறிக்கோள்களைப் பெருக்கிக் கொள்ளலாம்.

## ஆசிரியப் பெருமக்களே !

உரைநடைப் பாடங்களைக் கற்பிக்கும்பொழுது, ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய பாடப்பொருள் குறிக்கோள்களோடு, கீழ்க்காணும் மொழிக் குறிக்கோள்கள் நிறைவேறும் முறையில் கற்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**உரைநடைப் பாடங்களுக்குரிய மொழிக்குறிக்கோள்கள் :**

1. பாடப் பகுதியைக் கேட்டு அதன் மையக் கருத்தை அறியச் செய்தல்
2. பாடப் பகுதியைக் கேட்டு அதன் சுருக்கத்தை அறியச் செய்தல்
3. பாடத்தைக் கேட்டுக் குறிப்பெடுக்கும் திறனை வளர்த்தல்
4. சரியான ஒலிப்போடு படிக்கும் திறன் வளர்த்தல்
5. நிறுத்தற்குறிகளை மனத்துட்கொண்டு படிக்கும் திறனை வளர்த்தல்
6. பொருள் உணர்வுக்கேற்பக் குரல் ஏற்றத்தாழ்வுடன் படிக்கும் திறனை வளர்த்தல்
7. பாடப்பகுதியில் வரும் புதிய சொற்களின் பொருள் அறியச் செய்தல்
8. சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்
9. பாடப்பகுதியில் வரும் அரிய சொற்றொடர்களை அறியச் செய்தல்
10. பாடப்பகுதியில் வரும் மரபுத் தொடர்களை அறியச் செய்தல்
11. பாடப்பகுதியில் வரும் பழமொழிகளை அறியச் செய்தல்
12. பாடப்பகுதியில் வரும் மேற்கோள்களை அறியச் செய்தல்
13. பாடப்பகுதியில் வரும் வாக்கிய வகைகளை அறியச் செய்தல்
14. பாடப்பகுதியில் வரும் பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை அறியச் செய்தல்
15. பாடத்தொடர்பான நூல்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுதல்
16. அருஞ்சொற்களின் பொருளறிய அகரமுதலியைப் பார்க்கும் பழக்கத்தைத் தூண்டுதல்.

## ஆசிரியப் பெருமக்களே !

செய்யுள் பகுதியைக் கற்பிக்கும் பொழுது கீழ்காணும், செய்யுள் பாட மொழிக் குறிக்கோள்கள் நிறைவேறும் முறையில் கற்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

### செய்யுளுக்குரிய மொழிக் குறிக்கோள்கள்:

1. செய்யுளுக்குரிய ஓசையை அறியச் செய்தல்
2. செய்யுளுக்குரிய ஓசையோடு செய்யுளைப் படிக்கச் செய்தல்
3. செய்யுளிலுள்ள சொற்களைப் பிரித்துப் படிக்கச் செய்தல்
4. செய்யுளை அன்வயப்படுத்த (கொண்டு கூட்ட) அறிந்து கொள்ளச் செய்தல்
5. செய்யுளில் உள்ள பொருட் செறிவு வாய்ந்த சொற்களை அறிந்து கொள்ளச் செய்தல்
6. செய்யுளின் சுவையான பகுதிகளை அறிந்து கொள்ளச் செய்தல்.
7. சொல்லாட்சித் திறனை அறியச் செய்தல்.
8. அருஞ்சொற்களின் பொருள் அறியச் செய்தல்
9. செய்யுளில் அமைந்த எதுகையை அறியச் செய்தல்
10. செய்யுளில் அமைந்த அணியை அறியச் செய்தல்
11. செய்யுளில் அமைந்த அணியை அறியச் செய்தல்
12. செய்யுளின் பாவகையை அறியச் செய்தல்
13. செய்யுளின் பொருள் உணர்ச்சிக்கு ஏற்ற குரல் ஏற்றத் தாழ்வுடன் படித்தலை அறியச் செய்தல்.
14. சரியாக ஒலிக்க இயலாத சொற்களுக்குப் பயிற்சி அளித்தல்
15. செய்யுளில் வரும் சொற்களுக்கும் தொடர்களுக்கும் இலக்கணக் குறிப்பு அறியச் செய்தல்.
16. அணியாலும் – ஓசையாலும் – கருத்தாலும் ஒத்த பிற பாடல்களை அறியச் செய்தல்.

மேற்குறித்த குறிக்கோள்களோடு, ஆசிரியர் தம் நுண்மாண் நுழை புத்திற்கேற்பவும் மாணக்கர்தம் கொள்திறனுக்கு ஏற்பவும் மேலும் குறிக்கோள்களைப் பெருக்கிக் கொள்ளலாம்.

# செய்யுள்

## 1. வாழ்த்து

ஒரு செயலைத் தொடங்கும்பொழுது, இறைவனை வாழ்த்துதல் தமிழர் வழக்காறுகளில் ஒன்று. வாழ்த்து என்பது இறை வாழ்த்து, மொழி வாழ்த்து, நாட்டு வாழ்த்து எனப் பலவகைப்படும். வாழ்த்துதல் – போற்றுதல் (பற்றை விதைத்துப் பயன்பெறுதல்.)

### (அ) இறை வாழ்த்து

விண்ணாதி பூதமெலாந் தன்னகத்தில் அடக்கிவெறு
வெளியாய் ஞானக்
கண்ணாரக் கண்டவன்பர் கண்ணூடே ஆனந்தக்
கடலாய் வேறொன்(று)
எண்ணாத படிக்கிரங்கித் தானாகச் செய்தருளும்
இறையே யுன்றன்
தண்ணாருஞ் சாந்தஅரு டனைநினைந்து கரமலர்கள்
தலைமேற் கொள்வாம்.

– **தாயுமானவர்**

**நூற்குறிப்பு :** இப்பாடல் 'தாயுமானவர் பாடல்கள்' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. தெய்வத் தமிழில் இனிமையும் எளிமையும் பொருந்திய செய்யுள் நடையும், சமரச சன்மார்க்கத்தை விளக்குவதும், மனத்தூய்மை, அறிவொளி, பக்திச்சுவை ஆகியவற்றை ஊட்டுவதும் இந்நூலின் சிறப்பாகும்.

**ஆசிரியர் குறிப்பு :** தாயுமானவர் திருமறைக்காடு என்னும் ஊரில், கெசவல்லி அம்மையார்க்கும் கேடிலியப்பர்க்கும் மகனாகத் தோன்றியவர். இவரின் காலம் கி.பி.17ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி. திருச்சிராப்பள்ளியை ஆண்ட விசய ரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் கருவூல அலுவலராகப் பணியாற்றியவர்.

அருஞ்சொற்பொருள் : விண்ணாதி பூதங்கள் – நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐம்பெரும் இயற்கைச் சக்திகள்; ஆதி – முதல்; ஞானம் – அறிவு; கண்ணார – கண்ணிறைய; ஆர – மிகுதி; இரங்கி – மனமிளகி (அ) உள்ளம் உருகி; இறை – கடவுள்; தண் – குளிர்ச்சி; சாந்தம் – அமைதி; கரம் – கை.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

| | | |
|---|---|---|
| விண்ணாதி | – | விண் + ஆதி |
| பூதமெலாம் | – | பூதம் + எலாம் |
| கண்டவன்பர் | – | கண்ட + அன்பர் |
| அருடனை | – | அருள் + தனை |

**இலக்கணக் குறிப்பு**

| | | |
|---|---|---|
| எலாம் | – | எல்லாம் என்பதன் இடைக்குறை |
| ஞானக்கண், ஆனந்தக்கடல், கரமலர்கள் | – | உருவகங்கள் |
| இரங்கி | – | வினையெச்சம் |
| கொள்வாம் | – | தன்மைப் பன்மை வினைமுற்று |

பகுபத உறுப்பிலக்கனம்

| | | |
|---|---|---|
| கண்ட | – | காண் (கண்) + ட் + அ<br>காண்– பகுதி; கண் எனத் திரிந்தது விகாரம்; ட்–இறந்த கால இடைநிலை; அ– பெயரெச்ச விகுதி. |
| நினைந்து | – | நினை + த்(ந்) + த் + உ<br>நினை –பகுதி; த் – சந்தி; 'ந்' ஆனது விகாரம்; த் – இறந்த கால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி. |

பொருளுணர் பயிற்சி

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) விண்ணாதி பூதமாக இருப்பவர் யார்? எங்ஙனம்?
2) இறைவன் ஆனந்தக் கடலாய் யாருக்குக் காட்சியளிக்கின்றார்?

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) 'தாயுமானவர் பாடல்கள்' என்ற நூலின் சிறப்பு யாது?
2) தாயுமானவர் இறைவனை எங்ஙனம் வேண்டுகின்றார்?

மொழித்திறன் பயிற்சி

1. பிரித்தெழுதுக.
   பூதமெலாம், கண்ணூடு, வேறொன்று, அருடனை
2. பொருளுணர்ந்து பொருத்துக.
   அ) புவி – காற்று
   ஆ) புனல் – நெருப்பு
   இ) அனல் – நிலம்
   ஈ) வளி – நீர்
3. மோனைச் சீர்களை அறிந்து எழுதுக.
   கண்ணாரக் கண்டவன்பர் கண்ணூடே ஆனந்தக் கடலாய்
4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எடுத்து எழுதுக.
   வி – ணாதி பூதமெலாம் த – னகத்தில் அடக்கி (ண் – ன்; ண்–ன்)
5. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.
   அடக்கி, எண்ணாத, கொள்வாம்

# (ஆ) மொழி வாழ்த்து

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
          தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
          உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
          மாந்தருக் கிருகண்ணா வயங்குநன் மொழியே
தரணியில் சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
          தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே.

– கா. நமச்சிவாயர்

ஆசிரியர் குறிப்பு : கா. நமச்சிவாயர் வேலூர் மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் என்னும் ஊரில் 10.2.1876இல் பிறந்தார். பெற்றோர் இராமசாமி, அகிலாண்டவல்லி. இவர் முதலில் தொடக்கப் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றினார். பிறகு மயிலை சண்முகம் பிள்ளையிடம் தமிழ் பயின்று பேராசிரியராக உயர்ந்தார்; இலக்கண இலக்கிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார்; புலவராகவும் புரவலராகவும் வாழ்ந்தார்; 'கீசகன், பிருதிவிராசன்' என்னும் இரு நாடக நூல்களை இயற்றினார்; நல்லாசிரியர் என்னும் இதழை நடத்தினார்; தம் அறுபதாம் வயதில் இயற்கை எய்தினார்.

அருஞ்சொற்பொருள்: விளங்குற – பெருமையுற; ஊனினும் – உடலினும்; ஒண்டமிழ் – சிறப்புமிகு தமிழ்; ஓங்கிய – உயர்ந்த; வண்டமிழ் – வளமான தமிழ்; வயங்கு – விளங்கு; தரணியில் – பூமியில்.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

| | | | | |
|---|---|---|---|---|
| செந்தமிழ் | – | செம்மை | + | தமிழ் |
| தென்னாடு | – | தெற்கு | + | நாடு |
| வண்டமிழ் | – | வண்மை | + | தமிழ் |
| நன்மொழி | – | நன்மை | + | மொழி |
| தனித்தமிழ் | – | தனி | + | தமிழ் |
| தண்டமிழ் | – | தண்மை | + | தமிழ் |

**இலக்கணக் குறிப்பு**

தேனினும், ஊனினும், வானினும் – உயர்வுச் சிறப்பும்மைகள்

செந்தமிழ், ஒண்டமிழ், வண்டமிழ், தண்டமிழ் – பண்புத்தொகைகள்

ஒளிர்தமிழ் – வினைத்தொகை, ஓங்கிய – பெயரெச்சம்; தழைத்து – வினையெச்சம்; ஓங்குவாய் – முன்னிலை ஒருமை வினைமுற்று.

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. ஓங்கிய – ஓங்கு + இ(ன்) + ய் + அ
   ஓங்கு– பகுதி; இ(ன்) – இறந்தகால இடைநிலை; ன், மறைந்தது விகாரம்; ய் – உடம்படுமெய்; அ – பெயரெச்ச விகுதி

2. தழைத்து – தழை + த் + த் + உ
   தழை – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

3. ஓங்குவாய் – ஓங்கு + வ் + ஆய்
   ஓங்கு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

பொருளுணர் பயிற்சி

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) மாந்தர்களுக்கு ________ விளங்குவது நம் தாய்மொழி.

2) நம் செந்தமிழ் மொழி ________ விட இனியது.

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) செந்தமிழின் இனிமையைக் கூறுக.

2) மக்களுக்கு மொழி இன்றியமையாதது என்பதனை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மொழி வாழ்த்து எழுதிய ஆசிரியர் பற்றி எழுதுக.

2) தமிழ் மொழியின் சிறப்பை ஆசிரியர் வழிநின்று விளக்குக.

மொழித்திறன் பயிற்சி

**1. பொருளுணர்ந்து பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) செந்தமிழ் | – | வினைத்தொகை |
| ஆ) ஓங்கிய | – | பண்புத்தொகை |
| இ) வானினும் | – | பெயரெச்சம் |
| ஈ) ஒளிர்தமிழ் | – | உயர்வுச் சிறப்பும்மை |
| | – | உம்மைத்தொகை |

**2. எதுகைச் சீர்களையும் மோனைச் சீர்களையும் எடுத்து எழுதுக.**

ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே

**3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எடுத்து எழுதுக.**

அ) தே – னும் இனியநற் செந்தமிழ் மொ – யே (னி–ணி; ழி–ளி)

ஆ) உ – ர்வினுக் குணர்வதாய் ஒளி – தமிழ் மொழியே (ண–ன; ர்–ற்)

**4. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக.**

**வானினும்** **ஓங்கிய** **வண்டமிழ்** மொழியே

# 2. அறவுரை

தனிமனித ஒழுக்கமும் சமுதாய வாழ்வியல் நெறிகளும் சிறப்புற்று அமைய உதவுவன அறவுரை நூல்களாகும். நம் இனிய செந்தமிழ் மொழியில் அறநெறி நூல்கள் பல உள்ளன. அவற்றில் பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகுப்பிலுள்ள திருக்குறளும், நான்மணிக்கடிகையும் இப்பகுதியில் இடம் பெற்றுள்ளன.

## (அ) திருக்குறள்

### 1. வான் சிறப்பு

வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்த மென்றுணரற் பாற்று. 1

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை. 2

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துள்நின் றுடற்றும் பசி. 3

ஏரி னுழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். 4

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை. 5

விசும்பின் துளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 6

நெடுங்கடலுந் தன்நீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தான்நல்கா தாகி விடின். 7

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. 8

தானந் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 9

நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. 10

## 2. வாய்மை

வாய்மை எனப்படுவ(து) யாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல். 1

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின். 2

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். 3

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லா முளன். 4

மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. 5

பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமுந் தரும். 6

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. 7

புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். 8

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. 9

யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற. 10

## 3. வினைத் தூய்மை

துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும். 1

என்று மொருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. 2

ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
ஆஅது மென்னு மவர். 3

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர். 4

எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேன்
மற்றன்ன செய்யாமை நன்று. 5

ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை. 6

பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை. 7

கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும். 8

அழக்கொண்ட வெல்லாம் அழப்போ மிழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை. 9

சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று. 10

– திருவள்ளுவர்

நூற்குறிப்பு : திரு + குறள் – சிறப்பு பொருந்திய குறுகிய இரண்டு அடிகளால் ஆன நூல். திரு – சிறப்பு அடைமொழி. திருக்குறள் என்பது பாட்டை உணர்த்தாமல் நூலை உணர்த்துவதால் அடையடுத்த கருவியாகுபெயர் ஆகும்.

இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் ஆகிய மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது. அறத்துப்பாலில் 38 அதிகாரங்களும், பொருட்பாலில் 70 அதிகாரங்களும், காமத்துப்பாலில் 25 அதிகாரங்களும் உள்ளன. ஓரதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களாக 133 அதிகாரங்களும், 1330 குறட்பாக்களும் கொண்டுள்ளது இந்நூல். இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும்.

திருக்குறளுக்கு, முப்பால், உத்தரவேதம், தெய்வநூல், பொய்யாமொழி, வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை, என வேறு பல பெயர்களும் வழங்குகின்றன.

**ஆசிரியர் குறிப்பு** : திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர். இவருக்கு முதற்பாவலர், தெய்வப் புலவர், பொய்யில் புலவர் என வேறு பல பெயர்களும் உண்டு. இவர் காலம் கி.மு. 31 என உறுதி செய்யப்பெற்றுத் திருவள்ளுவராண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இவர் தாமிபற்றிய திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினார் என்று கூறுவர். ஆசிரியர் நல்லந்துவனாரின்

'முப்பால் மொழிந்த முதற்பா வலர் ஒப்பார்
எப்பா வலரினும் இல்'

எனும் வாக்கு இவரின் பெருமையை வெளிப்படுத்தும். இவர் தமிழ் நாட்டில் பிறந்தவர் என்பது அன்றி வேறு செய்திகள் தெளிவாக அறியப்படவில்லை.

அருஞ்சொற்பொருள்

**1. வான் சிறப்பு**

(மழையினது சிறப்பைக் கூறுதல்)

1. வான் – மழை; உலகம் – உலகத்து உயிர்கள்; வழங்கி – நடைபெற்று; உணரற்பாற்று – அறியப்படும் தன்மையை உடையது.
2. துப்பார்க்கு – உண்பவர்க்கு; துப்பாய – சுத்தமான; துப்பாக்கி – உணவுப் பொருள்களை உண்டாக்கி.
3. விண் – மழை; இன்று பொய்ப்பின் – வேண்டும் காலத்துப் பெய்யாது பொய்க்குமாயின்; விரிநீர் – கடல்; வியன் உலகம் – அகன்ற உலகம்; நின்று – நிலைத்து; உடற்றும் – வருந்தும்.
4. ஏரின் – ஏரினாலே; உழா அர் – உழுதலைச் செய்யார்; புயல் – மழை; வாரி – வருவாய்; வளம் குன்றிக்கால் – தன் வளத்தில் குறைந்தால்.
5. கெடுப்பது – அழிப்பது; சார்வாய் – துணையாய்; மற்றாங்கே – முன் அழித்தாற்போல; எடுப்பது – உண்டாக்குவது.
6. விசும்பு – மேகம்; துளி – மழை; வீழின் அல்லால் – விழுந்தாலன்றி; ஆங்கே – (பல வகைப் பயிர்கள் தோன்றுவதற்கு இடமான) அவ்விடத்திலே; பசும்புல் – இளம்புல்; தலை – முளை; காண்பு அரிது – காண முடியாது.
7. நீர்மை – இயல்பு; குன்றும் – குறையும்; தடிந்து – குறைத்து; எழிலி–மேகம்; நல்காது ஆகிவிடின்–(அக்கடலின் கண் பெய்து) கொடுக்காவிட்டால் (இவை ஏழு பாடல்களாலும் உலகம் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பெற்றது.)
8. சிறப்பு – விழா; பூசனை– வழிபாடு; செல்லாது – நடைபெறாது; வறக்குமேல் – (பெய்யாது) வறளுமானால்; வானோர்க்கு – தேவர்களுக்கு.

9. தானம் – ஈகை; தங்கா – நிற்க மாட்டாது; வழங்காது – கொடுக்காது.

10. அமையாது – பொருந்தாது; உலகம் – உலக வாழ்க்கை; வானின்று – மழை இல்லாமல்; ஒழுக்கு – ஒழுக்கம்.

(இவை மூன்று பாடல்களாலும் அறம் பொருள் இன்பம் நடத்தற்கு ஏதுவாதல் கூறப்பெற்றது)

## 2. வாய்மை
### (மெய்யினது தன்மை)

1. வாய்மை – உண்மை; தீமையிலாத – தீங்கு விளைவிக்காத சொற்கள்; யாதொன்றும் – ஒரு சிறிதும்; சொலல் – சொல்லுதல்.

2. புரை – குற்றம்; தீர்ந்த – நீங்கிய; பயக்கும் – கொடுக்கும் (இவ்விரண்டு பாடல்களாலும் வாய்மையின் இலக்கணம் கூறப்பெற்றது.)

3. சுடும் – துன்புறுத்தும் (இப்பாட்டால் பொய்மையின் தீங்கு கூறப்பெற்றது.)

4. பொய்யாது – பொய் கூறாது; உலகத்தார் – உயர்ந்தோர் (இப்பாட்டால் இம்மைப் பயன் கூறப்பெற்றது.)

5. மொழியின் – சொல்வானாயின்; தலை – சிறப்புடையவன்.

6. அன்ன – போல; எய்யாமை – முயலாமை.

7. ஆற்றின் – செய்தால்; நன்று – நன்மை. (இம்மூன்று பாடல்களாலும் மறுமைப் பயன் கூறப்பட்டது.)

8. புறம் – உடல்; அகம் – உள்ளம்.

9. சான்றோர் – மேலானவர்; பொய்யா விளக்கே – பொய்யாமையாகிய விளக்கே.

10. மெய்யா – மெய்நூல்; எனைத்தொன்றும் – யாதொரு தன்மையிலும்; நல்ல – சிறந்தன; பிற – வேறு (அறங்கள்) (இம்மூன்று பாடல்களாலும் வாய்மை என்ற அறத்தின் தலைமை கூறப்பெற்றது).

## 3. வினைத் தூய்மை
### (செயல்களது நன்மை)

1. துணை – நட்பு, சுற்றம்; நலம் – நன்மை; வினை – தொழில் (இப்பாட்டால் வினைத் தூய்மையின் சிறப்பு கூறப்பட்டது.)

2. ஒருவுதல் – நீக்குதல்; நன்றி – நன்மை; பயவா – தராத.

3. ஓஒதல் – தவிர்த்தல்; மாழ்கும் – அழிக்கும்; ஆஅதும் – யாம் உயர்வோம்; என்னும் அவர் – என்று எண்ணி முயல்பவர்.

4. இடுக்கண் – துன்பம்; இளிவந்த – இழிவான; நடுக்கற்ற – நடுக்குதல் அல்லாத.

5. எற்றென்று – எத்தன்மைத்து என்று; இரங்குவ – வருந்துவதற்குக் காரணமான

6. ஈன்றாள் – தாய்; பழிக்கும் வினை – பழிக்கத்தக்க செயல் (இவ்வைந்து பாடல்களாலும் பாவமும் பழியும் பயக்கும் வினை செய்தல் கூடாது என்பது கூறப்பட்டது.)

7. பழிமலைந்து – பழியைச் சுமந்து; ஆக்கம் – செல்வம்; கழி – மிகுந்த; நல்குரவு – வறுமை; சான்றோர் – மேன்மக்கள்.

8. கடிந்த – சான்றோரால் நீக்கப்பட்ட; கடிந்து ஓரார் – தாமும் நீக்கிடாது செய்பவர்; பீழை – பழி.

9. அழக்கொண்ட – பிறரைத் துன்புறுத்திப் பெற்றது; பிற்பயக்கும் – பின்னர் நல்ல பயனைத் தரும்.

10. சலம் – வஞ்சனை; ஏமார்த்தல் – பாதுகாப்புச் செய்தல்; பசுமண் – பச்சை மண்; கலம் – குடம். (இந்நான்கு பாடல்களாலும் அதற்குக் காரணம் கூறப்பட்டது.)

**தொடர்களைப் பிரித்தறிதல்**

**1. வான் சிறப்பு**

1. வானின்று – வான் + நின்று; தானமிழ்தம் – தான் + அமிழ்தம்; என்றுணரற்பாற்று – என்று + உணரற்பாற்று.

2. துப்பாய – துப்பு + ஆய; துப்பாக்கி – துப்பு + ஆக்கி.

3. வியனுலகம் – வியன் + உலகம்; நின்றுடற்றும் – நின்று + உடற்றும்.

4. வளங்குன்றி – வளம் + குன்றி.

5. மற்றாங்கே – மற்று + ஆங்கே.

6. பசும்புல்– பசுமை + புல்; காண்பரிது – காண்பு + அரிது.

7. நெடுங்கடல் – நெடுமை + கடல்; தடிந்தெழிலி – தடிந்து + எழிலி.

8. வானோர்க்கு மீண்டு – வானோர்க்கும் + ஈண்டு.

9. தவமிரண்டும் – தவம் + இரண்டும்; வழங்காதெனின் – வழங்காது + எனின்.

10. நீரின்றமையாது – நீரின்று + அமையாது

அமையாதுலகெனின் – அமையாது + உலகு + எனின்

வானின்றமையாது – வான் + நின்று + அமையாது

அமையாதொழுக்கு – அமையாது + ஒழுக்கு

## 2. வாய்மை

1. யாதெனின் – யாது + எனின்; யாதொன்றும் – யாது + ஒன்றும்.
2. வாய்மையிடத்த – வாய்மை + இடத்த.
3. நெஞ்சறிவது – நெஞ்சு + அறிவது.
4. பொய்யாதொழுகின் – பொய்யாது + ஒழுகின்.
5. தானஞ்செய்வார் – தானம் + செய்வார்.
6. புகழில்லை – புகழ் + இல்லை.

புறந்தூய்மை – புறம் + தூய்மை.

8. அகந்தூய்மை– அகம் + தூய்மை.
9. விளக்கல்ல – விளக்கு + அல்ல.
10. எனைத்தொன்றும் – எனைத்து + ஒன்றும்.

## 3. வினைத் தூய்மை

2. புகழொடு – புகழ் + ஒடு.
3. என்னுமவர் – என்னும் + அவர்.
4. இடுக்கட்படினும் – இடுக்கண் + படினும்.

நடுக்கற்ற – நடுக்கு + அற்ற.

காட்சியவர் – காட்சி + அவர்.

5. எற்றென்று – எற்று + என்று; மற்றன்ன – மற்று + அன்ன.
8. கடிந்தொரார் – கடிந்து + ஓரார்.
9. பிற்பயக்கும் – பின் + பயக்கும்.
10. செய்தே மார்த்தல்– செய்து + ஏமார்த்தல்.

பசுமண் – பசுமை + மண்;

மட்கலத்துள் – மண் + கலத்து + உள்;

பெய்திரீஇயற்று – பெய்து + இரீஇ + அற்று.

இலக்கணக் குறிப்பு

## 1. வான் சிறப்பு

1. வான் – இடவாகுபெயர்; உலகம் – இடவாகு பெயர்; வழங்கி – வினையெச்சம்.
2. துப்பார்– வினையாலணையும் பெயர்; தூஉ – செய்யுளிசை அளபெடை.
3. விண் – இடவாகுபெயர் ; இன்றி – எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம் இன்று எனத் திரிந்து நின்றது; பொய்ப்பின் – எதிர்கால வினையெச்சம்; விரிநீர் – வினைத்தொகை; உடற்றும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.
4. உழாஅர் – செய்யுளிசை அளபெடை.
5. கெடுப்பதூஉம்– இன்னிசை அளபெடை; கெட்டார் – வினையாலணையும் பெயர்; எடுப்பதூஉம் – இன்னிசை அளபெடை.
6. விசும்பு – இடவாகுபெயர்; பசும்புல் – பண்புத்தொகை; காண்பு – தொழிற்பெயர்.
7. நெடுங்கடலும் – உயர்வுச் சிறப்பும்மை; நெடுங்கடல் – பண்புத்தொகை
8. பூசனை – பூஜா என்ற வட சொல்லின் திரிபு; வானோர்க்கும் – உயர்வுச் சிறப்பும்மை.
9. தானம்தவம் – உம்மைத்தொகை; இரண்டும் – முற்றும்மை.
10. யார் யார் – அடுக்குத்தொடர்

## 2. வாய்மை

1. சொலல் – தொழிற்பெயர்.
2. தீர்ந்த– பெயரெச்சம்; பொய்மையும் – இழிவு சிறப்பும்மை.
3. பொய்யற்க – எதிர்மறை வியங்கோள் வினைமுற்று; நெஞ்சே – ஏகாரம் தேற்றப் பொருளில் வந்தது; சுடும் – செய்யும் என்றும் வாய்பாட்டு வினைமுற்று.
4. உள்ளத்தால் – உருபு மயக்கம் ; உளன் – குறிப்பு வினைமுற்று.
5. தானம் செய்வார் – இரண்டாம் வேற்றுமைத் தொகை; செய்வார் – வினையாலணையும் பெயர்.
6. பொய்யாமை – எதிாமறைத் தொழிற்பெயர் ; புகழ் – காரியவாகு பெயர்; எல்லா அறமும் – முற்றும்மை; தரும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

7. பொய்யாமை பொய்யாமை, செய்யாமை செய்யாமை – அடுக்குத்தொடர்கள்; நன்று – ஒன்றன்பால் வினைமுற்று.

8. புறந்தூய்மை, அகந்தூய்மை – ஆறாம் வேற்றுமைத் தொகைகள்.

9. பொய்யா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; பொய்யா விளக்கு – உருவகம்.

10. நல்ல – குறிப்பு வினையாலணையும் பெயர்.

## 3. வினைத் தூய்மை

1. துணைநலம், வினைநலம் – ஆறாம் வேற்றுமைத் தொகைகள்; தரூஉம் – இன்னிசை அளபெடை; தரும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று, வேண்டிய எல்லாம் – பெயரெச்சம்.

2. ஒருவுதல் – தொழிற்பெயர்; பயவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

3. ஓஒதல், ஆஅதும் – செய்யுளிசை அளபெடைகள்.

4. இடுக்கட்படினும் – இழிவு சிறப்பும்மை; செய்யார் – பலர்பால் எதிர்மறை வினைமுற்று, நடுக்கு – நடுங்கு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்; காட்சியவர் – வினையாலணையும் பெயர்.

5. எற்று – குறிப்பு வினைமுற்று; இரங்குவ – வினையாலணையும் பெயர்; செய்யற்க – எதிர்மறை வியங்கோள் வினைமுற்று; செய்யாமை– எதிர்மறைத் தொழிற்பெயர்; நன்று – குறிப்பு வினைமுற்று.

6. ஈன்றாள் – வினையாலணையும் பெயர்; பசிகாண்பான் – இரண்டாம் வேற்றுமைத் தொகை; பழிக்கும் வினை– பெயரெச்சம்.

7. பழிமலைந்து – இரண்டாம் வேற்றுமைத் தொகை; மலைந்து – வினையெச்சம்; எய்திய – பெயரெச்சம்; கழிநல்குரவு – உரிச்சொற்றொடர்; நல்குரவு – தொழிற்பெயர்.

8. கடிந்த – பெயரெச்சம்; கடிந்து – வினையெச்சம்; செய்தார் – வினையாலணையும் பெயர்.

9. கொண்ட – வினையாலணையும் பெயர்; இழப்பினும் – இழிவு சிறப்பும்மை

10. பொருள் செய்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை; ஏமம் + ஆர்த்தல் – ஏமார்த்தல் – தொகுத்தல் விகாரம், பசுமண் – பண்புத்தொகை; மட்கலம் – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை; பெய்திரீஇ – சொல்லிசை அளபெடை.

பகுபத உறுப்பிலக்கணம்

## 1. வான் சிறப்பு

1. வழங்கி – வழங்கு + இ
வழங்கு – பகுதி ; இ–வினையெச்ச விகுதி
2. நின்று – நில் (ன்) + ற் + உ
நில்–பகுதி, ல், ன்–ஆனது விகாரம் ; ற்–இறந்தகால இடைநிலை; உ–வினையெச்ச விகுதி
3. நல்காது – நல்கு + ஆ + து
நல்கு – பகுதி; ஆ–எதிர்மறை இடைநிலை; து–ஒன்றன்பால் வினைமுற்று விகுதி
8. செல்லாது – செல் + ல் + ஆ + து
செல் –பகுதி ; ல் – சந்தி ; ஆ–எதிர்மறை இடைநிலை; து–ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

## 2. வாய்மை

1. சொலல் – சொல் + அல்
சொல் – பகுதி; அல்–வியங்கோள் வினைமுற்று விகுதி
2. தீர்ந்த – தீர் + த் (ந்) + த் + அ
தீர் – பகுதி; த் – சந்தி; த், ந் ஆனது விகாரம்; த்–இறந்தகால இடைநிலை; அ–பெயரெச்ச விகுதி
3. பொய்யற்க – பொய் + ய் + அல்(ற்) + க
பொய் – பகுதி; ய் – சந்தி; அல்(ற்)–எதிர்மறை இடைநிலை; க–வியங்கோள் வினைமுற்று விகுதி
பொய்த்த – பொய் + த் + த் + அ
பொய்–பகுதி; த்–சந்தி; த்–இறந்தகால இடைநிலை; அ–பெயரெச்ச விகுதி.
7. செய்யாமை – செய் + ய் + ஆ + மை
செய்–பகுதி; ய்–சந்தி; ஆ–எதிர்மறை இடைநிலை; மை–தொழிற்பெயர் விகுதி.

## 3. வினைத் தூய்மை

1. வேண்டிய – வேண்டு + இ(ன்) + ய் + அ
வேண்டு–பகுதி; இ(ன்)–இறந்தகால இடைநிலை; ன் கெட்டது விகாரம்;ய்– உடம்படுமெய்;அ–பெயரெச்ச விகுதி
2. ஒருவுதல் – ஒருவு + தல்
ஒருவு–பகுதி; தல்–தொழிற்பெயர் விகுதி

4. வந்த – வா(வ) + த் (ந்) + த் + அ
வா(வ)–பகுதி; ‘வ’ என்று குறுகியது விகாரம்;
த்–சந்தி; த், ந் ஆனது விகாரம்;
த்–இறந்தகால இடைநிலை; அ–பெயரெச்ச விகுதி

செய்யார் – செய் + ய் + (ஆ) + ஆர்
செய்–பகுதி; ய்–சந்தி; (ஆ)–எதிர்மறை இடைநிலை;
(புணரும்போது மறைந்தது)
ஆர்–பலர்பால் வினைமுற்று விகுதி

5. செய்யற்க – செய் + ய் + அல்(ற்) + க
செய்–பகுதி; ய்–சந்தி; அல்(ற்)–எதிர்மறை இடைநிலை ;
‘ற்’ ஆனது விகாரம்
க–வியங்கோள் வினைமுற்று விகுதி

6. காண்பான் – காண் + ப் + ஆன்
காண்–பகுதி; ப்–எதிர்கால இடைநிலை;
ஆன்–ஆண்பால வினைமுற்று விகுதி

7. மலைந்து – மலை + த் (ந்) + த் + உ
மலை–பகுதி; த்–சந்தி; த், ந் ஆனது விகாரம்;
த்–இறந்தகால இடைநிலை; உ–வினையெச்ச விகுதி

எய்திய – எய்து + இ(ன்) + ய் + அ
எய்து–பகுதி; இ(ன்)–இறந்தகால இடைநிலை;
ன் கெட்டது விகாரம் ய்–உடம்படுமெய்;
அ–பெயரெச்ச விகுதி

8. கடிந்த – கடி + த்(ந்) + த் + அ
கடி–பகுதி; த்–சந்தி; த், ந் ஆனது விகாரம்;
த்–இறந்தகால இடைநிலை;
அ–பெயரெச்ச விகுதி

கடிந்து – கடி + த்(ந்) + த் + உ
கடி–பகுதி; த்–சந்தி; த், ந் ஆனது விகாரம்;
த்–இறந்தகால இடைநிலை;
உ–வினையெச்ச விகுதி

9. கொண்ட – கொள்(ண்) + ட் + அ
கொள்–பகுதி; ண்–ஆனது விகாரம்;
ட்–இறந்தகால இடைநிலை; அ–பெயரெச்ச விகுதி

12. பெய்து – பெய் + த் + உ
பெய்–பகுதி; த்–இறந்தகால இடைநிலை;
உ–வினையெச்ச விகுதி

திருக்குறட் பகுதியில் அமைந்துள்ள அணிகள்

| குறள் | | அணி |
|---|---|---|
| 1. துப்பார்க்கு_____ மழை | – | சொல்பின்வருநிலையணி |
| 2. புறந்தூய்மை_____ படும் | – | எடுத்துக்காட்டு உவமையணி |
| 3. எல்லா________ விளக்கு | – | சொற்பொருள் பின்வருநிலையணி |
| 4. சலத்தால்_________யற்று | – | உவமையணி |

எடுத்துக்காட்டு

சலத்தாற் பொருள் செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.

1. **அணிசுட்டல் :** இக்குறட்பாவில் உவமையணி வந்துள்ளது.
2. **அணியிலக்கணம்** : ஒரு செய்யுளில் உவமை, உவமிக்கப்படும் பொருள், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக அமைந்திருக்குமாயின் அஃது உவமையணியாகும்.
3. **விளக்கம்** : இக்குறட்பாவில் 'பசுமட்கலத்துள்நீர் பெய்திரீஇ' என்பது உவமை. 'சலத்தால் பொருள் செய்தே மார்த்தல்' என்பது உவமிக்கப்படும் பொருள். 'அற்று' என்பது உவம உருபு.

பொருளுணர் பயிற்சி

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) திருக்குறளின் சிறப்பினைக் கூறும் நூல்________.
2) துணை நலம்________தரும்.
3) மேலோர்க்கு விளக்காவது________.
4) வாய்மை எனப்படுவது________.
5) அகந்தூய்மை________காணப்படும்.
6) புறத்தூய்மை________அமையும்.
7) அகம் தூய்மை அடைய உதவுவது________.

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) அமிழ்தம் எது? ஏன்?
2) வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி – எப்பொழுது?
3) உணவின்மைக்குக் காரணம் என்ன?
4) மழையின் ஆற்றலை எழுதுக?

5) பசும்புல்லின் தலை காண்பது அரிது. எப்பொழுது?
6) வாய்மை எனப்படுவது யாது?
7) பொய்மையும் வாய்மையிடத்த. எப்பொழுது?
8) தன்னெஞ்சே தன்னைச் சுடும். எப்பொழுது?
9) தவம், தானம் செய்பவரைக் காட்டிலும் சிறந்தவர் எவர்?
10) புறத்தூய்மை, அகத்தூய்மை எவற்றால் அமையும்?
11) சான்றோர்க்கு விளக்காவது எது?
12) எதனை நீக்குதல் வேண்டும்?
13) நடுக்கற்ற காட்சியவர் எதனைச் செய்யார்?
14) 'ஈன்றாள் பசி காண்பான் ஆயினும்' செய்யக்கூடாதது எது?
15) எதைவிடச் சான்றோர் கழிநல்குரவே தலை?
16) இழப்பினும் பிற்பயப்பது எது?
17) திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் நான்கினைக் குறிப்பிடுக.

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மழையின் சிறப்பை விளக்குக.
2) மழையின்றேல் ஏற்படும் துன்பத்தை வள்ளுவர் வழிநின்று விளக்குக.
3) மழையின் இன்றியமையாமையை விளக்கி எழுதுக.
4) அறநெறிகள் வழுவாதிருப்பதற்குத் தேவையானது மழை என்பதை விளக்கி எழுதுக.
5) வாய்மையின் இலக்கணத்தை எழுதுக.
6) வாய்மையின் பெருமையை எழுதுக.
7) வாய்மையின் சிறப்பை எழுதுக.
8) எத்தகைய வினைகளைச் செய்யக்கூடாது?
9) வினைத்தூய்மையின்மை எத்தகைய துன்பத்தைத் தரும்?
10) 'உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்' – இடஞ்சுட்டி விளக்குக.
11) 'ஆஅதும் என்னுமவர்' – இடஞ்சுட்டி விளக்குக.
12) புறந்தூய்மை_____என்று தொடங்கும் குறட்பாவிலுள்ள அணியை விளக்கி எழுதுக.
13) திருக்குறளின் நூலமைப்பைப்பற்றிக் குறிப்பு எழுதுக.
14) திருவள்ளுவர் – குறிப்பு எழுதுக.

**ஈ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) 'வான் சிறப்பு' என்ற அதிகாரத்திலுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
2) வாய்மையைப் பற்றி ஆசிரியர் கூறியுள்ள கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

3) வினைத் தூய்மையைப் பற்றிக் குறள் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## மொழித்திறன் பயிற்சி

**1. பொருளுணர்ந்து பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1) | புயல் | – | உண்மை |
| 2) | புரை | – | வஞ்சனை |
| 3) | நல்குரவு | – | குற்றம் |
| 4) | சலம் | – | மேகம் |
| | | – | வறுமை |

**2. இருபொருள் தருக.**

1) துப்பு
2) சலம்
3) புயல்

3. 1) 'கடல்' என்னும் பொருள்தரும் சொல்லை 'வான் சிறப்பு' அதிகாரத்திலிருந்து எழுதுக.
   2) 'குற்றம்' என்னும் பொருள்தரும் சொல்லை 'வாய்மை' அதிகாரத்திலிருந்து எடுத்து எழுதுக.

**4. எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

1) துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.
2) மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானஞ்செய் வாரின் தலை.
3) இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

**5. இடம் மாறியுள்ள சீர்களைத் தகுந்தவாறு அமைத்துக் குறட்பாவைச் சரியாக எழுதுக.**

1) அல்லால்மற் றாங்கே பசும்புல் துளிவீழின்
விசும்பின் தலைகாண் பரிது.
2) புகழில்லை எல்லா எய்யாமை அறமுந்தரும்
பொய்யாமை யன்ன.
3) பசிகாண்பா னாயினும் சான்றோர் ஈன்றாள்
பழிக்கும் வினை செய்யற்க.

6. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

வழங்கி, நின்று, நல்காது, பொய்யற்க, தீர்ந்த, செய்யற்க

7. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக.

1) விண் ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
2) தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
3) தன்னெஞ்சு அறிவது பொய்யற்க, பொய்த்தபின்
4) துணைநலம் ஆக்கம் தூஉம் வினைநலம்
5) பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்.

8. அணியைச் சுட்டி விளக்குக.

1) புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்.
2) எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

## (ஆ) நான்மணிக் கடிகை

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணியாம்
தான்செல் உலகத் தறம். 1

கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோடு யார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை. 2

பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக ஒட்டாரைக் கால மறிந்தாங்கு
அருக்குக யார்மாட்டும் உண்டி சுருக்குக
செல்லா இடத்துச் சினம். 3

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்தில் சினம் குற்றம் குற்றம்
தமரல்லார் கையகத்து ஊண். 4

– விளம்பி நாகனார்

நூற்குறிப்பு : நான்மணிக் கடிகை என்பது, நான்கு வகையான மணிகளால் கோக்கப்பட்ட ஒருவகை அணிகலனைப்போல் பாடல்தோறும் நான்கு நீதிகளைக் கொண்ட நூற்று நான்கு வெண்பாக்களால் ஆன நூலாகும். இது கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டனுள் ஒன்றாகும். இதில் மாணவர்தம் பருவத்திற்கேற்ற நீதிகளும் உண்மைகளும் மிளிர்வது சிறப்பாகும்.

ஆசிரியர் குறிப்பு : பெயர்—விளம்பி நாகனார்; காலம்—கி.பி. 200க்கு முற்பட்டது, கடைச் சங்க காலம்; ஊர் — விளம்பி என்னும் ஊரில் பிறந்தார்; நாகனார் என்பது இயற்பெயர், விளம்பி என்னும் ஊரில் பிறந்ததால் விளம்பி நாகனார் எனப்பட்டார்.

அருஞ்சொற்பொருள்

1. அணியென்ப —அழகு என்று கூறுவர் ; பெண்மை நலம் — கற்பு; நாணம் — நாணும் இயல்பு (வெட்கப் பண்பு); தான் செல் உலகு— மறுமை உலகம்
2. கள்ளாமை — திருடாமை; கடிய — கொடுந்துன்பங்கள்; தள்ளாமை — தவிர்க்காமை; நள்ளாமை—நட்புக் கொள்ளாமை; சிறியர்—கீழான செயல்கள் செய்பவர்
3. பெருக்குக— உயர்த்துக; நட்டாரை— நண்பரை, தருக்குக — வெல்க; ஒட்டாரை — பகைவரை; அருக்குக — சுருக்கிக் கொள்க (குறைத்துக் கொள்க); சுருக்குக— தணித்துக் கொள்க
4. வளமிலா — வருவாய் இல்லாத; போழ்தத்து — காலத்தில்; வள்ளன்மை— ஈகைப்பண்பு; கிளைஞர் — உறவினர்; தமரல்லார் —உள்ளன்பு இல்லாதவர்; ஊண் — உண்ணுதல்

கருத்து மணிகள்

1. 1) நெல்லுங் கரும்பும் கழனிக்கு அழகு.
   2) தாமரை குளத்துக்கு அழகு.
   3) நாணம் பெண்மைக்கு அழகு.
   4) அறங்கள் ஆண்மைக்கு அழகாகும்.

2. 1) கொடுந்துன்பங்கள் உண்டாகுமாதலால் என்றும் திருடாமை வேண்டும்.
   2) தகுதியுடைய நல்லொழுக்கங்களைத் தவிராமை வேண்டும்.
   3) கீழான செயல் செய்யும் சிற்றினத்தாரோடு சேராமை வேண்டும்.
   4) யாரிடத்தும் பகைமை கொள்ளாமை வேண்டும்.

3. 1) நண்பரை நல்வாழ்வில் உயர்த்துக.
   2) பகைவரைக் காலமறிந்து வெல்க.

3) நெருங்கிய நண்பர், உறவினர் என்றாலும் அவரகத்து அடிக்கடி சென்று உண்ணுதலைக் குறைத்துக் கொள்க.

4) எளியர்மாட்டுச் சினங்கொள்ளாது தணித்துக்கொள்க.

4. 1) இளமைப் பருவத்தில் கல்லாமை குற்றம்.

2) பொருள் இல்லாத காலத்தில் ஈதல் குற்றம்.

3) உறவினர் துணையில்லாத காலத்தில் பிறரைச் சினத்தல் குற்றம்.

4) உள்ளன்பிலார்மாட்டு உண்ணுதல் குற்றம்.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

| | | |
|---|---|---|
| மாசற | – | மாசு+அற |
| நிலத்துக்கணி | – | நிலத்துக்கு + அணி |
| வீறெய்தும் | – | வீறு + எய்தும் |
| தனக்கணி | – | தனக்கு + அணி |
| காலமறிந்து | – | காலம் + அறிந்து |
| நன்றின்பாலுய்த்து | – | நன்றின்பால் + உய்த்து |
| வள்ளன்மை | – | வள்ளல் + தன்மை |
| தமரல்லார் | – | தமர் + அல்லார் |

**இலக்கணக் குறிப்பு**

என்ப – பகர விகுதி பெற்ற எதிர்கால வினைமுற்று; பெண்மை நலம் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை; கள்ளாமை, தள்ளாமை, நள்ளாமை, கொள்ளாமை – எதிர்மறைத் தொழிற்பெயர்கள்; கடிப – பலவின்பால் படர்க்கைக் குறிப்பு வினைப்பெயர்; ஊண்– முதல் நீண்ட முதனிலைத் தொழிற்பெயர் ; உண்டி–தொழிற்பெயர்; பெருக்குக, சுருக்குக – வியங்கோள் வினைமுற்றுகள்; செல்லா இடம் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்**

1. பெருக்குக – பெருக்கு + க
   பெருக்கு–பகுதி; க – வியங்கோள் வினைமுற்று விகுதி

2. வருதல் – வா(வரு) + தல்
   வா – பகுதி; வரு எனத் திரிந்தது விகாரம்;
   தல் – தொழிற்பெயர் விகுதி

3. அறிந்து – அறி + த்(ந்) +த் + உ
   அறி – பகுதி; த் – சந்தி ந் ஆனது விகாரம்;
   த் – இறந்த கால இடைநிலை; உ– வினையெச்ச விகுதி

4. கொள்ளாமை– கொள் + ள் + ஆ + மை
கொள் – பகுதி; ள்– சந்தி; ஆ – எதிர்மறை
இடைநிலை; மை – தொழிற்பெயர் விகுதி

5. கல்லாமை – கல் + ல் + ஆ + மை
கல் – பகுதி; ல் – சந்தி; ஆ – எதிர்மறை இடைநிலை,
மை – தொழிற்பெயர் விகுதி

பொருளுணர் பயிற்சி

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) யார்மாட்டும் கொள்ளாமை வேண்டும்______.
2) பெண்மை நலத்துக் கணியென்ப______.

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) விளம்பி நாகனார் – சிறு குறிப்பு வரைக.
2) ஆண்மைக்கும் பெண்மைக்கும் அழகெனப்படுபவை எவை?
3) கழனியும் குளமும் எவற்றால் அழகுக் கோலம் கொள்ளும்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) நான்மணிக்கடிகை, 'வேண்டும் வேண்டுமெ'ன்று கூறுவன யாவை?
2) விளம்பி நாகனார் பெருக்குக, தருக்குக, அருக்குக, சுருக்குக என்று விளம்புவனவற்றைக் கூறுக.
3) குற்றச் செயல்களாக நான்மணிக்கடிகை கூறுவன யாவை?
4) நான்மணிக்கடிகை – குறிப்பு வரைக.

மொழித்திறன் பயிற்சி

**1. பொருணர்ந்து பொருத்துக.**

1) நண்பர் – சுருக்குக
2) பகைவர் – அருக்குக
3) உண்டி – பெருக்குக
4) சினம் – தருக்குக

**2. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.**

1) கீழ்க்கணக்கு நூல்கள் ______ஆகும்
(1) எட்டு (2) பத்து (3) பன்னிரண்டு (4) பதினெட்டு

2) ஊண் என்பதன் பொருள்______ என்பதாகும்
(1) இறைச்சி (2) உணவு (3) உறவு (4) உண்ணுதல்

**3. எதுகை மோனைச் சீர்களை எடுத்து எழுதுக.**

கள்ளாமை வேண்டும் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டும் தகுதி உடையன

**4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எழுதுக.**

1) இ–மைப் ப–வத்துக் கல்லாமை குற்றம். (ல–ள; ரு–று)
2) வளமிலாப் போ–தத்து வ–ளன்மை குற்றம். (ழ்–ள்; ள்–ல்)

**5. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

வருதல், அறிந்து, கல்லாமை, சுருக்குக

**6. இலக்கணக் குறிப்பு எழுதுக.**

ஊண், செல்லாவிடம், கள்ளாமை, தடுக்குக

# 3. தொடர்நிலைச் செய்யுள்

ஒரு கதையானது பல பாடல்களில் தொடர்ந்து சொல்லப்பெறும் செய்யுள் வகை 'தொடர்நிலைச் செய்யுள்' எனப்படும்.

இப்பகுதியில் மணிமேகலை, பெரியபுராணம், பாஞ்சாலி சபதம், இராவண காவியம் ஆகிய தொடர்நிலைச் செய்யுட் பகுதிகள் உள்ளன.

## (அ) மணிமேகலை

### ஆதிரை பிச்சையிட்ட காதை

காய சண்டிகை என்னும் வித்தியாதரப் பெண் மணிமேகலைக்கு ஆதிரையின் கற்பு மேம்பாட்டை விளக்கிக் கூறும் பகுதி இதுவாகும். ஆதிரையின் கணவன் சாதுவன். இவர்கள் புகார் நகரத்தில் வாழ்ந்து வந்தார்கள். அவன் தன் மனைவியைக் கைவிட்டுப் பரத்தையோடு தொடர்பு கொண்டு செல்வம் அனைத்தையும் இழந்துவிட்டான். எனவே அந்தக் கணிகையும் அவனை வெறுத்து ஒதுக்க, சாதுவன் மரக்கலம் ஏறிப் பொருள் தேடிவர வணிகர் சிலருடன் வேற்றுநாடு சென்றான்.

அவ்வாறு செல்லும்பொழுது, கலம் கவிழ்ந்துபோக நீந்திச் சென்ற அவன் மட்டும் நாகர் நாட்டை அடைந்தான். கடற்பயணம் செய்தவர்களில் உயிர்பிழைத்த சிலர் தப்பி வந்து ஆதிரையிடம், அவள் கணவன் சாதுவன் இறந்துவிட்டான் என்று கூறினர். இதைக் கேட்ட ஆதிரை பெரிதும் துயருற்று ஈம எரிமூட்டி அதில் மூழ்க இருந்தபோது அசரீரி வானிலிருந்து, அவள் கணவன் இறக்கவில்லை என்றும், சில நாள்களில் செல்வத்துடன் திரும்பி வருவான் என்றும் கூற, அவள் மகிழ்ந்து கணவன் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். அசரீரி கூறிய வண்ணம் சாதுவன் வர, ஆதிரை சிறப்புடன் மனையறம் பேணுகின்றாள். ஆதிரையின் வீட்டிலேயே மணிமேகலை முதல் பிச்சையினை ஏற்கப் புகுகின்றாள்.

### சாதுவனின் கடற்பயணம்

ஆதிரை கணவன் ஆயிழை கேளாய்
சாதுவன் என்போன் தகவிலன் ஆகி
அணியிழை தன்னை அகன்றனன் போகிக் 3
கணிகை யொருத்தி கைத்தூண் நல்க
வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுறுதலின்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டிக்
காணம் இலியெனக் கையுதிர்க் கோடலும் 8

### சாதுவன் நாகர்மலை சேர்தலும் உயிர்பிழைத்தோர் சொன்னதும்

வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையின் தானுஞ் செல்வுழி
நளியிரு முந்நீர் வளிகலன் வெளவ
ஒடிமரம் பற்றி ஊர்திரை யுதைப்ப
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மையன் ஆயினன்
நாவாய் கேடுற நன்மரம் பற்றிப் 15
போயினன் தன்னோ டுயிருயப் போந்தோர்
இடையிருள் யாமத் தெறிதிரைப் பெருங்கடல்
உடைகலப் பட்டாங் கொழிந்தோர் தம்முடன்
சாதுவன் தானும் சாவுற் றானென

### ஆதிரையின் ஆற்றாத் துயரம்

ஆதிரை நல்லாள் ஆங்கது தான்கேட்(டு) 20
ஊரீ ரேயோ ஒள்ளழல் ஈமம்
தாரீ ரோவெனச் சாற்றினள் கழறிச்
சுடலைக் கானில் தொடுகுழிப் படுத்து
முடலை விறகின் முளியெரி பொத்தி
மிக்கஎன் கணவன் வினைப்பயன் உய்ப்பப்
புக்குழிப் புகுவேன் என்றவள் புகுதலும்
படுத்துடன் வைத்த பாயற் பள்ளியும் 27

### அசரீரிக் கூற்று

உடுத்த கூறையும் ஒள்ளெரி யுறாஅ(து)
ஆடிய சாந்தமும் அசைந்த கூந்தலில்
சூடிய மாலையும் தொன்னிறம் வழாது
விரைமலர்த் தாமரை ஒருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்பத்
தீயும் கொல்லாத் தீவினை யாட்டியேன்
யாது செய்கேன் என்றவள் ஏங்கலும்
ஆதிரை கேளுன் அரும்பெறற் கணவனை
ஊர்திரை கொண்டாங் குய்ப்பப் போகி
நக்க சாரணர் நாகர் வாழ்மலைப்
பக்கஞ் சேர்ந்தனன் பல்லியாண் டிராஅன்
சந்திர தத்தன் எனுமோர் வாணிகன்
வங்கந் தன்னொடும் வந்தனன் தோன்றும்
நின்பெருந் துன்பம் ஒழிவாய் நீயென
அந்தரந் தோன்றி அசரீரி அறைதலும்

### ஆதிரை மாண்பு

ஐயரி யுண்கண் அழுதுயர் நீங்கிப்
பொய்கைபுக் காடிப் போதுவாள் போன்று
மனங்கவல் வின்றி மனையகம் புகுந்தென்
கண்மணி யனையான் கடிதீங் குறுகெனப்
புண்ணிய முட்டாள் பொழிமழை தரூஉம்
அரும்பெறல் மரபிற் பத்தினிப் பெண்டிரும்
விரும்பினர் தொழூஉம் வியப்பினள் ஆயினள்.

### காய சண்டிகை கூற்றும் ஆதிரை பிச்சையிட்டதும்

சந்திர தத்தன் என்னும் வாணிகன்
வங்கஞ் சேர்ந்ததில் வந்துடன் ஏறி
இந்நகர் புகுந்தீங் கிவளொடு வாழ்ந்து
தன்மனை நன்பல தானமும் செய்தனன்
ஆங்ஙனம் ஆகிய ஆதிரை கையால்
பூங்கொடி நல்லாய் பிச்சை பெறுகென

மனையகம் புகுந்து மணிமே கலைதான்
புனையா ஓவியம் போல நிற்றலும்
தொழுது வலங்கொண்டு துயரறு கிளவியோ(டு)
அமுத சுரபியின் அகன்சுரை நிறைதரப்
பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகென
ஆதிரை யிட்டனள் ஆருயிர் மருந்தென. 61

– கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

நூற்குறிப்பு : இந்நூல் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்து நூல்களும் ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும். சிலப்பதிகாரமும், மணிமேகலையும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதைத் தொடர்புடையனவாகும். எனவே, இவை இரட்டைக் காப்பியம் எனப்படும்.

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. அவளது துறவு வாழ்க்கையைக் கூறும் நூல் மணிமேகலை எனப் பெயர் பெற்றது. இந்நூலுக்கு 'மணிமேகலை துறவு' என்னும் வேறு பெயரும் உண்டு. இந்நூல் சொற்சுவையும், பொருட்சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது. பௌத்த சமயச் சார்புடையது, முப்பது காதைகளைக் கொண்டது. இவற்றுள் நம் பாடப்பகுதியான 'ஆதிரை பிச்சையிட்ட காதை' பதினாறாவது காதையாகும்.

ஆசிரியர் குறிப்பு : இந்நூலின் ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்தார், மதுரையில் வாழ்ந்தார், கூல வாணிகம் (கூலம் –தானியம்) புரிந்தார். இக்காரணங்களினால் இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப் பெற்றார். இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவர். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். 'தண்டமிழ் ஆசான்', 'சாத்தன் நன்னூற் புலவன்' என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

**அருஞ்சொற்பொருள்**

**அடி 1–8:** ஆயிரை – மணிமேகலை; தகவு – நன்னடத்தை; கைத்தூண் – தீயொழுக்கத்தால் வந்த உணவு; வட்டு–சூதாடு கருவி; வான்பொருள் – மிக்க பொருள்; கணிகை – பரத்தை; காணம் – பொன்.

**அடி 9–17:** வங்கம் – மரக்கலம்; தங்கா வேட்கை – ஓரிடத்தில் தங்கவிடாத வேட்கை; முந்நீர் – ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர், ஆக்கல் அளித்தல் அழித்தல்

என்னும் முத்தொழில்களைச் செய்யவல்ல நீர், கிழக்கு மேற்கு தெற்கு ஆகிய மூன்று புறமும் தமிழகத்தைச் சூழ்ந்துள்ள கடலைத் தமிழர் முந்நீர் எனக் குறித்தனர் எனவும் கொள்ளலாம்; வளி – காற்று; ஒடிமரம் – ஒடிந்த மரத்துண்டு; திரை – அலை; உதைப்ப – உந்த; நக்க சாரணர் – உடையில்லாமல் திரிபவர்; நாகர் – ஓர் இனத்தவர்; நாவாய் – கப்பல்; மரம் – பாய்மரம்; போந்தார் – காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்தவர்; யாமம் – இரவு.

அடி18–27: ஊரீ ரேயோ – ஊரில் உள்ள சான்றோர்களே; ஈமம் – பிணஞ்சுட அடுக்கிய விறகு தாரீர் – தருவீர்; சாற்றினள் – சொல்லினள்; சுடலை – மயானம், சுடுகாடு; முடலை விறகு – காய்ந்த முறுக்குண்ட விறகு; முளியெரி – மிக்க நெருப்பு; எரிபொத்தி – எரிமூட்டி; பள்ளி – இடம்.

அடி 28–42: கூறை–புடவை; ஆடிய – பூசிய; சாந்தம் – சந்தனம்; அசைந்த கூந்தல் – அவிழ்ந்து பரந்து அசைந்து கொண்டிருந்த கூந்தல்; விரை – மணம் கமழும்; செய்யோள் – திருமகள்; தீவினையாட்டி – தீவினை செய்தவள்; உய்ப்ப – செலுத்த; அரும்பெறல் – அரிது பெற்ற பொருள்; ஊர்த்திரை – ஒன்றன்பின் ஒன்றாக ஊர்ந்து செல்லும் அலைகள்; அசரீரி – உடல் இல்லாதது; இதனை அசரீரி வாக்கு (வான்குரல்) எனவும் ஆகாய வாணி எனவும் கூறுவர்.

அடி 43–49: ஐயரி யுண்கண் – அழகிய செவ்வரி படர்ந்த மையுண்ட கண்; மனையகம் புகுந்து – வீட்டிற்குச் சென்று; கண்மணிபனையான் – கண்ணிலுள்ள மணியொப்பவனான கணவன்; புண்ணிய முட்டாள் – அறம் புரிதல் வழுவாதவனாய்; அரும்பெறல் மரபு – பெறுதற்கரிய முறைமை (கற்பு); வியப்பினள் – தகுதியுடையவள்.

அடி 50–61: இந்நகர் – புகார் நகர்; இவள் – ஆதிரை; புனையா ஓவியம் – வண்ணம் தீட்டப்பெறாத; அகன்சுரை – அகன்ற உள்ளிடம்; பாரகம் – நிலவுலகம்.

தொடர்களைப் பிரித்தறிதல்

அடி 1– 8: ஆயிழை – ஆ + இழை; தகவிலன் – தகவு + இலன்; கைத்தூண் – கை + அத்து + ஊண்; செல்வுழி – செல் + உழி

அடி 9–17: முந்நீர் – மூன்று + நீர்; நன்மரம் – நன்மை + மரம்; பெருங்கடல் – பெருமை + கடல்.

அடி 18–27: ஒள்ளழல் – ஒண்மை + அழல்; புக்குழி – புகு + உழி

அடி 28–42: ஒள்ளெரி – ஒண்மை + எரி; அரும்பெறல் – அருமை + பெறல்; பல்லியாண்டு – பல + ஆண்டு; பெருந்துன்பம் – பெருமை + துன்பம்.

அடி 43–49 : முட்டாள் – முட்டு + ஆ + ஆள்; கடிதீங்கு – கடிது + ஈங்கு

அடி 50–61 : பூங்கொடி – பூ + கொடி; வலங்கொண்டு – வலம் + கொண்டு; ஆருயீர் – அருமை + உயிர்; மனையகம் – மனை + அகம்; பாரகம் – பார் + அகம்

**இலக்கணக் குறிப்பு**

அடி 1–10 : ஆயிழை, அணியிழை– வினைத்தொகைப்புறத்து பிறந்த அன்மொழித்தொகைகள்; அகன்றனள் போகி – முற்றெச்சம்; வான்பொருள் – உரிச்சொற்றொடர்; தங்கா வேட்கை – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

அடி 11–21 : முந்நீர் – பண்புத்தொகைப்புறத்து பிறந்த அன்மொழித்தொகை– காரணப் பெயர்; நளியிரு – ஒருபொருட் பன்மொழி; ஒடிமரம், ஊர்திரை, வாழ்மலை – வினைத்தொகைகள்; போந்தோர் – வினையாலணையும் பெயர்; எறிதிரை – வினைத்தொகை.

அடி 22–27: சாற்றினள் கழறி – முற்றெச்சம்; தொடுகுழி – வினைத்தொகை; வினைப்பயன் – மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை.

அடி 28–42: உறாஅது – செய்யுளிசை அளபெடை; தொன்னிறம் – பண்புத் தொகை; விரைமலர் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை; ஒரு தனி – ஒருபொருட் பன்மொழி; கொல்லாத் தீவினை – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; வந்தனன் தோன்றும் – முற்றெச்சம்; தோன்றும்–செய்யும் என்னும் முற்று; பெருந்துன்பம்– பண்புத்தொகை.

அடி 43–51 : உண்கண் – வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; அழுதுயர் – வினைத்தொகை; கடிதீங்கு – உரிச்சொற்றொடர்; பொழிமழை – வினைத்தொகை; தரூஉம், தொழூஉம் – செய்யுளிசை அளபெடைகள்.

அடி 52–61 : புகுந்து, வாழ்ந்து, தொழுது – வினையெச்சங்கள்; பெறுக, அறுக – வியங்கோள் வினைமுற்றுகள்; பசிப்பிணி – உருவகம்; தானமும் – உயர்வுச் சிறப்பும்மை; புனையா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; ஆருயிர் – பண்புத்தொகை.

**பகுபத உறுப்பிலக்கணம்**

அடி 22: சாற்றினள் – சாற்று + இன் + அள்
சாற்று – பகுதி; இன் – இறந்தகால இடைநிலை;
அள் – விகுதி.

அடி 26: புகுவேன் – புகு + வ் + ஏன்
புகு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;
ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

அடி 38: சேர்ந்தனன் – சேர் + த்(ந்) + த் + அன் + அன்
சேர் – பகுதி; த் – சந்தி; த், ந் என மாறியது விகாரம்;
த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை;
அன் – விகுதி.

அடி 40: வந்தனன் – வா(வ) + த்(ந்) + த் அன் + அன்
வா – பகுதி; வ எனக் குறுகியது விகாரம்;
த் – சந்தி; த், ந் என மாறியது விகாரம்;
த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை;
அன் – விகுதி.

அடி 41: ஒழிவாய் – ஒழி + வ் + ஆய்
ஒழி – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;
ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.

அடி 47: முட்டாள் – முட்டு + ஆ + அள்
முட்டு – பகுதி; ஆ – எதிர்மறை இடைநிலை;
ஆள் – விகுதி.

அடி 51: வந்து – வா(வ) + த்(ந்) + த் + உ
வா – பகுதி; வ எனக் குறுகியது விகாரம்;
த் – சந்தி; த், ந் ஆனது விகாரம்;
த் – இறந்தகால இடைநிலை;
உ – வினையெச்ச விகுதி.

அடி 55: பெறுக – பெறு + க
பெறு – பகுதி; க – வியங்கோள் வினைமுற்று விகுதி.

### பொருளுணர் பயிற்சி

**அ. சரியான விடையை எடுத்தெழுதி நிரப்புக.**

1) திருவின் செய்யோள் என்பது ______ குறிக்கும்.
(மணிமேகலை, திருமகள், மலைமகள்)

2) பத்தினிப் பெண்கள் தொழுது போற்றுகின்ற சிறப்பினை உடையவள்______
(காயசண்டிகை, மணிமேகலை, ஆதிரை)

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மணிமேகலை என்று இந்நூலுக்குப் பெயர் வரக் காரணம் என்ன?

2) இரட்டைக் காப்பியங்கள் என்று சுட்டப் பெறுபவை எவை? ஏன்?
3) ஐம்பெருங்காப்பியங்கள் எவை?
4) சாதுவன் எவ்வாறு பொருளை இழந்தான்?
5) கணிகையர் இயல்பு மணிமேகலையில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
6) சாதுவன் கடற்பயணம் மேற்கொண்டது ஏன்?
7) சாதுவன் நாகர்மலை சென்றடைந்தது ஏன்?
8) உயிர் பிழைத்தோர் ஆதிரையிடம் கூறியது யாது? விளக்குக.
9) சாதுவன் இறப்பு குறித்து ஆதிரையின் முடிவு யாது? விளக்குக.
10) ஆதிரையின் ஏக்கம் யாது?
11) அசரீரி வாயிலாக ஆதிரை அறிந்தது யாது?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மணிமேகலை – நூற்குறிப்புத் தருக.
2) சீத்தலைச் சாத்தனாரைப் பற்றிக் குறிப்பு எழுதுக.
3) சாதுவன் எவ்வாறு நாகர்மலை அடைந்தான்? விளக்குக.
4) மரக்கலம் கவிழ்ந்ததால் தப்பி வந்தோர் ஆதிரையிடம் சொன்னதும் அவளது முடிவும் குறித்து எழுதுக.
5) அசரீரி வாக்கும், ஆதிரையின் வியப்பும் குறித்து எழுதுக.
6) 'ஊரீ ரேயோ ஒள்ளழல் ஈமம் தாரீரோ?' – இடஞ்சுட்டி விளக்குக.
7) 'தீயுங் கொல்லாத் தீவினை யாட்டியேன் யாது செய்கேன்' – இடஞ்சுட்டி விளக்குக.

**ஈ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) காயசண்டிகை, ஆதிரைக்கு நேரிட்ட செய்திகளைப்பற்றி, மணிமேகலைக்கு உரைத்தனவற்றைத் தொகுத்து எழுதுக.
2) ஆதிரையின் கற்பு மேம்பாட்டினை விளக்குக.

**மொழித்திறன் பயிற்சி**

**1. பொருளறிந்து பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1) | வட்டு | – | பொன் |
| 2) | காணம் | – | நன்னடத்தை |
| 3) | வளி | – | காற்று |
| 4) | சாந்தம் | – | மரக்கலம் |
| 5) | தகவு | – | சூதாடு கருவி |
| | | – | சந்தனம் |

**2. 'ஆடை' (புடவை) என்னும் பொருள் தரும் சொல்லைச் செய்யுளிலிருந்து எடுத்து எழுதுக.**

3. கீழ்க்காணும் அடிகளில் அமைந்துள்ள எதுகைச் சொற்களையும் மோனைச் சொற்களையும் எடுத்து எழுதுக.

வட்டினும் சூதினும் வான்பொருள் வழங்கிக்
கெட்ட பொருளின் கிளைகே டுருதலின்

4. கீழ்க்காணும் உவமையைப் பொருளுடன் பொருத்துக.

1) விரைமலர்த் தாமரை ஒருதனி யிருந்த
திருவின் செய்யோள் போன்றினி திருப்ப

2) புனையா ஓவியம் போல

5. கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எடுத்து எழுதுக.

1) ந–யிரு மு–நீர் வளிகலன் வெளவ (லி–ளி; ந்–ன்)

2) பா–கம் அடங்கலும் பசிப்பி–அறுகென (ர–ற; னி–ணி)

6. கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக.

<u>ஒடிமரம்</u> பற்றி <u>ஊர்திரை</u> யுதைப்ப
ஐயரி யுண்கண் <u>அழுதுயர்</u> நீங்கிய

7. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

அகன்றனன், சாற்றினள், விரும்பினர், வியப்பினள்

8. கீழ்க்காணும் சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்தி ஏற்ற பொருள் எழுதுக.

சாரணர், பாயல்

# (ஆ) பெரிய புராணம்

## பூசலார் நாயனார் புராணம்

தொண்டை நாட்டில் உள்ள திருநின்றவூரில் பூசலார் தோன்றினார். சிவபெருமானிடம் மிகுந்த அன்புடையராகிய அவர் சிவன் கோயில் கட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டார். பொருள் கிடைக்காமையினால் மனத்தினாலேயே கோயில் எடுக்க முற்பட்டார். கல், மரம் போன்ற சாதனங்களையும், தச்சர் முதலியோரையும் தேடி இரவும் பகலும் துயிலாமல் மனக்கோயில் கட்டினார். விமானம், தூபி, கிணறு, மதில், குளம் முதலிய எல்லாவற்றையும் செய்து முடித்து இறைவனை எழுந்தருளச் செய்யும் நன்னாளையும் மனத்துக்குள் வகுத்துக் கொண்டார்.

இதற்கிடையில் காஞ்சிபுரத்தில் மன்னன் பல்லவன் பெருங்கற்கோயில் எடுத்து குடமுழுக்குச் செய்யப் பூசலார் குறித்த நாளையே குறித்திருந்தான்.

இறைவன், பல்லவனுடைய கனவில் குடமுழுக்கு நாளுக்கு முந்திய நாளில் தோன்றி "திருநின்றவூரில் பூசலார் பக்தியுடன் எடுத்த ஆலயத்தில் நாளை நாம் புகுவதால், உமது குடமுழுக்கு நாளை, பிறிதொரு நாளில் வைத்துக் கொள்வாய்" என்று கூறி மறைந்தார். இதனைக் கேட்ட அரசன் துயில் உணர்ந்து, பூசலாரை வணங்க வேண்டும் என்னும் நோக்கோடு திருநின்றவூர் வந்துசேர்ந்தார். பூசலாரைப் பார்த்து "தாங்கள் எடுத்த ஆலயம் யாது? இறைவன் இன்று அத்திருக்கோயிலுக்கு எழுந்தருளுவதாகக் கூறியதால் உம்மை வணங்க வந்தேன்" என்றார். பூசலார் இதனைக் கேட்டு மருண்டு இறைவன் பெருமையை வியந்து தாம் எடுத்த மனக்கோயிலை விளக்கிக் கூறினார். அரசன் பூசலாரை நிலமுறத் தாழ்ந்து வணங்கினான்.

பூசலார் மனக்கோயிலில் சிவனை நிறுவி பூசை எல்லாம் முறைப்படிச் செய்து, பின்னர் சிவனடி சேர்ந்தார்.

திருநின்றவூர் சிறப்பு

உலகினி லொழுக்க மென்று முயர்பெருந் தொண்டை நாட்டு
நலமிகு சிறப்பின் மிக்க நான்மறை விளங்கு மூதூர்
குலமுதற் சீல மென்றுங் குறைவிலா மறையோர் கொள்கை
நிலவிய செல்வ மல்கி நிகழ்திரு நின்ற வூராம். 1

பூசலாரின் சிவபக்தி

அருமறை மரபு வாழ வப்பதி வந்து சிந்தை
தருமுணர் வான வெல்லாந் தம்பிரான் கழன்மேற் சார
வருநெறி மாறா வன்பு வளர்ந்தெழ வளர்ந்து வாய்மைப்
பொருள் பெறு வேத நீதிக் கலையுணர் பொலிவின் மிக்கார். 2

அடுப்பது சிவன்பா லன்பர்க் காம்பணி செய்த லென்றே
கொடுப்பதெவ் வகையுந் தேடி யவர்கொளக் கொடுத்துக் கங்கை
மடுப்பொதி வேணி யையர் மகிழ்ந்துறை வதற்கோர் கோயில்
எடுப்பது மனத்துக் கொண்டா ரிருநிதி யின்மை யெண்ணார். 3

பூசலார் மனக்கோயில் கட்டியது

மனத்தினாற் கருதி யெங்கு மாநிதி வருந்தித் தேடி
எனைத்துமோர் பொருட்பே றின்றி யென்செய்கே னென்று நைவார்
நினைப்பினா லெடுக்க நேர்ந்து நிகழ்வுறு நிதிய மெல்லாம்
தினைத்துணை முதலாத் தேடிச் சிந்தையாற் றிரட்டிக் கொண்டார். 4

சாதனத் தோடு தச்சர் தம்மையு மனத்தாற் றேடி
நாதனுக் கால யஞ்செய் நலம்பெறு நன்னாட் கொண்டே
ஆதரித் தாக மத்தா லடிநிலை பாரித் தன்பால்
காதலிற் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றார். 5

அடிமுத லுபான மாதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து மான
முடிவுறு சிகரந் தானு முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயி னிரம்பிட நினைவாற் செய்தார். 6

தூபியு நட்டு மிக்க சுதையுநல் வினையுஞ் செய்து
கூவலு மமைத்து மாடு கோயில்சூழ் மதிலும் போக்கி
வாவியுந் தொட்டு மற்றும் வேண்டுவ வகுத்து மன்னும்
தாபனஞ் சிவனுக் கேற்க விதித்தநாள் சாரு நாளில். 7

மன்னன் கனவில் இறைவன் கூறியது

காடவர் கோமான் கச்சிக் கற்றளி யெடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்
நாடமா லறியா தாரைத் தாபிக்கு மந்நாள் முன்னாள்
ஏடலர் கொன்றை வேய்ந்தா ரிரவிடைக் கனவி லெய்தி. 8

நின்றவூர்ப் பூச லன்ப னெடிதுநாள் நினைந்து செய்த
நன்றுநீ டால யத்து நாளை நாம் புகுவோ நீயிங்(கு)
ஒன்றிய செயலை நாளை யொழிந்துபின் கொள்வா யென்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண் டருளப் போந்தார். 9

மன்னன் பூசலாரை தேடிச் சென்று காணல்

தொண்டரைச் சென்று கண்ட மன்னவன் றொழுது நீரிங்(கு)
எண்டிசை யோரு மேத்த வெடுத்தவா லயந்தான் யாதிங்(கு)
அண்டர்நா யகரைத் தாபித் தருளுநா ளின்றென் றும்மைக்
கண்டடி பணிய வந்தேன் கண்ணுத லருள்பெற் றென்றான். 10

மன்னவ னுரைப்பக் கேட்ட அன்பர்தா மருண்டு நோக்கி
என்னையோர் பொருளாக் கொண்டே யெம்பிரா னருள்செய் தாரேல்
முன்வரு நிதியி லாமை மனத்தினான் முயன்ற கோயில்
இன்னதா மென்று சிந்தித் தெடுத்தவா றெடுத்துச் சொன்னார். 11

அரசனு மதனைக் கேட்டங் கதிசய மெய்தி யென்னே
புரையறு சிந்தை யன்பர் பெருமையென் றவரைப் போற்றி
விரைசெறி மாலை தாழ நிலமிசை வீழ்ந்து தாழ்ந்து
முரசெறி தானை யோடு மீண்டுதன் மூதூர்ப் புக்கான். 12

பூசலார் இறையருள் பெற்றது

அன்பரு மமைத்த சிந்தை யாலயத் தரனார் தம்மை
நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தி னோடும்
பின்புபூ சனைக ளெல்லாம் பெருமையிற் பலநாட் பேணிப்
பொன்புனை மன்று ளாடும் பொற்கழல் நீழல் புக்கார். 13

–சேக்கிழார்

நூற்குறிப்பு : பெருமை பெற்ற சிவனடியார்களின் வரலாற்றைச் சிறப்பித்துக் கூறும் நூலாதலின் 'பெரிய புராணம்' என்று பெயர் பெற்றது. தனியடியார் அறுபத்து மூவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆகிய எழுபத்து இருவர் வரலாறு இந்நூலில் கூறப்பெற்றுள்ளன. இந்நூலுக்கு ஆசிரியர் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதாகும். (திரு– மேன்மை; தொண்டர்–சிவனடியார்; புராணம் – பழைய வரலாறு.)

சுந்தரமூர்த்தி நாயனாரின் 'திருத்தொண்டத் தொகை'யையும், நம்பியாண்டார் நம்பியின் 'திருத்தொண்டர் திருவந்தாதி'யையும் முதல் நூலாகக் கொண்டு இயற்றப் பெற்றதால் இந்நூல் வழிநூலாகும்.

இது சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாம் திருமுறையாகும்.

இந்நூல் இரண்டு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டு 'திருமலைச் சருக்கம்' முதலாக 'வெள்ளானைச் சருக்கம்' ஈறாகப் பதின்மூன்று சருக்கங்களுக்குமாக 4286 பாடல்களைக் கொண்டு உள்ளது. பாடப்பகுதியாகிய 'பூசலார் நாயனார் புராணம்' இரண்டாம் காண்டத்தில் 'மன்னிய சீர்ச் சருக்க'த்தில் முதல் புராணமாக அமைந்துள்ளது.

ஆசிரியர் குறிப்பு : இந்நூலை இயற்றியவர் சேக்கிழார். இவரது இயற்பெயர் அருண்மொழித்தேவர் என்பதாகும். இவர் அநபாய சோழனுக்கு (இரண்டாம் குலோத்துங்கன்) முதல் அமைச்சராக இருந்தார். அவ்வரசன் இவருக்கு அளித்த பட்டப் பெயர் 'உத்தம சோழப் பல்லவராயன்' என்பது. 'தொண்டர் சீர் பரவுவார்' என்பது சிறப்புப் பெயராகும். அரசனின் வேண்டுகோளுக்கு இணங்கி பெரிய புராணத்தைப் பாடினார். இவர் சென்னையை அடுத்த குன்றத்தூரில் பிறந்தவர். இவ்வூரில் திருநாகேச்சுவரம் என்னும் கோயிலைக் கட்டியுள்ளார். இங்கு

இவருக்குக் கோயிலும் மடமும் உள்ளன. இவருடைய காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டாகும். 'பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவி வலவ' என்று மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் சேக்கிழாரைப் போற்றிப் பாடியுள்ளார்.

## அருஞ்சொற்பொருள்

1. ஒழுக்கம் – நல்லொழுக்கம்; நான்மறை – நால்வேதங்கள்; மூதூர் – பழைய ஊர்; கொள்கை – உயிரின் மேம்பாடு பற்றிய குறிக்கோள்; சீலம் – ஒழுக்கம், செல்வம் மல்கி நிகழ் – செல்வம் நிறைந்து திகழ்கின்ற.
2. சிந்தை தரும் உணர்வு – உள்ளத்தில் தோன்றுகின்ற எண்ணங்கள்; தம்பிரான் – சிவபெருமான்.
3. அடுப்பது – செய்யத்தக்கது; வேணி – சடை; கொடுப்பது – அடியார்க்குக் கொடுக்கும் பொருள்; எவ்வகையும் – தம்மாலியன்ற எவ்வகையானும்; மடு – ஆழமாகிய பெரிய நீர்நிலை; எடுப்பது – அமைதல், கட்டுதல்; இரு நிதியின்மை – பொருளில்லாமை.
4. எனைத்தும் – எவ்வகையினும்; பொருட்பேறு – பொருள் பெறும் நிலை; நைவார் – மனம் மிக வருந்துதல்; நிதியம் – பொருட்திரள்; நேர்ந்து – துணிவு பூண்டு; தினைத்துணை – சிறிய அளவாக.
5. சாதனம் – கோயில் எடுப்பதற்கு வேண்டும் கல், மண், சுண்ணம், மரம் முதலானவை; செய் – கட்டுதற்குரிய; அடிநிலை – அத்திவாரம்; பாரித்தல் – பரப்புதல், கால் கொள்ளுதல்; கங்குல் – இரவு; காதலில் – அன்பால், ஆசையால் (விரைவில் எடுத்து முடித்துக் காணும் ஆசையால்; கண்படாது – உறங்காது; ஆகமம் – வேதத்தின் சாரமாக உள்ள நூல். (கோயில் அமைக்கும் விதிகள் ஆகமத்தில் உள்ளன.)
6. முன்னிய – கருதிய; உபானம் – கோபுரத்தின் அடிக்கீழ் அமைக்கும் சித்திரவரி, படை–அடுக்கு, சிகரம் – உச்சி, மானம் – விமானம், வடிவுறுந் தொழில்கள் – தொழில் வேலைப்பாட்டுத்திறம் பொருந்திய அழகு; முன்னிய முழம் – விதித்த முழு அளவு; நெடிதுநாள் கூட – பல நாள் செல்ல
7. தூபி – விமானத்துச்சியில் அமைக்கும் கூரிய சிகரம்; சுதை நல்வினை – சுண்ணச்சாந்து; கூவல் – கிணறு; மாடு – உட்சுற்று மதில்; சூழ்மதில் – புறச்சுற்று; வாவி – திருக்குளம்; தொட்டு – அகழ்ந்து அமைத்து; விதித்த – குறித்த; தாபனம் – பிரதிட்டை.
8. காடவர் – பல்லவ அரசராகிய இராசசிங்கர்; கச்சி – காஞ்சி; கற்றளி – கற்கோயில்; மாடு – செல்வம்; நாட – தேட; மால் – திருமால்,

ஏடலர் – இதழ்மலர்ந்த; வேய்ந்தார் – கொன்றை மாலையை அணிந்த சிவபெருமான்.

9. நன்றுநீடு – நன்மை நீடிய; நீடாலயம் – பெரிய கோயில்; ஒன்றிய செயலை – பொருந்திய செய்கையை; தொண்டர் கோயில் – பூசலாரது மனக்கோயில்; கொண்டருளுதல் – இருப்பிடமாகக் கொண்டு விளங்க வீற்றிருந் தருளுதல்; போந்தார் – மறைந்தருளினார்.

10. ஏத்த – துதிக்க, அண்டர் நாயகன் – தேவர் தலைவன்; தாபித்து – நிலைநிறுத்தி; நுதல் – நெற்றி.

11. மருண்டு – மருட்சியடைந்து; எடுத்து – விரித்து.

12. அதிசயம் – பெருமிதமாக அறிந்து மகிழ்ந்த மனநிலை; புரையறு – குற்றமற்ற; விரை – வாசனை; தானை – சேனை; மூதூர் – காஞ்சிபுரம்; புக்கான் – அடைந்தான்.

13. அன்பரும் – பூசலாரும்; சிந்தையாலயம் – மனத்தினால் அமைத்த கோயில்; பூசனை – பூசை (தாபித்தற் பின்னர் செயத்தக்க மண்டலாபிடேக பூசை, நித்திய பூசை முதலாயின); பொன்புனைமன்று – பொன்னம்பலம்.

தொடர்களைப் பிரித்தறிதல்

| | | |
|---|---|---|
| 1. | நான்மறை | – நான்கு + மறை |
| | மூதூர் | – முதுமை + ஊர் |
| 2. | அருமறை | – அருமை + மறை |
| 3. | எவ்வகை | – எ + வகை |
| 4. | சிந்தையாற்றிரட்டி | – சிந்தையால் + திரட்டி |
| | பொருட்பேறு | – பொருள் + பேறு |
| 5. | நன்னாள் | – நன்மை + நாள் |
| 6. | கோயினிரம்பிட | – கோயில் + நிரம்பிட |
| 8. | கற்றளி | – கல் +தளி |
| | பெருஞ்செல்வம் | – பெருமை + செல்வம் |
| 9. | நீடாலயம் | – நீடு + ஆலயம் |
| 10. | எண்டிசை | – எட்டு + திசை |
| 11. | கோயில் | – கோ + இல் |

இலக்கணக் குறிப்பு

1. விளங்கு மூதூர் – வினைத்தொகை; மூதூர் – பண்புத்தொகை; குறைவிலா மறையோர் – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

2. அருமறை – பண்புத்தொகை; மாறா அன்பு – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; கழல் – தானியாகுபெயர்.

3. ஆம்பணி – (ஆகும் பணி) தொகுத்தல் விகாரம்; செய்தல் – தொழில்பெயர்; கோயில் – இலக்கணப்போலி; இருநிதி – உரிச்சொல் தொடர்.

4. எனைத்தும் – முற்றும்மை; மாநிதி – உரிச்சொல் தொடர்; பேறு – முதனிலை திரிந்த தொழிற்பெயர்; முதலாத் தேடி – முதலாக என்பதன் தொகுத்தல் விகாரம்; நைவார் – முற்றெச்சம்.

7. நல்வினை – பண்புத்தொகை

8. பெருஞ்செல்வம் – பண்புத்தொகை; மாலறியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; அலர் கொன்றை–வினைத்தொகை.

9. பூசலன்பன் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை; நினைந்து – வினையெச்சம்; புகுவோம் – தன்மை பன்மை வினைமுற்று; கொள்வாய் – முன்னிலை ஒருமை வினைமுற்று.

10. தொழுது – வினையெச்சம்; திசையோரும் – முற்றும்மை; கண்ணுதல் – முன்பின்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைத் தொகை;

11. சிந்தித்து – வினையெச்சம்; பொருளாக் கொண்டே – பொருளாக என்பதன் தொகுத்தல் விகாரம்; முயன்ற கோயில் – பெயரெச்சம்.

13. பெரும்பொழுது – பண்புத்தொகை; பொன்புனை – மூன்றாம் வேற்றுமைத் தொகை; சிந்தை ஆலயம் – உருவகம்; நீழல் – நிழல் என்பதன் நீட்டல் விகாரம்.

பகுபத உறுப்பிலக்கணம்

1. நிலவிய – நிலவு + இ(ன்) + ய் + அ
நிலவு – பகுதி; இ(ன்) – இறந்தகால இடைநிலை, ன் கெட்டது விகாரம்; ய் – உடம்படுமெய்; அ – பெயரெச்ச விகுதி.

2. மிக்கார் – மிகு(மிக்கு) + ஆர்
மிகு – பகுதி; மிக்கு – பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டியது; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

வந்து – வா(வ) + த்(ந்) + த் + உ
வா – பகுதி 'வ' என்று குறுகியது விகாரம் ; த் – சந்தி; ந் – விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ– வினையெச்ச விகுதி.

வளர்த்து – வளர் + த் + த் + உ
வளர் – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

3. கொண்டார் – கொள்(ண்) + ட் + ஆர்.
கொள் – பகுதி; ண் – விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

4. வருந்தி – வருந்து + இ
வருந்து – பகுதி; இ – வினையெச்ச விகுதி.

தேடி – தேடு + இ
தேடு – பகுதி; இ – வினையெச்ச விகுதி.

5. உற்றார் – உறு(உற்று) + ஆர்
உறு – பகுதி; உற்று – பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டியது ; ஆர் – பலர் பால் வினைமுற்று விகுதி.

6. செய்தார் – செய் + த் + ஆர்
செய் – பகுதி; த் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

7. நட்டு – நடு(நட்டு) + உ
நடு – பகுதி; நட்டு – பகுதி இரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று; உ – வினையெச்ச விகுதி.

8. செய்வான் – செய் + வ் + ஆன்
செய் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

வேய்ந்தார் – வேய் + த்(ந்) + த் + ஆர்
வேய் – பகுதி; த் – சந்தி; ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

10. சென்று – செல்(ன்) + ற் + உ
செல் – பகுதி; ன் – விகாரம்; ற் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

11. மருண்டு – மருள்(ண்) + ட் + உ
மருள் – பகுதி; ண் – விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

முயன்ற – முயல்(ன்) + ற் + அ
முயல் – பகுதி; ன் – விகாரம்; ற் – இறந்த கால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

கேட்ட – கேள்(ட்) + ட் + அ
கேள் – பகுதி; ட் – விகாரம், ட் – இறந்தகால இடைநிலை; அ– பெயரெச்ச விகுதி.

12. வீழ்ந்து – வீழ் + த்(ந்) + த் + உ
வீழ் – பகுதி; த் – சந்தி, ந் – விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

புக்கான் – புகு(புக்கு) + ஆன்
புகு – பகுதி; புக்கு – பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

பொருளுணர் பயிற்சி

**அ. சரியான விடையை எடுத்து எழுதுக.**

1) மூதூர் என்பது _____ குறிக்கும் (காஞ்சிபுரம், திருநின்றவூர், குன்றத்தூர்)
2) காடவர் கோமான் _____ (குலோத்துங்கன், நரசிம்மன், இராசசிங்கன்)

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தொண்டை நாடு எதனால் சிறப்புடையது?
2) திருநின்றவூரின் சிறப்பை எழுதுக.
3) பல்லவன் கனவில் இறைவன் தோன்றிக் கூறியதை எழுதுக.
4) அரசன் திருநின்றவூரை அடைந்ததேன்?
5) பூசலார் தாம் அமைத்த மனக்கோயிலில் எவ்வாறு பூசை செய்தார்?
6) பூசலார் புறக்கோயிலை விடுத்து அகக்கோயிலை எடுக்கக் காரணம் என்ன?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) பெரிய புராணம் – குறிப்பு எழுதுக.
2) சேக்கிழார் – குறிப்பு எழுதுக.
3) பூசலாரின் சிவபக்தியை எழுதுக.
4) கோயில் அமைப்புக்கு வேண்டிய அங்கங்களைப் பூசலார் வழி விளக்குக.
5) 'நெடிது நாள் நினைந்து செய்த நன்று நீடாலயத்து நாளை நாம் புகுவோம்' – இடஞ்சுட்டி விளக்குக.
6) 'என்னையோர் பொருளாக் கொண்டே யெம்பிரா னருள் செய்தாரேல்' – இடஞ்சுட்டி விளக்குக.

**ஈ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) பூசலார் எடுத்த மனக்கோயில் பற்றி விளக்கி எழுதுக.
2) பல்லவனுக்கும் பூசலன்பருக்கும் நிகழ்ந்த உரையாடலைத் தொகுத்து எழுதுக.

மொழித்திறன் பயிற்சி

1. பொருளுணர்ந்து பொருத்துக,

| | | | |
|---|---|---|---|
| 1) | வாவி | – | அடுக்கு |
| 2) | படை | – | பிரதிட்டை |
| 3) | தாபனம் | – | செல்வம் |
| 4) | மாடு | – | குளம் |
| | | – | சோலை |

2. 'கிணறு' என்னும் பொருள் தரும் சொல்லைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

3. கீழ்க்காணும் அடிகளில் அமைந்துள்ள எதுகைச் சொற்களையும் மோனைச் சொற்களையும் எடுத்து எழுதுக.

1) அடிமுத லுபான மாதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து
2) காடவர் கோமான் கச்சிக் கற்றளி யெடுத்து முற்ற
மாடெலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்

4) **கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எடுத்து எழுதுக.**

1) வருநெ–மாறா அன்பு வள–ந்தெழ வளர்ந்து (ரி–றி ; ர்–ற்)
2) கண்டடி பணிய வந்தேன் க–ணுத லரு–பெற்றென்றான் (ண–ன ; ல்–ள்)

5) **கோடிட்ட சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக.**

1) எடுப்பது மனத்துக் கொண்டா <u>ரிருநிதி</u> யின்மை <u>யெண்ணார்</u>.
2) நின்றவூர்ப் <u>பூசலன்ப</u> னெடிதுநாள் <u>நினைந்து</u> செய்த.

6) **பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

புக்கார், வந்தேன், கொள்வாய், மல்கி.

7) கீழ்க்காணும் சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்தி ஏற்ற பொருள் எழுதுக.
நைவார், சீலம், மடு, கண்ணுதல்

## (இ) பாஞ்சாலி சபதம்

கௌரவர் சபையில் திரௌபதி நீதி கேட்டழுதபோது
வீமன் சொல்வது

சூதர் மனைகளிலே – அண்ணே!
தொண்டு மகளிருண்டு.
சூதில் பணயமென்றே – அங்கோர்
தொண்டச்சி போவதில்லை. 1

நாட்டையெல் லாந்தொலைத்தாய் – அண்ணே
நாங்கள் பொறுத்திருந்தோம்.
மீட்டும் எமையடிமை – செய்தாய்
மேலும் பொறுத்திருந்தோம். 2

துருபதன் மகளைத் – திட்டத்
துய்நன் உடன்பிறப்பை
இருபகடை என்றாய் – ஐயோ!
இவர்க்கு அடிமை என்றாய். 3

இதுபொறுப்ப தில்லை – தம்பி!
எரிதழல் கொண்டுவா.
கதிரை வைத்திழந்தான் – அண்ணன்
கையை எரித்திடுவோம். 4

விசயன் வீமனுக்குச் சொல்வது
(வேறு)

எனவீமன் சகதேவ னிடத்தே சொன்னான்.
இதைக்கேட்டு வில்விசயன் எதிர்த்துச் சொல்வான்:
'சினமான தீயறிவைப் புகைத்த லாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்' 5

'தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்
தருமம்மறு படிவெல்லும்' எனுமியற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்.

கருமத்தை மேன்மேலும் காண்போம். இன்று
கட்டுண்டோம், பொறுத்திருப்போம்; காலம்மாறும்.
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்.
தனுவுண்டு 'காண்டீவம்' அதன்பேர்; என்றான். 6

துரியனின் இளையதம்பி விகர்ணன்
வீடுமருக்குக் கூறிய மறுப்பு

அண்ணனுக்குத் திறல்வீமன் வணங்கி நின்றான்.
அப்போது விகர்ணன்எழுந்(து) அவைமுன் சொல்வான்;
'பெண்ணரசி கேள்விக்குப் பாட்டன் சொன்ன
பேச்சதனை நான் கொள்ளேன். பெண்டிர் தம்மை
எண்ணமதில் விலங்கெனவே கணவர் எண்ணி
ஏதெனிலுஞ் செய்திடலாம்' என்றான் பாட்டன்.
வண்ணமுயர் வேதநெறி மாறிப் பின்னாள்
வழங்குவதிந் நெறியென்றான்; வழுவே சொன்னான். 7

''தன்னையிவன் இழந்தடிமை யான பின்னர்த்
தாரமெது? வீடேது? தாத னான
பின்னையுமோர் உடைமையுண்டோ?' என்று நும்மைப்
பெண்ணரசு கேட்கின்றார் பெண்மை வாயால்.
மன்னர்களே களிப்பதுதான் சூதென் றாலும்
மனுநீதி துறந்திங்கே வலிய பாவந்
தன்னையிரு விழிபார்க்க வாய்பே சீரோ?
தாத்தனே, நீதியிது தகுமோ?'' என்றான். 8

இவ்வாறு விகர்ணனும் உரைத்தல் கேட்டார்;
எழுந்திட்டார் சிலவேந்தர்; இரைச்ச லிட்டார்;
'ஒவ்வாது சகுனிசெயுங் கொடுமை' யென்பார்;
'ஒருநாளும் உலகிதனை மறக்கா' தென்பார்;
'எவ்வாறு புகைந்தாலும் புகைந்து போவீர்'
ஏந்திழையை அவைக்களத்தே இகழ்தல் வேண்டா.
செவ்வானம் படர்ந்தாற்போல் இரத்தம் பாயச்
செருக்களத்தே தீருமடா பழியிஃது' என்பார்.

– சி.சுப்பிரமணிய பாரதியார்

நூற்குறிப்பு : இப் பாடப்பகுதி பாரதியாரின் முப்பெரும் படைப்புகளில் ஒன்றாகிய பாஞ்சாலி சபதம் என்னும் காவியக் கதையின் இரண்டாம் பாகம், சபதச் சருக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

பாமரரும் அறிந்த இதிகாசக்கதையை எளிய சொற்கள், எளிய நடை, எளிய சந்தம் இவற்றுடன் கூடிய உரிமைக் காவியமாக, பாரதி தமிழில் வடித்துத் தந்தது 'பாஞ்சாலி சபத' மாகும். இது வியாசர் பாரதத்தைத் தழுவி எழுதப்பட்டது.

பாஞ்சாலி சபதம் இரண்டு பாகங்களைக் கொண்டது. இது சூழ்ச்சிச் சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் என்று ஐந்து சருக்கங்களையும் 412 பாடல்களையும் கொண்ட ஒரு குறுங்காவியம். இதில் வரும் பாடல்கள் சிந்து என்னும் பாவகையில் இயற்றப்பட்டதாகும்.

ஆசிரியர் குறிப்பு: பெயர் சி. சுப்பிரமணிய பாரதியார்; ஊர் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரம்; பெற்றோர் சின்னசாமி, இலக்குமி அம்மையார்; துணைவியார்–செல்லம்மாள்; காலம் 11–12–1882 முதல் 11–9–1921; இயற்றிய நூல்கள்: 'புதிய ஆத்திசூடி, குயிற்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம்' போன்ற செய்யுள் இலக்கியங்களும் நாடு, தமிழ்–தமிழர், இறை, தத்துவம், காதல், பெண்மை, சமூகம், இயற்கை என்று பல்பொருள்களில் எண்ணற்றப் பாடல்களும் வசன கவிதைகளும், ஞான ரதம், சந்திரிகையின் கதை, தராசு, முதலான உரைநடை இலக்கியங்களும் எனப் பலவாகும். சிறப்பு : பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, தற்காலத் தமிழிலக்கியத்தின் விடிவெள்ளி, தேசியகவி, மக்கள் கவி, மகாகவி என்றெல்லாம் புகழப்பட்டதும் சுதேசமித்திரன், இந்தியா போன்ற இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றி இந்திய விடுதலைக்குப் பாடுபட்டதும் எனலாம்.

அருஞ்சொற்பொருள்

சூதர் – சூதாடுபவர்; மனை – இல்லம்; தொண்டுமகளிர் – பணிப்பெண்டிர், பணயம் – பிணைத்தொகை, தொண்டச்சி – அடியாள்; துருபதன் – பாஞ்சால நாட்டு அரசன்; திட்டத்துய்நன் – திரௌபதியின் சகோதரன்; பகடை – சூது தாயங்களில் ஒன்று; எரிதழல் – தீப்பந்தம்;

சகாதேவன் – தருமனின் இளவல், விசயன் – அருச்சுனன்; இங்குச் சகதேவன் எனப்பட்டது திரிலோகம் – மூன்று உலகம்; திரிலோக நாயகன் – தருமன்; மருமம் – இரகசியம்; கருமம் – கடமை; தனு – வில்; காண்டீவம் – அருச்சுனன் வில்.

வேதநெறி – வேதகால நீதி; வழு – குற்றம்; தாரம் – மனைவி; தாதன் – அடிமை; உடைமை – செல்வம்; இரைச்சல் – கூச்சல்; ஏந்திழை, கதிர் – திரௌபதியைக் குறிக்கும் பெயர்கள்; களிப்பது – மகிழ்வது, அவைக்களம் – நியாயம் உரைக்கும் சான்றோர் கூடியுள்ள அரசவை; செருக்களம் – போர்க்களம்.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

மகளிருண்டு – மகளிர் + உண்டு; அங்கோர்– அங்கு + ஓர்; போவதில்லை–போவது + இல்லை; பொறுத்திருந்தோம் –பொறுத்து + இருந்தோம்; வைத்திழந்தான் – வைத்து + இழந்தான்; தீயறிவு – தீமை + அறிவு; மேன்மேலும் – மேலும் + மேலும்; கட்டுண்டோம்– கட்டு + உண்டோம்; பெண்ணரசி – பெண் + அரசி; வழங்குவதிந்நெறி – வழங்குவது + இந்நெறி ; வீடேது –வீடு + ஏது; துறந்திங்கே – துறந்து + இங்கே; உலகிதனை –உலகு + இதனை; செவ்வானம் – செம்மை + வானம்; பழியிஃது – பழி + இஃது.

**இலக்கணக் குறிப்பு**

செய்தாய், தொலைத்தாய் – முன்னிலையொருமை வினைமுற்று; எமை–'எம்மை' என்பதன் இடைக்குறை; எரிதழல் – வினைத்தொகை; கதிரை– அன்மொழித் தொகை (உவமைத்தொகைப் புறத்துப் பிறந்தது); எரித்திடுவோம் – தன்மைப்பன்மை வினைமுற்று; வில்விசயன் – இரண்டன் உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை; தீயறிவு, செவ்வானம் – பண்புத் தொகைகள்; செய்கை, கொடுமை– தொழிற்பெயர்கள்; மேன் மேலும் – அடுக்குத் தொடர்; கொள்ளேன் – தன்மையொருமை எதிர்மறை வினைமுற்று; செருக்களம், அவைக்களம் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை

**பகுபத உறுப்பிலக்கணம்**

தொலைத்தாய் – தொலை + த் + த் + ஆய்
தொலை– பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை; ஆய் – முன்னிலையொருமை வினைமுற்று விகுதி.

இழந்தான் – இழ + த்(ந்) + த் + ஆன்
இழ – பகுதி; த் – சந்தி; ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

சொன்னான் – சொல்(ன்) + இன் + ஆன்
சொல் – பகுதி; ல், ன் ஆனது விகாரம்; இன் – இறந்தகால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

சொல்வான் – சொல் + வ் + ஆன்
சொல் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

| | | |
|---|---|---|
| காண்போம் | – | காண் + ப் + ஓம்<br>காண் – பகுதி; ப் – எதிர்கால இடைநிலை;<br>ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி. |
| கொள்ளேன் | – | கொள் + ள் + ஆ + ஏன்<br>கொள் – பகுதி; ள்– சந்தி; ஆ – எதிர்மறை இடைநிலை; புணர்ந்து கெட்டது,<br>ஏன்– தன்மையொருமை வினைமுற்று விகுதி. |
| கேட்கின்றார் | – | கேள்(ட்) + கின்று + ஆர்<br>கேள் – பகுதி; ள், ட் ஆனது விகாரம்; கின்று – நிகழ்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி. |
| இகழ்தல் | – | இகழ் + தல்<br>இகழ் – பகுதி; தல் – தொழிற்பெயர் விகுதி. |
| புகைந்து | – | புகை + த்(ந்) + த் + உ<br>புகை – பகுதி; த் – சந்தி; ந் ஆனது விகாரம்;<br>த்– இறந்தகால இடைநிலை; உ– வினையெச்ச விகுதி. |

பொருளுணர் பயிற்சி

அ. சரியான விடையை எடுத்து எழுதுக.

1) பாஞ்சாலி சபதம் ______ கவிதைத் தொகுப்பினுள் இடம் பெற்றுள்ளது.
(பாவேந்தர், கவிமணி, பாரதியார்)
2) 'பாட்டன் சொன்ன பேச்சதனை நான் கொள்ளேன்' என்று கூறியவன் ______
(வீமன், வில்விசயன், விகர்ணன்)
3) பாண்டவர் மீது நாளும் துரியனுக்கு வெறுப்பை வளர்த்தவன் ______
(சகுனி, சல்லியன், கர்ணன்)

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1) தனுவுண்டு ______ அதன்பேர் என்றான்.
2) ஒவ்வாது ______ செயுங் கொடுமை என்பார்.

இ. 1) 'திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்'?
திரிலோக நாயகன் யார்? அவனைச் சினந்து சொன்னவன் யார்?
2) 'தாத்தனே நீதியிது தகுமோ'?
இங்குத் தாத்தன் யார்? பெயரன் யார்?
3) 'கதிரை வைத்திழந்தான் அண்ணன்'.
பாரதியார் கதிர் என்று யாரைக் குறிப்பிடுகிறார்?

ஈ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) தொழில்முறைச் சூதர்களும் எதைச் செய்வதில்லை?
2) எதற்கெல்லாம் பொறுமை காத்ததாக வீமன் கூறினான்?
3) தருமன் 'இருபகடை' என்றவரின் சிறப்பு யாது?
4) வீமன் சகாதேவனுக்கு இட்ட கட்டளை என்ன?
5) அருச்சுனன் கூறிய இயற்கை மருமத்தை எழுதுக.

உ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) பாஞ்சாலி சபதம் பற்றிக் குறிப்பு வரைக.
2) வீமன் தருமனிடம் வருந்திக் கூறியன யாவை?
3) வில்விசயன் வீமனுக்குக் கூறிய ஆறுதல் மொழிகளைக் கூறுக.
4) விகர்ணனின் நியாய உரை கேட்டெழுந்த வேந்தர் சிலர் வெகுண்டுரைத்ததென்ன?

ஊ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

விகர்ணன் வீடுமரிடம் பாஞ்சாலிக்கு நீதிகேட்டது யாங்ஙனம்?

மொழித்திறன் பயிற்சி

1. பொருளுணர்ந்து பொருத்துக.

1) அவைக்களம் – செல்வம்
2) செருக்களம் – வேதகால நீதி
3) வேதநெறி – அரசவை
4) உடைமை – போர்க்களம்

2. மோனைச் சீர்களை எடுத்து எழுதுக.

இருபகடை என்றாய் – ஐயோ
இவர்க்கு அடிமை என்றாய்.

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான மயங்கொலி எழுத்தை எடுத்து எழுதுக.

தருமம் ம–படி வெ–லும் என்பதே இயற்கை. (ரு–று, ல்–ள்)

4. இலக்கணக் குறிப்பு வரைக.

எரிதழல், காண்போம், மேன்மேலும், செய்கை, தீயறிவு.

5. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

இருந்தோம், சொன்னான், கொள்ளேன், உரைத்தல், போவீர்.

## (ஈ) இராவண காவியம்

### தமிழகப் படலம்

### ஐவகை நில வருணனை

குறிஞ்சி

இடிகுரல் யானைதன் னிளைய வின்னுயிர்ப்
பிடிபசி களைந்திடப் பெரிய யாக்கிளை
முடியது படியுற முறிக்கு மோசையாற்
படிசிறு கிளியினம் பறந்து செல்லுமால். 1

அருவிய முருகிய மார்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால். 2

முல்லை

பூவையுங் குயில்களும் பொலங்கை வண்டரும்
பாவிசை பாடமுப் பழமுந் தேனுந்தந்
தேவிசை பெருங்கடற் றிடையர் முக்குழல்
ஆவின மொருங்குற வருக ணைக்குமால். 3

முதிரையுஞ் சாமையும் வரகும் பொய்மணிக்
குதிரைவா லியுங்களங் குவித்துக் குன்றெனப்
பொதுவர்கள் பொலியுறப் போர டித்திடும்
அதிர்குரல் கேட்டுழை யஞ்சி யோடுமே. 4

பாலை

எல்லிய முதுவெயி லெறிப்ப நல்வள
முல்லையுங் குறிஞ்சியு முறைமை தப்பியே
நல்லியல் பிழந்தற நலிவு செய்திடும்
பல்லவங் கருகுவெம் பாலை காணுவாம். 5

அடிபடு நிரைசுவர் பறையி னார்ப்பினாற்
கொடுவரி வெருவுறூஉங் கொதிகொள் வெஞ்சுரம்
துடியிடை யினைதரத் துறந்து செல்பவர்
படருற நண்பகற் பாலை மன்னுமால். 6

மருதம்

கல்லிடைப் பிறந்த யாறுங் கரைபொரு குளனுந் தோயும்
முல்லையம் புறவிற் றோன்று முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும் நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லஞ் செறுவிற் காஞ்சி வஞ்சியு மருதம் பூக்கும். 7

நீரகம் பொருந்த நீரார் நிலவளந் திருந்த நீடும்
ஊரகந் தோறும் செந்நெ லுணவக மருவ லூணின்
சீரக வியலா ரூடல் செய்யும்வை கறையி லேரார்
பாரக முறவேர்ப் பூட்டும் பைம்புனல் மருத மோங்கும். 8

நெய்தல்

பொன்னென மலருந் தூய புன்னையங் கான லாங்கண்
முன்னிய வலிய கோள்வல் முதலைய மதலை யுப்பு
மன்னுநீள் கழிக்கண் மூத்த மகன்றிலம் புணர்ச்சி வாய்ந்தார்
தன்னிகர் கொண்க னோடு தாழைவீ ழூச லாடும். 9

திரைதரு பொருளு முப்புச் செறிவிலைப் பொருளு மல்கக்
கரைவரு கப்பல் நோக்கிக் கானலம் புன்னை சாய்ந்து
நரையிதழ்ப் பரத்தி யேங்கு நாள்வெயிற் காலை யுப்பின்
பெருவளக் குவிய லீட்டும் பெருமணல் நெய்த லோங்கும். 10

–புலவர் குழந்தை

è tÏ±l× : இராவண காவியம், இராவணனைப் பாட்டுடைத் தலைவனாக அமைத்துப் பாடப்பெற்ற நூலாகும். இஃது இந்நூற்றாண்டில் தோன்றிய சிறந்த காப்பியமாகும். இந்நூல், தமிழகக்காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க் காண்டம் என்னும் 5 காண்டங்களும் 57 படலங்களும் கொண்டது. இந்நூலில் 3100 பாடல்கள் உள்ளன.

ஆசிரியர் குறிப்பு : புலவர் குழந்தை ஈரோடு மாவட்டத்தில் ஓலவலசு என்னும் சிற்றூரில் முத்துசாமி – சின்னம்மை ஆகியோர்க்கு மகனாகப் பிறந்தவர். பவானி அரசு மேனிலைப் பள்ளியில் பல்லாண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். திருக்குறளுக்கு உரையும், 'தீரன் சின்னமலை, கொங்கு வரலாறு, நெருஞ்சிப் பழம், காமஞ்சரி, தமிழக வரலாறு' முதலிய நூல்களும் எழுதியுள்ளார்.

அருஞ்சொற் பொருள்

1. பிடி – பெண் யானை; யா – ஒரு வகை மரம்; படி – நிலம்.
2. முருகியம் – குறிஞ்சிப்பறை; பொன் – அழகு; சினை – கிளை; ஆர்ப்ப – ஒலிப்ப; சிறை– – இறகு.
3. பூவை – நாகணவாய் பறவை; பொலம் – அழகு; கடறு – காடு; முக்குழல் – கொன்றை, ஆம்பல், வேய்ங்குழல்,
4. பொதுவர் – முல்லைநில மக்கள்; பொலி – தானியக் குவியல்; உழை – ஒருவகை மான்.
5. எல்லி – ஞாயிறு; பல்லவம் – தளிர்.
6. நிரை – ஆவினம்; கொடுவரி – புலி; படர் – துயர் ; வெஞ்சுரம் – பாலைநிலம்.
7. கல் – மலை; முருகு – அழகு, தேன், மணம்; கான்யாறு – காட்டாறு; மல்லல் – வளம்; செறு – வயல்; காஞ்சி, மருதம் – மர வகைகள்; வஞ்சி – கொடிவகை.
8. நீரார் – நல்லியல்புடையவர் (உழவர்); ஊணின் சீரக இயலார் – சமையல் தொழிலில் வல்ல மகளிர் ; வைகறை – விடியற்காலம்; பாரகம் உற – தமிழகம் மேம்பட.
9. கானல் – கடற்கரை, கழி – உப்பங்கழி; மகன்றில் – அன்றில் பறவை, இணைபிரியாது வாழும் ஒரு நீர்ப்பறவை; கொண்கன் – தலைவன்.
10. மல்க – நிறைய; நரையிதழ் – (பிரிவால்) வெளுத்த இதழ்.

தொடர்களைப் பிரித்தறிதல்

1. இன்னுயிர் – இனிமை + உயிர் ; கிளியினம் – கிளி + இனம்
2. பைங்கிளி – பசுமை + கிளி ; தமிழிசை – தமிழ் + இசை; பூஞ்சினை–பூ+ சினை; குரக்கினம் – குரங்கு + இனம்
3. பொலங்கை– பொலம் + கை ; முப்பழம் – மூன்று + பழம் ; கடற்றிடையர் – கடறு + இடையர்
4. போரடித்திடும்– போர் + அடித்திடும்; கேட்டுழை– கேட்டு + உழை
5. முதுவெயில் – முதுமை + வெயில்; நல்வளம் – நன்மை + வளம் ; வெம்பாலை –வெம்மை + பாலை
6. கொடுவரி – கொடுமை + வரி; வெஞ்சுரம் – வெம்மை + சுரம்; துடியிடை– துடி + இடை ; படருற – படர் + உற.
7. கல்லிடை – கல் + இடை
8. நீரகம் – நீர் + அகம்; செந்நெல் – செம்மை + நெல்; பைம்புனல் – பசுமை + புனல்.
10. பெருமணல் – பெருமை + மணல்

**இலக்கணக் குறிப்பு**

1. இன்னுயிர் – பண்புத்தொகை;
   பிடிபசி – வேற்றுமைத் தொகை
2. பைங்கிளி – பண்புத்தொகை; குரக்கினம் – வலித்தல் விகாரம்.
3. வண்டர் – வண்டு என்பதன் கடைப்போலி
   முப்பழமும் – முற்றும்மை; முப்பழமும்; முக்குழல் – பண்புத்தொகைகள்,
4. முதிரையுஞ் சாமையும் வரகும் – எண்ணும்மை
   பொய்மணி, அதிர்குரல் – வினைத்தொகைகள்
5. முதுவெயில், நல்வளம், வெம்பாலை – பண்புத் தொகைகள்
   காணுவாம் – தன்மை பன்மை வினைமுற்று
6. கொடுவரி – பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை;
   வெருவுறூஉங் – செய்யுளிசை அளபெடை
   வெஞ்சுரம் – பண்புத்தொகை
   துடியிடை – உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை;
   செல்பவர் – வினையாலணையும் பெயர்.
7. தோயும், பாயும், தேக்கும், பூக்கும் – செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்றுகள்
8. செந்நெல், பைம்புனல் – பண்புத்தொகைகள்
9. கோள்வல் முதலை – முதனிலை திரிந்த தொழிற்பெயர்;
   ஊசல் – ஊஞ்சல் என்பதன் இடைக்குறை ;
   ஆடும் – செய்யும் என்னும் முற்று
10. தருபொருள்– வினைத்தொகை
    பெருவளம்,பெருமணல் – பண்புத் தொகைகள்.

**பகுபத உறுப்பிலக்கணம்**

மருண்டு – மருள்(ண்) + ட் + உ
மருள் –பகுதி; ள், ண் ஆனது விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி

பொருந்த – பொரு + த்(ந்) + த் + அ
பொரு– பகுதி; த் – சந்தி; ந் என விகாரப்பட்டது;
த் – இறந்தகால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி.

சாய்ந்து – சாய் + த்(ந்) + த் + உ
சாய் – பகுதி ; த் – சந்தி; ந் என விகாரப்பட்டது.
த் – இறந்த கால இடைநிலை;
உ – வினையெச்ச விகுதி.

துறந்து – துற + த்(ந்) + த் + உ
துற – பகுதி; த் – சந்தி; ந் – விகாரம்;
த் – இறந்த கால இடைநிலை;
உ – வினையெச்ச விகுதி.

பிறந்த – பிற + த்(ந்) + த் + அ
பிற – பகுதி; த் – சந்தி;
ந் – விகாரம்; த் – இறந்த கால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி.

பொருளுணர் பயிற்சி

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) குறிஞ்சி நிலத்தில் உள்ள கிளி பறந்து செல்வது ஏன்?
2) குரங்குக் கூட்டம் எத்தகைய காட்சியை மருண்டு பார்க்கும்?
3) முல்லை நிலத்தில் உள்ள மான் அஞ்சி ஓடுவதற்குரிய காரணம் என்ன?
4) பாலை நிலம் எவ்வாறு தோன்றியது?
5) வெஞ்சுரத்தின் இயல்பு எங்ஙனம் கூறப்படுகிறது?
6) மகன்றில் பறவையின் இயல்பு யாது?

**ஆ.ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) குறிஞ்சி நில வருணனையை விளக்கி எழுதுக.
2) பசுக் கூட்டங்களை அருகணைக்கும் சூழலை எங்ஙனம் காட்டுகிறார்?
3) மருத நில வருணனையைப் புலவர் குழந்தை எங்ஙனம் விளக்குகிறார்?
4) புலவர் குழந்தை நெய்தல் நிலத்தை எங்ஙனம் வருணித்துக் கூறுகிறார்?

**இ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

இராவண காவியத்தில் ஐந்நிலம் வருணித்துக் கூறப்பட்டுள்ளதைத் தொகுத்து எழுதுக.

மொழித் திறன் பயிற்சி

**1. பொருளுணர்ந்து பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1) | படி | – | அழகு |
| 2) | பொலம் | – | தளிர் |
| 3) | பல்லவம் | – | ஆவினம் |
| 4) | படர் | – | நிலம் |
| 5) | நிரை | – | துயர் |
| | | – | ஞாயிறு |

2. `ஞாயிறு` என்னும் பொருள் தரும் சொல்லைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

3. `நீரகம் பொருந்த நீரார் நிலவளந் திருந்த நீடும்'-
இவ்வடியில் வந்துள்ள 'நீரார்' என்னும் சொல் தரும் பொருள்கள் யாவை?

4. கீழ்க்காணும் செய்யுள் அடிகளில் உள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
அருவிய முருகிய மார்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்

5. கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எடுத்து எழுதுக.

க–லிடைப் பிறந்த யா–ங் கரைபொரு கு–னுந் தோயும்.
(ள் – ல்; ரு – று; ல – ள)

# 4. மொழிபெயர்ப்புப் பாடல்

'செந்தமிழைச் செழுந்தமிழாக்குதல் வேண்டும்' என்னும் கருத்துக்கு அரண் சேர்ப்பது இப்பாடல் பகுதியின் நோக்கமாகும். பிறமொழிகளில் உள்ள மிகச் சிறந்த படைப்புகளைத் தமிழறிந்தோர் படித்தின்புற உதவுவன மொழிபெயர்ப்புப்பாடல்கள். இப்பகுதியில் மகாகவி இரவீந்திரநாத தாகூர் பாடல் பேராசிரியர் சீநிவாசராகவனின் மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது.

உழைப்பின் சிறப்பு

காலைமுதல் அந்தி மாலைவரை ஏரைக்
கட்டி உழுவோமவ் வேளையிலே
காலிற் புரண்ட புதியமண் ணின்வாசம்
தண்ணெனக் காற்றில் கரைந்துசெலும். 1

வெய்யில் சுடர்விடும்; வீசி மழையினை
விண்ணிற் புயலும் விரைந்தசையும்;
தொய்யிள மூங்கில் வனத்தினிலே இலை
தூங்கித் துடித்துப் பளபளக்கும். 2

வேலைசெய்யும் எங்கை வீறுகொள்ளும்; களி
விஞ்சி உளமும் நிறைந்து துள்ளும்;
காலைமுதல் கங்குல் காணும்வரை இந்தக்
காட்டை உழுவோம் அவ்வேளையிலே 3

எல்லையில் லாமல் விரிந்திடும் புல்வெளி
ஏட்டினிலே பச்சைப் பாட்டெழுதி
நெல்வயல் மார்பில் அலைஅலை யாய்அவள்
நெஞ்சச் சிலிர்ப்பினை ஓட வைத்து 4

யாரோ கவிஞன் இதயமொன்று நடம்
ஆடி இங்கே வண்ணம் பாடிவரும்;
கார்மறு வற்ற முழுநில வில்மழைக்
கால்வெயில் தன்னில் நிலம்களிக்கும். 5.

வேலைசெய்யும் கையும் வீறுகொள் ளும்களி
விஞ்சி உளமும் நிறைந்து துள்ளும்;
காலைமுதல் அந்தி வீழும்வரை ஏரைக்
கட்டி உழுவோமவ் வேளையிலே.

– அ. சீநிவாசராகவன்

**ஆசிரியர் குறிப்பு :** உலகப் புகழ்பெற்ற வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூர் 1861 மேத் திங்கள் ஏழாம் நாள் பிறந்தார். 1913–இல் இவருக்கு இலக்கியத்திற்கான 'நோபல் பரிசு' அளிக்கப்பெற்றது. இவர் இயற்றிய கீதாஞ்சலி பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவர் 1941 ஆகஸ்டு ஏழாம் நாள் இயற்கை எய்தினார்.

**மொழிபெயர்ப்பாளர் குறிப்பு :** 'உழைப்பின் சிறப்பு' என்னும் பாடலை மொழிபெயர்த்தவர் பேராசிரியர் அ. சீநிவாசராகவன். ஆங்கிலப் பேராசிரியரான இவர் தமிழிலும் மிக்க புலமை உடையவர்; இருமொழியிலும் சொற்பொழிவு வன்மையுடையவர்; சிறந்த கவிஞர்; நாடக எழுத்தாளர்; இலக்கியத் திறனாய்வாளர்; 'நாணல்' என்னும் புனைப் பெயரில் பல கவிதைகளை எழுதியுள்ளார். இவரது 'வெள்ளைப் பறவை' என்னும் கவிதை நூல் சாகித்திய அகாடமி பரிசு பெற்றது.

**அருஞ்சொற்பொருள்**

1. அந்தி – மாலை; சால் – உழுதல்; தண் – குளிர்
2. தொய்யிள மூங்கில் – வளைந்த இளமூங்கில்; வனம் – காடு; தூங்கி – அசைந்து
3. களி – மகிழ்ச்சி; வீறு – வேகம்; விஞ்சி – மேம்பட்டு; கங்குல் – இரவு.
5. கார் – கருமை; மறு – குற்றம்; மழைக்கால் வெயில் – மழையை அடுத்து அடிக்கும் வெயில்; களிக்கும் – மகிழும்
6. வீறு – ஒளி, பெருமை.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

தண்ணென – தண் + என ; விரைந்தசையும் –விரைந்து + அசையும்; அவ்வேளை–அ + வேளை ; பாட்டெழுதி –பாட்டு + எழுதி; மறுவற்ற–மறு + அற்ற ; முழுநிலவு – முழுமை + நிலவு.

**இலக்கணக் குறிப்பு**

அந்திமாலை–இருபெயரொட்டுப் பண்புத்தொகை ; கரைந்து – இறந்தகால வினையெச்சம் ; இளமூங்கில்– பண்புத்தொகை ; பளபள– இரட்டைக்கிளவி; நிறைந்து – இறந்தகால வினையெச்சம் ; அலைஅலை – அடுக்குத்தொடர் ; வீறு – பண்புப் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம்

நிறைந்து – நிறை + த்(ந்) + த் + உ.

நிறை – பகுதி; த் – சந்தி; த் ந் ஆனது விகாரம்;

த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

பொருளுணர் பயிற்சி

அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) காற்றில் கரைந்து செல்வது எது?
2) உழுவோர் நிலை இப்பாடலில் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?
3) 'நிலம் களிக்கும்'- எப்போது?

ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) இரவீந்திரநாத தாகூர் – குறிப்பு எழுதுக.
2) மொழிபெயர்ப்பாளர் – குறிப்பு எழுதுக.
3) இயற்கையழகை ஆசிரியர் எவ்வாறு உருவகப்படுத்திக் காட்டியுள்ளார்?

3. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

'உழைப்பின் சிறப்பு' என்னும் தலைப்பில் கூறியுள்ள செய்திகளைத் தொகுத்து எழுதுக.

மொழித்திறன் பயிற்சி

1. பொருளுணர்ந்து பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1) தண் | – | மகிழ்ச்சி |
| 2) களி | – | கருமை |
| 3) கார் | – | குளிர் |
| 4) மறு | – | பெருமை |
| 5) வீறு | – | குற்றம் |
| | – | விளக்கு |

2. 'இரவு' என்னும் பொருள் தரும் சொல்லைப் பாடலிலிருந்து எடுத்து எழுதுக.

3. மூன்றாம் பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எடுத்து எழுதுக.

1) த – ணெனக் காற்றி – கரைந்துசெல்லும். (ண்–ன்; ள்–ல்)

2) காலை முதல் கங்குல் கா–ம் வரை. (னு–ணு)

5. இலக்கணக் குறிப்பு எழுதுக.

எங்கை, செலும்

6. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

விரைந்து, உழுவோம், புரண்ட

# 5. பல்சுவைப் பாடல்கள்

இலக்கியச் சுவைகள் நகை முதலாக ஒன்பது வகைப்படும். சுவை, யாப்பு வடிவம், பாடுபொருள், கற்பனை முதலியவற்றால் வேறுபட்ட பல்வேறு இலக்கியங்களிலிருந்து திரட்டப்பெற்ற பாடல்களின் தொகுப்பாதலின், இப்பகுதி பல்சுவைப் பாடல்கள் எனச் சுட்டப்படுகிறது.

இப்பகுதியில் புறநானூறு, கலிங்கத்துப்பரணி, தமிழ்விடு தூது, முக்கூடற்பள்ளு, திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ், இரட்டுற மொழிதல் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

## (அ) புறநானூறு

செற்றன் றாயினும் செயிர்த்தன் றாயினும்
உற்றன் றாயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானைத்
திண்டேர் வளவற் கொண்ட கூற்றே.

–மாறோக்கத்து நப்பசலையார், சோழன் குளமுற்றத்துத்
துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியது.

திணை : பொதுவியல் (பொதுவான செய்திகளைக் கூறுவது)
துறை : கையறுநிலைத் துறை (இறந்தார் குறித்து இரங்கிப் பாடுதல்)

நூற்குறிப்பு: புறம் + நானூறு (அல்லது) புறம் + நான்கு + நூறு = புறநானூறு. இந்நூல் புறப்பொருள்பற்றிக் கூறும் நானூறு பாக்களை உடையது. இது சங்க காலத் தமிழர்களின் புறவாழ்க்கைக்குரிய கல்வி, வீரம், வெற்றி, ஆட்சிமுறை, அறம், கொடை, ஒழுக்கம், பண்பாடு, பழக்க வழக்கங்கள்பற்றிக் கூறும் வரலாற்றுப் பெட்டகமாகும். இந்நூலில் உள்ள பாடல்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்த புலவர்களாலும் மன்னர்களாலும் பாடப்பெற்றவையாகும். இது சங்க இலக்கியமான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இதன் பாடல்களுள் சிலவற்றை ஜி.யு.போப்

என்னும் அறிஞர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பதிலிருந்து புறநானூற்றின் மூலம் பண்டைத் தமிழரின் பன்முகச் சிறப்பை உலகம் அறிந்து கொள்ளவேண்டும் என்ற அவரின் விழைவு புலப்படுகிறது.

ஆசிரியர் குறிப்பு : இப் புறப்பாடலின் ஆசிரியர் மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண்பாற் புலவராவார். பாண்டிய நாட்டின் துறைமுக நகரான கொற்கையை அடுத்துள்ள ஊர் மாறோக்கம் எனப்படுகிறது. அவ்வூரின் பெயரால் அவர் அழைக்கப்படுகிறார். கொற்கை இன்று தூத்துக்குடியாகத் திகழ்கிறது. பேராண்மையும் பெருவண்மையும் படைத்த சோழ மாமன்னன் கிள்ளிவளவன் குளமுற்றம் என்னும் இடத்திலுள்ள அரண்மனையில் இறந்தான். அவன் மறைவு குறித்து அறிந்த புலவர் ஆறாத்துயருற்றுப் பாடியது இப்பாடலாகும்.

**அருஞ்சொற்பொருள்**

செற்றம் – கறுவு (செற்றம்– மனத்துள்ளே வெகுளுதல்); செயிர்த்தல் – வெளிப்படையாக வெகுளுதல்; உறுதல் – மெய்தீண்டுதல்; இரந்தன்று – யாசித்து கொண்டது; அமர் கடத்தல் – நேர் நின்று போரிட்டு வெல்வது.

**பொருள்நயம்**– செற்றும், செயிர்த்தும் உற்றும் உயிர் கொண்டிருக்க முடியாது என்றது ஆண்மை மிகுதி; பாடுநர் (இரவலர்) போலக் கைதொழுது வாழ்த்தி யாசித்து உயிர் கொண்டிருக்க வேண்டும் என்றது வண்மை மிகுதி.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

செற்றன்றாயினும்– செற்றன்று + ஆயினும்; செற்றன்று – செற்று + அன்று; செயிர்த்தன்று – செயிர்த்து + அன்று; உய்வின்று– உய்வு + இன்று; கைதொழுதேத்தி– கைதொழுது + ஏத்தி; இரந்தன்றாகல்– இரந்தன்று + ஆகல்; பொலந்தார் – பொலம்+ தார்; மண்டமர்– மண்டு +அமர்; திண்டேர்– திண் + தேர்; கடக்குந்தானை– கடக்கும் + தானை.

**இலக்கணக் குறிப்பு**

கைதொழுது – மூன்றாம் வேற்றுமைத் தொகை; ஏத்தி, இரந்து– வினையெச்சங்கள்; கொண்ட கூற்று– பெயரெச்சம் ; கடத்தல்– தொழிற்பெயர்.

**பகுபத உறுப்பிலக்கணம்**

தொழுது – தொழு + த் + உ

தொழு–பகுதி; த்–இறந்தகால இடைநிலை; உ–வினையெச்ச விகுதி

ஏத்தி – ஏத்து + இ

ஏத்து– பகுதி; இ–வினையெச்ச விகுதி

கொண்ட – கொள்(ண்) + ட் + அ

கொள்–பகுதி; ள், ண் ஆனது விகாரம்; ட்–இறந்தகால இடைநிலை; அ– பெயரெச்ச விகுதி

பொருளுணர் பயிற்சி

அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

1) ஜி.யு. போப் புறநானூற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது எதனால்?
2) எட்டுத்தொகை நூல்களுள் அகப்பொருள் பற்றியன யாவை?
3) பழந்தமிழர்பற்றி அறிய உதவும் வரலாற்றுப் பெட்டகம் எது? ஏன்?
4) சோழன் கிள்ளிவளவனின் உயிரைக் கூற்றுவன் எவ்வாறு கவர்ந்து சென்றான்?

2. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

1. குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் ஆண்மை மிகுதியும், வண்மை மிகுதியும் எங்ஙனம் விளக்கப்படுகின்றது?
2. புறநானூற்றின் சிறப்புகள் யாவை?
3. திண்தேர் வளவன் கொண்ட கூற்றே – இடஞ்சுட்டி விளக்குக.

## (ஆ) கலிங்கத்துப் பரணி

(காடுபாடியது)

பாலை நில வருணனை

மூங்கில் முத்து உதிர்தல் கூறியது

வெடித்தகழை விசைதெறிப்பத் தரைமேல் முத்தம்
வீழ்ந்தனஅத் தரைபுழுங்கி அழன்று மேன்மேல்
பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும் போலும்
போலாவேல் கொப்புளங்கள் போலும் போலும்.

வெப்பநிலை கூறியது

முள்ளாறும் கல்லாறும் தென்னர் ஓட
முன்னொருநாள் வாளபயன் முனிந்த போரில்
வெள்ளாறும் கோட்டாறும் புகையான் மூட
வெந்தவனம் இந்தவனம் ஒக்கில் ஒக்கும்.

–செயங்கொண்டார்

**நூற்குறிப்பு** : பரணி என்பது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. ஆயிரக்கணக்கான யானைகளைக் கொன்று குவிக்கும் வீரம் பொருந்திய அரசனின் வெற்றிச் சிறப்பைப் புகழ்ந்து பாடும் நூல் 'பரணி' எனப் பரணிக்கு இலக்கணம் கூறப்படுகிறது. (ஆயிரக்கணக்கான யானைகளைக் கொன்று என்பது இங்கு ஆகுபெயராக அவ்யானைகளின் மீதமர்ந்து போரிட்ட மாவீரர்களைக் கொன்று குவிக்கும் வீரம் பொருந்திய அரசன் என்பது பொருளாம்.)

முதற் குலோத்துங்க சோழ மன்னன் கலிங்க நாட்டு மன்னன் அனந்த பதுமநாதன் மீது படையெடுத்து வெற்றிபெற்றான். தோற்றக் கலிங்க நாட்டின் பெயரால் இந்நூல் கலிங்கத்துப் பரணி என்னும் பெயர் பெற்றது.
(கலிங்கம் + அத்து + பரணி.)

இந்நூல் கடவுள் வாழ்த்து முதல் களம்பாடியது ஈறாகப் பதின்மூன்று பகுதிகளை உடையது. இது இரண்டிரண்டு அடிகளால் ஆன 'தாழிசை' என்னும் பா வகையால் பாடப்பெற்றது.

இங்குள்ள பாடல்கள் 'காடுபாடியது' என்னும் பகுதியில் உள்ளன.

**ஆசிரியர் குறிப்பு** : கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் செயங்கொண்டார் என்னும் புலவராவார். இவரது காலம் கி.பி. 12ஆம் நூற்றாண்டு. முதன் முதலில் பரணி பாடியவர் இவரே. 'பரணிக்கோர் செயங்கொண்டார்' என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவரால் புகழப்பட்டவர். முதற் குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர். இந்நூலைச் சோழ மன்னனின் அவையில் அரங்கேற்றிப் பொன்னையும் பொருளையும் பரிசாகப் பெற்றவர். மேலும் இசை ஆயிரம், உலா மடல் போன்ற நூல்களையும் பாடியுள்ளார்.

**அருஞ்சொற்பொருள்**

1. கழை– மூங்கில்; விசை–விரைவு (அ) வேகம்; தெறிப்ப– வெடிக்க; புழுங்கி–வருந்தி; பொடித்த–தோன்றிய; புள்ளிகள்–வியர்வைத் துளிகள். பாடபேதம்– 'மெய்ம்மேல்'.

2. முள்– முட்களையுடைய; ஆறு–வழி; கல்–பருக்கைக்கல்; தென்னர்–பாண்டியர்; முனிதல் –வெகுளல்; வெள்ளாறு, கோட்டாறு– இவை நதியைச் சார்ந்த ஊர்ப் பெயர்கள்.

பொருள் நயம்

மூங்கில்களின் கணுக்கள் வெப்பம் தாளாது வெடிக்க வேகமாகத் தெறித்து விழுந்த முத்துகள் பாலை நிலம் முழுவதும் சிதறிக் கிடக்கும். அவை, பாலை நிலம் கோடையின் கொடுமைக்கு வருந்தி வெதும்பியதால், அதன்மேல் தோன்றிய வியர்வைத் துளிகள் போலவும் கொப்புளங்கள் போலவும் இருக்கும் என்பது நல்ல கற்பனை நயமாகும்.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

முள்ளாறு – முள் + ஆறு; கல்லாறு – கல் + ஆறு; வாளபயன் – வாள் + அபயன்; அத்தரை – அ + தரை.

**இலக்கணக் குறிப்பு**

<u>வெடித்த</u> கழை – பெயரெச்சம்; தரைமேல் – ஐந்தாம் வேற்றுமைத் தொகை; போலும் போலும் – அடுக்குத்தொடர்

**பகுபத உறுப்பிலக்கணம்**

தெறிப்ப – தெறி + ப் + ப் + அ
தெறி–பகுதி; ப்–சந்தி; ப்–எதிர்கால இடைநிலை; அ–பெயரெச்ச விகுதி

புழுங்கி – புழுங்கு + இ
புழுங்கு– பகுதி; இ– வினையெச்ச விகுதி

அணி: இப்பாடல்களில் உவமையணி வந்துள்ளது. ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுக் கூறுவது உவமையணியாகும்.

**பொருளுணர் பயிற்சி**

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) பரணி என்பதன் இலக்கணம் யாது?
2) பாலைநிலத்தில் சிதறிக் கிடப்பவை யாவை?
3) முத்துகள் சிதறிக் கிடப்பதற்குக் கவிஞர் கூறும் உவமைகளைக் கூறுக.
4) தென்னர் எவற்றின் வழியே ஓடினர்?
5) எந்த வனம் இந்த வனம் போலுள்ளது?

**2. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) கலிங்கத்துப்பரணி – குறிப்பு வரைக.
2) பாலை நிலம் செயங்கொண்டாரால் எங்ஙனம் வருணிக்கப்படுகிறது?

## (இ) தமிழ்விடு தூது

தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேயென் முத்தமிழே–புத்திக்குள் 1

உண்ணப் படுந்தேனே உன்னோடு உவந்துரைக்கும்
விண்ணப்ப முண்டு விளம்பக்கேள்–மண்ணிற் 2

குறமென்று பள்ளென்று கொள்வார் கொடுப்பாய்க்(கு)
உறவென்று மூன்றினத்து முண்டோ–திறமெல்லாம் 3

வந்தென்றுஞ் சிந்தா மணியா யிருந்தவுனைச்
சிந்தென்று சொல்லியநாச் சிந்துமே– அந்தரமேல் 4

முற்றணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார் நீ
குற்றமிலாப் பத்துக் குணம்பெற்றாய்–மற்றொருவர் 5

ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மே லுண்டோநீ
நோக்கிய வண்ணங்கள் நூறுடையாய். 6

நூற்குறிப்பு: தூது என்பது 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தலைவி ஒருத்தி இறைவனிடமோ, அரசனிடமோ, மாந்தருள் சிறந்தார் ஒருவரிடமோ தம் காதலைத் தெரிவிக்கும் படியும், யாதேனும் ஒரு பொருளை வாங்கி வரும்படியும் தூது அனுப்புவது தூது என்னும் இலக்கியமாகும்.

அன்னம், கிளி, மயில், குயில், நாரை, மான், தென்றல், நெஞ்சம், வண்டு, பணம் முதலியவற்றைத் தூதாக அனுப்புவது மரபு.

மதுரையில் கோவில் கொண்டுள்ள சொக்கநாதரிடம் தமிழைத் தூது விடுத்ததாகக் கற்பனை செய்து பாடப் பெற்ற நூல் தமிழ்விடு தூது ஆகும். இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. ஆயினும் அவர் தமிழ்ப்பற்றும், தெய்வப்பற்றும், சைவப்பற்றும், செறிந்த உள்ளங்கொண்ட ஒருவர் என்பது தெளிவு. நமக்குப் பாடமாக வந்துள்ளது தமிழின் மேன்மையைப் பாடியதாகும்.

அருஞ்சொற்பொருள்

1. தித்திக்கும்– இனிக்கும்; தெள்ளமுது– தெளிந்த அமுதம் (தூய அமுது); முத்தமிழ் – இயல், இசை, நாடகமாகிய மூன்று வகையான தமிழ்மொழி; புத்தி – அறிவு

2. உவந்து–மகிழ்ந்து; உரைக்கும்–கூறும்; விண்ணப்பம்– வேண்டுகோள்; விளம்ப–சொல்ல

3. குறம்–குறவஞ்சி; பள்–பள்ளு; மூன்றினம்–தாழிசை, துறை, விருத்தம் என்ற மூவகைப் பாவினங்கள்.

4. சிந்து – ஒரு பாவகை; சிந்தாமணி–கெடாத மணி; சிந்தும்–கெடும்; அந்தரம்–வானம்

5. முக்குணம்–இராசதம், தாமதம், சாத்துவிகம் ஆகிய மூன்று குணங்கள்; பத்துக் குணம்–சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல் முதலிய நன்னூல் கூறும் பத்து அழகுகள்.

6. வண்ணங்கள் ஐந்து– வெண்மை, செம்மை, கருமை, பொன்மை (மஞ்சள்) பசுமை(பச்சை) என்னும் அடிப்படை வண்ணங்கள் ஐந்தாம். தமிழுக்கு நூறு வண்ணங்கள் உள்ளன என்றது யாப்பருங்கலக்காரிகையில் கூறிய 'எழுத்துப் பதின்மூன்று' என்ற நூற்பாவின் படியாம்.

தொடர்களைப் பிரித்தறிதல்

முத்தமிழ் – மூன்று + தமிழ்; உவந்துரைக்கும்– உவந்து + உரைக்கும்; விண்ணப்பமுண்டு–விண்ணப்பம் + உண்டு; கொடுப்பாய்க் குறவென்று–கொடுப்பாய்க்கு+உறவு+என்று; மூன்றினத்து முண்டோ– மூன்று+இனத்தும்+உண்டோ; திறமெல்லாம்–திறம்+ எல்லாம்; சிந்தென்று –சிந்து + என்று; முற்றுணர்ந்த – முற்று + உணர்ந்த; முக்குணம்–மூன்று+குணம்; நூறுடையாய்–நூறு+உடையாய்; தெள்ளமுது–தெண்மை+அமுது.

இலக்கணக் குறிப்பு

தெள்ளமுது – பண்புத்தொகை; முத்தமிழே – விளித்தொடர்; கொள்வார், கொடுப்பார்–வினையாலணையும் பெயர்கள் ; உண்டோ? – புறவினா 'ஒகாரம்' ஈற்றில் வந்து வினாப் பொருள் தந்தது; சிந்தாமணி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ; குற்றமிலாப் பத்துக்குணம்–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்

உரைக்கும் – உரை + க் + கும்
உரை – பகுதி; க் – எதிர்கால இடைநிலை; கும் – தொழிற்பெயர் விகுதி

கொள்வார் – கொள் + வ் + ஆர்
கொள் – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

கொடுப்பாய் – கொடு + ப் + ப் + ஆய்
கொடு – பகுதி; ப் – சந்தி; ப் – எதிர்கால இடைநிலை; ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

சொல்லிய – சொல் + இ(ன்) + ய் + அ
சொல் – பகுதி; இ(ன்) – இறந்தகால இடைநிலை; ன் – விகாரம் புணர்ந்துகெட்டது; ய் – யகர உடம்படுமெய், சந்தி; அ – பெயரெச்ச விகுதி.

உணர்ந்த – உணர் + த்(ந்) + த் + அ
உணர் – பகுதி; த் – சந்தி; ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி

பெற்றார் – பெறு + ஆர்
பெறு – பகுதி; 'பெற்று' எனப் பகுதி ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பொருளுணர் பயிற்சி

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தமிழ்விடு தூது என்பது யாது?
2) தூது இலக்கியத்தின் இலக்கணம் தருக.
3) தமிழ்விடு தூது கூறும் சிற்றிலக்கியங்கள் யாவை? அவை எம்மூன்று பாவினங்களில் பாடப்பட்டுள்ளன?
4) முற்றுணர்ந்த தேவர்களும் பெற்ற குணங்கள் எத்தனை?
5) தமிழர் ஆக்கிய ஆதி வண்ணங்களைக் கூறுக.

**ஆ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

தமிழ்விடு தூது ஆசிரியர் தமிழிடம் உவந்துரைக்கும் விண்ணப்பத்தினை விளம்புக.

## (ஈ) முக்கூடற்பள்ளு

மூத்த பள்ளி வீரம்(பெருமிதம்) தோன்ற
நகர்வளம் கூறுவது

கொண்டல் கோபுரம் அண்டையிற் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டந் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம்விளை யாடும்
விண்ட பூமது வண்டலிட் டோடும்
வெயில்வெய் யோன்பொன் னெயில்வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊரெங்கள் ஊரே.

நூற்குறிப்பு : பள்ளு என்பது 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. நமக்குப் பாடமாக வந்துள்ள பாடல் முக்கூடற்பள்ளு எனும் நூலில் உள்ளது. இந்நூல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முக்கூடல் என்னும் ஊரில் வேளாண் தொழில் செய் மாந்தராக வாழ்ந்த பள்ளர்களைப் பாட்டுடைத் தலைமக்களாகக் கொண்டு பாடப்பட்ட மக்கள் இலக்கியமாகும்; ஆதலால் முக்கூடற்பள்ளு எனப்பட்டது.

தாமிரபரணியாறு, சிற்றாறு, கோதண்டராம ஆறு ஆகிய மூன்றாறுகள் கூடும் இடத்தில் அமைந்துள்ள ஊராதலால் முக்கூடல் என்பது பெயராயிற்று. 'சிவலப்பேரி' என்று இப்போது அவ்வூர் அழைக்கப்படுகின்றது.

முக்கூடற்பள்ளு தெய்வ நலனும் மக்கள் நலனும் கூறும் இரு சமயப் (சைவம், வைணவம்) பொது நூலாகும். இடைக்காலத்தில் உழைக்கும் மக்கள் வாழ்வுடன் தமிழுக்கு உறவு உண்டாக்கிய சிறந்த நூலாகும்.

ஆசிரியர் குறிப்பு : முக்கூடற்பள்ளுவின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. காலம் 17ஆம் நூற்றாண்டு. காப்புச் செய்யுளுடன் 176 பாடல்களைக் கொண்டுள்ளது.

அருஞ்சொற்பொருள்

கொண்டல் – மேகம்; வானம் – மேகம்; தண்டலை – சோலை; பேரண்டம் – வானப் பெருவெளிப் பரப்பு ; நாடும்–விரும்பும் ; கனகம்–பொன்;

முன்றில் – முற்றம் (வீட்டின் முன்புறம்); அனம் – அன்னப்பறவை; வெய்யோன் – கதிரவன்; எயில்வழி–அம்புகள் எய்ய அமைத்துள்ள துளைவழி; மது–தேன்; அண்டர்–தேவர் ; செண்டு–திருமாலின் ஒருவிதப் படைக்கருவி.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

பேரண்டம் – பெருமை + அண்டம்; முன்றில் – முன் + இல்; வண்டலிட்டோடும் – வண்டலிட்டு+ஓடும் ; பொன்னெயில் – பொன்+எயில்; எயில் – எய்+இல்; செண்டலங்காரர் – செண்டு+அலங்காரர்.

**இலக்கணக் குறிப்பு**

ஊரே – 'ஏ' என்னும் இடைச்சொல் தெளிவுப் பொருளில் வந்தது; பேரண்டம் – பண்புத்தொகை ; முன்றில் – இல்முன் என்பதன் இலக்கணப் போலி; அனம் – அன்னம் என்பதன் இடைக்குறை

இயல்புக்கு மாறாக ஒன்றை மிகவும் உயர்வுபடக் கூறுவது உயர்வுநவிற்சி அணியாகும். இப்பாடலில் உயர்வு நவிற்சி அணி வந்துள்ளது.

**பகுபத உறுப்பிலக்கணம்**

| | | |
|---|---|---|
| கண்ட | – | காண் + ட் + அ<br>காண் – பகுதி; கண் எனத் திரிந்தது விகாரம்;<br>ட் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி, |
| நாடும் | – | நாடு + உம்<br>நாடு – பகுதி; உம் – தொழிற்பெயர் விகுதி |
| தேடும் | – | தேடு + உம்<br>தேடு – பகுதி; உம் – தொழிற்பெயர் விகுதி |

**பொருளுணர் பயிற்சி**

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மூத்த பள்ளியின் ஊர் எது? அவ்வூரின் பெயர்க் காரணம் தருக.
2) கொண்டலும் கொடிகளும் கூடுவதும் மூடுவதும் எங்கே?
3) அன்னம் எங்கு விளையாடும்?
3) எயில்வழி தேடுபவன் யார்? ஏன்?
4) அழகரின் பெருமை யாது?

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) 'அழகர் முக்கூடல் ஊரெங்கள் ஊரே' என்று மூத்த பள்ளி ஊரின் வளத்தை எங்ஙனம் பெருமிதத்துடன் விளக்குகிறாள்?
2) முக்கூடற்பள்ளு –குறிப்பு வரைக.

மொழித்திறன் பயிற்சி

1. இலக்கணக் குறிப்பு எழுதுக.
   கைக்கொளல், முன்றில், தெள்ளமுது, கொள்வார்
2. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.
   கொண்ட, புழுங்கி, சொல்லிய, பெற்றார்.

# (உ) திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்

## முத்தப் பருவம்

கத்துந் தரங்கம் எடுத்தெறியக்
கடுஞ்சூல் உளைந்து வலம்புரிகள்
கரையில் தவழ்ந்து வாலுகத்திற்
கான்ற மணிக்கு விலையுண்டு
தத்துங் கரட விகடதட
தந்திப் பிறைக்கூன் மருப்பில்விளை
தரளந் தனக்கு விலையுண்டு
தழைத்துக் கழுத்து வளைந்தமணிக்
கொத்துஞ் சுமந்த பசுஞ்சாலிக்
குளிர்முத் தினுக்கு விலையுண்டு
கொண்டல் தருநித் திலந்தனக்குக்
கூறுந் தரமுண் டுன்கனிவாய்
முத்தந் தனக்கு விலையில்லை
முருகா முத்தந் தருகவே
முத்தஞ் சொரியுங் கடலலைவாய்
முதல்வா முத்தந் தருகவே.

–பகழிக் கூத்தர்

நூற்குறிப்பு: திருச்செந்தூர் முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக்(குழந்தையாக) கொண்டு பாடப்பெற்ற பிள்ளைத்தமிழ் திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் என வழங்கப்பெறுகிறது.

'பிள்ளைத்தமிழ்' என்பது தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. இறைவனையோ அரசருள்ளும் மக்களுள்ளும் சிறந்தாரையோ குழந்தையாகக் கற்பனை செய்து, அதன் வளர்ச்சியைப் பத்துப் பருவங்களாக வகுத்துப் பாடுவது 'பிள்ளைத்தமிழ்' என்னும் இலக்கியமாகும். இது ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் பத்துப் பருவங்களாவன :

1.காப்பு, 2. செங்கீரை, 3.தால், 4. சப்பாணி, 5.முத்தம், 6.வருகை, 7.அம்புலி, 8.சிற்றில், 9.சிறுபறை, 10.சிறுதேர் என்பனவாகும். பெண்பால் பிள்ளைத் தமிழாக இருந்தால் கடைசி மூன்று பருவங்கள் அம்மானை, நீராடல், ஊசல் (ஊஞ்சல்) என அமையும்.

நமக்குப் பாடமாக வந்துள்ள பாடல் முத்தப் பருவத்தில் உள்ளதாகும். சிறுநடையிலும் குழந்தையை முத்தம் தருமாறு தாய் தந்தையர் முதலானவர் வேண்டுவதால் முத்தப் பருவம் எனப்பட்டது.

ஆசிரியர் குறிப்பு : பெயர்–பகழிக் கூத்தர்; ஊர்–பாண்டிய மண்டலத்திலுள்ள சந்நாசிக் கிராமம்; இயற்றிய நூல்– திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ்.

அருஞ்சொற்பொருள்

கத்தும்–முழங்கும், தரங்கம்–கடலலை, சூல்–கருப்பம், உளைந்து–வருந்தி, வாலுகம்–வெண்மணல், கான்றமணி–சொரிந்த முத்து, கரடம்–மதம், விகடம்–விகடக் கூத்து, உன்மத்தமுமாம்; தடம்–மலை, தந்திப் பிறைக்கூன் மருப்பு–யானையின் பிறைச்சந்திரன் போல் வளைந்துள்ள (தந்தம்)கொம்பு; தரளம், நித்திலம்–முத்து. சாலி–ஒருவகை நெல், கொண்டல்–மேகம். வலம்புரிகள்–வலப்புறமாக வரிகள் அமைந்த ஒருவகை சங்குகள்.

தொடர்களைப் பிரித்தறிதல்

எடுத்தெறிய–எடுத்து+எறிய; கடுஞ்சூல்–கடுமை+சூல்; விலையுண்டு–விலை+உண்டு; தரமுண்டு–தரம் + உண்டு; கடலலை–கடல் + அலை.

இலக்கணக் குறிப்பு

கடுஞ்சூல் – பண்புத்தொகை; பிறைக்கூன் – ஒருபொருட்பன்மொழி; விளைதரளம்–வினைத்தொகை; தருநித்திலம்–வினைத்தொகை; கனிவாய்–உவமைத்தொகை; தருக–வியங்கோள் வினைமுற்று; சுமந்த–பெயரெச்சம்; இப்பிறை–அண்மைச் சுட்டு; முருகா, முதல்வா–விளித்தொடர்கள்.

பகுபத உறுப்பிலக்கணம்

எறிய – எறி + ய் + அ

எறி –பகுதி; ய்–யகரஉடம்படுமெய் சந்தி;
அ– பெயரெச்ச விகுதி

| | | |
|---|---|---|
| தவழ்ந்து | – | தவழ் + த்(ந்) + த் + உ<br>தவழ்–பகுதி; த்–சந்தி ந் ஆனது விகாரம்; த்–இறந்தகால இடைநிலை; உ–வினையெச்ச விகுதி |
| தருக | – | தா(தரு) + க<br>தா–பகுதி; தரு எனத் திரிந்தது விகாரம்; க–வியங்கோள் வினைமுற்று விகுதி |
| தழைத்து | – | தழை + த் + த் + உ<br>தழை–பகுதி; த்–சந்தி; த்–இறந்தகால இடைநிலை; உ– வினையெச்ச விகுதி |

பொருளுணர் பயிற்சி

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் – சிறுகுறிப்பு வரைக.
2) உலகில் எவற்றினுக்கெல்லாம் விலையுண்டு?
3) விலை மதிப்பற்றதாகப் பகழிக்கூத்தர் கூறுவது யாது?

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) பிள்ளைத்தமிழ் நூலின் இலக்கணம் யாது?
2) இருவகைப் பிள்ளைத் தமிழுக்கும் உள்ள பருவங்களை வகைப்படுத்துக.

**இ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக,**

திருச்செந்தூர் முருகப்பெருமானின் பெருமைகளாகப் பகழிக்கூத்தர் கூறவனவற்றைத் தொகுத்து எழுதுக.

# (ஊ) இரட்டுற மொழிதல்

### திருமாலும் கைக்கடிகாரமும்

**சக்கரத்தி னாலரவந் தாங்குதலி னோடுமுள்ளெட்(டு)**
**அக்கரத்தி னால்வேலை யார்வதினால்–மிக்கவன்பர்**
**முக்கியமாய்க் கைக்கொளலால் முத்துசா மித்துரையே**
**கைக்கடியா ரந்திருமால் காண்.**

–அழகிய சொக்கநாதர்

**நூற்குறிப்பு** : ஒரு சொல்லோ தொடரோ இரண்டு பொருள் தருமாறு பாடுதல் ‘இரட்டுற மொழிதல்’ என்பர். இதனைச் சிலேடை என்றும் கூறுவர். இப்பாடல் திருமாலுக்கும் கைக்கடிகாரத்திற்கும் உள்ள ஒற்றுமையை விளக்குகிறது.

ஆசிரியர் குறிப்பு : பெயர்–அழகிய சொக்கநாதர்; பிறந்த ஊர்–திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தச்சநல்லூர்; காலம்–19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி; இயற்றிய நூல்கள்–காந்தியம்மை பிள்ளைத்தமிழ், காந்தியம்மை அந்தாதி மற்றும் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட தனிப்பாடல்கள். அவற்றுள் சிறப்புடையன சிலேடைப் பாடல்களாம். 'முத்துசுவாமி பிள்ளை மீது காதல்' என்ற பாடலும் அத்தகையது.

## அருஞ்சொற்பொருள்

அரவம்–பாம்பு, ஓசை; அக்கரம்–எழுத்து; அட்டாட்சரம்–எட்டு எழுத்துகளையுடைய ஓம் நமோ நாராயணா; எட்டு– எட்டு என்னும் எண், எட்டுகின்ற தொலைவு; கைக்கொள்– கைகூப்பித் தொழுதல், கையில் கட்டிக்கொள்ளுதல்

## தொடர்களைப் பிரித்தறிதல்

எட்டக்கரத்தினால்–எட்டு + அக்கரத்தினால்; வேலையார்வதினால்– வேலை + ஆர்வதினால்.

## இலக்கணக் குறிப்பு

ஓடும்–எதிர்கால வினைமுற்று ; மிக்க–இறந்தகால வினையாலணையும் பெயர் கைக்கொளல்–வேற்றுமைத் தொகை; கைக்கடிகாரம் – உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை; முத்துசாமித் துரையே–ஆடூஉ முன்னிலை (ஆண்மகனை விளித்துப் பாடுவது); காண்–இடைச்சொல் ; கொளல்–கொள்ளல் என்பதன் இடைக்குறை.

## பகுபத உறுப்பிலக்கணம்

| | | |
|---|---|---|
| மிக்க | – | மிகு + அ<br>மிகு–பகுதி; மிக்கு என்று ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டிற்று; அ–பெயரெச்ச விகுதி |
| தாங்குதல் | – | தாங்கு+தல்<br>தாங்கு–பகுதி; தல்–தொழிற் பெயர் விகுதி |

## பொருள் நயம் அறிதல்

கடியாரம்

1) சக்கர வடிவை உடையது
2) ஒருவித ஓசையைக் கொண்டுள்ளது
3) முள் தொடுகின்ற எண்ணெழுத்துகளை உடையது
4) சிறந்த வேலைப்பாடு உடையது
5) விரும்பும் அன்பர் கைக்கு அழகூட்டுவது

திருமால்

1) திருமால் சக்கராயுதத்தை உடையவர்
2) ஆதிசேடனாகிய பாம்பணைமேல் பள்ளிகொள்பவர்
3) `ஓம் நமோ நாராயணா' என்னும் எட்டெழுத்து மந்திரத்தினால் வணங்கப்படுபவர்
4) திருப்பாற்கடலில் எழுந்தருளியுள்ளவர்
5) மெய்யன்பர்களால் கைகூப்பித் தொழும் தன்மையர்.

பொருளுணர் பயிற்சி

**அ. சரியான விடையை எடுத்து எழுதுக.**

1) சிற்றிலக்கியங்கள்________வகைப்படும்.
   (1) பதினெட்டு (2) பத்து (3) தொண்ணூற்றாறு (4) எட்டு
2) மதுரை சொக்கநாதரிடம் தூது சென்றது________
   (1) மயில் (2) குயில் (3) மான் (4) தமிழ்
3) அட்டாட்சரம் என்னும் மந்திரத்தினால் வணங்கப்படுபவர்________
   (1) சிவன் (2) திருமால் (3) நான்முகன் (4) ஐங்கரன்

**ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) வெயில் வெய்யோன் பொன்________தேடும்
2) கனக முன்றில்________விளையாடும்
3) கொண்டல் தரு________தனக்குக் கூறும் தரமுண்டு

**இ. பொருளுணர்ந்து பொருத்துக**

| ஆசிரியர் | நூல் |
|---|---|
| 1) மாறோக்கத்து நப்பசலையார் | – கலிங்கத்துப்பரணி |
| 2) செயங்கொண்டார் | – புறநானூற்றுப் பாடல் |
| 3) பகழிக்கூத்தர் | – காந்தியம்மைப் பிள்ளைத்தமிழ் |
| 4) அழகிய சொக்கநாதர் | – திருச்செந்தூர் பிள்ளைத் தமிழ் |

**ஈ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

1) உள் எட்டு அக்கரத்தினால் – இரு பொருள் கூறுக.
2) திருமாலை அன்பர்கள் கைகூப்பித் தொழக் காரணம் யாது?
3) கடியாரத்தைப் பற்றி இப் பாடல்வழி அறிந்த செய்திகள் யாவை?

**உ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1. அழகிய சொக்கநாதர் –குறிப்பு வரைக
2. 'கைக்கடியாரம் திருமால் காண்'–எவ்வாறு? விளக்குக.

1. மொழித்திறன் பயிற்சி

1) அடி எதுகைச் சீர்களை எடுத்து எழுதுக.

ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின் மேலுண்டோ நீ
நோக்கிய வண்ணங்கள் நூறுடையாய்.

2) சீர் மோனைச் சீர்களை எடுத்து எழுதுக.

பொடித்தவியர்ப் புள்ளிகளே போலும் போலும்

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான மயங்கொலி எழுத்தை எடுத்து எழுதுக.

1) திண்தேர் வ – வன் கொண்ட கூ – றே (ல–ள ; ற்–ர்)
2) முள் – றும் க – லாறும் தென்னர் ஓட (ளா–லா ; ல்–ள்)

4. இலக்கணக் குறிப்பு எழுதுக.

1) பண்புத்தொகை (தெள்ளமுது, பாலமுது, கனியமுது)
2) வினைத்தொகை (கடுஞ்சூல், விளைதரளம், கனிவாய்)
3) தொழிற்பெயர் (கடந்த, கடந்து, கடத்தல்)
4) கைதொழுது (வேற்றுமைத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை)

5. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

கொண்ட, கொள்வார், சொல்லிய, பெற்றார், தருக.

# 6. மறுமலர்ச்சிப் பாடல்கள்

பழமைசான்ற சிந்தனைகளையும் மரபுகளையும் முற்றிலும் புறக்கணிக்காது, காலத்துக்கேற்ற புதுமைகளை ஏற்றுப் படைக்கப்பட்ட இலக்கியங்களை அறிஞர் 'மறுமலர்ச்சி இலக்கியங்கள்' என்பர்.

சொல், பொருள் ஆகிய சுவையுடன் புதுமையும் சீர்திருத்தமும் கொண்ட கருத்துகளைக் கருப்பொருளாக்கி இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த, இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கவிஞர்கள் பாடிய பாடல்கள் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

## (அ) உலகம் உன்னுடையது

அறிவை விரிவுசெய் ! அகண்ட மாக்கு !
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை !
அணைந்துகொள் உன்னைச் சங்கமமாக்கு !
மானிட சமுத்திரம் நானென்று கூவு !
பிரிவிலை எங்கும் பேத மில்லை
உலகம் உண்ணஉண் உடுத்த உடுப்பாய் !
புகல்வேன் உடைமை மக்களுக்குப் பொது
புவியை நடத்து பொதுவில் நடத்து
வானைப் போல மக்களைத் தாவும்
வெள்ளை அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே !

–பாவேந்தர் பாரதிதாசன்

ஆசிரியர் குறிப்பு : பாவேந்தர் பாரதிதாசன் புதுச்சேரியில் 29.4.1891இல் திருவாளர்கள் கனகசபை இலக்குமி அம்மாள் தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் கனக சுப்புரத்தினம், பாரதியார் மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் என்று பெயரை மாற்றிக் கொண்டார். பெண் விடுதலை, சாதியொழிப்பு, சமூக சீர்திருத்தம், பொதுவுடைமை, தமிழுணர்வு போன்ற கருப்பொருள்களில் பல நூல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் 'அழகின் சிரிப்பு,

தமிழியக்கம், பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு' போன்றவை குறிப்பிடத்தக்கவை. தமக்குப் பின்னால் ஒரு கவிஞர் பரம்பரை உருவாகக் காரணமானவர். புரட்சிக் கவிஞர், பாவேந்தர் என்று சிறப்பாக அழைக்கப்படுகிறார். மறைவு 21.4.1964.

அருஞ்சொற்பொருள்

அகண்டம்–முழுமை; விசாலப் பார்வை–விரிந்த பார்வை; சங்கமம்–கலத்தல்; பேதம்–வேறுபாடு, புகழ்வேன்– சொல்வேன்; உடைமை–செல்வம்; புவி–பூமி.

தொடர்களைப் பிரித்தறிதல்

அகண்டமாக்கு–அகண்டம்+ஆக்கு; சங்கமமாக்கு–சங்கமம்+ஆக்கு; நானென்று–நான்+என்று; பிரிவிலை–பிரிவு+இல்லை; பேதமில்லை–பேதம்+இல்லை.

இலக்கணக் குறிப்பு

மானிட சமுத்திரம்–உருவகத் தொடர்; கூவு–வினைப்பகுதி(அ)பகாப்பதம்; பிரிவிலை–பிரிவு இல்லை என்பதன் இடைக்குறை; உடுப்பாய்–முன்னிலை ஒருமை வினைமுற்று ; புகல்வேன்–தன்மையொருமை வினைமுற்று.

பகுபத உறுப்பிலக்கணம்

அணைந்து – அணை+ த்(ந்) + த் +உ
அணை – பகுதி; த்–சந்தி; 'ந்' ஆனது விகாரம்;
த்–இறந்தகால இடைநிலை; உ–வினையெச்ச விகுதி.

உடுப்பாய் – உடு + ப் + ப் + ஆய்
உடு–பகுதி; ப்–சந்தி; ப்–எதிர்கால இடைநிலை;
ஆய்–முன்னிலையொருமை வினைமுற்று விகுதி

புகல்வேன் – புகல் + வ் + ஏன்
புகல்–பகுதி; வ்–எதிர்கால இடைநிலை; ஏன்–தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

பொருளுணர் பயிற்சி

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மறுமலர்ச்சி இலக்கியங்கள் எனப்படுபவை எவை?
2) பாவேந்தரின் படைப்புகளுக்கு எவ்வெவை கருப்பொருள்களாக அமைந்தன?
3) உண்பது, உடுத்துவது பற்றிப் பாரதிதாசனார் இடும் கட்டளை யாது?
4. வானைப்போல–இவ்வுவமையை விளக்குக.

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) பாரதிதாசன் –குறிப்பு வரைக.
2) புரட்சிக் கவிஞர் விரும்பும் புவியரசு எத்தகையது?

**இ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் தொகுத்து எழுதுக.**

இதனைக் 'குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே' என்று பாவேந்தர் கூறும் கருத்துகள் யாவை?

## (ஆ) சுதந்தரப் பொங்கல்

அடிமை விலங்குகள் அகன்றன இனிமேல்
கொடுமை பிறர்பால் கூறுதற் கில்லை
திடமுடன் சத்தியத் தீயினை வீட்டி
மடமை மதவெறி மமதையை எரித்துப்
பொய்யும் மோசமும் புலையும் பொசுங்க
வையம் முழுவதும் வாழ்ந்திடத் துணிந்திங்(கு)
அன்பெனும் பாலை அடுப்பகத் தேற்றித்
துன்பெனும் துர்நீர் சுண்டித் தொலைந்திடக்
காய்ச்சித் திரட்டிய கருணைப் பொங்கல்.

–நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

**ஆசிரியர் குறிப்பு** : 'சுதந்தரப் பொங்கல்' என்னும் பாடலை இயற்றியவர் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார். இவர் நாமக்கல் மாவட்டத்து மோகனூரில் 19.10.1888 இல் பிறந்தார். பெற்றோர் திரு.வேங்கடராமன், திருமதி அம்மணி அம்மாள். இவர் உரைநடை நூல்கள், புதினங்கள், கவிதை இலக்கியங்கள் என்று பல நூல்களை எழுதியுள்ளார். அவையெல்லாம் நாட்டுப்பற்றும், இனப்பற்றும், மொழிப்பற்றும் ஊட்டவல்லவை. என்கதை, மலைக்கள்ளன், திருக்குறள் புது உரை, தமிழன் இதயம், சங்கொலி, கவிதாஞ்சலி, காந்தி அஞ்சலி, தமிழ்வேந்தன், அன்பு செய்த அற்புதம், அவளும் அவனும் என அவர் இயற்றிய நூல்கள் அத்தனையும் அமுதத் தமிழ்வயலில் விளைந்த முப்பழச்சாறு என்று கூறத்தகுந்தவை. இவர் தமிழக அரசின் முதல் அரசவைக் கவிஞராகப் பதவி வகித்தவர்.

இப்பாடல் நாமக்கல் கவிஞரின் 'சங்கொலி' என்னும் கவிதைத் தொகுப்பு நூலில் 'திருநாள் மலர்' என்னும் பகுதியில் உள்ளது.

அருஞ்சொற்பொருள்

தீயினை வீட்டி—தீயினை மூளச்செய்து; மடமை—அறியாமை; மமதை—செருக்கு; புலை—இழிவு; வையம்—உலகம்; துர்நீர்—கெட்ட நீர்; சுண்டி—வற்றி; கருணை—அருள்.

தொடர்களைப் பிரித்தறிதல்

கூறுதற்கில்லை—கூறுதற்கு+இல்லை; துணிந்திங்கு—துணிந்து+இங்கு; அன்பெனும்—அன்பு+என்னும்; அடுப்பகத்தேற்றி – அடுப்பு + அகத்து + ஏற்றி

இலக்கணக் குறிப்பு

கொடுமை—தொழிற்பெயர்; சத்தியத்தீ—உருவகத்தொடர்; மதவெறி—இருபெயரொட்டு பண்புத்தொகை; வீட்டி, எரித்து, ஏற்றி, சுண்டி—வினையெச்சங்கள்; திரட்டிய —பெயரெச்சம்; எனும்—என்னும் என்பதன் இடைக்குறை.

பகுபத உறுப்பிலக்கணம்

அகன்றன – அகல்(ன்) + ற் + அன் + அ
அகல்—பகுதி; ல்+ன் ஆனது விகாரம்; ற்—இறந்தகால இடைநிலை; அன்—சாரியை; அ—பலவின்பால் வினைமுற்று விகுதி

கொடுமை – கொடு + மை
கொடு—பகுதி; மை— தொழிற்பெயர் விகுதி

திரட்டிய – திரட்டு + இ(ன்) + ய் + அ
திரட்டு— பகுதி; இன்—இறந்தகால இடைநிலை; `ன்' புணர்ந்து கெட்டது; ய்—உடம்படுமெய்; அ—பெயரெச்ச விகுதி

பொருளுணர் பயிற்சி

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) சுதந்தரப் பொங்கல் என்ற பாடலாசிரியர் யார்? அவர் எங்கே? எப்பொழுது பிறந்தார்?
2) சத்தியத்தீயினை வீட்டி யாது செய்ய வேண்டும்?
3) கருணைப் பொங்கலின் சிறப்பினைக் கூறுக.

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) நாமக்கல் கவிஞர் இயற்றிய நூல்களையும் அவற்றின் சிறப்பினையும் எழுதுக.
2) 'கொடுமை பிறர்பால் கூறுதற்கில்லை' என்று கவிஞர் பெருமிதங் கொள்வது ஏன்?

## (இ) பழைய மனமே புதிய உலகம்

அழகிய தலைமயிர் அழகிய உறுப்புகள்
பழுதிலா உருவம் இத்தனை இருந்தும்
உழுதிடா உள்ளம் உவர்நிலம் அன்றோ?
'நாகரிகம்' என்பது நல்ல உடைகளா?
'நாகரிகம்' என்பது நன்றாய் உண்பதா?
உள்ளம் என்பதே உரைகல் தம்பி!
உள்ளமே வாழ்க்கை! உள்ளமே ஒழுக்கம்!
ஒருவன் பசித்திட ஒருவன் உண்பதா?
ஒருவன் மாடியில், ஒருவன் தெருவிலா?

—பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர் குறிப்பு : பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை. மாணிக்கம் ஊர் சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம் என்னும் சிற்றூர். பெற்றோர்—துரைசாமி, குஞ்சம்மாள். பிறப்பு: 10.3.1933 மறைவு: 16.6.1995 இயற்றிய நூல்கள்—கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக் கொத்து, நூறாசிரியம் போன்றன. பாவாணரின் வழியைப் பின்பற்றிய தனித்தமிழ் ஆர்வலரான இவர் தென்மொழி, தமிழ்ச்சிட்டு என்ற இதழ்கள் மூலம் உலகத் தமிழரிடையே தமிழ் உணர்வை ஏற்படுத்தப் பாடுபட்டவர்.

இப்பாடல் 'கனிச்சாறு' என்னும் நூலின் மூன்றாம் தொகுதியில் உள்ளது.

### அருஞ்சொற்பொருள்

பழுதிலா—குற்றமில்லாத; உருவம்—வடிவம்; உவர்நிலம்—உப்புமண் (உவர்ப்புச் சுவை மிகுந்த நிலம், புல் விளைவதும் கடினம்); உரைகல்—பொன்னை உரசிப் பார்க்கும் கல்.

### தொடர்களைப் பிரித்தறிதல்

பழுதிலா— பழுது + இல்லா; உழுதிடா – உழுது + இடா.

### இலக்கணக் குறிப்பு

இலா—இல்லா என்பதன் இடைக்குறை; பழுதிலா, உழுதிடா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்; வாழ்க்கை—தொழிற்பெயர்; தலைமயிர்—வேற்றுமைத்தொகை; உரைகல்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை.

**பகுபத உறுப்பிலக்கணம்**

| | | |
|---|---|---|
| உழுது | – | உழு + த் + உ<br>உழு–பகுதி; த்–இறந்தகால இடைநிலை; உ–வினையெச்ச விகுதி |
| வாழ்க்கை | – | வாழ் + க் + கை<br>வாழ்–பகுதி; க்–சந்தி; கை–தொழிற்பெயர் விகுதி |

**பொருளுணர் பயிற்சி**

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

பாவலரேறு உவர்நிலம் என்று எதனைக் குறிப்பிடுகிறார்?

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

பழைய மனமே புதிய உலகம் என்ற தலைப்பில் பெருஞ்சித்திரனார் கூறுவன யாவை?

# (ஈ) புத்துலகை உருவாக்க முயலவேண்டும்

உதவுகின்ற ஆற்றலுடன் வாய்ப்பும் வந்தால்
ஒப்பற்ற பேரின்பம் எய்து கின்றோம்
உதவுகிற இயல்புதனைப் பயன்ப டுத்தி
உயர்ந்தோரை இறுதிவரை துன்பு றுத்தும்
புதர்களைநாம் அழித்தால்தான் செழிப்பு மிக்க
பொன்வயலை உருவாக்கி மகிழக் கூடும்
புதர்களைநாம் அழிப்பதிலே மகிழ வேண்டும்
புத்துலகை உருவாக்க முயல வேண்டும்.

**–பாவலர் பொற்கோ**

ஆசிரியர் குறிப்பு : பாவலர் பொற்கோவின் முழுப்பெயர் பொன். கோதண்டராமன். இவர் திரு.க.பொன்னுசாமி, திருமதி பழனியம்மாள் தம்பதியருக்கு 09.06.1941இல் பெரம்பலூர் மாவட்டம் செயங்கொண்ட சோழபுரத்திற்கு அருகிலுள்ள இரும்புலிக்குறிச்சியில் பிறந்தார். தமிழிலும் ஆங்கிலத்திலும் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் துணைவேந்தராகச் சிறப்புறப் பணியாற்றியவர். இன்றும் ஓயாது தமிழ்ப்பணியாற்றி வருகிறார். இப்பாடல் 'பொற்கோவின் கவிதைகள்' என்ற நூலில் உள்ளது.

**அருஞ்சொற்பொருள்**

ஆற்றல் –சக்தி; ஒப்பற்ற–நிகரற்றன; இயல்பு–நற்குணம் (பண்பு)); துன்புறுத்தும்–துன்பமுண்டாக்கும்.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

ஒப்பற்ற–ஒப்பு + அற்ற; பேரின்பம்–பெருமை + இன்பம்; துன்புறுத்தும்–துன்பு + உறுத்தும்; புத்துலகு–புதுமை + உலகு.

**இலக்கணக் குறிப்பு**

வாய்ப்பும்–உயர்வுச் சிறப்பும்மை; பேரின்பம், புத்துலகு–பண்புத்தொகைகள்; உயர்ந்தோரை–வினையாலணையும் பெயர்; துன்புறுத்தும்–இரண்டாம் வேற்றுமைத் தொகை; பொன்வயல்–உவமைத்தொகை.

**பகுபத உறுப்பிலக்கணம்**

உதவுகின்ற – உதவு + கின்று + அ
உதவு –பகுதி; கின்று–நிகழ்கால இடைநிலை;
அ–பெயரெச்ச விகுதி

எய்துகின்றோம் – எய்து + கின்று + ஓம்
எய்து–பகுதி; கின்று–நிகழ்கால இடைநிலை;
ஓம்–தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி

**பொருளுணர் பயிற்சி**

**அ. மூன்று வரிகளில் விடை எழுதுக.**

1) எப்பொழுது பேரின்பம் எய்துகின்றோம்?
2) உதவுகின்ற இயல்புகளைப் பயன்படுத்தி யாது செய்யவேண்டும்?

**ஆ. ஆறு வரிகளில் விடை தருக.**

புத்துலகை உருவாக்க முடியும் – எப்போது?

## (உ) வியர்வையில் விளைந்த செல்வம்

பகலெல்லாம் கடல்அ லைந்து
பாடுபட் டதனால் கையில்
அகப்பட்ட வைரம் எல்லாம்
ஆதிக்கத் துயர்ந்த வானம்
நகக்கண்ணில் அழுக்கில் லாமல்
நறுக்கென்று வாரிக் கொண்டு
தொகைப்பட்ட உடுக்கள் என்று
சொல்லிற்றே இரவில் என்பால்!

உயர்ந்தவர் எடுத்துக் கொள்வார்
    ஓய்வின்றி உழைத்து ழைத்தே
அயர்ந்தவர் கஞ்சி இன்றி
    அழுவார்கள், இவர்கள் சிந்தும்
வியர்வையில் விளைந்த செல்வம்
    வெடுக்கென்று பறித்துக் கொள்ளும்
கயமைக்கு வான்எ டுத்துக்
    காட்டாக விளங்கிற் றங்கே !

—புலவர் புலமைப்பித்தன்

ஆசிரியர்குறிப்பு : புலவர் புலமைப்பித்தனின் இயற்பெயர் திரு.க.இராமசாமி. இவர் கோவை மாவட்டம், சூலூர் வட்டம், பள்ளப்பாளையம் என்னும் ஊரில் கருப்பண்ணர்— தெய்வானை அம்மாள் தம்பதியர்க்கு 06.10.1935 இல் மகனாகப் பிறந்தார். இவர் அரசவைக் கவிஞராகவும், சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர். பாவேந்தர் பிள்ளைத் தமிழ் உள்ளிட்ட நூல்கள் பல இயற்றியவர். இவரது பாடல்கள் பல திரைப்படங்களில் இடம் பெற்றுள்ளன இப்பாடல் 'புலமைப்பித்தன் கவிதைகள்' என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

### அருஞ்சொற்பொருள்

உடுக்கள்—விண்மீன்கள்; அயர்த்தல்—உழைத்துக் களைத்தவர்; கயமை—கீழ்மைக் குணம்.

### தொடர்களைப் பிரித்தறிதல்

பகலெல்லாம்—பகல் + எல்லாம்; ஆதிக்கத் துயர்ந்த—ஆதிக்கத்து + உயர்ந்த; நகக்கண் — நகம் + கண்; அழுக்கில்லாமல் — அழுக்கு + இல்லாமல்; நறுக்கென்று — நறுக்கு + என்று; ஓய்வின்றி — ஓய்வு + இன்றி; உழைத்துழைத்தே — உழைத்து + உழைத்தே; விளங்கிற்றங்கே—விளங்கிற்று + அங்கே.

### இலக்கணக் குறிப்பு

அலைந்து, எடுத்து—வினையெச்சங்கள்; உயர்ந்த, விளைந்த—பெயரெச்சங்கள்; நகக்கண்—வேற்றுமைத்தொகை; கொள்வார்—பலர்பால் வினைமுற்று; உழைத்து உழைத்தே—அடுக்குத்தொடர்; அயர்ந்தவர்—வினையாலணையும் பெயர்; சிந்தும்—தொழிற்பெயர்.

### பகுபத உறுப்பிலக்கணம்

அலைந்து — அலை +த்(ந்) + த் + உ
அலை—பகுதி; த்—சந்தி; ந்—ஆனது விகாரம்; த்—இறந்தகால இடைநிலை; உ—வினையெச்ச விகுதி

உயர்ந்த — உயர் + த்(ந்) + த் + அ
உயர்—பகுதி; த்—சந்தி; ந் ஆனது விகாரம்; த்—இறந்தகால இடைநிலை; அ—பெயரெச்ச விகுதி

கொண்டு – கொள்(ண்) + ட் + உ
கொள்–பகுதி; ள், ண் ஆனது விகாரம்; ட்–இறந்தகால இடைநிலை; உ–வினையெச்ச விகுதி

கொள்வார் – கொள் + வ் + ஆர்
கொள்–பகுதி; வ்–எதிர்கால இடைநிலை; ஆர்–பலர்பால் வினைமுற்று விகுதி

பொருளுணர் பயிற்சி

அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) வைரங்களை எல்லாம் வானம் எவ்வாறு வாரிக் கொண்டது?
2) தொகைப்பட்ட உடுக்கள் என்று சொல்லிற்றே–விளக்குக.
3) யார், எதற்கு அழுவார்கள்?
4) கயமைத்தனம் என்று கவிஞர் எதனைக் குறிப்பிடுகிறார்?

ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

வியர்வையில் விளைந்த செல்வம் என்னும் தலைப்பில் புலமைப்பித்தன் கூறும் கருத்துகள் யாவை?

## (ஊ) வாழ்வின் அனுபவம் வழிநடத்தும்

கங்கையின் கைகளும்
நர்மதைக் கைகளும்
பொன்னியின் கைகோத்துத்
தென்முனை
பொருநையில் சங்கமித்தால்.....

இந்தியத் தளைகளும்
இடர்தரும் அணைகளும்
இல்லா நிலை பிறக்கும்–அன்னை
இயற்கையின் மடிசுரக்கும்

இயற்கை வெல்லும்
மானுடப் போரில்
அறிவியல் கைகொடுக்கும்–வாழ்வின்
அனுபவம் வழி நடத்தும்.

–கவிஞர் தணிகைச் செல்வன்

ஆசிரியர் குறிப்பு : கவிஞர் தணிகைச் செல்வனின் இயற்பெயர் த. எத்திராசன் என்பதாகும். இவர் காஞ்சி மாவட்டம் செங்கற்பட்டுக்கு அருகில்

பாலாற்றங்கரையில் அமைந்துள்ள உறைக்காட்டுபேட்டை என்னும் சிற்றூரில் 28.2.1935இல் பிறந்தார். இவரின் பெற்றோர் திரு. தணிகாசலம், திருமதி அழகம்மை ஆவர். இவரது கவிதைகள் தமிழகத்து இதழ்கள் பலவற்றில் வந்துள்ளன. 'தலித்தியம் தமிழியம் இந்தியம்' என்ற கட்டுரை நூலையும், 'மக்கள் எழுத்தாளர்கள்–ஒரு பார்வை' என்ற திறனாய்வு நூலையும் எழுதியுள்ளார். இவர் தற்போது தாம்பரம் அருகிலுள்ள சிட்லபாக்கத்தில் வசித்து வருகிறார். இப்பாடல் கவிஞர் 'தணிகைச் செல்வன் கவிதைகள்' என்னும் நூலில் 'சகாராவின் தாகம்' என்ற பகுதியில் உள்ளது.

அருஞ்சொற் பொருள்

கங்கை–இமயமலையில் உற்பத்தியாகும் வற்றாத ஆறு; நர்மதை– தக்காண பீடபூமியில் உற்பத்தியாகி மேற்கு நோக்கிப் பாயும் ஆறு; பொன்னி–காவிரியாறு குடகு மலையில் உற்பத்தியாகிறது; பொருநை–தாமிரபரணியாறு, தென் பொதிகைமலையில் உற்பத்தியாகிறது; சங்கமித்தல்–கலத்தல், தளைகள்–தடைகள்; இடர்–துன்பம், மானுடம்–மனிதம்(மனிதநேயம்), மானுடர்–மனிதர்.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

தென்முனை –தெற்கு + முனை
மானுடப்போர்–மானுடர் + போர்.

**இலக்கணக் குறிப்பு**

<u>இல்லா</u>நிலை–ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; இயற்கை வெல்லும்–இரண்டாம் வேற்றுமைத் தொகை.

**பொருளுணர் பயிற்சி**

**அ. கோடிட்ட இடங்களைத் தகுந்த சொற்களால் நிரப்புக.**

1) பாரதியார் மீது கொண்ட பற்றினால் _____ என்று தம் பெயரை மாற்றிக் கொண்டார்.
2) உழுதிடா உள்ளம்_____ அன்றோ?

**ஆ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1) 'புவியை நடத்து பொதுவில் நடத்து'–என்று பாடியவர்_____
(பாரதியார், பாரதிதாசனார், சுரதா, நாமக்கல் கவிஞர்)
2) பாவாணரின் வழியைப் பின்பற்றிய தனித்தமிழ் ஆர்வலர்_____
(பெருஞ்சித்திரனார், பாவேந்தர், முடியரசன், வாணிதாசன்)
3) சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராகப் பதவி வகித்த பாவலர்_____ (மு. வரதராசனார், வ.செ. குழந்தைசாமி, பொற்கோ, சிற்பி)

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

1) எந்தெந்த நதிகளை இணைக்க வேண்டும்?
2) நதிகளின் இணைப்பால் ஏற்படும் பயன் யாது?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

வாழ்வின் அனுபவம் வழிநடத்தும் என்னும் தலைப்பில் கவிஞர் தணிகைச் செல்வன் கூறுவன யாவை?

மொழித்திறன் பயிற்சி

**1. பொருளுணர்ந்து பொருத்துக.**

| நூல்கள் | | கவிஞர்கள் |
|---|---|---|
| 1) தமிழியக்கம் | – | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| 2) கனிச்சாறு | – | பாவேந்தர் பாரதிதாசனார் |
| 3) மலைக்கள்ளன் | – | மகாகவி பாரதியார் |
| 4) குயில் பாட்டு | – | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் |

**2. தொடர்களைப் பிரித்த எழுதுக.**

சங்கமமாக்கு, கூறுதற்கில்லை, பழுதிலா, துன்புறுத்தும், தென்முனை

**3. இலக்கணக் குறிப்பு வரைக.**

புகழ்வேன், மதவெறி, பழுதிலா, புத்துலகு, இயற்கை வெல்லும், அயர்ந்தவர்

**4. பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

உடுப்பாய், அகன்றன, வாழ்க்கை, எய்துகின்றோம், விளைந்த, அழுவார்

**5. எதுகைச் சீர்களை எடுத்து எழுதுக.**

வெள்ளை அன்பால் இதனைக்
குள்ள மனிதர்க்கும் கூறடா தோழனே !

**6. மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

1) உழுதிடா உள்ளம் உவர்நிலம் அன்றோ?
2) வியர்வையில் விளைந்த செல்வம்

**7. கோடிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எடுத்து எழுதுக.**

1) விசா_____ ப் பார்வையால் வி_____ ங்கு மக்களை (ள–ல ; ளு–ழு)
2) மடமை மதவெ_____ மமதையை எ_____ த்துவிடு (ரி–றி)

# 7. வழிபாட்டுப் பாடல்கள்

வழிபாடு என்பதற்குப் 'பின்பற்றி ஒழுகுதல்' என்பது பொருள். அதாவது, தன்னால் வழிபடப்படும் இறைவனின் அருள்நெறிகளைப் பின்பற்றி ஒழுகுதலாகும்.

சிவபெருமான், திருமால், இயேசு, அல்லா ஆகியோரைப்பற்றிய நான்கு பாடல்கள் இப்பகுதியில் உள்ளன.

## (அ) சிவபெருமான்

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்தம் உடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ
தேஇந்த மாநிலத்தே.

– **திருநாவுக்கரசர்**

நூற்குறிப்பு : தேவாரம் என்பது தே+ஆரம் எனப் பிரித்து (தே–தெய்வம், ஆரம் – மாலை) தெய்வத்துக்குச் சூட்டப்படும் மாலை என்று பொருள்படும். பூமாலையினும் சிறப்புடைய பாமாலையாக இது உள்ளது. இந்நூல் பன்னிரு திருமுறைகளுள் ஒன்றாகப் போற்றப்படுகிறது. ‘தேவாரம்’, திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடல்களின் தொகுப்பு ஆகும்.

ஆசிரியர் குறிப்பு: இப்பாடலின் ஆசிரியர் அப்பர் என்று புகழப்படும் திருநாவுக்கரசர் ஆவார். இவரது இயற்பெயர் மருள்நீக்கியார். இவரை நாவுக்கரசர் என்றும் கூறுவர். புகழனார் – மாதினியார் இணையருக்கு மைந்தனாய்த் தோன்றியவர். திருமுனைப்பாடி நாட்டைச் சேர்ந்த திருவாமூர் என்னும் ஊரினர். இவரின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்பர்.

நம் பாடப்பகுதி தில்லையம்பதியில் பொன்னம்பலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனாகிய நடராசப் பெருமான்மீது பாடப்பட்டதாகும்.

அருஞ்சொற் பொருள்

குனித்த– வளைத்த; குமிண்சிரிப்பு – புன்சிரிப்பு; பனித்த–குளிர்ந்த; எடுத்த பொற்பாதம் – தூக்கிய திருவடி

**தொடர்களைப் பிரித்தறிதல்**

செவ்வாய்–செம்மை + வாய்; வெண்ணீறு –வெண்மை + நீறு;
பொற்பாதம் – பொன் + பாதம்.

**இலக்கணக் குறிப்பு**

செவ்வாய், வெண்ணீறு – பண்புத் தொகைகள்; மனித்தப்பிறவி– வலித்தல் விகாரம்; மாநிலம் – உரிச்சொற்றொடர்.

பகுபத உறுப்பிலக்கணம்

எடுத்த – எடு + த் + த் + அ
எடு – பகுதி; த் – சந்தி; த் – இறந்தகால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி.

**பொருளுணர் பயிற்சி**

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தேவாரம் – பெயர்க் காரணம் கூறுக.
2) திருநாவுக்கரசர் பற்றிக் குறிப்பு எழுதுக.
3) மனித்தப் பிறவி எப்போது வேண்டுமெனத் திருநாவுக்கரசர் கூறுகிறார்?

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தேவாரம் – நூற்குறிப்பு எழுதுக.
2) திருநாவுக்கரசர் சிவனின் தோற்றத்தைக் குறித்துக் கூறுவது யாது?

## (ஆ) திருமால்

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம்.

–திருமங்கையாழ்வார்

**நூற்குறிப்பு** : இப்பாடல், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் நூலில் உள்ளது. பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பெற்ற நாலாயிர திவ்வியப் பிரபந்தம் வைணவ சமயத்தாரின் தமிழ் வேதமாகப் போற்றப்படுகிறது.

ஆசிரியர் குறிப்பு : இப்பாடலின் ஆசிரியர் திருமங்கையாழ்வார். இவர் பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர். திருமாலை வழிபட்டுச் சிறப்படைந்தவர்களை ஆழ்வார்கள் என்பர். இவர் சோழநாட்டில் திருவாலித் திருநகரிக்கு அருகில் உள்ள திருக்குறையலூரில் பிறந்தவர். இவர் திருமங்கை மன்னர் எனவும், கலியர், மங்கை வேந்தர் எனவும் அழைக்கப் பெற்றார். இவரது பெற்றோர் ஆலிநாடர், வல்லித்திரு ஆவர். இவர் பாடிய பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளன. அதனுள் பெரிய திருமொழி, திருக்குறுந் தாண்டகம், திருநெடுந் தாண்டகம், திருஎழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் என்பன இவர் பாடியனவாகும். இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்பர்.

அருஞ்சொற் பொருள்

நிலந்தரஞ் செய்யும் – அழித்துவிடும்; விசும்பு அருளும் – விண்ணுலகு அளிக்கும்; வலம் – வெற்றி; நாமம் – பெயர்.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

பெருநிலம் – பெருமை + நிலம்.

**இலக்கணக் குறிப்பு**

படுதுயர் – வினைத்தொகை ; பெருநிலம் –பண்புத்தொகை; தாயி<u>னும்</u>– உயர்வுச் சிறப்பும்மை; தந்திடும், அருளும், அளிக்கும்– செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள்; கொண்டேன்– தன்மை ஒருமை வினைமுற்று.

**பகுபத உறுப்பிலக்கணம்**

கொண்டேன் – கொள்(ண்) + ட் + ஏன்

கொள் – பகுதி; ள், ண் ஆனது விகாரம்; ட் – இறந்தகால இடைநிலை; ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி.

**பொருளுணர் பயிற்சி**

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) நாலாயிர திவ்வியப் பிரபந்தம் – குறிப்பு வரைக.
2) திருமங்கையாழ்வார் எதனைக் கண்டுகொண்டதாகக் குறிப்பிடுகிறார்?

ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) திருமங்கையாழ்வார் பற்றிக் குறிப்பு வரைக.
2) நாராயணா என்னும் நாமம் எவற்றை எல்லாம் தரும்?

# (இ) கிறித்து

ஒருகன்னம் அறைந்தவர்க்கு மறுகன்னம் காட்டென்றும்
கருவியினால் வெட்டுபவர் வெட்டுண்பர் கடியென்றும்
பொருநரையும் நேசியென்றும் போதனையால் சாதனையால்
மருவைத்த கிறிஸ்துன்றன் மலரடியில் அடைக்கலமே.

– திரு.வி. கலியாணசுந்தரனார்

நூற்குறிப்பு: இப்பாடல் இயேசு கிறிஸ்துவின் அரிய பண்புகளைப் போற்றுகிறது. 'கிறிஸ்துவின் அருள்வேட்டல்' என்ற நூலில் இப்பாடல் உள்ளது.

ஆசிரியர் குறிப்பு: திரு.வி.க. என்ற சுருக்கம், திருவாரூர் விருத்தாசலம் மகன் கலியாணசுந்தரன் என்பதாகும். இவர் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த துள்ளம் என்னும் சிற்றூரில் 26–8–1883 அன்று பிறந்தார். இவரது பெற்றோர் திரு.விருத்தாசலம், திருமதி சின்னம்மாள் ஆவர். இவர் முதன்முதலில் சென்னையில் தொழிலாளர் சங்கத்தைத் தோற்றுவித்து அதன் தலைவராகவும் பணியாற்றினார்; தமிழில் அழகிய உரைநடை கண்டவர்; மேடைப் பேச்சில் வல்லவர்; தேசபக்தன், நவசக்தி என்னும் இதழ்களின் ஆசிரியராக இருந்தவர். 'பெண்ணின் பெருமை, இந்தியாவும் விடுதலையும், தமிழ்த் தென்றல், வாழ்க்கை வழி, முருகன் அல்லது அழகு, இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், பொதுமை வேட்டல்', போன்ற நாற்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவர் 17–9–1953 அன்று இயற்கை எய்தினார்.

**அருஞ்சொற் பொருள்**

மறுகன்னம் – அடுத்த கன்னம்; கருவி – வாள்; பொருநர் – பகைவர்; நேசி – அன்பு காட்டு.

**தொடர்களைப் பிரித்தறிதல்**

மலரடி – மலர் + அடி; காட்டென்றும் –காட்டு + என்றும்

**இலக்கணக் குறிப்பு**

கடி – உரிச்சொல்; மலரடி – உவமைத்தொகை

பகுபத உறுப்பிலக்கணம்

உண்பர் – உண் + ப் + அர்

உண் – பகுதி; ப் – எதிர்கால இடைநிலை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பொருளுணர் பயிற்சி

அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) திரு.வி.க. எழுதியுள்ள நூல்கள் யாவை?
2) இயேசுவின் உயர் சிறப்பை எழுதுக?

ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) திரு.வி. கலியாணசுந்தரனார் பற்றிக் குறிப்பு எழுதுக.
2) இயேசுவின் போதனையும் சாதனையும் பற்றிக் கூறுக.

## (ஈ) அல்லா

வானவர்க்கும் நின்னுடைய தூதருக்கும்
மறைதெளிந்த மற்றை யோர்க்கும்
ஊனுடைய பல்லுயிர்க்கும் உணர்வரிய
பேரொளியாய் ஓங்கி நின்ற
ஞானமெனும் பரம்பொருளே! அழியாத
பெரும்பேறே! நடுநின் றென்றும்
ஊனமற விளையாடி எவ்விடத்தும்
எந்நாளும் உறையும் கோவே.

–உமறுப் புலவர்

நூற்குறிப்பு : இப்பாடல் சீறாப்புராணம் என்னும் நூலில் உள்ளது. 'சீறத்' என்னும் அரபுச் சொல், தமிழில் 'சீறா' என வந்தது. சீறா என்பது முகமது நபியவர்களின் புகழ்மிக்க வரலாற்றைக் குறிப்பதாகும். அரபு மொழியிலமைந்த நபிநாயகத்தின் வரலாற்றைத் தமிழில் சீறாப்புராணம் சுவைபடக் கூறுகிறது. சீறாப்புராணம் விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜிறத்துக் காண்டம் ஆகிய மூன்று காண்டங்களையும் 92 படலங்களையும், 5027 பாடல்களையும் கொண்டதாகும். காண்டம் என்பது ஒரு காப்பியத்தின் பெரும் பகுதி, படலம் என்பது காண்டத்தின் உட்பிரிவு.

ஆசிரியர் குறிப்பு : இந்நூலின் ஆசிரியர் உமறுப் புலவர். இவர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள நாகலாபுரத்தில் பிறந்தார்; எட்டயபுரத்தில் வாழ்ந்தார்.

தந்தையார் செய்கு முகமது அலியார். இவர் சேகு முதலியார் எனவும் அழைக்கப்படுவார். இவர் எட்டயபுர அரசவைப் புலவராக விளங்கிய கடிகை முத்துப் புலவரிடம் கல்வி கற்றார். இவரை வள்ளல் அபுல்காசிம் மரைக்காயர் என்பவர் ஆதரித்தார். காலம் 17ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற்பொருள்

வானவர் – மேல் உலகத்தார்; மறை – வேதம்; ஊன் – தசை; ஞானம்–அறிவு; நடு – நடுவுநிலை; ஊனம் – குற்றம் ; உறையும் – வாழும்; கோ– இறைவன்

**தொடர்களைப் பிரித்தறிதல்**

ஊனுடைய – ஊன் + உடைய; பல்லுயிர்க்கும் – பல + உயிர்க்கும்; உணர்வரிய – உணர்வு + அரிய; ஞானமெனும் – ஞானம் + எனும்; நின்றென்றும் – நின்று + என்றும்; எவ்விடத்தும் – எ + இடத்தும்; எந்நாளும் – எ + நாளும்.

**இலக்கணக் குறிப்பு**

தெளிந்த– பெயரெச்சம்; ஓங்கி – வினையெச்சம்; அழியாத – எதிர்மறைப் பெயரெச்சம்

**பகுபத உறுப்பிலக்கணம்**

தெளிந்த – தெளி + த்(ந்) + த் + அ
தெளி – பகுதி; த் – சந்தி; ந் ஆனது விகாரம்;
த் – இறந்தகால இடைநிலை; அ – பெயரெச்ச விகுதி.

**பொருளுணர் பயிற்சி**

**அ. பொருளுணர்ந்து பொருத்துக.**

1) திருநாவுக்கரசர் – நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
2) திருமங்கையாழ்வார் – கிறித்துவின் அருள் வேட்டல்
3) திரு.வி.கலியாணசுந்தரனார் – சீறாப்புராணம்
4) உமறுப்புலவர் – தேவாரம்
– பெரிய புராணம்

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) உமறுப்புலவர் பற்றிக் குறிப்பு எழுதுக.
2) அல்லாவின் தன்மைகளாக உமறுப்புலவர் கூறுவன யாவை?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) சீறாப்புராணம் பற்றிக் குறிப்பு எழுதுக.
2) உமறுப்புலவர் இறைவன் இயல்பை எவ்வாறு கூறுகிறார்?

**மொழித்திறன் பயிற்சி**

1. `பகைவர்` என்னும் பொருள் தரும் சொல்லை, ‘கிறித்து`ப் பாடலிலிருந்து எடுத்தெழுக.
2. ‘இறைவன்` என்னும் பொருள் தரும் சொல்லை உமறுப்புலவர் பாடலிலிருந்து எடுத்தெழுதுக.

**3. எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்
மேனியிற்பால் வெண்ணீறும்

**4. உவமையைப் பொருளுடன் பொருத்துக.**

பவளம் போல்

**5. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1) மாநிலம் | – | உவமைத்தொகை |
| 2) பெருநிலம் | – | எதிர்மறைப் பெயரெச்சம் |
| 3) மலரடி | – | பண்புத்தொகை |
| 4) அழியாத | – | உரிச்சொற்றொடர் |

**6. இலக்கணக் குறிப்பு எழுதுக.**

வெண்ணீறு, நீள்விசும்பு, பேரொளி

**7. பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**

எடுத்த, நின்ற

## ஆசிரியப் பெருமக்களே !...

உரைநடைப் பாடங்களைக் கற்பிக்கும்பொழுது, ஒவ்வொரு பாடத்திற்கும் உரிய பாடப்பொருள் குறிக்கோள்களோடு, கீழ்க்காணும் மொழிக் குறிக்கோள்கள் நிறைவேறும் முறையில் கற்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

உரைநடைப் பாடங்களுக்குரிய மொழிக்குறிக்கோள்கள் :

1. பாடப் பகுதியைக் கேட்டு அதன் மையக் கருத்தை அறியச் செய்தல்
2. பாடப் பகுதியைக் கேட்டு அதன் சுருக்கத்தை அறியச் செய்தல்
3. பாடத்தைக் கேட்டுக் குறிப்பெடுக்கும் திறனை வளர்த்தல்
4. சரியான ஒலிப்போடு படிக்கும் திறன் வளர்த்தல்
5. நிறுத்தற்குறிகளை மனத்துட்கொண்டு படிக்கும் திறனை வளர்த்தல்
6. பொருள் உணர்வுக்கேற்பக் குரல் ஏற்றத்தாழ்வுடன் படிக்கும் திறனை வளர்த்தல்
7. பாடப்பகுதியில் வரும் புதிய சொற்களின் பொருள் அறியச் செய்தல்
8. சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல்
9. பாடப்பகுதியில் வரும் அரிய சொற்றொடர்களை அறியச் செய்தல்
10. பாடப்பகுதியில் வரும் மரபுத் தொடர்களை அறியச் செய்தல்
11. பாடப்பகுதியில் வரும் பழமொழிகளை அறியச் செய்தல்
12. பாடப்பகுதியில் வரும் மேற்கோள்களை அறியச் செய்தல்
13. பாடப்பகுதியில் வரும் வாக்கிய வகைகளை அறியச் செய்தல்
14. பாடப்பகுதியில் வரும் பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச் சொற்களை அறியச் செய்தல்
15. பாடத்தொடர்பான நூல்களைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுதல்
16. அருஞ்சொற்களின் பொருளறிய அகரமுதலியைப் பார்க்கும் பழக்கத்தைத் தூண்டுதல்.

# உரைநடை

## 1. தமிழ் மறுமலர்ச்சி

( முனைவர் சி. இலக்குவனார் )

தமிழ் என்று தோன்றியது என்று காலவரையறை செய்யமுடியாது. அஃது இனிய இலக்கியங்களையும் பண்பட்ட இலக்கணத்தையும் பெற்றிருப்பதனால் மட்டும் சிறப்புடையது அன்று. மொழி என்ற அளவிலும். அதனின் இனிமைப் பண்பாலும், எளிமை அமைப்பாலும் கற்போர் உள்ளத்தைக் கவரக் கூடியது. தீந்தமிழ் என்றும், இன்பத் தமிழ் என்றும் சொல்லுவதற்கேற்ப அமைந்துள்ளமையை எவரும் அறிவர். அதன் வடிவ அமைப்பே உயிருக்கு இன்பம் அளிக்கக் கூடியதாகும். அதனுடைய சொற்களின் சொற்பொருள் சிறப்பும் தமிழருக்குரிய உயர் இயல்புகளுள் முதன்மை பெற்றனவாகும்.

ஆரியம் இந்நாட்டுக்கு வருவதன் முன்னர்த் தமிழ் பரத கண்டம் முழுவதும் பரவியிருந்தது. ஆரியம் வந்த பின்னர் வழங்கும் பரப்பளவு சுருங்கிக் கொண்டே வந்து தொல்காப்பியர் காலத்தில் வடவேங்கடம் தென்குமரியாயிடை மட்டும் வழங்கியது.

இவ்வாறு சுருங்கிய எல்லைக்குள் எல்லாத் துறையிலும் மக்களுக்குப் பயன்படு கருவியாக அமைந்துள்ள நிலையையும் இழந்துள்ளது. சமயம், இசை, ஆட்சித் துறைகளில் பிறமொழிகளின் ஆதிக்கத்தால் வீட்டளவிலும் நற்றமிழ் ஆட்சி பெற்றிராது கலப்புத் தமிழாக, உருக்குலைந்த தமிழாக நின்றுவிட்டது.

ஆயினும் தூய தமிழ்ப் பற்று உண்மைத் தமிழ்ப் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்துவிடவில்லை. நற்றமிழர்களும் அதனைப் போற்றினர். ஆங்கிலம் கற்ற தமிழர்களும் தூய தமிழே நற்றமிழாகும் என்ற கருத்தை ஏற்றனர். சாமி. வேதாசலம் எனும் மும்மொழிப் புலவர் தம் பெயரை மறைமலை அடிகள் என மாற்றினார். சூரிய நாராயண சாஸ்திரியார் பரிதிமாற் கலைஞர் ஆனார்.

"இழந்த தமிழை மீட்போம்" என்று உறுதி பூண்டு கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ் நலம் காக்கும் பணியில் தலைப்பட்டது. "தமிழ்ப் பொழில்" எனும் திங்களிதழை வெளியிட்டது. ஆண்டுதோறும் ஆண்டு விழாக்கள் நடத்திப் புலவர் பெருமக்களைக் கொண்டு தூய தமிழ்ச் சொற்பொழிவுகளை நிகழ்த்தச் செய்தது. செந்தமிழ்ச் செல்வி போன்ற இதழ்களும் வெளிவரத் தொடங்கின. தமிழ்ப் புலமைப் பட்டம் பெற்று வெளிப்போந்த இளைஞர்கள் தூய தமிழ்ப் பற்றை நன்கு வளர்த்தனர்.

கல்வி மொழி தமிழ் நாட்டில் தமிழாகவே இருக்க வேண்டுமென்ற விதி ஏற்பட்டது. உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் கல்விமொழி தமிழ்தான் என்ற நிலைக்குரிய சட்டம் பிறப்பித்தார் அன்று கல்வியமைச்சராயிருந்த அவினாசிலிங்கனார்.

"இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று புதுமைப் பாவலர்கள் முழக்கம் செய்தனர். எங்கு நோக்கினும் இன்பத் தமிழ்; செந்தமிழ்; இதழ்களில் செந்தமிழ்; மேடைப் பேச்சுக்களில் நற்றமிழ்; மாநாடுகளில் வண்டமிழ்; நற்றமிழ் பேசுதலே நற்புலமைக்கு அடையாளம் என்ற எண்ணம் உருப்பெற்று விட்டது. 'நமஸ்காரம்' போய் 'வணக்கம்' வந்தது. 'சந்தோஷம்' மறைந்து 'மகிழ்ச்சி' தோன்றியது. 'விவாஹம்' விலகித் 'திருமணம்' இடம்பெற்றது. 'வருஷம்' கழிந்து 'ஆண்டு' நிலைபெற்றது. இவ்வாறு தமிழ் மீண்டும் மலரத் தொடங்கியது.

மேனாட்டில் பதினைந்தாம் நூற்றாண்டில் தோன்றியது புதுமலர்ச்சி. தமிழகத்தில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றியிருப்பது மறுமலர்ச்சியாகும். தமிழ் எனும் நறுமணப் பெருங்கொடி கி.பி.மூன்றாம் நூற்றாண்டுக்கு முன் நாள்தோறும் நன்மலர்களைப் பூத்துக் கொண்டிருந்தது. பின்னர், பல்வேறு சூழ்நிலையில் பூக்கும் தன்மை இழந்து பூவாத கொடியாகக் கருதப்படும் நிலையை எய்தியது. இப்பொழுது மீண்டும் பூக்கத்தொடங்கியுள்ளது. மலர்கள் மணங்கமழத் தொடங்கியுள்ளன. மறுமலர்ச்சியைப் பெற்றுள்ளது தமிழ் எனும் பழங்கொடி. தமிழ் மறுமலர்ச்சி என்பது முற்றிலும் பொருந்தும்.

இந்த மறுமலர்ச்சிக்கு உறுதுணையாய் இருப்பது 'தமிழ்நாட்டில் எல்லாம் தமிழில்' என்ற கொள்கையே இவ்வாறு நினைப்பது எவர்க்கும் தவறன்று. இஃது ஒரு புதுமையும் அன்று).

ஆங்கிலம் இன்று உலகப் பொதுமொழியாகக் கருதப்படும் நிலையை அடைந்துள்ளது. ஆங்கிலேயரை இந்நாட்டினின்றும் விரட்டியவர்கள்கூட

ஆங்கிலத்தை விடமாட்டோம் என்று உறுதி பூண்டுள்ளனர். இந்தியர்க்கு ஆங்கிலமே கண்ணும் காதும் என்று கருதுகின்றனர் பலர். உலக மக்களுள் பத்தில் ஒரு பகுதியினர் ஆங்கிலத்துக்கு உரியவராய் இருக்கின்றனர்.

இத்தகைய உயர்நிலையை அடைந்துள்ள ஆங்கிலம் ஒரு காலத்தில் அதன் நாட்டிலேயே இகழப்பட்டது. இலத்தீன் மொழியும், பிரஞ்சு மொழியும் ஆங்கிலத்தின் இடத்தில் அமர்ந்து அரசு ஓச்சின. பின்னர் ஆங்கிலேயரிடத்தில் தோன்றிய மொழிப்பற்று வேற்று மொழிகளை அகற்றி ஆங்கிலத்துக்கு உரிய இடத்தை அளித்தது.

இலத்தீன் மொழி அரசோச்சிய போது அதனை விரும்பாத கல்விக்கூடத் தலைமையாசிரியர் ஒருவர் தமது மொழிப்பற்றைப் பின்வருமாறு வெளிப்படுத்தினார்: "கல்வியின் பொருட்டு ஒரு மொழிக்கு அடிமையாவது அடிமைத் தன்மைகளுள் பெரியதேயாகும். பிற மொழிகளைக் கற்பதனால் மிகுந்த நேரத்தை இழக்கின்றோம். பிற மொழியால் பெறும் அதே செல்வத்தை நம் மொழியில் குறைந்த காலத்தில் பெறலாம். நம்முடைய மொழி நம் உரிமையையும் விடுதலையையும் வெளிப்படுத்துகின்றது. இலத்தீன் மொழி நம்முடைய அடிமைத்தன்மையையும் இழிவையும் நினைவூட்டுகின்றது. உரோம் நகரை விரும்புகின்றேன். ஆனால் இலண்டன் மாநகரை அதனினும் மிகுதியாக விரும்புகின்றேன். இத்தாலியைப் போற்றுகின்றேன். ஆனால் ஆங்கிலத்தை நான் தொழுகின்றேன்". 'ஆங்கிலத்தைத் தொழுகின்றேன்' என்று கூறியுள்ளது நோக்கத்தக்கது. தமிழை வணங்குகின்றோம் என்றால் நகையாடும் நண்பர்கள் நல்லறிவு பெறட்டும். அரிய கலைகளை ஆங்கிலத்தின் வழியாகத்தான் கற்றல் வேண்டும் என்போர் அத்தலைமை ஆசிரியர் உரையை உளங்கொண்டு திருந்துவார்களாக.

இங்கு இன்று, தமிழ் வளர்ச்சி பற்றியும், பிற சொற்கலப்பினால் வரும் நன்மை பற்றியும் உரைப்போர் பலர்க்க ஆங்கில மொழி வரலாறும், தமிழ் மொழி வரலாறும் தெரியாது. தெரிந்திருந்தால் பிறமொழிக் கலப்பால்தான் மொழி வளரும்; அஃதே உண்மை மறுமலர்ச்சி என்று உரையார். மொழி சிறப்புற மொழிக்குரியோர் சிறப்புற வேண்டும். முந்நூறு ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலம் உலகப் பொதுமொழியாகும் என்று ஆங்கிலேயரே எண்ணியிலர். ஆனால், ஆங்கிலம் இன்று இந்நிலையை அடைந்துள்ளது. அந்நிலையை அம்மொழி அடைந்தது ஆங்கிலேயரால்தான். அவர்கள் ஆட்சித்துறையிலும், அறிவியல் துறையிலும், திரைகடல் தாண்டி வாணிபம் செய்தலிலும், நாட்டுப்பற்று, உரிமைப்பற்று, மொழிப்பற்று முதலியவற்றிலும்

சிறந்து விளங்கியமையால்தான் ஆங்கிலம் சிறப்படைய இயன்றது. ஆதலின், தமிழர்களும் பல வகைகளிலும் சிறந்தால்தான் தமிழ் மொழி சிறப்படைய இயலும். தமிழர்கள் தாம் சிறப்படைய முயல்வதோடு தம்மொழி பற்றியும் அறிந்துகொள்ள முயலுதல் வேண்டும்.

மக்களுக்கும், மாக்களுக்கும் உள்ள வேறுபாடுகளுள் ஒன்று பழமையைப் பற்றி அறிவதேயாகும். மக்களால் அறிய இயலும், மாக்களால் அறிய இயலாது. தமக்குப் பயன்படுகின்றவற்றுள் முதன்மையானது மொழி. பொருளியல், நாட்டு வரலாறு, அறிவியல் முன்னேற்றம், அரசியல் முதலியன பற்றி அறியவேண்டியது இன்றியமையாதது என்று கருதுகின்றமை போன்று தம் மொழிமியியல்பு, தோற்றம், வளர்ச்சி பற்றியும் தவறாது அறிய வேண்டும் என்ற எண்ணம் தமிழருக்கு உண்டாதல் வேண்டும். தம் எண்ணத்தையும், உணர்ச்சியையும் வெளிப்படுத்துவதற்குத் துணையாய் இருப்பது மொழிதானே? தம்முடைய தொழிலையும், அரசினையும் நடத்துவதற்குக் கருவியாய் இருப்பதும் மொழிதானே? தாம் இன்னார் என்று அறிவிப்பதற்கும், பிறர் இன்னார் என்று அறிவதற்கும் இன்றியமையாது வேண்டப்படுவது மொழிதானே? ஆதலின் அம்மொழி பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் தவிர்க்க முடியாதது என்ற எண்ணம் உண்டாக வேண்டும்.

கல்வித் திட்டமும் அவ்வாறு தம் மொழிபற்றி அறிவதற்குரிய வாய்ப்பினை நல்க வேண்டும்.

தமிழ் மொழி இனிமையானது; தொன்மையானது; வளமானது; கற்பதற்கு எளிமையானது என்பனவெல்லாம் தமிழர்களேயறியார். தமிழ் இந்திய மொழிகளின் தாய்; ஏன் உலக மொழிகளின் தாய் என்ற உண்மையைத் தமிழர்களே அறிந்திலர். தமிழ் நாட்டளவிலும் எல்லாத் துறைகளிலும் பயன்படு கருவியாய் அஃது அமைந்திலது. அமைவதற்குரிய முயற்சியில் தமிழர்கள் 1ஈடுபடல் வேண்டும். தமிழ் மீண்டும் மலர்ச்சி பெறுவதற்குரிய வழி இதுதான்.

கல்வி மொழியாகவும், கடவுள் வழிபாட்டு மொழியாகவும், அரசாள் மொழியாகவும், அறிவியல் மொழியாகவும் தமிழ் ஆகும் நாளே அது மீண்டும் மலர்ச்சி பெற்ற நாளாகும்.

தமிழின் எதிர்காலம் என்ன? சமயத் துறையில் வடமொழிக்கும், அரசியல் துறையில் இந்திக்கும், உலகியல் துறையில் ஆங்கிலத்துக்கும் இடம் அளித்து விட்டதால், வீட்டளவில் பல வேற்றுமொழிச் சொற்களின்

கலப்பால் ஆகிய கலவை மொழிதான் இடம் பெறும். அவ்வாறாயின் "தமிழ் மெல்ல இனிச் சாகும்" என்றுதான் கொள்ள வேண்டும். தமிழர் இருக்கத் தமிழ் மறைந்தது என்றால் அதனினும் நாணத்தக்க இழிவு வேறொன்றும் இன்று. தமிழர் உயர்தல் வேண்டும்; தமிழருடன் தமிழ் மொழியும் உயர்தல் வேண்டும். உலக நாடுகளின் மன்றத்தில் தமிழர் இடம் பெற்றால் தமிழும் அங்கு இடம் பெறல் வேண்டும். ஆனால், தமிழர்களுள் சிலர் தாம் உயர முயல்கின்றனர், தமிழ் உயர விரும்பிலர். அது தம் உயர்வுக்குத் தடையெனக் கருதுகின்றனர். வெளிநாட்டுப் பெருந்தலைவர்கள் எல்லாரும் எங்குச் சென்றாலும் தம் மொழியிலேயே பேசுகின்றனர். ஆனால், தமிழர்களோ தம் நாட்டிலேயே தமிழில் பேசுவதற்குக் கூச்சப்படுகின்றனர். தமிழில் பேசுவதற்கு நாணுறும் தமிழன் தமிழனாகப் பிறந்ததற்கும் நாண வேண்டியவனே. "வையம் அளந்த தமிழ், வானம் அளந்த தமிழ்" என்று கூறிக்கொண்டு தம் வயிற்றை அளந்து கொண்டிருந்தால் தமிழ் வளர்ந்து மறுமலர்ச்சி பெற்று விடாது.

எத்துறையில் உள்ளவர்களும் தம் கருத்து அறிவிக்கும் கருவி தமிழே என்று கொள்ளல் வேண்டும். "தமிழில் முடியாதது, தமிழால் முடியாதது யாதும் இன்று" என்று துணிவு பிறத்தல் வேண்டும். உரையாடும்போதும், எழுதும்போதும் திருத்தமாக இனிய தமிழைப் பயன்படுத்துவோம் என உறுதி கொள்ளல் வேண்டும். நம் நாட்கடன்களுள் ஒன்றாகத் தமிழ் இலக்கியங்களுள் ஒன்றைப் பயிலும் வழக்கத்தைக் கொள்ளுதல் வேண்டும். வேளை தவறாது உண்ணுதலில் கருத்துச் செலுத்துதல் போன்று நாள் தவறாது தமிழ் நூல் கற்றலிலும் நாட்டம் கொள்ளுதல் வேண்டும். தமிழராகப் பிறந்தவர்கள் தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் பயிலாது சாதல் கூடாது. இரண்டும் தமிழரின் இரு கண்களாகும். இரண்டையும் பயிலாதவர்கள் இரு கண்களும் அற்றவர்களே.

தொல்காப்பியத்தைக் கற்கும் பேறு பெறாது போயினும் திருக்குறளையாவது நாள்தோறும் பயில வேண்டும். ஒரு நாளைக்கு ஒரு குறள் வீதம் கற்று அதனை உள்ளத்தில் கொண்டு ஒழுகினாலே தமிழும் மலர்ச்சி பெறும்; தமிழர் வாழ்வும் மலர்ச்சி பெறும்.

ஆசிரியர் குறிப்பு

டாக்டர் சி. இலக்குவனார் தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகில் உள்ள வாய்மேடு என்னும் சிற்றூரில் பிறந்தவர். திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டம் பெற்ற அவர் உயர்நிலைப் பள்ளியாசிரியராகப் பணியைத்

தொடங்கினார். பின்பு எம்.ஓ.எல்., எம்.ஏ. ஆகிய பட்டங்களைப் பெற்று பல்வேறு கல்லூரிகளில் பணியாற்றியுள்ளார். இவருடைய தொல்காப்பிய ஆங்கில மொழி பெயர்ப்பு அறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டது. பழந்தமிழ், இலக்கியம் கூறும் தமிழர் வாழ்வியல் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

**அருஞ்சொற்பொருள்**

ஆரியம் – வடமொழி; திங்கள் – மாதம்; உறுதுணை – பெருந்துணை; திரை – அலை; மாக்கள் – விலங்குகள்; வையம் – உலகம்; நாட்டம் – விருப்பம்.

**பொருளுணர் பயிற்சி**

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) தமிழ்மொழி இந்திய மொழிகளின் ______________
2) உயர்நிலைப் பள்ளிக்கூடங்களில் கல்விமொழி தமிழ்தான் என்று சட்டம் பிறப்பித்தவர் ______________
3) வெளிநாட்டுப் பெருந்தலைவர்கள் எல்லாரும் எங்குச் சென்றாலும் ______________பேசுகின்றனர்.
4) உலக மக்களுள் ______________ ஒரு பகுதியினர் 0ஆங்கிலத்துக்கு உரியவராய் இருக்கின்றனர்.

**ஆ. பொருத்துக**

| | | | |
|---|---|---|---|
| 1) | சாமி வேதாசலம் | – | மகிழ்ச்சி |
| 2) | சூரியநாராயண சாஸ்திரி | – | திருமணம் |
| 3) | விவாஹம் | – | மறைமலை அடிகள் |
| 4) | சந்தோஷம் | – | பரிதிமாற்கலைஞர் |

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தமிழ் மொழியின் சிறப்பினைக் கூறுக.
2) தமிழருக்குரிய உயர் இயல்புகளுள் முதன்மையானவை எவை?
3) தூய தமிழ்ப் பற்று மறையவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
4) மக்களுக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாடு யாது?
5) தமிழ் மீண்டும் மலர்ச்சி பெற்ற நாள் எந்த நாள்?
6) தமிழரின் இரண்டு கண்களாகக் கருதப்படும் நூல்கள் எவை?
7) தமிழர் நாள்தோறும் எந்த நூலைப் பயில வேண்டும்?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தமிழ் எல்லையளவிலும் மொழியளவிலும் அடைந்த நிலையைக் கூறுக.

2) தமிழ் மறுமலர்ச்சி என்பது முற்றிலும் பொருந்தும்– விளக்குக.

3) ஆங்கிலத்தின் இருவேறுபட்ட நிலைபற்றி எழுதுக.

4) மொழி சிறப்புற மொழிக்குரியோர் சிறப்புற வேண்டும் என்பதனை இலக்குவனார் எவ்வாறு நிறுவுகிறார்?

5) மொழியின் இன்றியமையாமையை விளக்குக.

**உ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தமிழ் மீண்டும் மலர மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பற்றி விவரித்து எழுதுக.

2) ஆங்கில நாட்டுத் தலைமையாசிரியரின் மொழிப்பற்றினை எவ்வாறு அறியலாம்?

3) தமிழும், தமிழர் வாழ்வும் மலர்ச்சி பெற இலக்குவனார் கூறியவற்றைத் தொகுத்து வரைக.

மொழிதிறன் பயிற்சி

1. சந்திப் பிழையின்றி எழுதுக.

அ) தூய தமிழ் பற்று உண்மை தமிழ் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்து விடவில்லை.

ஆ) நம் நாட்கடன்களுள் ஒன்றாக தமிழ் இலக்கியங்களுள் ஒன்றை பயிலும் வழக்கத்தை கொள்ளுதல் வேண்டும்.

**2. கீழ்க்காணும் தொடரில் உள்ள பிழையை நீக்கி எழுதுக.**

கல்விமொழி தமிழகத்தில் தமிழாகவே இருக்க வேண்டுமென்ற விதி ஏற்பட்டன.

**3. வாக்கிய வகை சுட்டுக.**

கல்வி மொழியாகவும், கடவுள் வழிபாட்டு மொழியாகவும், அரசாள் மொழியாகவும், அறிவியல் மொழியாகவும், தமிழ் ஆகும் நாள் எந்நாளோ.

**4. கீழ்க்காணும் விடை அமையுமாறு வினா அமைக்க.**

தமிழ் மொழி இனிமையானது, தொன்மையானது, வளமானது, கற்பதற்கு எளிமையானது என்பனவெல்லாம் தமிழர்களேயறியார்.

**5. நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.**

1) பிறமொழிக் கலப்பால்தான் மொழி வளரும் அஃதே உண்மை மறுமலர்ச்சி என்று உரையார்

2) தமிழில் முடியாதது தமிழால் முடியாதது யாதும் இன்று என்று துணிவு பிறத்தல் வேண்டும்

**6. கீழ்க்காணும் சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்தி ஏற்ற பொருள் எழுதுக.**

வரையறை, மலர்ச்சி, இன்னார், வேளை.

# 2. பிறந்த நாள் கடிதம்

பண்டித ஜவஹர்லால் நேரு

( தமிழாக்கம்: திரு. ஒ. வி. அளகேசன் )

சென்ட்ரல் ஜெயில்
நைனி, அக்டோபர் 26, 1930.

உன்னுடைய பிறந்த நாளன்று உனக்குப் பரிசுகளும் நல்வாழ்த்துகளும் கிடைப்பது வழக்கம். உனக்கு வேண்டிய மட்டும் நல் ஆசி கூறுகிறேன். ஆனால் நைனி சிறையிலிருந்து உனக்கு நான் என்ன பரிசு அனுப்ப முடியம்? என்னுடைய பரிசுகள் இம்மண்ணுலகத்தைச் சேர்ந்தவையாக இருக்க முடியாது. வானத்துத் தேவதை உனக்கு வழங்கக்கூடியதைப் போன்று காற்றாலும், மனத்தாலும், உயிராலும் ஆன பொருளையே உனக்கு நான் அனுப்பக்கூடும். சிறையின் உயர்ந்த புற மதில் சுவரும் அதைத் தடுக்க முடியாது.

என் அன்பே, பிறருக்கு உபதேசம் பண்ணுவது எனக்கு எவ்வளவு பிடிக்காத விஷயம் என்பது உனக்குத் தெரியும். நான் உபதேசம் பண்ண ஆரம்பிக்கும் போதெல்லாம் எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருவதுண்டு. நீயே ஒரு காலத்தில் அக்கதை காணப்படும் நூலை வாசிக்கக்கூடும். ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு சீன தேசத்திலிருந்து யுவான் சுவாங் என்னும் பெரியாா அறிவுச் செல்வத்தையும் கலைச் செல்வத்தையும் நாடி இந்தியாவுக்கு வந்தார். ஆறுகளையும் மலைகளையும் பாலைநிலங்களையும் கடந்து, அபாயத்தை மதியாமல் தடைகள் பலவற்றையும் எதிர்த்து வென்று அவர் இங்கு வந்து சேர்ந்தார். அறிவை வளர்த்துக்கொள்வதிலே அவருக்கு அத்துணை ஆவல். இப்பொழுது பாட்னா என்று வழங்கும் பாடலிபுத்திர நகருக்கருகிலிருந்த நாளந்தா பல்கலைக்கழகத்தில் அவர் நெடுநாள் தங்கித் தாமும் கற்றுப் பிறர்க்கும் கற்பித்துக் கொண்டிருந்தார். யுவான் சுவாங் அவர்களின் கல்வி மேம்பாட்டை உணர்ந்த மேலோர் அவருக்கு பௌத்த மதாசாரியார் என்னும் பட்டத்தை வழங்கினார்கள். யுவான் சுவாங் இந்தியா முழுமையும் சுற்றிவந்தார். மிகப் பழைய அந்நாளிலே இப்பெரிய நாட்டில் வாழ்ந்த மக்களையும் அவர்தம் பழக்க வழக்கங்களையும் நேரில் பார்த்துத் தெரிந்து

கொண்டார். பிறகு அவர் தமது அனுபவங்களையெல்லாம் திரட்டி ஒரு நூல எழுதினார். அந்த நூலில்தான் நான் மேற்சொன்ன கதை வருகிறது. அது வருமாறு:

தென் இந்தியாவிலிருந்து கர்ண சுவர்ணம் என்னும் பட்டணத்திற்கு ஒருவன் வந்தான். பீகாரில் பகல்பூர் எனறு இப்போது வழங்கும் இடத்திற்கருகில் அப்பட்டணம் இருந்திருக்க வேண்டும். அவன் அரையில் செப்புத் தகடுகளைக் கட்டிக்கொண்டும் தலையின்மீது ஒரு தீப்பந்தத்தை வைத்துக் கொண்டும் கையில் ஒரு கோலைத் தாங்கிப் பெருமிதத்துடன் எங்கும் திரிந்து வந்தானாம். அவனது விசித்திரமான கோலத்தைக் கண்ட ஒருவர் அதன் காரணத்தை வினவியபோது அவன் ''என்னுடைய கல்வி ஞானத்துக்கு அளவே இல்லை. செப்புத் தகடுகளைக் கட்டிக்கொள்ளாவிட்டால் ஞான மிகுதியால் என் வயிறு வெடித்தே போய்விடும். அறியாமை இருட்டிலே கிடந்து உழலும் மாக்களின்மீது பிறந்த இரக்கத்தாலே என் தலையில் ஒளியைத் தூக்கிச் செல்கிறேன்'' என்று விடை பகர்ந்தானாம்.

நிற்க, அறிவு மிகுதியால் வயிறு வெடித்துவிடும் என்கின்ற பயம் எனக்கு இல்லை. ஆகவே நான் செப்புத் தகடுகளைக் கட்டிக்கொள்ள வேண்டுவதில்லை. மேலும் எனக்குள்ள அறிவும் என் வயிற்றினிடத்தே இல்லை என்று நான் நம்புகின்றேன். அறிவு என் உடம்பில் எங்கு இருந்தாலும் அது மேலும் மேலும் பெருகுவதற்கு நிறைய இடம் இருக்கிறது. அறிவு நிரம்பி விட்டது, இனி இடமில்லை என்கின்ற நிலைமை எந்நாளும் ஏற்படாது. இவ்வாறு நானே அறிவிற் குறைந்தவனாயிருக்கும்போது பிறருக்கு உபதேசிக்கக்கூடிய முற்றும் நிறைந்த ஞானியாக நான் நடிப்பது எங்ஙனம்? நியாயம் இன்னது, அநியாயம் இன்னது; செய்யத்தக்கது இது, தகாதது இது என்று அறிவதற்கு சிறந்த வழி பிறருக்கு நீண்ட பிரசங்கம் நிகழ்த்துவதல்ல என்று நான் எண்ணுகிறேன். பிறருடன் கலந்து பேசி விவாதிக்க வேண்டும். அப்படிச் செய்வதால் சிறிது உண்மை புலப்படும். உன்னுடன் பேசுவதில் எனக்கு எப்போதுமே விருப்பம் உண்டு. நாம் பலவற்றைப்பற்றிக் கலந்து பேசியிருக்கின்றோம். ஆனால் இவ்வுலகமோ பெரிது; இவ்வுலகத்துக்கு அப்பால் வியக்கத்தக்க வேறு பல உலகுகளும் இருக்கின்றன. ஆகவே யுவான் சுவாங் கதையில் வரும் அந்தக் கருவங்கொண்ட மூட மனிதனைப் போல கற்க வேண்டியதையெல்லாம் கற்று நிரம்பி விட்டோம் என்றிராமல் 'கற்றது கைம் மண்ணளவு கல்லாத துலகளவு' என்பதை உணர்ந்து மேலும் மேலும் கற்றலே அறிவுடமையாகும். எல்லாம் கற்றுத் தெளிந்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் இருந்தால்

அவர்கள்கூட இன்னும் கற்பதற்கு ஒன்றும் இல்லையே என்று சில சமயங்களில் ஏக்கம் அடைவார்கள். அறிவினால் புதிது புதிதாகக் கண்டுபிடிக்கும் இன்பத்தை அத்தகையவர்கள் இழக்க நேரிடுமன்றோ! நம்மில் விரும்புவோர் அவ்வின்பத்தை அடையலாம்.

ஆகவே நான் ‘உபதேசம்’ செய்வது கூடாது. ஆனால் நான் என் செய்வது? கடிதம் எழுதுவது நான் ஒருவனே செய்யும் காரியம். ஆதலால் அது நாம் இருவரும் பேசுவதுபோல் ஆகாது. ஆகவே நான் எழுதுவதில் ஏதேனும் உனக்குச் சிறந்த புத்திமதி கூறுவதைப் போலத் தோன்றினால் அதைக் கசப்பு மருந்து உட்கொள்ளுவதைப் போல் எடுத்துக்கொள்ளாதே. நாம் உரையாடிக் கொண்டிருக்கும்போது கூறப்படும் ஒரு குறிப்பு போன்று அதை எடுத்துக்கொண்டு நன்கு ஆராய்ந்து பார்ப்பாயாக.

தேச சரித்திரங்களில் நாம் பெருமையும் சிறப்பும் உடைய காலப் பகுதிகளைப் பற்றி வாசிக்கிறோம். பெரியவர்கள் தோன்றுகிறார்கள்; அவர்கள் செயற்கரிய செயல்கள் செயகின்றார்கள். நமது கனவிலும் கற்பனையிலும் அப்பண்டைக்காலத்துப் புருஷர்களும் ஸ்திரீகளும் வாழ்ந்த காலங்களில் நாமும் வாழ்வது போலவும் அவர்களைப் போலவே நாமும் செயற்கருஞ் செயல்கள் புரிவதுபோலவும் எண்ணிச் சில சமயங்களில் இன்புறுகின்றோம். ஆர்க் ஜோன் என்பவளின் கதையை நீ முதன் முதலில் வாசித்தபோது அதிலே மிகவும் ஈடுபட்டு அவளைப் போல் நீயும் ஆகவேண்டுமென்று நினைத்தது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? சாமானிய மக்களிடையே உயரிய குணங்கள் சாதாரணமாகக் காணப்படுவதில்லை. அவர்களுக்கு உண்ணும் உணவைப் பற்றியும் வீடு, வாசல், குழந்தைகளைப் பற்றியும் நினைப்பதற்கே பொழுது சரியாய்ப் போய்விடுகிறது. ஆனால் அதற்குரிய காலம் பிறக்கும்போது ஒரு மக்கள் சமுதாயம் முழுவதுமே ஒரு பெரிய லட்சியத்தில் ஆர்வம் கொண்டு ஆவேசம் நிறைந்து நிற்கிறது. அப்பொழுது சாதாரண மனிதர்களும் பெரிய வீரர்கள் ஆகிறார்கள். சரித்திரம் கிளர்ச்சி நிறைந்ததாகவும் முக்கியம் வாய்ந்ததாகவும் மாறுகிறது. பெரிய தலைவர்களின் மந்திர சக்தியினால் மக்கட் சமுதாயம் முழுவதும் உறக்கத்தினின்று விழித்தெழுந்து தீவிரச் செயல்கள் புரிகிறது.

நீ பிறந்த 1917ஆம் ஆண்டு சரித்திரத்தில் நினைவு கூர்தற்குரிய ஆண்டுகளில் ஒன்றாகும். அவ்வருஷம் நீ பிறந்த மாதத்திலேயே ருஷியா தேசத்தில் துன்பத்தில் வாடும் ஏழை எளியவர்களுக்காக அன்பினால் உள்ளம் கரைந்துருகும் லெனின் என்னும் பெரியார் தலைமையின்கீழ் அத்தேசத்து மக்கள், சரித்திரத்திலேயே இதற்குமுன் கண்டும் கேட்டுமிராத அற்புதம் ஒன்றைச் செய்து முடித்தார்கள். லெனின் ஆரம்பித்த பெரிய

புரட்சியானது ருஷியாவையும் சைபீரியாவையும் அடியோடு மாற்றி விட்டது. இன்று நம் நாட்டில் மற்றொரு பெரியார், துன்பத்தில் உழலுவோர்க்கெல்லாம் இரங்கி அவர்கள் துன்பத்தைத் துடைக்க விரையும் அன்பு வடிவமான உத்தமர். அவருடைய ஆத்ம சக்தியால் தூண்டப்பட்டு நம் நாட்டு மக்கள் சுதந்திரமடையவும், ஏழைகள் வறுமை முதலான கொடுமைகளினின்றும் நீங்கிப் பிழைக்கவும் பெரும் பெரும் காரியங்களையும் தியாகங்களையும் செய்து வருகிறார்கள்.

பாபுஜி இன்று சிறையில் கிடக்கிறார். ஆனால் அவருடைய செய்தியோ மாய மந்திரம் போன்று கோடிக்கணக்கான இந்திய மக்களின் இதயத்தே புகுந்து நிற்கிறது. ஆண்களும் பெண்களும் குழந்தைகளும்கூட தங்கள் சிறிய கூட்டை உதறித் தள்ளிவிட்டு இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் நிற்கிறார்கள். இந்தியாவில் இன்று நாம் சரித்திரத்தையே சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறோம். நமது கண் முன்பாக இவை நடக்க நாம் பார்ப்பதாலும், இந்தப் பெரிய நாடகத்தில் நாமும் சிறிது பங்கு எடுத்துக்கொள்வதாலும் நீயும் நானும் பாக்கியசாலிகள்.

இந்தப் பெரிய இயக்கத்தில் நாம் எவ்வாறு நடந்துகொள்வது? நமது பங்குக்கு என்ன வரும் என்று நான் சொல்ல முடியாது. அது என்னவாயினும் நாம் எடுத்திருக்கும் பெருங்காரியத்துக்கு இழுக்குத் தருவதையோ, நமது மக்களின் மானத்துக்குக் கேடு விளைக்கக்கூடியதையோ நாம் செய்யக் கூடாது. இந்தியாவின் போர் வீரர்களாகிய நம்மிடத்தில் நமது நாட்டின் தூய்மையான மானம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. நாம் செய்யவேண்டுவதைப் பற்றி அடிக்கடி நம்முள் ஐயம் எழலாம். இது சரி, இது சரியல்ல என்று தேர்வது எளிதல்ல. உனக்கு ஐயம் எழும்போதெல்லாம் அதைத் தீர்த்துக் கொள்ள ஒரு சிறு வழி சொல்லித் தருகிறேன். இரகசியமாக எதையும் செய்யாதே; பிறரிடமிருந்து நீ ஒளிக்க விரும்புவதை ஒருபோதும் செய்யாதே.

நீ எதையாவது ஒளிக்க விரும்புவதன் அர்த்தம் உனக்குள் பயம் இருக்கிறது என்பதாகும். அச்சம் தீயது, தகாதது. எதற்கும் அஞ்சாதே. மற்றவையெல்லாம் தானே வந்து சேரும். அச்சம் ஒழிந்தால் வெட்கப்படத்தக்க காரியம் எதையும் நீ செய்யமாட்டாய். பாபுஜி தலைமையின்கீழ் நடந்துவரும் சுதந்திர இயக்கத்தில் ஒளிப்பதற்கும் மறைப்பதற்கும் ஒன்றுமில்லை என்று உனக்குத் தெரியும். நாம் சொல்வதை அஞ்சாமல் சொல்கிறோம். செய்வதையும் அஞ்சாமல் செய்கிறோம். வெளிப்படையாக வேலை செய்து வருகிறோம். அதேபோல நமது சொந்த வாழ்க்கையிலும் யாதொரு ஒளிவு மறைவுமின்றிச் செயல்புரிய நாம் பயிலவேண்டும். நாம தனிமையில் செய்ய வேண்டிய கடன்கள் பல இருக்கின்றன. அவற்றை நாம் பிறர் கண்ணுக்குப் படாமல் செய்யத்தான்

வேண்டும். அது வேறு, இரகசியமாகக் காரியங்கள் செய்வது வேறு. குழந்தாய், நீ இம்முறையில் பழகி வந்தால் ஒளியும் அமைதியும் பெற்று விளங்குவாய்; யாது நேரினும் கலங்காத உள்ளம் பெறுவாய்.

நீண்டதொரு கடிதம் எழுதிவிட்டேன். ஆயினும் உனக்கு நான் சொல்ல விரும்புவது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. ஒரு கடிதத்தில் எல்லாவற்றையும் எப்படிச் சொல்ல முடியும்?

நம் நாட்டில் நடைபெறும் இச் சுதந்திரப் போராட்டத்தை நீ உன் கண்ணெதிரிலேயே பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறாய் என்று முன்பே சொன்னேன். இன்னொரு விதத்திலும் நீ அதிர்ஷ்டசாலி. உனது தாய் வீரமும் அன்பும் உடையவள். அவள் உன் ஐயத்தையெல்லாம் தெளிவிப்பாள், அச்சத்தை யெல்லாம் போக்குவிப்பாள்.

அன்பே, விடைபெற்றுக்கொள்ளுகிறேன். இந்திய நாட்டுக்குத் தொண்டுபுரியும் வீர மாதாக நீ வளர்ந்து விளங்கவேண்டும். கொள்ளை கொள்ளையாக என் அன்பும் ஆசியும்.

### ஆசிரியர் குறிப்பு

'உலக சரித்திரம்' என்ற உலகப் புகழ் பெற்ற நூலின் ஆசிரியர் பண்டித ஜவகர்லால் நேரு. 'ஆசிய ஜோதி' என்று உலக மக்களால் போற்றப்பட்ட நேரு தம் மகள் இந்திரா பிரியதரிசினிக்கு நைனி சிறையிலிருந்தபொழுது 1930இல் பிறந்தநாள் வாழ்த்துக் கூறி எழுதிய கடிதமே இங்குப் பாடமாக வந்துள்ளது. இதைத் தமிழில் மொழியாக்கம் செய்தவர் முன்னாள் மத்திய அமைச்சரான திரு.ஓ.வி.அளகேசன் ஆவார். நேருவைப்போலவே விடுதலைப் போரில் ஈடுபட்டதற்காக அந்நியர் சிறையில் அடைபட்டுக்கிடந்தபோது ஓ.வி.அளகேசன் அவர்கள் இம்மொழியாக்கப் பணியைச் செய்துள்ளார். பண்டித நேரு 1889இல் அலகாபாத் ஆனந்தபவனில் பிறந்தார். பெற்றோர் மோதிலால் நேரு, சொரூபராணி அம்மையார். சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக 1947முதல் 1964வரை பதவி வகித்து, பதவியில் இருக்கும்போதே அமரரானார். குழந்தைகளை மிகவும் நேசித்த அவரை 'நேரு மாமா' என்று அக்குழந்தைகள் அழைத்து மகிழ்ந்தனர். காந்தியடிகளைத் தம் அரசியல் ஆசானாகக் கொண்ட நேரு நம் நாட்டு வளர்ச்சிக்கும் உலக சமாதானத்திற்கும் அயராது பாடுபட்டவர் ஆவார்.

### அருஞ்சொற்பொருள்

ஆசி–வாழ்த்து, உபதேசம்–அறிவுரை, அரையில் – இடுப்பில், ஞானி–பேரறிவு உடையவன், தடைகள்–இடையூறுகள், மதியாமல்–பொருட்படுத்தாமல், மதாசாரியார்–மதகுரு, கோலம்–ஒப்பனை, உழலும்–துன்பப்படும், மாக்கள்–விலங்கென வாழும் மக்கள், பகர்ந்தான்–கூறினான், புருஷர்கள் – வீரர்கள்,

ஆண்களுமாம்; ஸ்தீரிகள் – வீராங்கனைகள், பெண்களுமாம்; பிரசங்கம்– சொற்பொழிவு, சாமானிய – எளிய, பாபுஜி–காந்தியடிகள், சிருஷ்டித்து–படைத்து உருவாக்கி ; அதிர்ஷ்டம் – எதிர்பாராத பயன்

பொருளுணர் பயிற்சி

**அ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) பண்டித நேரு தம் மகள் இந்திராவுக்கு எத்தகைய பரிசளிக்க விரும்பினார்?
2) எதை அறிவதற்கு நீண்ட பிரசங்கம் தேவையில்லை?
3) எது அறிவுடைமையாகும் என்று நேரு கூறுகிறார்?
4) நேரு தாம் கூறும் புத்திமதியை எவ்வாறு எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்?
5) சாமானிய மக்கள் உயரிய குணங்கள் பெறத் தடையாயிருப்பவை யாவை?
6) காந்தியடிகளின் ஆத்ம சக்தியால் தூண்டப்பட்ட மக்களின் செயற்பாடு யாது?
7) ஐயம் எழும் போது அதைத் தீர்த்துக்கொள்ள நேரு கூறும் வழி என்ன?

**ஆ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) நேரு இந்திரா பிரியதரிசினிக்குக் கூறிய கதையைக் கூறுக.
2) ‘முற்றும் நிறைந்த ஞானியாகத் தம்மால் நடிக்க முடியாது’, என்பதற்கு நேரு தரும் விளக்கம் யாது?
3) மக்கட் சமுதாயம் தீரச் செயல்கள் புரிவது எப்போது? விளக்குக.
4) ‘இந்திரா பிறந்த ஆண்டு சரித்திரத்தில் நினைவு கூறத்தக்கது’ என்று நேரு கூறுவது என்ன?
5) "நீயும் நானும் பாக்கியசாலிகள்" என்று இந்திராவுக்கு நேரு கூறக் காரணமென்ன?
6) இந்திய விடுதலை இயக்கத்தில் தங்கள் பங்கு குறித்து நேரு அளிக்கும் விளக்கம் யாது?

**இ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) சீனத்துப் பெரியார் யுவான் சுவாங் பற்றி நேரு கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
2) ஒளியும் அமைதியும் கலங்காத உள்ளமும் பெற இந்திராவுக்கு நேரு கூறும் அறிவுரைகளைத் தொகுத்து வரைக.

மொழித்திறன் பயிற்சி

**1. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

பாடலிபுத்திர நகரத்தின் இன்றைய பெயர்_______

அ) அயோத்தி ஆ) இலட்சுமணபுரி இ) பாட்னா

**2. கீழ்வரும் விடைக்கு ஏற்ற வினா அமைத்திடுக.**

பிறருடன் கலந்து பேசி விவாதித்தால் உண்மை புலப்படும்.

**3. சந்திப் பிழைகளை அறிந்து எழுதுக.**

பெரியார் நாடெங்கும் சுற்றி சுயமாய் கற்று பிறர்கும் கற்பித்து கொண்டிருந்தார்.

**4. கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.**

இன்னிக்கு யார் மூஞ்சியில் முழிச்சேனோ தெரியலியே !

**5. பிறமொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக.**

பண்டைக்காலத்து புருஷர்களும் ஸ்திரீகளும் செயற்கரும் செயல்களைச் செய்துள்ளனர்.

**6. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.**

கல்லணை தமிழரின் கட்டடக் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.

**7. கீழ்வரும் தொடர்கள் எவ்வகை வாக்கியங்கள் என்று கூறுக.**

அ) நைனி சிறையிலிருந்து உனக்கு நான் என்ன பரிசு அனுப்ப முடியும்?

ஆ) இந்திய நாட்டுக்குத் தொண்டு புரியும் வீர மாதாக நீ வளர்ந்து விளங்கு.

**8. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க.**

அ) இந்திரா பிறந்த ______சரித்திரத்தில் நினைவுகூர்தற்குரிய ஆண்டுகளில் ஒன்றாகும்.

ஆ) பாபுஜி தலைமையின்கீழ் நடந்து வரும் சுதந்திர இயக்கத்தில் ஒன்றுமில்லை.

இ) யாது நேரினும்_______பெறுவாய்.

**9. கீழ்வரும் வாக்கியத்தில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**

அ) இவ்வுலகத்துக்கு அப்பால் வியக்கத்தக்க வேறு பல உலகும் இருக்கின்றது.

ஆ) லெனின் ஆரம்பித்த பெரிய புரட்சியானது ருஷியாவையும், சைபீரியாவையும் அடியோடு மாற்றிவிட்டன.

**10. பொருளறிந்து பொருத்துக.**

| | வடமொழி | | தமிழ்மொழி |
|---|---|---|---|
| அ) | உபதேசம் | – | எதிர்பாராத பயன் |
| ஆ) | பிரசங்கம் | – | படைத்தல் |
| இ) | சிருஷ்டித்தல் | – | சொற்பொழிவு |
| ஈ) | அதிர்ஷ்டம் | – | அறிவுரை |

# 3. மதுரை மாநகரம்

( முனைவர் ரா.பி. சேதுப்பிள்ளை )

### முத்தும் முத்தமிழும்

முத்தும் முத்தமிழும் பாண்டி நாட்டுச் சிறந்த செல்வங்களாகும். 'பாண்டியனுக்குரிய பொருனையென்னும் தாமிரபரணி ஆற்றுத்துறையிலே முத்துப் பிறக்கும், வைகையாற்றின் கரையிலே முத்தமிழ் சிறக்கும்' என்று தமிழ்க் கவிஞர் கூறுவர். பாண்டி நாட்டின் தலைநகரமாகிய மதுரை, தொன்றுதொட்டு வைகையாற்றின் கரையிலே வீற்றிருக்கின்றது. அந்நகரிலே தமிழ்ச் சங்கம் நிறுவி முத்தமிழையும் பாண்டிய மன்னர் முறையாகப் பேணி வளர்த்தனர்; தமிழ்ச் சங்கத்தை நாடி வந்த பிற நாட்டுத் தமிழ் அறிஞர்களுக்கு வரிசையறிந்து பரிசளித்தனர். அதனால் பாண்டி நாட்டில் நல்ல தமிழ் பரவிற்று.

### நல்ல தமிழ் நிலவும் பாண்டி நாடு

நாடு பல கண்ட நல்லிசைப் புலவராகிய ஔவையார், ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு சிறப்புக் கூறிப் போந்தார். தமிழ் நாட்டு மூவேந்தருள் சேரன் ஆண்ட நாடு குறிஞ்சி வளம் உடையது என்று கூறினார்; சோழன் ஆட்சியில் அமைந்த வளநாடு மருதவளம் உடையதென்று புகழ்ந்தார்; பாண்டியனுக்குரிய தென்னாடு 'நல்ல தமிழ் உடைத்து என்று நாவாரப் போற்றினார். பாண்டிய மன்னனைப் பார்த்து, "சோழன் வழிவந்த பாண்டியா, நின்னாடு உடைத்து நல்ல தமிழ்", என்று மனங் குளிர்ந்து பாடினார்.

### தமிழார்வம் படைத்த பாண்டி மன்னர்

பாண்டி நாட்டை ஆண்ட மன்னருள் பலர் சிறந்த புலவர்களாயும் கவிஞர்களாயும் விளங்கினார்கள். 'ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்' என்று பழந்தமிழ் நூல்களில் பாராட்டப்படுகின்ற பாண்டி மன்னன் புவிச் செல்வத்தோடு கவிச் செல்வமும் பெற்று விளங்கினான். மக்களாய்ப் பிறந்தோரெல்லாம் கல்வி கற்றல் வேண்டும் என்றும், அறிவுடை ஒருவனை அரசனும் விரும்புவான் என்றும் எல்லோரும் அறியும் வண்ணம்

அம்மன்னன் பாடிய பாட்டு புறநானூற்றிலே காணப்படுகின்றது.

'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது, அவருள்
அறிவுடை யோனா றரசும் செல்லும்'.

என்ற பாட்டில் கல்வி கற்கும் முறையும் கற்றறிந்தோர் எய்தும் சிறப்பும் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இப்பாட்டியற்றிய பாண்டியன் நெடுஞ்செழியன் திருக்குறளை நன்றாக ஓதி உணர்ந்திருந்தான் என்பதும் இனிது விளங்குகின்றது.

'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்'

என்ற திருக்குறளின் கருத்தைப் பொன்போலப் போற்றிப் பாடியுள்ளான் அப்பாண்டியன். இத்தகைய தமிழார்வம் படைத்த மன்னர்கள் அரசு வீற்றிருந்த மதுரை மாநகரில் தமிழ் மணம் கமழ்ந்து கொண்டே இருந்தது.

### தமிழ் மணம் கமழும் மதுரை மாநகர்

காவியங்களும் கவிதைகளும் தமிழ்ச் சங்கத்தில் வந்து குவிந்த வண்ணமாய் இருந்தன. பல தொழில்களில் ஈடுபட்ட அறிஞர் தமிழ்ப் பாட்டிசைத்தார்கள். அவர்களுள் ஒருவர் மதுரையில் கூல வாணிகம் செய்துவந்த சாத்தனார் ஆவார். கூலம் என்பது நெல் முதலிய பதினெட்டு வகையான உணவுப் பொருள்களின் பொதுப் பெயராகும். கூலக்கடை வைத்து வாணிகம் செய்த சாத்தனார், கூலவாணிகன் சாத்தனார் என்னும் பெயர் பெற்றார். இவரே மணிமேகலை என்ற சிறந்த காவியம் இயற்றியவர். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகளும் மணிமேகலை இயற்றிய சாத்தனாரும் உயரிய நண்பராய் இருந்தனர். இவ்விருவரும் ஒரு நாட்டவர் அல்லர்; ஒரு குலத்தவர் அல்லர்; ஒரு மதத்தினர் அல்லர்; சேரநாட்டைச் சேர்ந்தவர் இளங்கோ; அரசர் குலத்திற் பிறந்தவர். சாத்தனார் வணிக குலத்தவர். இளங்கோ சமண சமயத்தைச் சேர்ந்தவர் சாத்தனார்; புத்த சமயத்தைத் தழுவியவர். இவ்வாறு நாட்டாலும் குலத்தாலும் மதத்தாலும் வேறுபட்டிருந்த பெருங்கவிஞர் இருவரும் தமிழ் உணர்ச்சி ஒன்றாலேயே தலைசிறந்த நண்பராய்த் திகழ்ந்தனர்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்'

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு இளங்கோவடிகளும் சாத்தனாரும் ஓர் எடுத்துக்காட்டாய் வாழ்ந்தார்கள். கண்ணகியின் சீற்றத்தால் மன்னனும் மதுரையும் அழியக் கண்டு மன அதிர்ச்சியுற்ற சாத்தனார், இளங்கோவடிகளைக் காணச் சென்றார் என்றும், மதுரை மாநகரில் தாம் கண்ட துன்பக் காட்சியை இளங்கோவடிகளிடம் எடுத்துரைத்தார் என்றும், அந்நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அடிகள் சிலப்பதிகாரம் செய்தார் என்றும் காவியம் கூறுகின்றது. இதனால், சிலப்பதிகாரத்தை உருவாக்கிய பெருமையில் மதுரைச் சாத்தனாருக்கும் ஒரு பங்குண்டு என்பது தெளிவாகின்றது.

பாமாலை பெற்ற வையையாறு

செந்தமிழ்க் காவியமாகிய சிலப்பதிகாரத்தில் பாண்டியர் குலக்கொடியாகிய வையையாறு நிறைந்த மொழிகளால் புகழ் பெற்றுள்ளது.

'உலகுபுரந்து ஊட்டும் உயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை என்ற பொய்யாக் குலக்கொடி'

என்று பாடினார் இளங்கோவடிகள். தமிழகத்தில் வைகையாற்றைப் போலப் பாமாலை பெற்ற பெருமை வேறெந்த ஆற்றுக்கும் இல்லை என்றே சொல்லலாம். பரிபாடல் என்னும் பழந்தொகை நூலில் இருபத்தாறு இசைப்பாட்டு வைகையாற்றுக்கு உரியன என்பது தெரிகின்றது. இவ்வாறு காவியத்திலும் இசைப்பாட்டிலும் புகழ் பெற்ற வைகை ஆற்றின் கரையிலே நிகழ்ந்த திருவிளையாடல்கள் பலவாகும். அவற்றுள் ஆலவாய்ப் பெருமானாகிய ஈசன் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடல் இன்றும் மதுரை மாநகரில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இதுபோன்று அறுபத்து நான்கு திருவிளையாடல்களை விரித்துக் கூறுவது திருவிளையாடற் புராணம். பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணம் பக்திச்சுவை நிரம்பிய ஓர் இலக்கியமாகும். இங்ஙனம் தமிழ் இலக்கியத்தோடு வைகையாற்றின் பெருமை இணைந்திருத்தலாலேயே தமிழகத்தின் நல்லணிகளாய்த் திகழும் நதிகளையெல்லாம் தொகுத்துப் பாடிய பாரதியார்,

'காவிரி தென்பெண்ணை பாலாறு – தமிழ்
கண்டதோர் வையை பொருனைநதி'

என்று பாராட்டினார். இத்தகைய வைகையாற்றின் பெருமை யெல்லாம் தன் பெருமையாக்கிக் கொண்டது மதுரை மாநகரம். அம்மதுரை மாநகரின் பெருமையெல்லாம் தன் பெருமையாக்கிக் கொண்டான் பாண்டி மன்னன்.

## மதுரை மன்னன் கற்றறிந்தோரைக் காத்தல்

மதுரை மன்னன் கற்றறிந்தோரைக் கண்ணெனக் கருதிப் பாதுகாப்பவன் என்ற செய்தி வட நாட்டிலும் பரவி இருந்தது. அந்நாட்டில் கடும் பஞ்சம் வந்துற்றபோது பல்லாயிரக்கணக்கான மக்கள் பாண்டி நாட்டைத் தஞ்சம் அடைந்தார்கள். அன்னார் சமண சமயத்தைச் சார்ந்தவராயினும், அவர்க்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுத்து ஆதரித்தான் பாண்டியன்.

## சமணர் தந்த தமிழ்ச் செல்வம்

தமிழ்நாட்டில் இனிது வாழவும் தமிழ் மன்னனது நன் மதிப்பைப் பெறவும் ஆசைப்பட்ட சமணர்கள், தமிழ்மொழியை ஓதி உணர்ந்தார்கள். மதுரையைச் சூழ்ந்திருந்த எட்டு மலைகளைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு கவலையின்றி வாழ்ந்தார்கள். அவ்வெட்டு மலைகளின் பெயரும் ஒரு பழம்பாட்டில் குறிக்கப்பட்டுள்ளன.

'பரங்குன்று உருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை யானை—இருங்குன்றம்
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு'

என்ற பாட்டில் கண்ட எட்டு மலைகளிலும் எண்ணாயிரம் சமண முனிவர்கள் இருந்ததாகத் தெரிகின்றது. இம் மலைகளுள் பரங்குன்றம் என்பது திருப்பரங்குன்றம். இருங்குன்றம் என்பது அழகர்மலை; யானை யென்பது யானைமலை. இம்மலைகளில் வாழ்ந்த சமண முனிவர்கள் ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்களை இயற்றினர். அவற்றுள் தெரிந்தெடுத்த நானூறு நீதிச் செய்யுள்கள் நாலடியார் என்ற பெயரால் இன்றும் வழங்கி வருகின்றன. இரண்டடிகளையுடைய திருக்குறளும் நான்கடிகளையுடைய நாலடியாரும் நீதி நூல்களுள் தலைசிறந்தனவென்பது தமிழ் நாட்டார் கொள்கை. 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்னும் பழமொழியே இதற்குச் சான்றாகும்.

## சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமை

பாண்டியர் பேணி வளர்த்த சங்கத்தின் பெருமை தமிழ் நாடெங்கும் பரவிற்று. சங்கத்தில் அரங்கேறிய நூல்கள் சாலச்சிறந்த நூல்கள் என்று தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தெய்வப் புலமைத் திருவள்ளுவரும் தமது திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினார் என்ற கதையொன்று தமிழ் நாட்டில் உண்டு.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராய்த் திகழ்ந்தார் நக்கீரர் என்ற நற்றமிழ்ப் புலவர். அவர் கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்தவர். அவர் இயற்றிய திருமுருகாற்றுப்படை, பத்துப்பாட்டு என்னும் தொகை நூலின் முதற்பாட்டாய் இலங்குகின்றது. முருகப் பெருமான் கோயில் கொண்ட ஆறு படைவீடுகளின் பெருமையையும் அழகாகக் கூறகின்ற அந்நூல், அருள் நூலாகவும் கருதப்படுகின்றது. நக்கீரர் ஒரு சிறந்த உரையாசிரியராயும் விளங்கினார். இறையனார் களவியல் என்னும் அகப்பொருள் நூலுக்கு அவர் எழுதிய உரை, சங்ககாலத்து உரைநடைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பழைய இலக்கிய இலக்கணங்களுக்கு உரைசெய்த ஆசிரியர்களுள் ஒருவராகிய நச்சினார்க்கினியரும் மதுரை மாநகரத்தைச் சேர்ந்தவர். ஐம்பெருங் காவியங்களுள் ஒன்றாகிய சிந்தாமணிக்கும், 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' என்று புகழ் பெற்ற கலித்தொகைக்கும், பத்துப்பாட்டிற்கும், தொல்காப்பியத்திற்கும் சிறந்த உரை செய்த நச்சினார்க்கினியரின் பெருமை தமிழ் உள்ளளவும் அழியாததாகும்.

### ஆசிரியர் குறிப்பு

டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை திருநெல்வேலி நகரையடுத்த இராசவல்லிபுரத்தில் பிறந்தவர்; இவர் சிறந்த வழக்கறிஞர்; தமிழ்மீது நாட்டங்கொண்டு தமிழ் பயின்று புலமை பெற்றார். சென்னை பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பணியாற்றினார்; சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார்; 'சொல்லின் செல்வர்' என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றார். 'தமிழகம், ஊரும் பேரும், ஆற்றங்கரையினிலே , வேலும் வில்லும், வழிவழி வள்ளுவர், கடற்கரையிலே, வேலின் வெற்றி, தமிழ் விருந்து, தமிழர் வீரம், தமிழின்பம்' முதலிய நூல்களையும் எழுதியுள்ளார்.

### அருஞ்சொற்பொருள்

வரிசை–மரியாதை; சோமன்–சந்திரன்; புவி–உலகம்; உற்றுழி–துன்புற்றபோது, கிழமை–உறவு புரந்து–காத்து, வெற்பு–மலை.

### பொருளுணர் பயிற்சி

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) பரஞ்சோதி முனிவர் இயற்றிய____பக்திச் சுவை நிரம்பிய இலக்கியமாகும்.
2) கூலம் என்பது_____வகையான உணவுப் பொருள்களின் பொதுப் பெயராகும்.
3) திருமுருகாற்றுப்படை______என்னும் தொகைநூலின் முதற்பாட்டாய் இலங்குகின்றது.

4) பாண்டியர் குலக்கொடியாகிய ______ நிறைந்த மொழிகளால் புகழ் பெற்றுள்ளது.

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை தருக.**

1) பாண்டிய நாட்டின் சிறந்த செல்வங்கள் யாவை?
2) பாண்டிய நாட்டில் நல்ல தமிழ் பரவியதற்கான காரணத்தைக் கூறுக.
3) ஔவையார் மூவேந்தர் நாட்டின் சிறப்பு குறித்துக் கூறியது என்ன?
4) ஔவையார் பாண்டிய மன்னனை எங்ஙனம் மனங் குளிர்ந்து பாராட்டினார்?
5) 'அறிவுடை ஒருவனை அரசனும் விரும்புவான்' என்பது ஏன்?
6) கூலக்கடை–விளக்குக.
7) தமிழ் உணர்ச்சி ஒன்றாலேயே தலைசிறந்த நண்பர்களாய்த் திகழ்ந்த இருவர் யாவர்?
8) தமிழகத்தின் நல்லணிகளாய்த் திகழும் நதிகளைப் பாரதியார் எங்ஙனம் பாராட்டுகிறார்?

**இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மக்களாய்ப் பிறந்தோரெல்லாம் கல்வி கற்றல் வேண்டும் என்பதனை விவரி.
2) மதுரை மன்னன் கற்றறிந்தோரைப் பாதுகாப்பவன் என்பதனை விளக்குக.
3) நச்சினார்க்கினியர் ஆற்றிய தமிழ்த் தொண்டினை வரைக.
4) வைகையாற்றின் பெருமையை இளங்கோவடிகள் எங்ஙனம் புகழ்ந்து கூறுகிறார்?
5) சிலப்பதிகாரம் உருவாக்கியதில் சாத்தனாருக்கும் பங்கு உண்டு என்பதனை விளக்குக.
6) நக்கீரர் பற்றிய செய்திகளை எழுதுக.

**ஈ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தமிழ் மணம் கமழும் மதுரை நகரின் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
2) பாண்டியர் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பெருமையினை விளக்குக.

மொழித்திறன் பயிற்சி

**1. பொருளுணர்ந்து பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1) | உற்றுழி | – | மிகுதி |
| 2) | உறு | – | துன்புறுகாலம் |
| 3) | சோமன் | – | பலதானியம் |
| 4) | கூலம் | – | சந்திரன் |
| | | – | பெருமை |

2. **சந்திப் பிழையின்றி எழுதுக.**

1) தமிழகத்தில் வைகை யாற்றை போல பாமாலைப் பெற்றப் பெருமை வேறெந்த ஆற்றுக்கும் இல்லை என்றே சொல்லலாம்.

2) மதுரை மன்னன் கற்றறிந்தோரை கண்ணெனக் கருதி பாதுகாப்பான் என்றச் செய்தி வடநாட்டிலும் பரவி இருந்தது.

3. **கீழ்க்காணும் வாக்கியத்தில் உள்ள பிழையை நீக்கி எழுதுக.**

தமிழ்நாட்டில் இனிது வாழவும் தமிழ் மன்னனது நன் மதிப்பைப் பெறவும் ஆசைப்பட்ட சமணர், தமிழ் மொழியை ஓதி உணர்ந்தார்கள், மதுரையைச் சூழ்ந்திருந்த எட்டு மலையைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு கவலையின்றி வாழ்ந்தார்.

4. **வாக்கிய வகை சுட்டுக.**

ஔவையார் மன்னனைப் பார்த்து 'சோமன் வழிவந்த பாண்டியா! நின்னாடு உடைத்து நல்ல தமிழ் 'என்று பாடினார்.

5. **கீழ்க்காணும் விடை வருமாறு வினா அமைத்திடுக.**

இரண்டடிகளையுடைய திருக்குறளும் நான்கடிகளையுடைய நாலடியாரும் நீதிநூல்களுள் தலைசிறந்தன என்பது தமிழ்நாட்டார் கொள்கை.

6. **நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக.**

1) ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி என்னும் பழமொழியே இதற்குச் சான்றாகும்.

2) இளங்கோ அரசர் குலத்திற் பிறந்தவர் சாத்தனார் வணிகர் குலத்தவர் இளங்கோ சமண சமயத்தைச் சேர்ந்தவர் சாத்தனார் புத்த சமயத்தைத் தழுவியவர்.

7. **கீழ்க்காணும் சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்தி ஏற்ற பொருள் எழுதுக.**

பேணி, புவி, அணி, வெற்பு.

# 4. உளநலமும் உடல்நலமும்

( பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் )

உடல் உள்ளத்தின் பணியாள்; உள்ளம் உடலின் பணியாளன்று. உள்ளம் கிளர்ந்தெழுந்து செயலாற்றும்போதும் சரி, தன்னியல்பாக இயங்கும்போதும் சரி, உடல் அதன் வழியேதான் நிற்கும். ஒழுங்கமைதி மீறிய எண்ண அலைகளுக்கிணங்கி உடல் நோவும் நலிவும் அடைகின்றது. ஒழுங்கமைதி வாய்ந்த கருத்துகளை உடல்நலம், இனநலம், அழகுநலம் ஆகிய மூவகை நலங்களையும் உடலுக்கு அளிக்கின்றது.

மற்ற எல்லாச் சூழல் நிகழ்வுகளையும்போலவே நோயும் உடல்நலமும் கருத்தில் கருக்கொண்ட நிகழ்வுகளே. நலிவுற்ற எண்ணங்கள், உணர்ச்சிகள், நோயுற்ற உடல்மூலமாகவே புறந்தோன்றுகின்றன. துப்பாக்கிக் குண்டுகள் ஒருவனைக் கொல்வது போலவே அச்ச எண்ணங்களும் மனிதனைக் கொல்வதைக் காணலாம். துப்பாக்கிக் குண்டுகள் எப்போதும் எல்லா மனிதரையும் கொல்வதில்லை. அச்சம் எப்போதும் எத்தனையோ பேரைப் படிப்படியாகக் கொன்றுகொண்டு வருகிறது. நோய் அச்சம் நோயைத் தருகிறது, அதை வளர்க்கிறது. கவலைகள் உடலைக் கரைக்கின்றன. இவை நோய்க்கு வாயில் திறந்து வைப்பதுடன், உடலில் குடியிருக்கவும் வளரவும் வகைசெய்து கொடுக்கின்றன. துப்புரவற்ற கருத்துகளோ நரம்பு மண்டலத்தைத் தாக்கி அதிர்ச்சியுறச் செய்து, அதன் மூலம் உடல்நிலை முழுவதையும் கெடுக்கிறது.

உடல் புறத்தே கெட்டிமையுடையதாகத் தோற்றுகிறது. ஆனால் உண்மையில் அதனினும் நொய்ம்மையும், தொய்வும், களிமண் போன்ற குழைவும் உடைய இன்னொரு பொருளைக் காணமுடியாது. ஏனெனில் அது கண்காணா எண்ண அலைகளின் ஒவ்வொரு இயக்கத்திற்கும் இசைந்து இழைந்து இயங்குகின்றது. மட்பாண்டங்கள் செய்பவன் கலையுள்ளத்தின் ஒவ்வோர் அசைவும் அவன் கையை இயக்கிக் களிமண்ணில் படிவது போல, உள்ளத்தின் ஒவ்வொரு கருத்தசைவும் நரம்புகளின் மூலமாக இயங்கி உடலை உருவாக்கி, உடற்பண்புகளை

வளர்க்கின்றன. எனவேதான் நற்கருத்துகள், நல்லுணர்ச்சிகள் உடல் நலத்தையும், அல்கருத்துகள், அல்லுணர்ச்சிகள் உடல் நலிவையும் நோயையும் உடற்கோளாறுகளையும் உண்டுபண்ணுகின்றன.

துப்புரவற்ற கருத்துகள் நெஞ்சத்திலிருந்து துப்புரவற்ற நீலநிறமான நச்சுக்குருதியை நரம்பு நாடிகளில் ஓடவைக்கிறது. தூய எண்ணங்கள் உடலில் துப்புரவான குருதியை ஓடவைத்து உள்ளத்தையும் வாழ்வையும் ஒருங்கே வளர்க்கின்றன. வாழ்வின் ஊற்றாகிய எண்ணங்கள் தூயவையானால், வாழ்வு முழுவதுமே இங்ஙனம் தூய்மை அடைகின்றது.

உள்ளக் கருத்தை மாற்றாத நோயாளி உணவு முறையை மாற்றியும் பயனில்லை. மருந்து உட்கொண்டும் பயனில்லை. அவை செயலாற்றமாட்டா. ஆனால் கருத்துகள் தூயன ஆக்கப்பட்டால், மருந்து தேவைப்படாது. உணவே மருந்தாயமையும். ஏனெனில் தூய கருத்துடையவன் துப்புரவற்ற உணவில் நாட்டமே செலுத்தமாட்டான். நல்லுணவு கொள்பவனுக்கு அதனின் வேறாக நன்மருந்து பிறிது எதுவும் வேண்டாம்.

நோயகற்றும் மருந்தும் உண்டு. நோய்வராமல் தடுக்கும் நன்மருந்தும், உடல்நலம் வளர்க்கும் மருந்தமுதும் உண்டு. நற்கருத்துகள் இத்தகைய நன்மருந்தாகவும், மருந்தமுதமாகவும் இயங்குகின்றன. ஏனெனில் அவற்றின் துப்புரவு துப்புரவான பழக்கவழக்கங்களை உண்டுபண்ணுகிறது. ஞானியருள் குளிப்பும் முழுக்கும் துறந்த ஞானியர் உண்டென்று கேள்விப்படுகிறோம். உண்மையில் இது ஞானியர் இலக்கணமே யல்ல. உள்ளந் தூய்மையாயிருப்பவன் புறத்தூய்மையை வெறுப்பவனாயிருக்க மாட்டான். அதேசமயம் அவன் புற அழுக்கைக் கழுவுவதுடன் நில்லாமல், அக அழுக்கையும் தூய எண்ணங்களால் கழுவி, அகமும் புறமும் துப்புரவுடையவன் ஆகிறான். நோயணுக்கள் மட்டுமன்றி நோவணுக்களும் அவனை அணுகமாட்டா.

நீ உன் உடலைப் பாதுகாக்க விரும்பினால், உன் உள்ளத்தைக் காத்துப் பேணு. உன் உடலைச் செம்மையுறச் செய்யவேண்டினால், உன் உள்ளத்தை ஒளி திகழச்செய். வன்மம், அழுக்காறு, மனக்கசப்பு, சோர்வு ஆகியவை உள்ளத்தில் ஒளி மழுக்கி உடலின் நலத்தையும் செவ்வியையும் உருக்குலைக்கும். யாரிடமாவது நீ தூங்கிய அல்லது வீங்கிய அல்லது ஏங்கிய முகத்தைக் கண்டால், அது அம்முகத்தின் இயல்பு என்று ஒரு போதும் கருதிவிடாதே. அது தற்செயலாக நேர்ந்தது என்றும் எண்ணவேண்டாம். எண்ணத்தின் தூக்கம், வீக்கம், ஏக்கம்

ஆகியவற்றாலேயே அந்நிலை ஏற்பட்டது என்று திட்டமாக உணரலாம். முகத்தில் சுரிப்பும் சுளிப்பும் கண்டால், அவை முதுமை அல்லது துன்பத்தின் சின்னங்கள் என்று கருதவேண்டா. அவை உண்மையில் மடமை, தன்னடக்கமின்மை, இறுமாப்பு ஆகியவற்றின் அடையாளங்கள் என்று அறிக.

சிறுமிக்குரிய ஒளி திகழும் நன்முகம் உடைய தொண்ணூற்றாறு வயதுடைய மூதாட்டி ஒருவரை நான் அறிவேன். நடுத்தர வயது செல்லாமுன்பே நெரித்துச் சுரித்து அருவருக்கும் தோற்றமுடைய முகங்கொண்ட ஒருவரையும் அறிவேன். முன்னது எப்போதும் மகிழ்ச்சி குலாவும் இனிய பண்புக்குச் சான்று; பின்னது ஆரா ஆவல், தங்குதடையற்ற உணர்ச்சிக்கொம்மாளம் ஆகியவற்றின் பழிச்சின்னம்.

வாழும் மனையின் வாழ்வுநலம் பெருக்க வேண்டுமானால், அதன் வாயில்களும் பலகணிகளும் காலதர்களும் தங்குதடையற்ற காற்றோட்டத்துக்கும் வெளிச்சத்துக்கும் வகை செய்வனவாயிருக்க வேண்டும். அது போலவே உயிர்வாழும் உறையுளாகிய உடல் நலமுடையதா யிருக்கவேண்டுமானால், அது மகிழ்ச்சியும் நல்லெண்ணமும் அமைதியும் தன்னூடாக உலவிடத் தக்கதாயிருத்தல் இன்றியமையாதது.

கருத்து எத்தனை இளமையுடையதாயிருந்தாலும் முதுமையின் கடுமூப்பு இதில் சுரிப்புக் கொண்டுவராமலா இருக்கும்? என்று யாரேனும் வினவுதல் கூடும். ஆம். முதுமையின் மூப்பு எப்படியும் சுரிப்பைக் கொண்டுவரக்கூடும். ஆனால் தூய்மையான உறுதியான நல்லெண்ணம் கொண்டவரும், எல்லாரிடமும் பரந்த உள்ளன்பு கொண்டவரும் மூப்பிலடையும் சுரிப்புக்கும், மீச்செலவுணர்ச்சிகளால் காலங்கடந்துவரும் சுரிப்புக்கும் யாரே வேறுபாடறிய முடியாதவர்? முன்னது நல்லிலையின் பழுப்பையும் நற்கனியின் கனிவையும் முற்றிய பயிரின் மணத்தையும் போல இனிமை பயப்பது. அது இளமைநலத்துடன் கூடப் போட்டியிடத்தக்க முதுமைநலம். பின்னது காண்பவர்க்கு அதனையுடையவர் துன்பத்தினும் மிகுதி துன்பந்தருவது.

நேர்மை, அன்பு, தூய்மை ஆகிய நற்பண்புகளின் தோழமையுடன் வாழ்ந்தவரின் முதுமை இளமையிலும் காணமுடியாத மூதமை வுடையது. அதுபடி ஞாயிற்றின் மாலைச்செவ்வான வண்ணத்தின் பண்ணமைவுடையது.

அண்மையில் ஒரு மெய்யறிவாளரின் இறுதி ஓய்வை நான் கண்ணுற நேர்ந்தது. அவர் வயதில் தான் முதுமை அடைந்திருந்தார். தோற்றத்திலன்று. அவர் மாள்வின் அமைதிநலம் வாழ்வின் அமைதி நலத்துடன் போட்டியிடுவதாயிருந்தது. முன்னதன், இனிமை பின்னதன் இனிமையிற் சற்றும் குறைபடவில்லை. பெரும்பாலும் சாவுக்காட்சியைக் காண்பர் எவரும் தம் சாவை நினைத்து வருத்தத்தின் சாயல் அடையாமல் இருப்பதில்லை. ஆனால் அப்பெரியார் மாள்வில் நான் அடைந்த உணர்ச்சி இதுவன்று. அது இதனின் வேறான பல உணர்ச்சிகளின் கூட்டமைதியாயிருந்தது. அவர் மாள்வின் நலத்துக்குமுன் நான் என் வாழ்வு நலத்தை ஒப்பிட்டு வெட்கமடைந்தேன். என் வாழ்க்கைப்பண்பை உயர்த்தி அத்தகைய மாள்வு நலம் பெறவேண்டும் என்ற அவாவே என் மனத்தில் முனைப்பாயிருந்தது. அத்துடன் இத்தகைய பெரியார் வாழ்வுக்கும் மாள்வுக்கும் உரிய உலகம் பெருமையுடையது என்ற எண்ணமும், அத்தகைய உலகில் அவருடன் வாழ்ந்து அவர் வாழ்வு மாள்வுகண்டு பயன்பெறும் பேறும் எனக்குக் கிட்டின என்ற தன்னிறைவும் என்னிடம் நிலவின.

உடலுரிமையால் வரும் இயற்கைத் துன்பங்களில்கூட உள உரிமையால் பெறத்தகும் நல்லுவகை யுணர்ச்சியைப் போல நோவகற்றும் நன்மருத்துவனும் ஆறுதலளிக்கும் நல்ல நண்பனும் வேறு கிடையார். அவ்வுணர்ச்சியால் நோவுநொம்பலங்கள் சிதறடிக்கப்படுகின்றன. நோவு எண்ணங்கள் அகற்றப்படுகின்றன. துன்பத்தினும் கொடியன துன்பத்தின் சாயல்களான தீயுணர்ச்சிப் படலங்கள். ஏனெனில் அவை இயற்கைத் துன்பத்திலிருந்து செயற்கைத் துன்பங்களை வித்திட்டு வளர்ப்பவை. சிலசமயம் இக் களைப்பயிர் தன்னைத்தானே பெருக்கி நிலையாகத் தழைத்து இன்பங்களையும் இன்பங்களுக்குக் காரணமான நல்லெண்ணங்களையும் நிலையாக ஒதுக்கித் தடுத்து வைத்துவிடும். இந்நிலையில் மனிதன் ஓர் அழுகை வேதாந்தியாகிறான். கண்டதிலெல்லாம் ஐயமும், வெறுப்பும், அச்சமும், அழுக்காறும், சினமும், வன்மமும் கொண்டு தன் வாழ்வைத் தானே மீளாப் பழிக்கூடம் ஆக்கிக்கொள்கிறான்.

துன்பத்தில் அமைதியும் உவகையும் துன்பந்தடுப்பதுடன் நில்லாமல், துன்பம் இங்ஙனம் படிந்து தோய்ந்து பெருக்கமுற்றுத் துன்பப் படலங்களாக வாழ்க்கை வானத்தை மறைக்காமல் காக்கின்றன. நீடித்த நல்லெண்ணமும் அன்பும் துன்பத் திரையை விலக்குவதுடன் அமையாது, இன்பப் பண்ணையின் வாயிலும் கடந்து பேரின்பக் கோயிலுக்கு இட்டுச் செல்லும். அவற்றை உடையவனை மட்டுமன்றி அது அவன் சூழலையும்

உயர்வுபடுத்தி அவன் காற்சுவடு பட்ட இடத்தையும் பொன்னியல்புடையதாக்கும்.

ஆசிரியர் குறிப்பு

கா. அப்பாத்துரையார் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஆரல்வாய்மொழியில் 24.06.1907இல் பிறந்தார். 'பன்மொழிப்புலவர்' என்ற சிறப்புப் பட்டம் பெற்ற அவர் ஆங்கிலம், இந்தி, மலையாளம், சமஸ்கிருதம் முதலிய மொழிகளை அறிந்தவர். தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராக இருந்தவர். தமிழ் எழுத்தாளர் சங்கக் கேடயத்தைப் பெற்றவர்.

அருஞ்சொற்பொருள்

பணியாள் – வேலையாள், நலிவு – கேடு, நோவு – நோய், நொய்மை – கனமின்மை, மென்மை; , தொய்வு – இளைப்பு; குருதி – இரத்தம்; வன்மம் – தீராப்பகை, அழுக்காறு – பொறாமை, செவ்வி – தன்மை, அழகு, சரிப்பு – மடிப்பு விழுதல்; மடமை – பேதைமை; பலகணி – சாளரம், திட்டிவாயில்; காலதர் – காற்று வரும் வழி, சாளரம்; ஞாயிறு – கதிரவன், அவா – ஆசை, ஐயம் – சந்தேகம்.

பொருளுணர் பயிற்சி

அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1) நல்லுணவு கொள்பவனுக்கு அதனின் வேறாக ________ பிறிது எதுவும் வேண்டாம்.
2) முதுமையின் மூப்பு எப்படியும் ________ கொண்டுவரக்கூடும்.
3) உள்ளக் கருத்தை மாற்றாத ________உணவு முறையை மாற்றியும் பயனில்லை.

ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) உடல் எதன்வழியே நிற்கும்?
2) மூவகை நலங்கள் எவை?
3) உடலை உருக்குலைக்கக்கூடிய நான்கினை எழுதுக.
4) வாழும் மனை எப்படியிருத்தல் வேண்டும்?
5) பேரின்பக் கோயிலுக்கு இட்டுச் செல்வது எது?

இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) நலிவுற்ற எண்ணங்களின் தீமையினை விளக்குக.
2) எண்ணங்கள் குருதியைப் பாதிக்கும் என்பதனை எடுத்து எழுதுக.
3) நற்கருத்துகள் நன்மருந்தாகவும், மருந்தமுதாகவும் இயங்குகின்றன என்பதனை ஆசிரியர் வழிநின்று வெளிப்படுத்துக.
4) முதுமையின் மூப்புக்கும், நல்லெண்ணம் கொண்டோரின் மூப்புக்கும் உள்ள வேறுபாட்டைக் கூறுக.

ஈ. **பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தனக்குத் தன்னிறைவு தந்ததாக ஆசிரியர் கூறியுள்ள நிகழ்ச்சியை விவரி.

2) உளஉரிமையால் பெறத்தகும் நல்லுவகையுணர்ச்சியின் சிறப்பினை எழுதுக.

**மொழித்திறன் பயிற்சி**

1. **பொருளறிந்து பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1) | நொய்மை | – | இளைப்பு |
| 2) | தொய்வு | – | தீராப்பகை |
| 3) | வன்மம் | – | மென்மை |
| 4) | நலிவு | – | பேதைமை |
| | | – | கேடு |

2. **சந்திப் பிழையின்றி எழுதுக.**

நீ உன் உடலை பாதுகாக்க விரும்பினால், உன் உள்ளத்தை காத்து பேணு.

3. கீழ்க்காணும் தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.

நலிவுற்ற எண்ணங்கள், உணர்ச்சிகள் நோயுற்ற உடல் மூலமாகவே புறந்தோன்றுகின்றது.

4. **வாக்கிய வகை சுட்டுக.**

உள்ளக் கருத்தை மாற்றாத நோயாளி உணவு முறையை மாற்றியும் பயனில்லை.

5. **கீழ்க்காணும் விடை வருமாறு வினா அமைக்க.**

நல்லுவகையுணர்ச்சியைப் போல நோவகற்றும் நன் மருத்துவனும் ஆறுதலளிக்கும் நல்ல நண்பனும் வேறு கிடையார்.

6. **நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.**

வன்மம் அழுக்காறு மனக்கசப்பு சோர்வு ஆகியவை உள்ளத்தில் ஒளி மழுக்கி உடலின் நலத்தையும் செவ்வியையும் உருக்குலைக்கும்.

7. **கீழ்வரும் சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்திப் பொருள் எழுதுக.**

செவ்வி, நாட்டம், நொம்பலம்.

# 5. அறிவியல் பார்வை

( முனைவர் வா.செ. குழந்தைசாமி )

நமது நாட்டிற்கு அறிவியல் என்பது முழுமையும் புதிதன்று. நமது முன்னோர்கள் அறிவியல் துறையில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சாதனைகள் புரிந்திருக்கின்றனர். அதற்குப் பல சான்றுகள் காணலாம். ஆனால் இன்று நாம் பயன்படுத்தும் அறிவியல், தொழில்நுட்பம் ஆகியன நமது மண்ணுக்குப் புதியவை. மேலை நாட்டிலிருந்து நாம் இறக்குமதி செய்தவை. இதற்கு ஒரு சான்று கூறி விளக்குவது பொருந்தும். நமது முன்னோர்கள் மருத்துவத் துறையில் கணிசமான முன்னேற்றம் கண்டிருந்தனர். ஆயுர்வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது. அது போன்றே சித்த மருத்துவம் தமிழகத்தில் வளர்ந்திருக்கிறது. பெரிய அளவில் ஓலைச் சுவடிகள் இன்னும் நூல் வடிவம் பெறாமல் இருக்கின்றன. ஆனால் நமக்கு 'அல்லோபதி முறை' எனும் ஆங்கில மருத்துவ முறை முழுமையும் புதிதானது. அதில் நமக்கு எந்தப் பாரம்பரியமும் இல்லை. இன்று நாம் பயன்படுத்தும் அறிவியலும் தொழில் நுட்பமும் அல்லோபதி மருத்துவ முறை போன்று நமக்கு முழுவதும் புதியனவாகும்.

அறிவியல் பார்வை என்பதன் மூலம் ஓர் அணுகுமுறையை நாம் குறிப்பிடுகிறோம். பொதுவாக அறிவியல் உலகம், நம்பிக்கையின் அடிப்படையில் எதையும் ஏற்றுக் கொள்ளாத மரபை உடையது. எப் பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவியல் உலகின் அடிப்படை. கொள்கையாயினும் கோட்பாடாயினும் அவை முறையான வாதங்கட்கும் சோதனைகட்கும் உட்படுத்தப்பட வேண்டும். அவற்றின் அடிப்படையில் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். இது அறிவியல் உலகின் மரபு.

மனிதன் தனது அன்றாட வாழ்வில் எடுக்கும் முடிவுகளில், தனது பகுத்தறிவிற்கு, ஆய்விற்கு, அதன் வழி கண்ட முடிவுகளுக்கு, நடைமுறையில் என்ன இடம் கொடுக்கிறான், எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறான் என்பதைப் பொருத்ததே அறிவியல் பார்வை ஆகும். அறிவியல் பார்வையில் முக்கியமான ஒரு கூறுபாடு குறிப்பிடப்பட வேண்டும்.

அறிவியல் பார்வை மனித முயற்சினை வளர்ப்பது நம்மைச் செயலுக்குத் தூண்டுவது. நமக்குள் அணைக்கட்டு நீர்போலத் தேங்கியிருக்கும் ஆற்றல் பிரவாகமாகப் பெருக்கெடுக்க உதவுவது. நம்மைப் படைத்தவன் இருக்கலாம். ஆனால் நாமும் படைப்புத் திறன் பெற்றவர்களே எனும் நம்பிக்கை நிறைந்த வாழ்வியலுக்கு வழிவகுப்பது.

நாம் வாழ்வது அறிவியல் தொழில்நுட்ப யுகம், அல்லது கல்வி யுகம் என்றே அழைக்கப்படுகிறது. அறிவியலும் தொழில் நுட்பமும்தான் தொழில் புரட்சியை ஏற்படுத்தித் தொழில் நாகரிகத்தைத் தோற்றுவித்தன. அறிவியலையும், தொழில் நுட்பத்தையும் பயன்படுத்துவதன்மூலம் இரு முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

1. இயற்கை வளங்கள் என்பன நிலம், நீர் மட்டும் என்ற நிலையிலிருந்து வளர்ந்து கனிவளம், எண்ணெய் வளம் ஆகியவற்றையும் நம்மால் பயன்படுத்த முடிந்தது.

2. மனிதன் தன்னுடைய தசைவலி, தான் பழக்கிய விலங்குகளின் தசைவலி என இரண்டை மட்டும் வினை செய்வதற்குப் பயன் படுத்தும் நிலையிலிருந்து, நிலக்கரி, எண்ணெய், எரிவாயு, மின்சாரம் பின்னர் அணுப்பகுப்பு போன்றவற்றிலிருந்து ஆற்றலைப் பெற்றுப் பணி முடிக்கும் நிலைக்கு வளர முடிந்தது. இது மனித ஆற்றலின் எல்லையை எண்ணிப் பார்த்திராத அளவிற்கு விரிவாக்கியது. மனிதனின் முன்னேற்றப் பாதையின் ஒவ்வொரு கட்டத்திலும் 1950 வரை அவன் கண்ட கருவிகள், அவன் தசைவலி மூலம் பெறும் உற்பத்தித் திறனை மிகுத்தன. 1950–க்குப் பின்னர் அவன் கண்ட கணிப்பொறி அவன் மதிவலி மூலம் பெறும் உற்பத்தித் திறனை அவன் கற்பனை செய்திராத அளவிற்கு மிகுத்தது.

அறிவியல் தொழில் நுட்பம் படைத்த கருவிகளைப் பயன்படுத்தியதன் மூலம் எல்லாத் துறைகளிலும் தனி மனிதனின் உற்பத்தித் திறன் பல மடங்கு உயர்ந்தது. இன்று முன்னேறிய நாடுகட்கும், பின் தங்கிய நாடுகட்கும் உள்ள முக்கியமான வேறுபாடே உற்பத்தித் திறனில் இருக்கும் வேறுபாடுதான்.

இந்தக் கட்டத்தில் அறிவியல் தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துவதற்கான இன்றியமையாத தேவையைக் குறிப்பிட வேண்டும். பசுமைப் புரட்சியைப் பொருத்தவரை உணவு உற்பத்திச் சாதனங்களை உருவாக்கியவர்கள் அறிவியல்–தொழில் நுட்ப வல்லுநர்கள். ஆனால் உற்பத்தியைப் பெருக்கியவர்கள் விவசாயிகள்தான். அறிவியலும் தொழில் நுட்பமும் விவசாயிகளைச் சென்றடைந்த பின்தான் இந்த மாற்றம் ஏற்பட்டது.

முன்னேறியுள்ள நாட்டினர் கண்டுள்ள மேம்பாடு அறிவியலும் தொழில் நுட்பமும் தந்த வரம்தான். எனினும் அறிவியல், தொழில் நுட்பக் காணல்கள் புனைவுகள் மட்டுமே இவற்றைச் சாதித்துவிடவில்லை. அவை மக்கள் பயன்படுத்தும் வகையில் அவர்களைச் சென்றடைந்தன. அவர்களது சிந்தனையில், பார்வையில், தம்மை எதிர் நோக்கும் பிரச்சினைகளைப் பார்க்கும் முறையில், புரிந்து கொள்ளும் திறனில், அவர்களுடைய அன்றாட வாழ்க்கை முறையில், நம்பிக்கைகளில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. அந்த மாற்றங்கள்தான் அந்தச் சமுதாயங்களில் அறிவியலும், தொழில்நுட்பமும் மேலும் வளரும் சூழ்நிலையை உருவாக்கின. அறிவியல் தந்த கருவிகளை, செய்முறைகளைத் தங்கள் நலனுக்குப் பயன்படுத்தும் திறனை மக்களிடம் உருவாக்கின.

என்ன? ஏன்? எப்படி? என ஆங்காங்குக் கேள்விகளை எழுப்பும் அணுகுமுறை, அக்கேள்விகட்குப் பதில் காணும் திறனை வளர்த்தது. ஒவ்வொரு முறையான கேள்வியும், அதற்குக் கண்ட பதிலும், மனித சமுதாயத்தை ஓர் அடி முன் செல்ல உதவியது. சில சமயங்களில் புரட்சிகரமான மாற்றங்களையும் உருவாக்கியது.

நமது சமுதாயம் பரந்த அளவில் இன்னும் அறிவியல், தொழில் நுட்பச் சிந்தனையின், அணுகுமுறையின், அறிவியல் விழுமியங்களின் அறிமுகத்தைப் பெறவில்லை. நம்பிக்கைகளையே அடிப்படையாக வைத்துச் செயல்பட்ட வேளாண்மை நாகரிக வரம்புகளைத் தாண்டி வெளிவரவில்லை. காலாவதியாகிவிட்ட பல பாரம்பரியச் சுமைகளை இறக்கி வைக்கவில்லை. நமது சமுதாயத்தில் அறிவியலும் தொழில் நுட்பமும் ஆங்காங்கு ஒளி பரப்பும் மின் விளக்குகள் போல் இருக்கின்றன. அவற்றுள் சில பிரகாசமாகவும் இருக்கலாம். ஆனால் அவை பரவலாக அங்கிங்கெனாதபடி எங்கும் ஒளி வீசும் முழு நிலவு போன்று இல்லை.

வேளாண்மை நாகரிகத்தில் ஒவ்வொரு சிற்றூரும் அதற்குத் தேவையான தொழில் நுட்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்டவையாக இருந்தன. அவர்களது தேவைக்கேற்ப தச்சர், கொல்லர், குயவர், கொத்துத் தொழில் செய்வோர், காலணி செய்வோர், உடை வெளுப்போர் எனத் தன்னிறைவு கொண்ட சமுதாயமாக இருந்தது. தொழில் நாகரிகத்திலும் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தொழில் நுட்பத் திறன் உள்ளதாக ஒவ்வொரு சிற்றூரும் அமைய வேண்டும். அந்த அளவிற்கு அறிவியலும் தொழில் நுட்பமும் பரவலாக மக்கள் மன்றத்தில் இடம் பெற வேண்டும். அது பல வகையான

பருப்பொருளாக மட்டுமின்றி மக்களது பார்வையிலும், அணுகுமுறையிலும் பிரதிபலிக்க வேண்டும்.

அறிவியல் பார்வை எத்தனையோ விருப்பு, வெறுப்புகளை முழுமையாக நீக்கா விட்டாலும் கணிசமாகத் தளர்த்தும் தன்மையுடையது. கருத்துக்குத் தெளிவூட்டும் திறனுடையது. தன் முயற்சிக்கு ஊக்கமளிக்கும் கருவுடையது, வாழ்க்கையில் பல பரிமாணங்களைச் சற்றுப் புதிய கோணத்தில் பார்க்கும் வாய்ப்புகளைப் படைக்கும் வாயில்களைத் திறக்கும் இயற்கையைக் கொண்டது. இதற்கேற்ற மாற்றம் இன்னும் பரவலாக நமது நாட்டில் மக்களிடையே உருவாகவில்லை. இதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நம் தலையாய கடமை.

**ஆசிரியர் குறிப்பு**

முனைவர் வா.செ. குழந்தைசாமி கரூர் மாவட்டம் வாங்கலாம் பாளையம் என்னும் ஊரில் 14.07.1929 இல் திரு. செல்லப்பர், திருமதி மாரம்மாள் ஆகியோருக்குப் பிறந்தார். பொறியியல் பட்டம் பெற்றுள்ள இவர் சிறந்த நீர்வளத்துறை வல்லுநர். மதுரை பல்கலைக்கழகம், அண்ணா பல்லைகலைக்கழகம், புதுடெல்லி இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் துணை வேந்தராகக் கடமையாற்றியவர். சிறந்த அறிவியல் அறிஞரான இவர் சிறந்த கவிஞருமாவார். குலோத்துங்கன் என்ற புனைபெயரில் கவிதைகள் பல எழுதியவர். 'வாழும் வள்ளுவம், பாரதியின் அறிவியல் பார்வை' போன்ற உரைநடை நூல்களை எழுதியவர். வாழும் தமிழறிஞராக மொழித்தொண்டு புரிந்து வருகின்றார்.

**அருஞ்சொற்பொருள்**

கணிசம்–மிகுதியான, பாரம்பரியம்–மரபு வழி, பாமர மக்கள்–விரிந்த அறிவிலார், வாதம்–தருக்கம், காலாவதி–காலவரையறை, பரிமாணம்–அளவு, பிரச்சினை – சவால், கேள்வி.

**பொருளுணர் பயிற்சி**

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) முன்னேறியுள்ள நாட்டினர் கண்டுள்ள மேம்பாடு அறிவியலும் தொழில் நுட்பமும் தந்த________

2) நமக்கு...........எனும் ஆங்கில மருத்துவமுறை முழுமையும் புதிதானது.

**ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) அறிவியல் உலகின் மரபாகக் கூறப்படுவது என்ன?

2) அறிவியல் பார்வை என்பது யாது?

3) நாம் எந்த யுகத்தில் வாழ்கிறோம்?

4) உற்பத்தித் திறன் –விளக்குக.

இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) நாம் இன்று பயன்படுத்தும் அறிவியல் மேலைநாட்டு இறக்குமதி என்பதற்குச் சான்று கூறுக.

2) அறிவியல் பார்வையின் பயன்களை எழுதுக.

3) அறிவியலும், தொழில் நுட்பமும் வளரும் சூழ்நிலையை உருவாக்கிய மாற்றங்களை விவரிக்க.

4) கேள்விகளை எழுப்பும் அணுகுமுறையின் சிறப்பினை விவரி.

5) வேளாண்மை நாகரிகத்தில் சிற்றூர்களின் நிலை எவ்வாறு இருந்தது?

(ஈ) பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) முன்னேறிய நாடுகளில் அறிவியல், நம் நாட்டில் அறிவியல் – ஒப்பிடுக.

2) அறிவியல், தொழில் நுட்பம் மூலம் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இரண்டினை விவரித்து எழுதுக.

3) அறிவியல், தொழில் நுட்ப அணுகுமுறையில் நமது சமுதாயத்தின் நிலையை விவரி.

4) நம் தலையாய கடமையை விளக்குக.

**மொழிப்பயிற்சி**

**1. சந்திப் பிழையின்றி எழுதுக.**

பசுமை புரட்சியை பொறுத்தவரை உணவு உற்பத்தி சாதனங்களை உருவாக்கியவர்கள் அறிவியல் தொழில் நுட்ப வல்லுநர்கள்.

**2. கீழ்க்காணும் தொடரிலுள்ள பிழையைத் திருத்தி எழுதுக.**

அறிவியலும் தொழில் நுட்பமும் விவசாயிகளைச் சென்றடைந்த பின்தான் இந்த மாற்றம் ஏற்பட்டன.

**3. வாக்கிய வகை சுட்டுக.**

ஆயுர்வேதம் நீண்ட பாரம்பரியம் உடையது.

**4. கீழ்க்காணும் விடை அமையுமாறு வினா அமைக்க.**

நமது நாட்டிற்கு அறிவியல் என்பது முழுமையும் புதிதன்று.

**5. நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக.**

நமது நாட்டின் வயலிலும் வாய்க்காலிலும் காட்டிலும் மேட்டிலும் நிறைந்து வளரும் செடி கொடி போல் பரவவில்லை.

# 6. பெருந்தலைவர் காமராசர்

( திரு. முருக. தனுஷ்கோடி )

காந்தியடிகளின் தியாகம், எளிமை என்ற இலட்சியங்கள் எந்த ஆண்டில் அவரது அன்றாட வாழ்வில் அதிகமாக நிறைவேறியதோ, அதே ஆண்டில் பிற்காலத்தில் மக்களால் பெருந்தலைவர் என்று அழைக்கப்பெற்ற காமராசர் பிறந்தது பெருமைக்குரியதாகும்.

விருதுநகரில் வாழ்ந்த குமாரசாமி – சிவகாமி அம்மாள் தம்பதியருக்கு 1903ஆம் ஆண்டு ஜூலை 15ஆம் நாள் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைதான் காமராசர். முதலில் அந்தக் குழந்தைக்குப் பாட்டி பார்வதி அம்மாள் வைத்த பெயர் காமாட்சி. அன்னை சிவகாமி அம்மையார் தன் குழந்தையை 'ராசா' என்று செல்லமாக அழைத்தார். தந்தை குமாரசாமி தெய்வத்தின் பெயரையும் செல்லப் பெயரையும் இணைத்து 'காமராசு' என்று பெயரிட்டார்.

காமராசர் தமது 12ஆம் வயதில் ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும்போது பள்ளிக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டார். பின் சில ஆண்டுகள் வியாபாரத்தின் நிமித்தம் திருவனந்தபுரத்திலும் போடி நாயக்கனூரிலும் கடைகளில் இருந்தார். ஆனால் அவ்வேலைகளில் அவரது கருத்துச் செல்லவில்லை. அந்த நாளில் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டங்களை நடத்தி வந்த தலைவர்களின் கருத்துகளை ஆராய்வதில் இவர் கவனமெல்லாம் சென்றது.

அரசியல் ஈடுபாடு

1918 இல் முதல் உலகப்போர் முடிந்ததும் போரின் தன்மை குறித்துப் பத்திரிகைகளில் அன்றாடம் காமராசர் படித்து வந்தார். உலகப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து இந்திய மக்களுக்குக் காந்தியடிகள் விடுத்த அழைப்பைப் படித்தார். இரவுலட் சட்டத்தை எதிர்த்து 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 6ஆம் நாள் சத்தியாகிரகம் செய்யும்படியான அழைப்பே அது. பஞ்சாப் படுகொலை நிகழ்ச்சியே காமராசரின் வாழ்க்கையில் ஒரு

திருப்புமுனையை ஏற்படுத்தியது. 'அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துச் சுதந்திர இந்தியாவை நிறுவ அண்ணலின் தொண்டனாகப் பாடுபடுவதே தனது ஒரே இலட்சியம்' எனச் சபதம் எற்றார்.

தொடர்ந்து 1920இல் ஒத்துழையாமை இயக்கப் போரிலும், சட்ட மறுப்பு, அந்நியத் துணி எரிப்புப் போரிலும் காமராசர் இறங்கினார். 1923ஆம் ஆண்டில் காமராசர் கள்ளுக்கடை மறியலை மதுரை நகரில் முன்னின்று நடத்தினார். காந்தியடிகள் தொடங்கிய உப்புச் சத்தியாகிரகப் போரில் ஈடுபட்டு உப்புக் காய்ச்சியதற்காகக் காமராசருக்கு இரண்டு ஆண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு கலிப்புரம் சிறையில் வைக்கப்பட்டார். காமராசர் சிறை சென்றது அதுவே முதல் முறை.

## தீரர் சத்தியமூர்த்தியுடன் கொண்ட நட்பு

தீரர் சத்தியமூர்த்திக்கும் காமராசருக்கும் ஏற்பட்டிருந்த நல்றுறவு சத்தியமூர்த்தி மறையும் வரை அப்படியே இருந்தது. சத்தியமூர்த்திக்கு அரணாய் விளங்கும் பொறுப்பு காமராசருக்கு இருந்தது. காமராசரைக் கலக்காமல் சத்தியமூர்த்தி எதுவும் செய்வதில்லை.

ஒரு முறை சென்னை சர்வகலாசாலையின் துணைவேந்தர் பதவியைச் சத்தியமூர்த்திக்குக் கொடுக்கிறோம் என்று வெள்ளை அரசு கூறியது. அப்போது ஒருவர் சத்தியமூர்த்தியிடம் வந்து "துணைவேந்தர் பதவியைத் தாராளமாக ஒப்புக்கொள்ளுங்கள்" என்று கூறினார்.

சத்தியமூர்த்தி உடனே காமராசரிடம் இது குறித்து ஆலோசனை செய்தார். "தனிப்பட்டவர்கள் சட்ட மறுப்பு வரப்போகிறது. அதில் கலந்து கொள்ளாமல் துணைவேந்தர் பதவியை ஏற்றால் உங்கள் அரசியல் வாழ்க்கை என்னாவது? கண்டிப்பாய் அந்தப் பதவியை நீங்கள் ஒப்புக்கொள்ளக் கூடாது" என்று காமராசர் அழுத்தமாகக் கூறினார். அதன்படியே சத்தியமூர்த்தி நடந்தார். இதுபோலப் பல சந்தர்ப்பங்களில் சூழ்ச்சி வலைகளில் விழாமல் சத்தியமூர்த்தியைக் காமராசர் தப்பிக்கச் செய்திருக்கிறார்.

## மக்கள் விரும்பும் முதலமைச்சர்

1954ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராகக் காமராசர் பதவி ஏற்றார். காமராசர் முதலமைச்சரானதும், "நாள் முழுவதும் உழைக்கிறவர்களை வேலைக்காரர், கூலிக்காரார் என்று

குறைகூறுகிறோம். உழைப்பே இல்லாமல் பிறர் உழைப்பால் வாழ்ந்துவரும் சோம்பேறிகளை எசமானர், மகராசர் என்கிறோம். ஏழைகளின் துயரம் நீங்கவே நான் முதலமைச்சராகப் பதவி ஏற்றுள்ளேன். இல்லையேல் எனக்கு இப்பதவி தேவையில்லை'' என்று கூறினார்.

இந்தியாவில் உள்ள முதலமைச்சர்களில் முதன்மையானவர் என்பதைக் காமராசர் வெகுவிரைவில் நிரூபித்துக் காட்டினார். மனம் கலங்காமல், துணிச்சலுடன், நிதானமாக, பொறுமையுடன் பணிகளைக் கவனித்தார். எதிர்க்கட்சிகளின் கருத்துகளைக் கவனமாகக் கேட்டறிந்தார். அரசியல் சிக்கல்களை மிக எளிதில் தீர்த்தார். உண்ண உணவு, உடுக்க உடை ஆகிய தேவைகளில் அதிகமாகக் கவனம் செலுத்தினார்; குறைகளைக் கேட்டு உடனடி நடவடிக்கையில் ஈடுபட்டார். எதையும் அலசி ஆராய்ந்து விரைவில் முடிவு செய்தார். படாடோபம், முகஸ்துதி, விளம்பரம் ஆகியவற்றை வெறுத்தார். எளிமையாய் விளங்கினார். அவரால் அந்தப் பதவிக்கே ஒரு பெருமை வந்தது என்று சொன்னால் அது மிகையாகாது.

இராமநாதபுரம் கிழக்குக் கடற்கரைப் பகுதி 1955ஆம் ஆண்டு திசம்பர் மாதம் பயங்கரப் புயலாலும் பேய்மழையாலும் மிகவும் பாதிக்கப்பட்டது. நிவாரணப் பணியில் ஈடுபட்டு மக்களைக் காப்பாற்ற காமராசர் பரமக்குடிக்கு விரைந்து போனார். அந்தப் பகுதியில் ஒரு கால்வாயில் பாலம் ஒன்றை வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. அந்தக் கால்வாயைத் தாண்டினால் இராமநாதபுரம் போய்விடலாம். சாரக்கயிறு ஒன்றைப் பிடித்தார் காமராசர். மார்பளவு தண்ணீரில் இறங்கி மறுகரை சென்றார். மறுநாள் காய்ச்சல் வந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

ஒவ்வொரு தடவையும் காமராசர் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு வரும்போது, பல புதுத் திட்டங்களுடனேயே வருவார். அந்தத் திட்டங்கள் அனைத்தும் ஏழைகளுக்காவே அமைந்திருக்கும்.

### காமராசரின் கல்விப் பணி

கல்வியைக் 'கண்' என்று போற்றியவர்கள் தமிழர்கள். 'அறிவாளிகள் நிறைந்தது தமிழ்நாடு' என்ற பெருமை நமக்கு ஏற்பட்டதும் இதனால்தான். இந்தத் தமிழ்க்குலத்தில் தோன்றிய காமராசர் தமது ஆட்சிக்காலத்தில் கல்வித்துறையில் செய்த மாபெரும் புரட்சி அழியாச் சிறப்புடையதாகும். 'படிக்கக் கல்வி நிலையங்கள் வேண்டும். வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை உண்டு என ஆன பின்பு, படிக்காமல் இருப்பது தவறு' என்பதைக் காமராசர் உணர்ந்தார்.

முதல் திட்ட முடிவில் 21,500 ஆக இருந்த ஆரம்பப் பள்ளிகளின் எண்ணிக்கை 30,000–க்கும் மேலாக உயர்த்தப்பட்டது. பள்ளிகளில் சேர்ந்து படிக்கும் மாணவர் எண்ணிக்கையும் உயர்ந்தது. கல்வியின் சிறப்பை உணராத மக்கள் சின்னஞ்சிறு குழந்தைகளைக் கல்லாத மூடராக்கி வரும் தீமைதனைக் கண்டு வெகுண்டார் காமராசர். கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தை உருவாக்கினார். இன்று பல்லாயிரக்கணக்கான கிராமங்களில் இது நிறைவேறியுள்ளது.

வறுமையால் மெலிந்த உடல், ஒளியில்லாத கண்கள், எண்ணெய் இல்லாத தலை, உடையில்லாத உடம்புடன், ஒதுங்கி வாழக் குடிசை, வயிறார உணவு, ஒரு வேளைக் கஞ்சி ஆகியவை இல்லாத ஏழை, எப்படித் தன் குழ்ந்தையைப் பள்ளிக்கு அனுப்புவான்?

ஒரு வேளையாவது, குழந்தைகளுக்கு உணவு அளித்தால் பள்ளிக்குப் பிள்ளைகளை அனுப்பும் ஆசை, பெற்றோர்க்கு ஏற்படுமே! இதைக் காமராசர் உடனே செய்தார்.

இலவச மதிய உணவுத் திட்டம் இலட்சக்கணக்கான குழந்தைகளைப் பள்ளிக்கு வரச் செய்தது. உலக நாடுகள் பலவும் இத்திட்டத்தைப் பாராட்டின. ஓர் அமெரிக்க அறிஞர் அமெரிக்காவில் இதைப் பிரபலப்படுத்தப்போவதாக ஒரு முறை அறிவித்தார். பண்டித நேரு இத்திட்டத்தைக் கண்டு உள்ளம் பூரித்தார்.

அத்துடன் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகம், பலகை, ஆகியவை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஏழைச் சிறுவர்களுக்கு இலவசமாகச் சீருடை வழங்கும் திட்டம் வகுக்கப்பட்டு அமல் செய்யப்பட்டது.

கல்வித்துறையில் காமராசர் ஆற்றிய பணிகள், அவரது புரட்சிகரமான திட்டங்கள் மக்களிடையே கல்வி ஆர்வம் கரை புரண்டு ஓட வித்துகளாக அமைந்தன. அதன் பலனாக இன்று தமிழகத்தில் ஆரம்பப் பள்ளிகள் இல்லாத கிராமங்களே கிடையாது என்ற பெருமிதமிக்க நிலை ஏற்பட்டுள்ளது. பள்ளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கிய அதே சமயம் கல்வித் தரத்தைப் பாதுகாக்கவும் உயர்த்தவும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### காமராசர் ஆட்சியில் தொழில் வளர்ச்சி

காமராசர் காலத்தில் செய்து முடிக்கப்பட்ட முக்கியமான பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் விவசாயிகள் வயிற்றில் பால்வார்த்தன.

கீழ்பவானி, மணிமுத்தாறு, காவிரி வடிகால், ஆரணி ஆறு, வைகை நீர்த்தேக்கம், அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி, புள்ளம்பாடி, வீடூர் நீர்த்தேக்கம், பரம்பி குளம், நெய்யாறு ஆகிய அணைக்கட்டுகள் அவர் காலத்தில் நிறைவேற்றப்பட்டன. அதன் காரணமாக விவசாய வளர்ச்சி வேகப்படுத்தப்பட்டது.

தொழில் வளர்ச்சி ஏற்பட்டதும் காமராசரின் காலத்தில்தான் எனக் கூறவேண்டும். கோடிக்கணக்கான ரூபாய் மூலதனத்தில் பல தொழிற்சாலைகள் இவர் காலத்தில்தான் உருவாயின. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம், நீலகிரி கச்சா பிலிம் தொழிற்சாலை, கிண்டி கிங் நிறுவனம், சர்க்கரை ஆலைகள், சோடா உப்புத் தொழிற்சாலைகள், சிமெண்ட் தொழிற்சாலைகள், பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை ஆகியவை இவர் ஆட்சியில் ஏற்பட்டன. கிராமப் பகுதிகளுக்கு மின்சாரத்தைக் கொண்டு செல்லும் திட்டத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை இடம் வகித்தது.

காமராசரின் பண்புநலன்கள்

காமராசர் கொடி பறக்கும் கோட்டையில் மட்டும் வீற்றிருக்கவில்லை. நாட்டு மக்களின் உள்ளங்களிலெல்லாம் அவர் தனக்கென ஒரு கோட்டை கட்டிக் கொண்டு அன்பு வடிவாய் ஆட்சி புரிந்தார். அரசியல் வரலாற்றில் குடிசைக்கும் கோட்டைக்கும் பாலம் அமைத்த ஒரே தலைவர் காமராசர்தான். பதவி ஆசை இல்லாதவர்; இரண்டு பிரதமர்களை உருவாக்கியவர்.

பொதுவாக அவர் காலை 7 மணிக்குத் தூங்கி எழுவது வழக்கம். காலையில் பத்திரிகைகளைப் படிப்பார். பின், தன்னைப் பார்க்க வந்தவர்களுக்குப் பேட்டிகொடுப்பார். அவர்களுக்குத் தக்கவாறு பதில் அளித்து, நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதி கூறுவார். எத்தனை பேர் வந்தாலும் அத்தனை பேரையும் அழைத்துப் பேசுவார். அவசியமான உதவியைச் செய்யும் அவர் சாதி, மதம், தெரிந்தவர், தெரியாதவர், கட்சிக்காரர், எதிர்க் கட்சிக்காரர் என்று பார்ப்பது இல்லை. உதவி பெறுவதற்குரிய அவசியமும் நியாயமும் தகுதியும் இருந்தால் அவர்களுக்கு நிச்சயமாக உதவுவார்.

காமராசர் மறைவு

மக்கள் போற்றும் தலைவராக விளங்கிய காமராசர் 1975ஆம் ஆண்டு அக்டோபர் 2ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். இந்தியா முழுமையும்

துயரத்தில் மூழ்கியது. அந்த நாள் காந்தியடிகள் பிறந்த நாளாகும். அந்நாளையொட்டி தான் இறக்கும் சில மணி நேரங்களுக்கு முன்பாக அவர் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியே காமராசரின் கடைசிச் செய்தியாகும். அதில் அவர் கூறியிருந்ததாவது:

"அக்டோபர் 2ஆம் தேதி மகாத்மா காந்தி பிறந்த தினவிழா. அன்று நாம் எல்லோரும் காந்தியடிகளை மனத்தில் நினைத்து அவரது உயர்ந்த இலட்சியங்களையும் திட்டங்களையும் மக்களிடையே நினைவுபடுத்துவோமாக. மனித சமுதாயத்தில் இருக்கும் போட்டி, பொறாமை, ஏற்றத்தாழ்வுகளை நீக்க அமைதியான முறையில் காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்றி மனித சமுதாயம் உயர்வதற்கு நாம் அனைவரும் பாடுபடுவோமாக".

இந்தச் செய்தியைத் தாரக மந்திரமாக அனைவரும் நெஞ்சிற் பதித்து வளமான தமிழகம் உருவாகச் செயல்படுவோம். பெருந் தலைவர் வழியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணிசெய்து அவர் நினைவைப் போற்றுவோம்.

(முருக. தனுஷ்கோடி எழுதிய 'காமராஜ் ஒரு சரித்திரம்' எனும் நூலிலிருந்து எடுத்தாளப்பெற்றது).

ஆசிரியர் குறிப்பு

திரு. முருக. தனுஷ்கோடி விருதுநகரில் பிறந்தவர். பெருந்தலைவர் காமராசருடைய இனிய நண்பர். பள்ளியில் உடன்பயின்றவர். 'நவசக்தி' இதழின் நிறுவனர்–ஆசிரியர். சுதந்திரப் போராட்ட வீரர். திருமணம் செய்து கொள்ளாமல் பெருந்தலைவருடன் நாட்டுப்பணி ஆற்றியவர்.

**அருஞ்சொற்பொருள்**

நிமித்தம் – காரணமாக, அரணாய் – பாதுகாவலனாய், கலக்காமல் – ஆலோசிக்காமல், சர்வகலாசாலை – பல்கலைக்கழகம், சந்தர்ப்பம் – நேரம், படாடோபம் – ஆடம்பரம், முகஸ்துதி – பொய்யான புகழ்ச்சி, வெகுண்டார் – சினங்கொண்டார், பூரித்தார் – மிகவும் மகிழ்ந்தார், அமல் செய்யப்பட்டது – நடைமுறைப்படுத்தப்பட்டது.

பொருளுணர்திறன் பயிற்சி

அ. பொருத்துக

| | | |
|---|---|---|
| 1) கிண்டி | – | இரயில் பெட்டித் தொழிற்சாலை |
| 2) பெரம்பூர் | – | கிங் நிறுவனம் |
| 3) நீலகிரி | – | காகிதத் தொழிற்சாலை |
| 4) மேட்டூர் | – | கச்சா பிலிம் தொழிற்சாலை |

**ஆ. சரியான விடையை அறிந்து எழுதுக.**

1) ஒத்துழையாமை இயக்கப் போர் நடந்த ஆண்டு______ (1919, 1920, 1923)

2) காமராசரின் வாழ்வில் ஒரு திருப்புமுனை ஏற்படுத்தியது ______ (பஞ்சாப் படுகொலை, உப்புச் சத்தியாகிரகம், கள்ளுக்கடை மறியல்)

3) பண்டித நேரு கண்டு உள்ளம் பூரித்தது காமராசரின் ______, (மதியவுணவுத் திட்டம், சீருடைத் திட்டம், இலவசப் புத்தகம் பலகை வழங்கும் திட்டம்)

**இ. கோடிட்ட இடத்தை நிறைவு செய்க**

1) தீரர் சத்தியமூர்த்திக்கு ______ விளங்கும் பொறுப்பு காமராசருக்கு இருந்தது.

2) இராமநாதபுரம் கிழக்குக் கடற்கரைப் பகுதி ______ ஆம் ஆண்டு ______ மாதம் பயங்கரப் புயலாலும் பேய்மழையாலும் மிகவும் பாதிக்கப்பட்டது.

**ஈ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) காமராசர் எங்கே எப்பொழுது பிறந்தார்? அவரது பெற்றோர் யாவர்?

2) 'படிப்பிலும், வேலையிலும் காமராசருக்குக் கருத்துச் செல்லவில்லை. ஏன்?

3) எதைத்தான் ஒரே இலட்சியம் எனக் காமராசர் சபதம் செய்தார்?

4) தமிழகத்தின் முதல்வராகக் காமராசர் எப்போது பதவியேற்றார்?

5) காமராசரால் முதல்வர் பதவிக்கே ஒரு பெருமை வந்தது எதனால்?

6) உலகநாடுகள் எல்லாம் பாராட்டிய திட்டம் எது? அதன் விளைவு யாது?

7) மக்களிடையே கல்வியார்வம் கரைபுரண்டு ஓட வித்துகளாக அமைந்தவை யாவை?

8) காமராசாரின் நினைவை எவ்வாறு போற்றவேண்டும்?

**உ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) காமராசர் நடத்திய விடுதலைப் போராட்டங்களையும், அதன் விளைவையும் கூறுக.

2) முதலமைச்சர் பதவி ஏற்றவுடன் நாட்டுமக்களின் நிலைகுறித்துப் பெருந்தலைவர் கூறியவை யாவை?

3) இந்திய மாநில முதல்வர்களில் தாம் முதன்மையானவர் என்பதைக் காமராசர் எங்ஙனம் நிரூபித்தார்?

4) அஞ்சாநெஞ்சங்கொண்டவர் காமராசர் என்பதை விளக்கும் நிகழ்ச்சியை விவரி.

5) முதல் திட்ட முடிவில் காமராசர் ஆற்றிய கல்விப் பணியை விளக்குக.

6) 'ஏழை, எப்படித் தன் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவான்?' என்று காமராசர் கூறுவது ஏன்?

7) காமராசரின் ஆட்சிக்காலத்தில் தமிழகத்தில் செய்து முடிக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் என்னென்ன?

8) காமராசரின் பண்புநலன்களை எழுதுக.

9) காமராசர் நாட்டுமக்களுக்கு விடுத்த கடைசிச் செய்தி யாது?

**ஊ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தீரர் சத்தியமூர்த்திக்கும் பெருந்தலைவர் காமராசருக்கும் இருந்த நட்பினை விளக்குக.

2) 'கல்விக்கண் திறந்தவர் காமராசர்' என்பதை நிறுவுக.

3) காமராசரின் ஆட்சியில் தமிழகம் அடைந்த தொழில் வளர்ச்சியை விவரி.

மொழித்திறன் பயிற்சி

**1. சந்திப் பிழையின்றி எழுதுக.**

நம் நாட்டில் பலர் வறுமை காரணமாக ஆறாம் வகுப்பு படித்து கொண்டிருக்கும்போதே பள்ளிக்கு செல்வதை நிறுத்தி கொள்கின்றனர்.

**2. வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.**

நஞ்சையெல்லாம் புஞ்சையாய் வறண்டு போச்சு

3. மரபுப் பிழை நீக்கி எழுதுக.

களிறு கத்தும், புலி முழங்கும்

4. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.

அந்நிய ஆடைகளைப் பகிஷ்கரித்தனர்.

5. ஒருமை, பன்மை பிழையை நீக்கி எழுதுக.

மக்களின் உள்ளத்தில் நல்லுணர்வுகள் நிறைந்திருந்தது.

6. வாக்கிய வகை இன்னதென்று சுட்டுக.

1) பொன்செய்கொல்லன் தன் சொல் கேட்ட யானோ அரசன்

2) எங்கிருந்தாலும் வாழ்க.

**7. கீழ்வரும் வாக்கியம் விடையாக அமையுமாறு வினா அமைக்க.**

இயற்கையை வென்ற மாந்தரினம் செயற்கைச் சேற்றில் சிக்கி மீளமுடியாமல் தவிக்கிறது.

**8. கீழ்வரும் உரையாடலைச் செய்தியாக மாற்றுக.**

மகன்:அம்மா! பள்ளிக்குப்போய் வருகிறேன்; மாலையில் தான் வருவேன்; மதியம் வரமாட்டேன்.

**9. நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.**

இலக்கியங்கள் காட்டும் சுவை எண்வகைப்படும் அவை வருமாறு நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்பன

# 7. நடைமுறை அறங்கள்

( முனைவர் வ. சுப. மாணிக்கம் )

## கடமைத் தொண்டு

ஒவ்வொருவர்க்கும் இரு கடமைகள் உண்டு. ஒன்று வீட்டுக் கடமை, மற்றொன்று சமுதாயக் கடமை. இவற்றுள் வீட்டுக் கடமை வெளிப்படையானது, இயல்பானது. 'இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன்' என்று வள்ளுவர் குறிப்பிடுவர். பெற்றோர்க்கும் சுற்றத்தார்க்கும் குடும்பத்துக்கும் குழந்தைகட்கும் செய்வன வெல்லாம் பள்ளத்து நீரோட்டம்போல மிக இயல்பான கடமைகளாகும். இவற்றைச் செய்வதால் புகழ் வருவதில்லை. செய்யாவிட்டாற்றான் பழி வரும். குழந்தை வளர்ச்சி, குடும்பவுறவு, குடும்பக்காப்பு, குடும்பப் பொருளாதாரம், குடிக்குணம் இவையெல்லாம் சிறிய செயல்கள் அல்ல. இதனை 'இல்லாண்மை' என்று பாராட்டுவர் வள்ளுவர். பேராறு நேரே வயலை வளப்படுத்தாது. சிறு வாய்க்கால்தான் வயலை வளமாக்கும். ஆதலின் நன்றாகத் தன் குடும்பத்தை நடத்துவாரை நாட்டின் ஒரு பகுதிக் கடமையைச் செய்பவராகவே மதிக்க வேண்டும். 'குடிசெயல்வகை' என்ற அதிகாரத்தில், தன் குடும்பம் பேணுவதை ஒரு பெருங் குறிக்கோளாகக் கருத வேண்டும் என்று திருக்குறள் வலியுறுத்தும்.

குடும்பக் கடமை சிறந்தது என்றாலும் அதனைத் தொண்டு என்று கூறுவதில்லை. குடும்பக் கடமிகளைக் குடும்பத் தொண்டர்கள் என்று புகழ்வதுண்டா? குடும்பந் தாண்டிச் செய்யும் சமுதாயக் கடமைகளே தொண்டு எனப்படும். இன்றைய மக்கள் மனப்பான்மையில் தனக்கு என்ற உணர்ச்சி வளர்கின்றதா? சமுதாயத்திற்கு என்ற உணர்ச்சி வளர்கிறதா? என்று மதிப்பீடு செய்தால், எல்லாம் தனக்கு என்ற குறு எண்ணமே தடிக்கக் காண்கின்றோம். தேவைப் போராட்டம் தன்னலவுணர்ச்சியைப் பல மடங்கு பெருக்கிவிட்டது. ஈட்டிய எல்லாம் எனக்கே போதா என்ற மனமை ஊறிப் பீறுகின்றது. குடியரசு என்ற முறையில் சமுதாயத்துக்கு வேண்டியவற்றை அரசு செய்யட்டும் என்று கழித்துவிடுகின்றோம்.

அரசு சமுதாயப் பெருநலங்களைச் செய்தாலுமே மக்கள் செய்யவேண்டிய சமுதாயத் தொண்டுகளும் பலவுள. சிறுதுளி பெருவெள்ளம், ஒரு பிடி பலபடி என்பது போல ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற பொதுத் தொண்டு செய்தால் சமுதாயம் கூட்டுவளம் பெறும்.

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல். (33)

எவ்வகையாலும் முடிந்த அளவு பொதுத் தொண்டு செய்து கொண்டிருக்க வேண்டும். எவ்விடத்து எவ்வளவு என்பதனை அவரவர் தீர்மானித்துக்கொள்ள வேண்டியது என்று வள்ளுவர் பொதுப்படச் சொல்லுவர். மக்களினம் பெருகி வரும் இக்காலத்தில் தொண்டுக்கு இடமும் பெருகியுள்ளது. பொருளிருந்து தொண்டு செய்ய வேண்டும் என்பதில்லை. பொருளில்லாமலே எவ்வளவோ தொண்டுகள் செய்யலாம். மேலும் தொண்டுகளில் சிறியன பெரியன என்ற வேறுபாடும் இல்லை. வீதியிற் கிடக்கும் முள்ளினை, கண்ணாடித்துண்டினை, இலாடத்தைக் குனிந்து எடுத்து ஒதுப்புறமாகப் போடுவது தொண்டில்லையா? வீட்டில் கூட்டிய குப்பையை வீதியில் எறியாது வீட்டுக் குழியில் போடுவதும், கொண்டு சென்று வீதித் தொட்டியிற் போடுவதும் சமுதாயத் தொண்டு. கண்டவிடங்களில் காறித் துப்பாமை, பொதுவிடங்களைக் கெடுக்காமை, சுவர்களில் கண்டபடி எழுதாமை, காம விளம்பரங்கள் ஒட்டாமை இவையெல்லாம் சிறியனவாகத் தோன்றினாலும், சிறந்த சமுதாயத் தொண்டுகளாகும். புகைவண்டிகளில் பிறர்க்கும் இடங்கொடுத்தல், முதியவர்க்கும் நோயாளர்க்கும் மிக்க இடவசதியளித்தல், பொருள்களை அளவாக எடுத்துச் செல்லுதல் எல்லாம் சமுதாய நலங்களே. விளம்பரப் பலகைகளில் மொழிப் பிழைகள் இருந்தால் அவற்றைத் திருத்துவதும் ஒரு சமுதாயத் தொண்டெனவே கருதவேண்டும். இங்ஙனம் பொது நலங்கள் பல யாரும் செய்யலாம். இவற்றைச் செய்வதற்குப் பணம் வேண்டுமா?

சமுதாயத் தொண்டு என்பது யாரோ பெரியவர்கள் செய்யவேண்டிய செயல் என்று மலைக்கவேண்டா, ஒதுக்க வேண்டா. குடும்பக்கடமையும் சமுதாயத் தொண்டும் சேர்ந்து செய்ய முடியாது என்று தவறாக எண்ண வேண்டா. தன் தோட்டத்தில் மரம் வைப்பது குடும்பக் கடன். தன் வீட்டுக்கு முன்னே பொது வீதியில் மரம் வைப்பது சமுதாயக் கடன். தன் குழந்தைக்குப் பாடஞ் சொல்லிக் கொடுப்பது குடும்பக் கடன். அதனோடு இன்னொருவர் குழந்தையையும் உடன்வைத்துச் சொல்லிக் கொடுப்பது சமுதாயக் கடன். இவற்றைப் பெரியவர்களாகித்தான்

செய்யவேண்டுமா? இவற்றைச் சிறு பருவ முதல் செய்து பெரியவர்களாகக் கூடாதா? எப்பருவத்தினரும் எந்நிலையினரும் செய்யக்கூடிய சமுதாய நலங்கள் ஏராளமாக உள்ளன. இவற்றைச் செய்வதற்குப் பணம் தேவையில்லை, மனமே தேவை; அழைப்புத் தேவையில்லை, உழைப்பே தேவை. அறிவுகூடத் தேவையில்லை; அன்பேதேவை.

சொல்லொழுக்கம்

மனிதப் பிறப்பு மிக உயர்ந்தது. அவ்வுயர்வுக்கு ஒரு காரணம் மக்கள் பேச்சாற்றல் பெற்றிருப்பது.

மனிதன் ஏன் பேசுகின்றான்? தன் கருத்தை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காகப் பேசுகின்றான் என்று பொதுவாக நினைத்துக் கொண்டிருக்கின்றோம். மொழியின் நோக்கம் கருத்துப் பரிமாறிக் கொள்வதன்று, காரியம் பரிமாறிக் கொள்வது. செய்தி தெரிவிப்பதற்காகப் பேசவில்லை. மக்கள் வாய் செய்தித்தாள் இல்லை. செய்தியைச் சொல்லிச் சில காரியம் முடித்துக்கொள்வதற்காகப் பேசுகின்றோம். இதுவே மொழியின் பயன்.

காரியம் முடித்துக் கொள்வதற்குப் பேச்சு வேண்டும் என்றால், அப்பேச்சுக்கு ஒரு நற்பண்பு வேண்டும். தண்ணீராலன்றி வெந்நீரால் பயிர் விளையாது. இன்சொல்லாலன்றி வன்சொல்லால் காரியம் முடியாது.

**நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று**
**பண்பின் தலைப்பிரியாச் சொல். (97)**

என்ற குறளால் பேச்சுக்குப் பண்பு வேண்டும்; பண்பு என்ற தடத்தினின்று பேச்சு என்ற நடைவண்டி விலகக்கூடாது என்று வலியுறுத்துவர் வள்ளுவர்.

பேச்சுப் பண்பு என்பது என்னை? பிறரை இகழாமை; இழிந்த சொற்களால் ஏசாமை. திருக்குறள் பல அறங்களைப் பலபட மொழிந்தாலும், எல்லா அதிகாரங்களிலும் குருதியோட்டம்போல ஓடுகின்ற ஒரு பொதுவறம் உண்டு. அதுதான் பேச்சொழுக்கம். யாரிடத்துப் பேசினாலும் எந்நிலையிற் பேசினாலும் பணிவுடையன் இன்சொலனாதல் வேண்டும். இதுதான் நன்மனிதன் என்பது காட்டும் நாகரிக அடையாளம்.

நம் வாழ்க்கையில் நாள்தோறும் எவ்வளவு உரையாடுகின்றோம். எத்துணை மக்களோடு சொல்லாடுகின்றோம்; எது எதற்கெல்லாம் பேச்சுத் தொடுக்கின்றோம்? பாலும் பருவமும் வேறுபட்ட, மொழியும் நிலையும் வேறுபட்ட, அறிவும் அன்பும் உணர்ச்சியும் வேறுபட்ட மனித குலங்களோடு

பழகுகின்றோம். நா என்னும் துடுப்பால் மொழி என்னும் நாவாயை ஒட்டிக்கொண்டு மனிதப் பெருங்கடலில் வாழ்வுக் கரைகாண மிதக்கின்றோம். மொழித்தெப்பம் நன்முறையில் புரையின்றி இயங்கவேண்டும் என்றால், வள்ளுவர் கூறுவதுபோல யார்மாட்டும் இன்புறும் இன்சொல் வேண்டும். பண்பற்ற பேச்சு படியற்ற இல்லத்தையும் அடியற்ற உடலையும் ஒக்கும்.

மனிதவுறவு என்பது பேச்சுறவு. நண்பர்கள்தானே என்று நண்பர்களைக் கேலி செய்யக்கூடாது. பகைவர்கள் என்றும் பகைவர்கள் அல்லர். ஆதலின் அவர்களையும் ஓயாது இகழ்ந்து சிறுசொல் சொல்லக்கூடாது. நண்பர்களை எஞ்ஞான்றும் நண்பர்களாக வைத்துக்கொள்ள வேண்டும். பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் முயற்சி வேண்டும். இதற்கு ஒரேவழி பேச்சில் இகழ்ச்சியின்மை.

ஏனை உயிரினங்கட்கு உண்ணப் பயன்படும் 'நா' மனிதனுக்குச் சொல்லவும் பயன்படுகின்றது. சிறுசொற் பேசிப் பிறரை வடுப்படுத்தும் கொடுநாவாக இல்லாமல், இன்சொல் மொழிந்து யாவரையும் அணைக்கும் செந்நாவாக விளங்க வேண்டும். நம்மிற் சிறியரையும் இகழக்கூடாது. நம்மைச் சின்னவன் என்று தூற்றித் தூண்டியபோதும் இழிவுரை வரக்கூடாது. 'தன்மதிப்பு என்பது தன் நாவின் மதிப்பு. தற்பண்பு என்பது தன் நாவின் சொற்பண்பு. தன்னுடைமை என்பது தன் நாவின் அடக்கமுடைமை.' "என் நாவிலிருந்து இழிசொற் பிறவாது. என் நா எதிரியையும் இழிவு பேசாது. 'என் நா நிறத்தாலும் செந்நா, தரத்தாலும் செந்நா." இதுவே உண்மை மனிதனின் உயர்ந்த குறிக்கோள். இது அரிய குறிக்கோளாயினும் தன் மனிதப் பிறப்பை மதிப்பவனுக்கு உரிய குறிக்கோளகும்.

> யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

நாகாக்க என்பது பொய்யில்புலவர் முடிவாகக் கூறும் பெரிய எச்சரிக்கை. பிறரை இகழ நா வளையும்போது இவ்வெச்சரிக்கையை நினைவுகொண்டு அடங்குவோமாக.

ஆசிரியர் குறிப்பு

டாக்டர் வ. சுப. மாணிக்கம் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள மேலைச் சிவபுரியில் 17.3.1917இல் பிறந்தவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா கல்லூரி ஆகியவற்றில் தமிழ் விரிவுரையாளராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணிபுரிந்தவர்; மதுரைப் பல்கலைக் கழகத் துணை

வேந்தராகப் பணியாற்றியவர்.

இவர் 'வள்ளுவம், இரட்டைக் காப்பியங்கள், தொல்காப்பியப் புதுமை, தமிழ்க்காதல், நெல்லிக்கனி, உரைநடைத் திருக்குறள், ஒப்பியல் நோக்கு' என்னும் தமிழ் நூல்களும் நான்கு ஆங்கில நூல்களும் எழுதியுள்ளார்.

அருஞ்சொற்பொருள்

இல்லாண்மை – குடியினை ஆளும் தன்மை, நன்றி – நன்மை, ஏசாமை – பழிச்சொல் சொல்லாமை, நாவாய் – மரக்கலம்; புரை – குற்றம்; வடு – பழி; குற்றம்; சோகாப்பர் – துன்பப்படுவர் (வருத்தமடைவர்)

பொருளுணர் திறன் பயிற்சி

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1) பொது வீதியில் மரம் வைப்பது
   1. சமுதாயக்கடன் 2. குடும்பக்கடன் 3. நாட்டுக்கடன்
2) தன்னுடைமை என்பது
   1. நாவின் அடக்கமுடைமை 2. செல்வமுடைமை 3. அறிவுடைமை

**ஆ. கோடிட்ட இடத்தை ஏற்ற சொல்லால் நிரப்புக.**

1) தன் மதிப்பு என்பது தன் ________ .
2) என் நா நிறத்தாலும் ________ செந்நா.

**இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) கடமைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2) 'இல்லாண்மை' என்று வள்ளுவர் குறிப்பிடுவதை எழுதுக.
3) சமுதாயம் கூட்டுவளம் பெறும் – எப்பொழுது?
4) சமுதாய நலங்கள் செய்ய எவை தேவை? எவை தேவையில்லை?
5) பேச்சுப் பண்பு என்பது யாது?
6) நன்மனிதன் என்பதனை வெளிப்படுத்தும் நாகரிக அடையாளம் எது?
7) பொய்யில் புலவர் கூறும் பெரிய எச்சரிக்கையை எழுதுக.

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) வீட்டுக் கடமை என்பது யாது?
2) இன்றைய மக்கள் மனப்பான்மை எத்தகையது?
3) குடும்பக் கடமையுடன் இணைந்ததே சமுதாயக் கடமை என்பதனை விளக்குக.
4) மொழியின் பயனைக் கூறுக.
5) பேச்சுக்கு வேண்டுவதாக வள்ளுவர் கூறுவன யாவை?
6) இகழ்ச்சியின்மையின் சிறப்பினை எழுதுக.

**உ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) தொண்டினைச் செய்யப் பணம் அவசியமன்று என்பதனை ஆசிரியர் எங்ஙனம் விளக்குகிறார்?

2) நாவைப்பற்றி ஆசிரியரின் கருத்தை விவரித்து எழுதுக.

**மொழித்திறன் பயிற்சி**

1. **சந்திப் பிழையின்றி எழுதுக.**

   பண்பற்றப் பேச்சுப் படியற்ற இல்லத்தையும் அடியற்ற உடலையும் ஒக்கும்.

2. **கீழ்க்காணும் தொடரில் உள்ள பிழையைத் திருத்தி எழுதுக.**

   பேச்சுக்கு ஒரு நற்பண்புகள் வேண்டும்.

3. **வாக்கிய வகை சுட்டுக**

   கண்ணாடித் துண்டினை, இலாடத்தைக் குனிந்து எடுத்து ஒதுக்கப்புறமாகப் போடுவது தொண்டில்லையா.

4. **கீழ்க்காணும் விடை அமையுமாறு வினா அமைக்க**

   விளம்பரப் பலகைகளில் மொழிப்பிழைகள் இருந்தால் அவற்றைத் திருத்துவதும் ஒரு சமுதாயத் தொண்டெனவே கருத வேண்டும்.

5. **நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக**

   பேச்சுப்பண்பு என்பது என்னை பிறரை இகழாமை இழிந்த சொற்களால் ஏசாமை

6. **கீழ்வரும் சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்திப் பொருள் எழுதுக.**

   கடன், நாட்டம், இல்லாமை, ஈட்டல்

# 8. மழைநீர் சேகரித்தல்

( திரு. சு. பரமசிவன் )

மாமழை போற்றுவோம்

இந்த உலகம், நிலம், நீர், தீ, காற்று, வானம் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் ஆனது. அவற்றின் இயக்கங்களால், உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அவற்றுள்ளும் நீரின்றி, உலகில் எந்த உயிரும் இயங்க இயலாது. அதனால்தான் திருவள்ளுவர் 'நீரின்றி அமையாது உலகு' என்று கூறிப்போந்தார். அந்நீரைத் தருகின்ற மழையின் சிறப்பை, இன்றியமையாமையை உணர்ந்து, திருக்குறளில் வான்சிறப்பு என்றோர் அதிகாரம் படைத்துப் புகழ்ந்துரைக்கின்றார் அப்பெருமகனார். மேலும் வானம், தன் பயனாகிய மழையைத் தராவிடில், இவ்வுலகில் தானம், தவம் ஆகிய இருபெருஞ்செயல்களும் நடைபெறாவென்றும், மழைப் பயன் குன்றுமாயின் தெய்வத்திற்குச் செய்யப்படும் அன்றாட வழிபாடுகளும் பிற விழாச் செயற்பாடுகளும்கூடக் குன்றும் எனவும் கூறுகின்றார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் 'மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்' என்று மழையைப் போற்றி வணங்கியே தம் காப்பியத்தைத் தொடங்குகின்றார். மேலும் 'மழையின்றி மாநிலத்தார்க்கு இல்லை, மாரியல்லது காரியமில்லை' என்பன போன்ற முதுமொழிகளும் மழையின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றன.

மழைத் தெய்வம்!

நம்நாட்டில் தொன்றுதொட்டு மழையைத் தெய்வமாக வணங்கும் மரபு இருந்து வருகிறது. சிற்றூர்களில் பரவலாகவும் நகரங்களில் சில பகுதிகளிலும், மாரியம்மன், முத்துமாரி, மாரியாத்தாள், கருமாரி போன்ற பெயர்களில் வழிபடப்படும் தெய்வம், மழையேயாகும்.

மாரி மாறி விட்டது

இத்தகைய மழை, பழங்காலத்தில் மாதம் மூன்று முறை பெய்ததாகப் புராணங்களும் சமய இலக்கியங்களும் கூறுகின்றன. 'தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து' என்றும், 'மன்னவர் தேசத்தில்

மாதம் மும்மாரி' என்றும் வருவன அதற்குரிய சான்றுகளாம். ஆனால், இக்காலத்தில் மாதம் மும்மாரிக்குப் பதிலாக, மாதமும் மாறி அல்லவா பெய்கின்றது! ஆம், ஆனி மாதம் பெய்யவேண்டிய மழை புரட்டாசியிலும், ஐப்பசி கார்த்திகைகளில் பெய்யவேண்டிய மழை தை, மாசிகளிலுமல்லவா பெய்கின்றது. சில காலங்களில், மழை பெய்யாமல் பொய்த்தும் விடுகின்றது. விளைவு? தண்ணீர்ப் பற்றாக்குறை. இந்த மாற்றத்திற்கு வளிமண்டலத்தில் உள்ள ஓசோன் படுகையில் ஏற்பட்ட பாதிப்பே காரணம் என்பது அறிவியலாளர் கருத்து. அந்த நிலை நீங்கக் குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவேண்டும் என்கின்றனர்.

## சிக்கனம் மட்டும் போதுமா?

இன்றைய உலகில் 'சிக்கனம் தேவை இக்கணம்' என்னும் முழக்கத்தை எங்கும் கேட்கின்றோம். செல்வத்தைச் செலவு செய்வதில் சிக்கனமாக உள்ளோம். எரிபொருள்களான பெட்ரோல், எரிவாயு முதலானவற்றைச் சிக்கனமாகக் கையாளுகிறோம். குடிநீரை வீணாக்காமல் சிக்கனமாகச் செலவு செய்கின்றோம். காலம் பொன் போன்றது என்று கூறிக் காலநேரத்தையும் சிக்கனமாகக் கழிக்கின்றோம். வளங்களின் பற்றாக்குறையைத் தவிர்க்கச் சிக்கனமாக இருந்தால் மட்டும் போதாது, அவற்றைப் பெருக்குவதற்கான வழிவகைகளைப் பற்றியும் சிந்தித்துச் செயற்படுத்தவேண்டும் அல்லவா?

## பற்றாக்குறை ஏன்?

இயற்கை வளங்கள், குறிப்பாக நீர்வளம் பற்றாக்குறை ஏற்பட என்ன காரணம் என்பதைச் சிந்திப்போம்.

நம் பாரத நாடு பழம்பெரும் நாடு. இந்நாட்டில் இமயம் முதல் குமரி வரை சிந்து, கங்கை, பிரமபுத்திரா முதலான வற்றாவளம் சுரக்கும் பேராறுகளும், நர்மதை, தப்தி, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, பொருநை, அமராவதி, பவானி, நொய்யல் முதலான ஆறுகளும் அன்றுதொட்டு இன்று வரை ஓடிக்கொண்டிருக்கின்றன. பாரத நாட்டின் மக்கள் தொகைப்பெருக்கமும் அதனால் உண்டாகும் தேவைகளும் பெருகியுள்ள அளவுக்கு ஆறுகளும் ஆற்றுவளங்களும் பெருகியுள்ளனவா? இல்லையே!

தரிசு நிலங்களில் வளர்க்கப்படும் யூக்கலிப்டஸ் மரங்கள், சீமைக் கருவேலி மரங்கள் முதலானவை நிலத்தடி நீரை மிகுதியாக உறிஞ்சிவிடுகின்றன. அதன் விளைவாக நிலத்தடி நீர்வளமும் குறைந்து

வருகின்றது. இதனால் எதிர்காலத்தில் நாடெங்கும் நீர்வளக் குறைவு ஏற்படும் நிலையும் உள்ளது. அதிலிருந்து விடுபட என்ன செய்யலாம்?

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

மழை பெய்வதற்கு முக்கிய காரணிகளாக இருப்பன மரஞ்செடி கொடிகள். வான்வழி மிதந்துவரும் மேகக்கூட்டங்கள் குளிர்ச்சி அடைந்தால், அவை மழையாகப் பொழியும். அம்மேகக் கூட்டங்களைக் குளிரவைப்பன மரம் செடி கொடிகள்தாம். மக்கள் தொகைப் பெருக்கத்தால், மரம் செடி கொடிகள் இருந்த இடங்கள் பலவும் மக்கள் வாழும் இடங்களாக மாறுவதாலும், அம்மாற்றத்திற்கு ஏற்ப மரங்கள் மனைப்பொருள்களாகவும் எரி பொருள்களாகவும் மாறிவிடுவதாலும் மழையைப் பெய்விக்கும் இயற்கைவளம் அழிக்கப்படுவதாலும் மழை வளம் குறைந்துவருவதைக் காண்கின்றோம்.

மழையைப் பெய்விக்கும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலமும் வளங்களை உருவாக்குவதன் மூலமும் நீர்வளத்தைப் பெருக்கலாம். இது ஒரு முறை. மற்றொரு முறை, பெய்த மழைநீரைத் தகுதியான வழிகளில் தேக்கிவைத்துப் பாதுகாப்பதாகும்.

மரங்கள் எல்லா மாசுகளையும் கட்டுப்படுத்திச் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் மாசுக் கட்டுப்பாட்டையும் வழங்கவல்லவை. மரங்கள், இறைவன் மன்பதைக்கு அளித்துள்ள வரங்கள். இதனை நன்குணர்ந்து மரங்கள் வளர்ப்போம். மழையோடு மற்றைப் பயன்களையும் பெறுவோம்.

மழைநீரைச் சேகரிப்போம்

> 'எதிரதாக் காக்கும் அறிவினார்க்(கு) இல்லை
> அதிர வருவதோர் நோய்'

என்பது வள்ளுவம்.

மரங்களை வளர்த்து மழைபெறுவதோடமையாது, மழை பெய்கின்ற காலங்களில் அதனைச் சேகரித்துச் சேமித்து வைப்பது, எதிரதாக் காக்கும் அறிவுடைச் செயலாக அமையும்.

நிலத்தடி நீர் வளமான வாழ்க்கைக்கு ஆதாரமாகும். மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னர் நிலத்தடி நீருக்கு ஆதாரம் மழைப்பொழிவே என்பது அறியப்படவில்லை. கி.பி.1674 ஆம் ஆண்டில் பியரி பெரால்ட் என்னும் பிரெஞ்சு அறிஞர் மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர்

இவையிரண்டிற்கும் மழைப்பொழிவு ஒன்றே மூலாதாரம் என்னும் உண்மையை உலகிற்கு உணர்த்தினார்.

மழைநீர் சேகரிப்பைத் தமிழ்நாடு அரசு பெரிதும் வலியுறுத்தி வருகின்றது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தாரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தாரும் முதுநிலை நிலநீர்ப் புவியியலாளர்களும் அதற்குரிய வழிமுறைகளை வகுத்துள்ளனர். அவற்றை இனிக் காண்போம்.

### நிலத்தடி நீரைச் சேமிப்பதன் நோக்கங்கள்

மழை பெய்யுங்காலத்தே அம்மழைநீர் வீணாகி விடாமல் நிலத்துக்கடியில் அதனைச் செலுத்திச் சேமிப்பதை மழைநீர் சேகரிப்பு என்கின்றனர். நிலத்தடி நீரளவு குறைவதைத் தடுத்தல், நீர்வளத்தைப் பெருக்குதல், நிலத்தடி நீரின் தரத்தை உயர்த்துதல், கடலோரப் பகுதிகளில் கடல்நீர் நிலப்பகுதியின் உட்புகுவதைத் தடுத்தல் ஆகியவற்றோடு எதிர்காலத் தலைமுறையினரைக் குடிநீர்த்தட்டுப்பாடு என்னும் பெருவிபத்திலிருந்து காத்தலும் நிலத்தடிநீரைச் சேமிப்பதன் நோக்கங்களாகும்.

### மழைநீரைச் சேகரிக்கும் வழிமுறைகள்

(அ) மொட்டை மாடிகளில் விழும் மழை நீரைச் சேகரித்தல்

(ஆ) கட்டடங்களைச் சுற்றியுள்ள திறந்த வெளிப் பகுதிகளில் பெய்யும் மழை நீரைச் சேகரித்தல் ஆகிய இருவழிமுறைகளில் மழை நீரைச் சேகரிக்கலாம்.

இங்கு பெய்யும் மழை நீரைத் திறந்தவெளிக் கிணறுகள் மூலமும் குழாய்க் கிணறுகள் மூலமும் சேகரிக்கும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

### திறந்தவெளிக் கிணறுகள் மூலம் சேகரித்தல்

வீடுகளிலும் அடுக்குமாடிக் கட்டடங்களிலும் மொட்டை மாடிகள் உண்டு. அங்குள்ள மனைகளில் திறந்தவெளிக் கிணறுகளும் இருக்கும்.

மொட்டை மாடியில் விழும் மழைநீரைக் குழாய்கள் மூலம் தரைப்பகுதிக்குக் கொண்டுவருதல் வேண்டும். பின்னர்கிணற்றுக்கும் வீட்டுச் சுவருக்கும் இடையில் உள்ள நிலப்பகுதியில் ஒரு தொட்டி அமைத்து, அதை அந்த மழைநீரைச் சேகரிக்கவேண்டும். அதனை வடிகட்டிய பின்னர் அங்கிருந்து திறந்தவெளிக் கிணற்றுக்குள் அம்மழைநீரை விழச் செய்து சேமிக்கலாம்.

குழாய்க் கிணறுகள் மூலம் சேகரித்தல்

திறந்தவெளிக் கிணறுகள் இல்லா வீடுகளில் மொட்டை மாடியிலிருந்து கொண்டுவரப்படும் மழைநீரைச் சிறு கால்வாய் மூலம் வடிகட்டும் தொட்டிக்குள் பாய்ச்சி, அங்கிருந்து கசிவுநீர்க் குழாய் மூலம் குழாய்க் கிணற்றுக்குள் அந்த நீரைக் கொண்டு செலுத்திச் சேமிக்கலாம்.

இம்முறைகளில் மட்டுமல்லாமல், திறந்தவெளிகளில் அல்லது வீட்டைச் சுற்றித் தேங்கும் மழைநீரையும் சேகரிக்கலாம். அவ்வாறு சேமிக்க எளிமையான ஆறு வழிகள் உள்ளன. அவை: கசிவு நீர்க்குழிகள், துளையுடன்கூடிய கசிவு நீர்க்குழிகள், கசிவு நீர்ப்படுகை, துளையுள்ள கசிவு நீர்ப்படுகைகள், நீரூற்றுக் கிணறு (குறைந்த விட்டம், ஆழம்), நீரூற்றுக் கிணறு (அதிக விட்டம், ஆழம்) ஆகியவையாகும். இவற்றின் செய்முறைகளைக் குடிநீர் வடிகால் வாரியத்தை அணுகி அறிந்துகொள்ளலாம்.

மேலும், தண்ணீர் சரிந்து செல்லும் வழியில் வளைவுமேடு அமைப்பது, செவ்வகப் பெட்டி மேடு அமைப்பது, நிலாப்பிறை மேடு அமைப்பது, 'V' வடிவ மேடு அமைப்பது, வளைவு அகழி ஏற்படுத்துவது, மலைச் சரிவுகளில் மேடை அமைப்பது, வெட்டிவேர் போன்ற தாவரத்தடுப்பு ஏற்படுத்துவது, சிறுதடுப்பணை அமைப்பது, ஊற்றுக் குளங்களைத் தோண்டுவது முதலான செயல்முறைகள் நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கும் வழிகளாம். இவை நகர்ப் பகுதிகளில் மழை நீர் சேகரிக்கும் வழிமுறைகளாம்.

நாளைய தலைமுறைக்கு நம் பங்கினை அளிப்போம்

அடைமழை பெய்யும் பொழுது புறநகர்ப் பகுதிகளிலும் கிராமப்புறப் பகுதிகளிலும் மழை நீர் வெள்ளமாய்ப் பெருகி வீணாவதைத் தடுக்கும் குளம் குட்டைகளைப் பாதுகாத்து இந்நீர் நிலைகளில் மழை நீரைச் சேமிப்பதனால் அப்பகுதி வாழ் மக்களின் நீர் சார்ந்த எல்லாப் பிரச்சினைகளும் தீரும். நிலத்தடி நீர்வளமும் காக்கப்படும். அத்துடன் ஒவ்வோர் ஊராட்சிப் பகுதியிலும் மிகுந்த பரப்பளவுள்ள நீர் தேங்கும் தொட்டிகளை அமைத்து அவற்றில் மழைநீரைச் செலுத்திப் பாதுகாப்பாக மூடிவைத்து, மழைபெய்யாத கோடை காலத்தில் அந்த நீரைக் குடிப்பதற்காகப் பயன்படுத்தலாம்.

‘மரம் வளர்ப்போம் ; மழை பெறுவோம்; பெற்ற மழைநீரைப் பேணிக் காத்திடுவோம்‘ எனச் சூளுரைத்துத் தொடர்பணியாற்றுவோம்.

## ஆசிரியர் குறிப்பு

திரு சு. பரமசிவன் திருநெல்வேலி மாவட்டத்தில் இராதாபுரம் என்னும் ஊரில் திரு.ப. சுடலையாடும் பெருமாள், திருமதி ஈஸ்வரத்தம்மாள் ஆகியோருக்கு மகனாவார். சிறந்த கல்வியாளர்; அறிவியல் அறிஞர். பல கருத்தரங்குகளில் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்தியுள்ளார். தற்பொழுது தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வி இயக்குநராகப் பணியாற்றி வருகின்றார்.

## அருஞ்சொற்பொருள்

முதுமொழி – பழமொழி, மாரி – மழை, மாசு – அழுக்கு– ஓசோன் படுகை – மெல்லிய வாயுப்படுகை. தலைக்குமேலே 12–45 கி,மீ. உயரத்திற்குப் பூமிக் கோளத்தைச் சூழ்ந்து அமைந்துள்ளது. கொடிய புற ஊதாக் கதிர் போன்றவை பூமியை அடையாமல் தடுக்கும் தடுப்புச்சுவர் இது.

## பொருளுணர்திறன் பயிற்சி

### அ. கோடிட்ட இடத்தை நிரப்புக

1) வானம் தன் பயனாகிய மழையைத் தராவிடில், இவ்வுலகில் _________, _________ ஆகிய செயல்கள் நடைபெறா என்கிறார் வள்ளுவர்.
2) வளமான வாழ்க்கைக்கு_________ ஆதாரமாகும்.
3) இன்றைய உலகில் _______ என்னும் முழக்கத்தை எங்கும் கேட்கின்றறோம்.

### ஆ. சரியான விடையைத் தேர்வுசெய்து எழுதுக.

1) மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடிநீர் என இரண்டிற்கும் மழைப்பொழிவு ஒன்றே மூலாதாரம் என்றவர் _________
   1. இந்திய அறிஞர் எம்.எஸ்.சுவாமிநாதன்
   2.பிரெஞ்சு அறிவர் பியரி ரொல்ட்
   3.அமெரிக்கா அறிஞர் மார்க்ஸ் முல்லர்
2) மரங்கள் எல்லா மாசுகளையும் கட்டுப்படுத்தி _________ வழங்கவல்லவை
   1.நல்ல உயிர் வளியை
   2.நல்ல மழைவளத்தை
   3.சுற்றுச்சூழல் பாதுகாப்பை

### இ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) திருவள்ளுவரும் இளங்கோவும் மழையை எவ்வாறு போற்றிக் கூறினர்?
2) மழையின் சிறப்பை உணர்த்தும் முதுமொழிகள் யாவை?
3) மழைநீர் சேகரிப்பிற்கான வழிமுறைகளை வகுத்துள்ளவர்கள் யாவர்?
4) மழைநீர் சேகரிப்பு என்றால் என்ன?
5) நகர்ப்புறங்களில் மழைநீரைச் சேமிக்கும் இரு வழிமுறைகள் யாவை?

**ஈ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மாரி, மாறிவிட்டது என்று ஆசிரியர் கூறுவது ஏன்?
2) இமயம் முதல் குமரிவரை ஓடும் ஆறுகள் யாவை?
3) யூக்கலிப்டஸ் சீமைக் கருவேல மரங்கள் ஏற்படுத்தும் பாதிப்புகளைக் கூறுக.
4) மழைவளம் குறைந்து வருவதற்கான காரணங்களை எழுதுக.
5) நிலத்தடி நீரைச் சேமிப்பதன் நோக்கங்கள் யாவை?
6) நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கும் வழிகள் என்னென்ன?

**உ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மழைநீரைச் சேமிக்கும் வழிமுறைகளைத் தொகுத்து வரைக.
2) மரம் வளர்ப்போம் மழைபெறுவோம் என்று ஆசிரியர் கூறும்.

மொழித்திறன் பயிற்சி

**1. சந்திப் பிழைகளை அறிந்து எழுதுக.**

தண்ணீர்ப் பற்றாகுறை நீங்க தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

**2. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக.**

இந்தாண்டும் மழைபொய்த்துப் போனதால் ஊரணியும் கம்மாவும் வறண்டு கிடக்கின்றன.

**3. பிறமொழிச் சொற்களை நீக்கி எழுதுக.**

1) டீப் போர்வெல் அமைத்துத் தருக.
2) மொட்டைமாடி மீதுள்ள ஓவர் டேங்கை மூடிபோட்டுப் பாதுகாக்கவேண்டும்.

**4. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

நரிகள் கத்த பரிகளும் (குதிரைகளும்) கத்தின.

**5. வாக்கிய வகையைச் சுட்டுக.**

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்தது அந்தக் காலம்

**6. வாக்கியப் பிழையை நீக்கி எழுதுக.**

மழைவளம் குன்றினால் தெய்வத்திற்குச் செய்யப்படும் அன்றாட வழிபாடு பிறவிழாச் செயற்பாடுகூட குன்றும் எனவும் கூறுகின்றார்.

**7. கீழ்க்காணும் விடை வருமாறு ஏற்ற வினா அமைத்திடுக.**

ஐம்பெரும் பூதங்களின் கூட்டுச்சேர்க்கையால் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

**8. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுக.**

மாரி மாறி விட்டது விளைவு தண்ணீர்ப் பற்றாக்குறை.

# 9. மனிதநேயக் காவலர்கள்

( திருமதி பா. கோமளீசுவரி )

அன்பும் அறமும் பின்னிப் பிணைந்த ஒரு பெரும் உணர்வே மனித நேயம். அறம் என்றால் என்ன? மனத்துக்கண் மாசிலனாதல் – தூய மனம் உடையவராயிருத்தல். இது உலகப் பொதுமறை அறத்துக்கு வகுத்த இலக்கணம். தூய மனத்தினின்று வெளிப்படும் உன்னத உணர்வே உண்மையானது. அதுவே மனித நேயம் என்பது. அது அன்பு, அறம் ஆகிய இரு பெருங்கூறுபாடுகளைக் கொண்டது. புத்தர், இயேசு, இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், காந்தியடிகள் போன்ற இவர்கள் எல்லாம் மனித நேயக் காவலர்களே என்பதனை வள்ளுவர் அறுதியிட்டுச் சொல்லாமற் சொல்லுகின்றார்.

பொதுமறை கண்ட புலவன்

மனிதநேய உணர்வு காக்கப்படவேண்டும் என்பதற்காகவே 1330 கருத்து அரண்கள் அமைத்தார் வளர்தமிழ்ப் புலவர் வள்ளுவர்.

ஒருவன் செய்கின்ற செயல்களால்தான் பெருமையும் சிறுமையும் அவனைச் சென்றடையும் என்றும் பிறப்பினால் உயர்வு தாழ்வு கிடையாது என்றும் வலியுறுத்தும் வள்ளுவர்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

என்று கூறி மனித நேயத்துக்குப் பொருளுரையானார். மனித நேயத்துக்கு மறு பெயரே சான்றாண்மை என்பதை மிகத் தெளிவாகவே எடுத்துச் சொல்கிறார்.

அன்பு நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு
ஐந்து சால்பூன்றிய தூண்

எனச் சான்றாண்மைக்கு இலக்கணம் வகுக்கின்றார். பொய்யாமொழிப் புலவர் எடுத்த எடுப்பிலேயே மனித நேயத்துக்கு அடிப்படையாக அமைவது அன்பே என்று அழுத்தமாகக் கூறுகின்றார் எனலாம்.

தன்னலமின்மையும், தூய அன்புள்ளமும் கொண்டவரே மனிதநேயம் கொண்டவர் என்னும் வள்ளுவர் கருத்தைப் பறைசாற்றும் படைக் கலங்களுக்குப் பஞ்சமே இல்லை இங்கே.

### திருமூலர்–மனித நேயக் கருவூலம்

மனிதகுலம் என்றும் வியந்து பாராட்டும் முத்தமிழ்த் தேனூற்றாம் திருமூலர் மனித நேயத்தின் மிகச் சிறந்த படைப்பாகத் தோன்றினார். அவர்,

படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஆகா
நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படமாடக் கோயில் பகவற்கு அதாமே

என்னும் பாடலில் மனித நேயத்தைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லுகின்றார்.

'கோயில்களிலுள்ள திருவுருவங்களுக்குத் திருவமுது படைக்கப்படும் பொழுது அது இறைவனுக்குச் சென்று சேர்வதில்லை. ஆனால் நடமாடும் கோயிலாக உள்ள மனிதர்க்கு ஒன்று அளிக்கப்படும்பொழுது அது இறைவனுக்குச் சென்று சேர்கின்றது' என்று திருமூலர் குரல் ஒலிக்கும்பொழுது தேம்பியழும் மனித நேயத்தைத் தேற்றுகின்ற தேன் தமிழ்க் குரலாய் உள்ளதை அறியமுடிகின்றது.

### மனித நேயத்திற்கு ஒரு பெரும் உரைகல்

மன்னர் குலத்தில் பூத்த பூந்தமிழாம் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி தனிச்சிறப்புடன் திகழ்கின்றான் என்கின்றது புறநானூறு. நாடே போற்றிய அவன் இளமையில் மறைந்தான் ஆயினும், ஈடில்லா இலக்கிய ஏடுபோற்றும் இன்பத் தமிழானான்.

தன்னலமற்றவர் என்பதற்கு அன்றே அவன்தந்த விளக்கம் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

இந்த உலகம் அழியாமல் இருப்பதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதுதான் தன்னலமற்றவரைப் பெற்றிருப்பது என்று அறுதியிட்டுக் காட்டுகின்றான் இளம் பெருவழுதி.

தேவர்களுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அது மிகுந்த இனிமை உடையதென்று தனித்து உண்ணமாட்டார்கள். இது தன்னலமற்றவர்க்குரிய முதல் தகுதியென வரிசைப்படுத்துகின்றான். ஆக, பிறர் நலத்தையே நாடும் உள்ளம் தூய உள்ளம் என்கின்றான்.

பொதுநலம் பேணும் பெருந்தகையாளனுக்கு இலக்கணம், எவரோடும்

வெறுப்பற்ற தன்மை கொண்டிருத்தலாம் என்று கூறுகின்றான். இங்கும் அன்புதான் அச்சாணியாய் அமைந்துள்ளது.

மேலும், சுயநலமற்றவர்க்குரிய தகுதி 'பிறர்படும் துன்பம் துடைத்தலே' என்கின்றான். 'பிறருக்காக வாழ்பவர் புகழ் பெற உயிரையும் கொடுப்பர். பழி வரும் செயலினால் உலகம் முழுவதையும் பெறலாம் என்றாலும் அதனைக் கொள்ளமாட்டார்' என்று விளக்குகின்றான். அத்தகையோரையே தியாகிகள் என்று உலகம் கொண்டாடுகின்றது. தியாக உணர்வின் தாயகம்தானே அன்பு.

'தமக்கென வாழாதவரே அயர்விலர்' என்று கூறுகின்றான். அதாவது மற்றவர் நலம் நாடுவோர் எதற்குமே மனம் தளராதவர் என்ற சிறப்புக்குரியவர் என விளக்குகின்றான். சுருங்கக் கூறுமிடத்து, 'பிறர்நலம் பேணும் பெருமைக் குரியவர் அனைவரும் அன்பின் பிறப்பிடங்களே; பண்பாட்டின் நிலைக்களங்களே' எனப் படிப்படியாக விளக்கி அத்தகையோராலேயே இவ்வுலகம் உள்ளதென முடிக்கின்றான்.

ஒருமைப் பாட்டு உணர்வுக்கு ஒரு திறவுகோல்

கன்னித் தமிழ் அளித்திட்ட மற்றும் ஓர் மணிச்சுடர் விளக்கு கணியன் பூங்குன்றனார். மனிதநேயம் வளர அன்றே அவர் அளித்திட்ட ஒரு பெருங்கருத்துச் செல்வமன்றோ 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது.

பார்வேந்தனைத் திருத்திய பாவேந்தன்

மனித நேயத்தின் மற்றுமோர் வடிவாகக் கோவூர்கிழார் என்னும் புலவரை அறிமுகப்படுத்தி மகிழ்கின்றது புறநானூறு. கிள்ளி வளவன் என்ற மன்னன், மலையமான் என்ற பகை மன்னன் மக்களை யானையின் கால்கீழிட்டுக் கொல்லமுற்பட்டபொழுது, கோவூர்கிழார் அவன் செயல் ஏற்புடைத்தன்று எனத் தடுத்து நிறுத்தினார். இங்கு மனித நேயத்தின் கோட்பாடுகளாம் அன்பும் மாசற்ற மனமும் வெளிப்படுவதைக் காணலாம்.

பரந்த மனப்பான்மைக்குச் சிறந்த நிலைக்களன்

இளங்கோவடிகள் சேரநாட்டினராயினும் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தில் சேரநாடு மட்டுமல்லாது சோழ, பாண்டிய நாடுகளையும் சிறப்பாகப் பாடுகின்றார். திங்கள், ஞாயிறு, மழை என இயற்கைச் செல்வங்களையே போற்றித் தம் நூலைத் தொடங்குகின்றார். அப்பொழுதே சேர, சோழ, பாண்டிய மன்னர்களையும் புகழ்ந்து

பாடுகின்றார். சோழநாட்டுக் குடிமகளாம் கண்ணகியைக் காப்பியத் தலைவியாக்கி மகிழ்கின்றார். சுருக்கமாகச் சொன்னால் அவரது பெரும்படைப்பாம் சிலப்பதிகாரம் பெண்மை போற்றும் பெருங்காப்பியமே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. நூல் முழுமையும் பரந்த மனப்பான்மையே பளிச்சிடக் காண்கின்றோம். மனிதநேயத்தின் அடித்தளமாகப் பரந்த மனப்பான்மை உள்ளதென உணர்கின்றோம். சிறந்த சிந்தனையாளராம் விவேகானந்தர்,

தூய்மையுடன் இரு. தன்னலமற்றிரு – இதுவே சமயமாம்

என்று கூறும் கருத்து இங்குச் சிந்திக்கத் தக்கது. இந்தக் கருத்து இன்றைய இந்தியத் துணைக் கண்டத்துக்கு மிக மிக இன்றியமையாக் கருத்து ஆகும். மேலும்,

'தியாகத்தாலும், தொண்டாலுமே இந்த உலகம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது' என்ற உத்தமர் காந்தியடிகளின் கூற்று இங்கு நினைவுகூரத்தக்கது.

பண்புடையார்ப் பட்டுண்டுலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்

என்ற குறள் இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

### எம்மதமும் சம்மதம் என்றொளிரும் அருள் விளக்கு

இடைக்காலத்தில் சாதிசமய வேறுபாடுகள் தலைவிரித்து ஆடத்தொடங்கின; மனிதநேய உணர்வுகள் மறுக்கப்பட்டன; அக்காலக் கட்டத்தில் மனித நேயத்தின் மற்றும் ஓர் காவலராக வடலூர் வள்ளலார் தோன்றினார். அவர், “எம்மதமும் சம்மதமே” என்னும் குறிக்கோளுக்காகவே வாழ்ந்தவர்.

'கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்
கண்மூடிப்பழக்கமெலாம் மண்மூடிப்போக'

என்று முழக்கமிட்ட அந்த மறுமலர்ச்சியாளர் காலம் நமக்களித்த சிந்தனையளாளர் அன்றோ. சிந்தித்து நோக்குமிடத்து இவர் போன்ற அனைவருமே மனித நேயத்தின் காவலரே என அறிகின்றோம்.

### புத்தமுதக் கலைஞனும் புதுவைக் குயிலும்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர்களான பாரதியும், பாரதிதாசனும் அன்பையும் அறனையும் காக்கவந்த காவலர்கள் எனலாம். பாரதிகண்ட பேருலகத்திலும் “எம்மதமும் சம்மதமே” என்பதே அடிநாதமாகும்.

பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறும் அறிவாம்

என்ற பாரதியின் புதிய ஆத்திசூடி அதனை வலியுறுத்துகின்றது.

பைந்தமிழ்த் தேர்ப்பாகனாம் பாரதியின்,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல
மாதரறிவைக் கெடுத்தார்

என்னும் முரசுப்பாட்டு அவனைப் பெண்ணுரிமைக் காவலனாகக் காட்டுகின்றது

பாரதியின் அடியொற்றி வந்த பாரதிதாசன்,

'புதியதோர் உலகு செய்வோம் – கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்'

என்று முழங்கி மனித நேய உணர்வை வெளிப்படுத்துகின்றார்.

நமது சிந்தனைக் கண்கள் திறக்க அறிவொளி பாய்ச்சிய மனித நேயக் காவலர் பலராவர். அவர்தம் கருத்துவழி சென்று பசியும் பிணியும் பகையும் இல்லாப் புதிய உலகைப் படைப்போம்.

### ஆசிரியர் குறிப்பு

திருமதி. பா. கோமளீசுவரி, சென்னையில் திரு. பார்த்தசாரதி, திருமதி லோகநாயகி ஆகியோருக்கு 7.9.1943 இல் பிறந்தவர். சென்னை இராணி மேரி அரசு கல்லூரியில் தமிழில் முதுகலைப்பட்டம் பெற்றவர். கல்லூரிப் போட்டிகளிலும், பொதுப்போட்டிகளிலும், கட்டுரைகள் எழுதிப் பரிசுகள் பல பெற்றவர். 19 ஆண்டுகளாக மேனிலைப் பள்ளித் தமிழாசிரியையாகப் பணியாற்றியவர். அவருடைய கட்டுரைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பெற்றதே 'மனிதநேயக் காவலர்கள்' எனும் இக்கட்டுரை.

### அருஞ்சொற்பொருள்

பிணைந்த – சேர்ந்த ; மாசு – குற்றம்; அங்கை நெல்லிக் கனிபோல– உள்ளங் கையில் நெல்லிக்கனி வைத்தால் அது தெளிவாகத் தெரிவது போல; கருத்து அரண்கள் – கருத்துப் பாதுகாப்புகள்; ஒக்கும் – நிகராகும், சமமாகும்; ஒவ்வா – நிகர் ஆகா, சமமாகா; சான்றாண்மை–கல்வி, கேள்வி, அறிவு ஒழுக்கத்தால் சிறந்த தன்மை; ஒப்புரவு – (உலகத்தாரோடு ஒத்து இயங்குதல்) தம் நிலைக்கு ஏற்ப கொடுத்து உதவி வாழ்தல்; கண்ணோட்டம் – அனைவரிடத்தும் ஒரு சீராகக் காட்டும் அன்பு ; சால்பு – சிறந்த தன்மை;

கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி – மன்னனாகும் முன்பே கலத்தில் கடலில் சென்றபொழுது கலம் கவிழ்ந்து மாய்ந்தான்; நற்பேறு – சிறந்த செல்வம்; அறுதியிட்டு – உறுதியாக; அயர்விலர் –சோம்பிஇரார்; நிலைக்களங்கள் – இருப்பிடங்கள்; கோட்பாடு– கொள்கை; படமாடக் கோயில் – கோயிலிலுள்ள இறைவன் திருவுருவம்; நடமாடக் கோயில் நம்பர் – மக்கள்; வடலூர் வள்ளலார்– இராமலிங்க அடிகள்; பீடு நடை – பெருமை மிக்க நடை.

பொருளுணர் பயிற்சி

**அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1) மனித நேயத்துக்கு மறுபெயரே–– என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்கின்றார்.
2) 'கலையுரைத்த கற்பனையே நிலையெனக் கொண்டாடும்–– மண் மூடிப்போக' என்று முழக்கமிட்டவர் அந்த மறுமலர்ச்சியாளர்
3) நமது சிந்தனைக் கண்கள் திறக்க அறிவொளி பாயச்சிய –– பலராவர்

**ஆ. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.**

1) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்று கூறியவர்
(1. திருமூலர் 2.வடலூரர் வள்ளலார் 3. திருவள்ளுவர்)
2) பெண்மை போற்றும் பெருங்காப்பியம்
(1. சிந்தாமணி 2.சிலப்பதிகாரம் 3.மணிமேகலை)

**இ. பொருத்துக.**

| பாடல் வரிகள் | | பாடியவர் |
|---|---|---|
| 1) படமாடக்கோயில் பகவற்கு அதாமே | – | திருவள்ளுவர் |
| 2) பண்புடையார் பட்டுண்டுலகம் | – | திருமூலர் |
| 3) பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் | – | பாரதிதாசனார் |
| 4) புதியதோர் உலகம் செய்வோம் | – | பாரதியார் |

**ஈ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) மனித நேயம் என்பதனைக் கட்டுரை ஆசிரியர் வழிநின்று விளக்குக.
2) ஒருவற்கு உயர்வு தாழ்வு எதனால் ஏற்படுகிறது என வள்ளுவர் கூறுகிறார்?
3) வள்ளுவர் கூறும் சான்றாண்மையின் இலக்கணம் யாது?
4) பாரதிதாசன் மனிதநேய உணர்வால் கூறுவது யாது?

**உ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) கோவூர் கிழாரின் மனிதநேயச் செயலைக் கூறுக.
2) கணியன் பூங்குன்றனார் மனிதநேயம் மிக்கவர் என்று கூறுவதேன்?
3) பாரதியார் மனிதநேயமிக்கவர் என்பதனை அவரது முரசுப் பாட்டு மூலம் விளக்குக.

**ஊ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

1) எத்தகையோரால் உலகம் உள்ளதென கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி கூறுகின்றான்?
2) திருமூலர் மனிதநேயம் மிக்கவர் என்பதை அவர் பாடலின் மூலம் விளக்குக.
3) பாரதியாரின் புதிய ஆத்திசூடி வணக்கப் பாடலில் அவர் கூறும் கருத்தை விளக்குக.

**மொழித்திறன் பயிற்சி**

**1. சந்திப் பிழைகளை அறிந்து எழுதுக.**
திருமூலர் மனித நேயத்தின் மிக சிறந்த படைப்பாக தோன்றினார்

**2. வழுவுச் சொற்களைத் திருத்தி எழுதுக.**
சிகப்பு மணிகளைக் கயறில் கோர்த்து வை.

**3. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**
பனை இலையில் கூரை போட்டனர்.

**4. பிறமொழிச் சொற்களை நீக்கி நல்ல தமிழில் எழுதுக.**
பன்னிரு திருமுறைகளிலிருந்து பாட்டிசைத்து மருந்தீசருக்கு அபிஷேகமும் பின்பு பூஜையும் நடத்தப்பட்டன.

**5. வாக்கிய வகையைச் சுட்டுக.**
தூய்மையுடன் இரு, தன்னலமற்றிரு.

**6. வாக்கியப் பிழையை நீக்கி எழுதுக.**
இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகத் திகழ்ந்தவர்களுள் பாரதியும் பாரதிதாசனும் தலைசிறந்தவர் ஆவர் எனலாம்.

**7. கீழ்க்காணும் விடை வருமாறு ஏற்ற வினா அமைத்திடுக.**
மனிதநேய மிக்கவர்களாக புத்தர், இயேசு, நபிகள், விவேகானந்தர், காந்தியடிகள் போன்றோர் திகழ்ந்தனர்.

**8. உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றி எழுதுக.**
மலரடி, பவளவாய்

**9. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக.**
அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்தும் சால்பூன்றிய தூண்கள் என்றார் வள்ளுவர்.

**மொழித்திறன்வளர் தொடர்பணி**

கட்டுரை ஆசிரியர் தமிழை எவ்வெவ் அடைமொழிகளால் குறித்துள்ளார்? அவற்றைப் பட்டியலிட்டு, அவைபோல தமிழுக்கு அடைமொழியுடன் மூன்று சொற்களை எழுதுக.

# 10. வென்றது தமிழே !

[ இலக்கிய நாடகம் ( திரு. கு. சிவமணி ) ]

அறிமுகம்

சேரமான் கணைக்கால் இரும்பொறை பேராண்மை மிக்கவன். அவன் காலத்தில் சோழ நாட்டை ஆண்டவன் தமிழ் பற்று மிக்க செங்கணான். சோழனுக்கும் சேரனுக்கும் கழுமலத்தில் போர் நடைபெற்றது. சோழன் வென்றான். தோற்ற சேரனைக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் வைத்தான்.

கழுமலப்போரில் சோழனின் வெற்றியைச் சிறப்பித்துப் பொய்கையார் களவழி நாற்பது பாடினார். அவர் விரும்பியவாறே, பாடலைக் கேட்டுப் பெருமகிழ்வு கொண்ட செங்கணான் சேரனைச் சிறையினின்று விடுவித்தான்.

காட்சி–1

இடம் : அரசவை

உறுப்பினர்: சோழன் செங்கணான், அரசவைப் பெருமக்கள்.

கட்டியங்காரன்: பொன்னித் திருநாட்டு மன்னர் பெருமான் சோழப் பேரரசர் செங்கணார் அரசவைக்கு எழுந்தருள்கின்றார்.

(சோழன் செங்கணான் பெருமிதமாக நடந்து வந்து அரியணையில் அமர்கிறான்)

செங்கணான் : அருந்திறல் கொண்ட அமைச்சரே ! ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தினரும் எமது எண்ணத்தை அறிவரோ?

அமைச்சர்: இப்போதே அறிவிக்கிறேன் மன்னவா ! பெருமக்களே ! சேரமான் கணைக்காலிரும்பொறை இறுமாந்து அரச நெறியிலிருந்து மாறுபடுகின்றான். நம்மரசர் தண்ணளி கொண்டு அனுப்பிய திருமுகத்துக்கும் அவன் இன்றுவரை மறுமொழி ஏதும் அனுப்பவில்லை. மேலும் சேரர் எல்லையில் உள்ள நம் சோழ வீரர்களுக்குத் தொல்லை பல செய்துள்ளான். அவனை இவ்வாறு விட்டுவிட்டால் பின்னர் நமது வளநாட்டிற்கெதிராகப் போர் தொடுக்க முயலுவான். முள்மரத்தை இளைதாகக் கிள்ள வேண்டும். ஆகவே, சேரமான் மீது போர் தொடுக்க நம் மன்னர் எண்ணுகிறார். அந்த எண்ணத்தை உங்கள் ஆய்வுக்கு

விடுகின்றேன். சிந்தித்துச் சிறந்ததொரு முடிவைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

(அவையினர் தங்களுக்குள் பேசிக் கொள்கின்றனர்)

ஒருவர் : மன்னர் மன்ன! வாழ்க நும் கொற்றம்! எண்பேராயத்தினர் உமது முடிவை ஒருமனதாக ஒப்புகின்றனர். என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றொருவர்: வேந்தர் கொண்ட கருத்திற்கு ஐம்பெருங் குழுவினரும் ஒருமனத்தராய் ஒப்புதல் தெரிவிக்கின்றனர்.

**செங்கணான்:** சேரன் மீது படை எடுப்பதிலே யாருக்கும் மன வேறுபாடு உண்டோ?

(சிறிது அமைதி)

சேரமான் கணைக்காலிரும் பொறை மீது படையெடுப்பதென இவ்வவை முடிவு செய்கிறது. படைத் தலைவரே! நமது போர் அணிவகுப்பினை நாளையே யாம் காண்போம். அதற்குரிய ஏற்பாட்டினை விரைந்து செய்யும். அமைச்சரே எட்டு நாள்களுக்குள் சேரன் உரிய மாற்றம் உரைக்காவிடில், கழுமலத்திலே படையுடன் சந்திக்கும் படி ஓலை அனுப்பும், பொறுத்திருப்போம், வேறு வழி இல்லை என்றால் சேரன் மீது போர் தொடுப்போம்.

படைத் தலைவர் : அப்படியே செய்கிறேன் மன்னவா!

காட்சி–2

இடம்: சேரனது அரசவை

**உறுப்பினர்:** சேரமான் கணைக்கால் இரும்பொறை, அரசவையினர்

**காவலன்:** சேரர் பெருமானே ! வணக்கம். சோழ நாட்டுத் தூதுவர் வாயிலில் தங்களது இசைவை எதிர்பார்த்துக் காத்துள்ளார்.

**இரும்பொறை** : வரச்சொல்!

**தூதுவன்** : மலைநாட்டு மன்னா ! பொன்னி வளநாட்டுக் காவலனின் வணக்கம். இந்த ஓலையைத் தங்கள்பால் சேர் பிக்கப் பேரரசர் செங்கணாரின் ஆணையைத் தாங்கி வந்துள்ளேன். இதோ ! .... (ஓலைச் சுருளை நீட்டுகிறான்)

**இரும்பொறை** : அமைச்சரே ! ஓலையை வாங்கி உரத்து ப்படியும் அவையினர் செய்தியை அறியட்டும்.

**அமைச்சர்** : (அதை வாங்கிப் படிக்கின்றார்)

சேரமன்னன் கணைக்கால் இரும்பொறைக்குச் சோழப் பேரரசர் செங்கணான் விடுத்த திருமுகம். நட்பு மறந்து செயல்படும் உமக்குத் திருத்திக் கொள்தற்குரிய வாய்ப்புகளை இருமுறை அளித்தோம். ஏற்கவில்லை. யாம் சீற்றங் கொள்ளக்கூடிய செயல்களை மேலும் மேலும் செய்து வருகின்றீர். மண்ணாசை கொண்டு அரசுக்குக் கேடு சூழுவதால் இன்றிலிருந்து எட்டாம் நாள் கழுமலத்தில் எமது படையுடன் காத்திருப்போம். உறவுக்குப் பாலமா? அல்லது தினவெடுத்த தோள்களுக்குப் பலியா? என்பதை நீரே தெரிவு செய்யும்.

சோழமன்னன் பேரரசர், செங்கணான்

இரும்பொறை: சேரனுக்கு இனவுணர்வு பற்றி யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. நட்பை இணையான மாமன்னன் என்ற அளவில் கோர வேண்டும். அதை விடுத்து அதிகார மிரட்டலுக்கு ஒரு போதும் சேரன் பணியமாட்டான். எப்போதும் போருக்குச் சேரநாட்டவர் பின் வாங்கியதில்லை என்பதை இப்பாரே நன்கறியும், தூதனே! சோழன் விடுத்த திருமுகத்திற்குச் சேரன் தரும் மாற்றம் இது. கழுமலத்தில் சோழன் குறித்த நாளுக்கு முன்னரே வில்லவன் படையுடன் காத்திருப்பான் என்று சொல், நீ போகலாம்.

தூதுவன் : நல்லது வேந்தே ! வருகின்றேன்.

(வணங்கி நீங்குகின்றான்)

காட்சி – 3

இடம்: சோழனது அரசவை

உறுப்பினர்: அரசவைப் பெருமக்கள்

கட்டியங்காரன்: கழுமலத்தில் சேராத சேரரை வென்ற மாமன்னர் செங்கணார் வருகிறார், வருகிறார்.

(கைகால்களில் விலங்குடன் சேரமான் கணைக்கால் இரும்பொறையைக் காவலர் இருவர் அழைத்து வருகின்றனர்.)

செங்கணான்: சேர மா மன்னரே, பெரும் ஆரவாரத்துடன் வரவேற்க வேண்டிய உம்மைக் கைகால்களில் விலங்கிட்டு வரவேற்பதற்கு யாம் வருந்துகின்றோம். . . ம்ம்ம். . . என் செய்வது? இம் முடிவை நீரே விரும்பி ஏற்றீர்!

இரும்பொறை: (கடுமையாக) இருக்கலாம். வாழ்வும் தாழ்வும் உலகியலில் காணப்பெறும் அன்றாட நிகழ்ச்சி........எம்மை அழைத்து வரவேண்டிய காரணம்?

செங்கணான்: உம்மை மறந்தீர் ! உமது எல்லைகளை மறந்தீர் ! எம்மிடம் நட்பு பாராட்டாது எம்மையே பகைத்தீர் ! ஒரு நாட்டின் மன்னனாகிய நீர் அரசியலில் நடைமுறையைக் கூடவா மறந்து போக வேண்டும்? தெரிகின்றதா ஏனிங்கு வந்துள்ளீர் என்பது?

இரும்பொறை: உரிமை விழைவு கொண்டது குற்றமா?

செங்கணான்: அது எப்படிக் குற்றமாகும்? உரிமை விழைதல் குற்றமன்று, வரம்பு மீறி மற்றவர் உடைமையைக் கொள்ள விழைந்தது தான் குற்றம், மாபெருங் குற்றம். அமைச்சரே! நெறி மறந்த சேரருக்கு அவரது செயலை நினைவூட்டுக.

அமைச்சர்: பெருமக்களே ! சேரவேந்தர் மண்ணாசையால் பகைமை கொண்டு சோழ நாட்டுப் பெருங்குடிமக்களுக்குக் கேடுகள் பல செய்துள்ளார். நமது மேற்கெல்லையைக் கைக்கொள்ள நினைத்து அங்கு வாழும் நம் மக்களுக்குத் தொல்லைகள் செய்தார் சேரமன்னர் என்னும் குற்றத்தைச் சோழநாட்டு மக்கள் சார்பில் அவர்மீது அரசு சுமத்துகின்றது; எல்லைப்புற ஊர்கள் பல அவரால் கொள்ளையிடப் பட்டன; பல நெருப்பின் வாய் விழுந்தன; திசைக் காவல் வீரர் பலர் அவரால் சிறையிடப்பட்டுள்ளனர். நம் மன்னர் பெருமான் விடுத்த நட்பாற்றலையும் அவர் எள்ளி நகையாடினார் எனத் தெரிகின்றது. அவரது போர் வெறிச் செயலால், உயிரிழப்பும் பொருளிழப்பும் ஒருங்கே ஏற்பட்டுள்ளன.

ஒருவர் எழுந்து: அரசே ! அமைச்சரின் கருத்தை இந்த அவை ஒப்புகின்றது.

செங்கணான்: இரும்பொறையே, இதற்கு நீர் கூறும் அமைதி ஏதும் உண்டா? (சேரன் தலைகுனிந்து நிற்கின்றான்.) ஏன் வாயடைத்துப் போயிற்று? செய்த குற்றங்களை நீரே ஒப்புக்கொள்கின்றீர் என்பதற்கு உமது அமைதியே சான்று!....இணக்கத்தை விரும்பிய நட்பு நாட்டின் மீது போரைத் திணித்தீர். விளைவு, வெற்றி எமக்கு ! உயிரிழப்பை யாரும் மீட்டுத்தரல் இயலாது. ஆனால் பொருளிழப்பை எம்மால் ஈடுசெய்ய முடியும். எமக்குற்ற பொருள் இழப்பை உமது நாட்டு வருவாய் மூலம் நாம் பெறும்வரை எமது சிறைச்சாலையே உமக்குற்ற பெருமாளிகை ....உம்....அழைத்துச் செல்லுங்கள்.

(அப்போது புலவர் பொய்கையாரை வாயிற்காவலன் அழைத்து வருகிறான்).

பொய்கையர்: மூவேந்தருள் நடு நாயகமே! தமிழரின் பெருமையை உலகெங்கும் பரப்பிய சோழர் குலத் திலகமே ! வாழ்க ! பொன்னியாற்று

மணலினும் பன்னாள் இந்நிலவுலகில் மன்னுக!

**செங்கணாண்:** மிக்க மகிழ்ச்சி ஐயா, தாங்கள் யார்?

பொய்கையார்: செங்கண்ணரே, யாம் ஒரு தமிழ்ப் புலவன்.

**செங்கணான்:** (அவர் அருகு சென்றவாறே) புலவர் பெருமானே ! வருக ! வருக ! உமது வரவால் யாம் மகிழ்கின்றோம்........

**அமைச்சர்:** அரசே! நம்மால் சிறைப்படுத்தப்பட்ட சேரமான் இரும்பொறையின் உயிரனையர் இப்புலவர்! பெயர் பொய்கையார் என்பதாகும்.

**செங்கணான்:** (வியந்தபடி) பொய்கையாரா? தங்கள் புலமை நலத்தை அறிவோம். இன்று தங்களையே அறியும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு யாம் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

**பொய்கையார்:** வளவர் பெரும ! பெருந்தகைமை கொண்ட நினக்கும் என்னுயிர் அனையான் சேரமானுக்கும் கழுமலத்தில் நடந்த போரைப் பற்றிக் கேள்வியுற்று அங்கு விரைந்தேன். களத்தைக் கண்டேன். எனதுளத்திலே தோன்றியவற்றை நாற்பது பாடல்களாக்கினேன். செங்கண் மாலே ! இக் 'களவழி நாற்ப'தை நீர் உவந்தேற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்.

( ஏட்டுச் சுவடியை நீட்டுகின்றார்.)

**செங்கணான் :** (அதனைப்பெற்றுச் சில பாடல்களைப் படித்துவிட்டு தமிழும் களங்கானச் சென்றதே அதோ தோடல்லாமல்,) யாம் மகிழ எம்மீது 'களவழி நாற்ப'தைப் பாடிய நல்லிசைப்புலவரே ! நீவிர் விரும்பி வந்த பரிசை யாம் தர விழைகின்றோம்!

**பொய்கையார்:** நன்று காவல! யாம் விரும்புவது, உம்மிடம் நான் கேட்கும் பரிசு....பரிசு...

**செங்கணான்:** புலவரே! தயங்காமல் கேட்கலாம்! தமிழுக்கு மறுப்பே கிடையாது.

**பொய்கையார்:** மறுக்க மாட்டாய் என்று தெரியும். அதனால்தான் நம்பிக்கை யோடு வந்துள்ளேன். தமிழ் வரலாற்றில் என்றும் வாழப்போகிற யாம் பாடிய 'களவழி நாற்பது' –பாடலுக்கும் ஒரே பரிசாகக் கணைக்காலிரும்பொறையைச் சிறைவீடு செய்ய வேண்டுகின்றேன்.

செங்கணான்: அவ்வளவுதானே! படைத் தலைவரே! சேர மாமன்னரைச் சிறைவீடு செய்து வேந்தர் என்னும் எல்லாச் சிறப்புகளோடும் அவைக்கு அழைத்து வருக. புலவர் பெருமானே, சேரரை செருகளத்தில் போரில் கொண்டோம். தாங்கள் தமிழ்ப்பாவால், கொண்டீர்கள்!

பொய்கையார்: செங்கண் இளமாலே! உமது சிந்தை வாழ்க! உமது செயலுக்கு நன்றி கொற்றவ, நன்றி !

செங்கணான்: செந்தமிழ்ப் பெருந்தகையே ! எனது கழுமலப்போர் வெற்றியைப்பற்றிக் 'களவழி நாற்பது' கவிதை பாடிய தங்களுக்கல்லவா யான் நன்றிகூற வேண்டும். (படைத் தலைவர் சேரனை அவைக்கு அழைத்து வருகின்றார்.) சேரமான் கணைக்கால் இரும்பொறையே! புலவர் பொய்கையார் 'களவழி நாற்ப'தால் எம்மை வென்றுவிட்டார் இல்லை இல்லை "எம்மை வென்றது தமிழே" அதுதான் உண்மை. நீர் இப்போது எம் விருந்தினர். முன்போன்று இனி நீர் உமது நாடு சென்று உரிமையுடன் ஆட்சி புரியலாம்!

சேரன்: (புலவரைத் தழுவிக் கொண்டு) புலவர் பெருந்தகையே ! தாங்கள் என்பாற் கொண்ட அன்பிற்கு என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

பொய்கையார்: இரும்பொறை! வருந்தாதே! நீ...'தமிழ் வென்ற பரிசு!' ஆமாம்.....முத்தமிழ் வென்ற பரிசு ! தமிழ்கூறும் நல்லுலகம் உள்ளவரை நீடு புகழுடன் நீ வாழ்வாயாக!

ஆசிரியர் குறிப்பு

திரு கு. சிவமணி தஞ்சை மாவட்டம் கரந்தையில் திரு. சிவ குப்புசாமி, திருமதி பர்வதத்தம்மை ஆகியோருக்கு 1932இல் பிறந்தார். கரந்தை புலவர் கல்லூரி, பாபநாசம் திருவள்ளுவர் கலைக்கல்லூரி ஆகியவற்றில் முதல்வராகப் பணியாற்றியவர். இந்திய அரசியலமைப்பின் அதிகாரமுறையைத் தமிழாக்கம் செய்துள்ளார். தற்பொழுது புதுவையில் சட்ட ஆட்சிமொழிச் சொற்களஞ்சியப் பதிப்புப் பணியில் உள்ளார்.

அருஞ்சொற்பொருள்

கொற்றம்–வெற்றி; எண்பேராயம் – எண்பெருந் துணைவர் (காரணத்தியலவர், கரும விதிகள், கனகச் சுற்றம், கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளிமறவர்); ஐம் பெருங்குழு – அரசர்க்கு ஆலோசனை கூறும் ஐவர் (அமைச்சர், அந்தணர், படைத்தலைவர், தூதுவர், சாரணர்);

இசைவு– உடன்பாடு, திறை–கப்பம்; பார்–உலகம்; தளை–விலங்கு; விழைவு–விருப்பம்; அவலம்–துன்பம், கவலை; அவை–சபா மண்டபம்; கைம்மாறு–பதிலுதவி.

பொருளுணர் பயிற்சி

அ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1) வேந்தர் கொண்ட கருத்திற்கு .........வினரும் ஒருமனத்தராய் உடன்பாடு தெரிவிக்கின்றனர்.

2) உம்மைக் கைகால்களில் ...... வரவேற்பதற்கு யாம் வருந்துகின்றோம்.

3) இக் ––––– நீர் உவந்தேற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

ஆ. மூன்று வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) அரசனுக்கு ஆலோசனை கூறும் இரு குழுக்கள் எவை?

2) சோழனின் திருமுகத்திற்குச் சேரமான் கூறிய பதிலை எழுதுக.

3) தாம் எதற்கு வருந்துவதாகச் சோழ மன்னன் குறிப்பிடுகிறார்?

4) மாபெருங் குற்றமாக மன்னர் கூறியது எது?

5) பொய்கையார் சோழனை எவ்வாறு வாழ்த்தினார்?

6) சோழ மன்னனைப்பற்றிப் புலவர் பாடிய நூலின் பெயரை எழுதி அதற்காகப் பெற்ற பரிசையும் எழுதுக.

7) உயிரிழப்பு, பொருளிழப்பு குறித்துச் சோழ மன்னன் யாது தெரிவித்தான்?

இ. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.

1) சேரமான்மீது போர் தொடுக்க தம் மன்னர் எண்ணிய எண்ணமாக அமைச்சர் கூறியவை யாவை?

2) சோழ மாமன்னர் விடுத்த திருமுகத்திலுள்ள செய்தியை விவரி.

3) சேர மன்னனின் நெறி மறந்த செயல்களாக அமைச்சர் கூறியவற்றை எழுதுக

**ஈ. பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக.**

புலவர் பொய்கையார் சேரனை எவ்வாறு விடுவித்தார்?

**மொழித்திறன் பயிற்சி**

**1. சந்திப் பிழையின்றி எழுதுக.**

1) சோழ நாட்டு தூதுவர் வாயிலில் தங்களது இசைவை எதிர்பார்த்து காத்துள்ளார்.

2) சிந்தித்து சிறந்ததொரு முடிவை தெரிவிக்க வேண்டுகிறேன்.

**2. கீழ்க்காணும் வாக்கியத்திலுள்ள பிழையினை நீக்கி எழுதுக.**

சோழன் குறித்த நாளுக்கு முன்னரே வில்லவர் படையுடன் காத்திருக்கும் என்று சொல்!

**3. வாக்கிய வகையைச் சுட்டுக.**

உறவுக்குப் பாலமா அல்லது தினவெடுத்த தோள்களுக்குப் பலியா?

**4. கீழ்க்காணும் விடை வருமாறு வினா அமைக்க.**

சேரமான் இரும்பொறையின் உயிரனையார் இப்புலவர்; பெயர் பொய்கையார் என்பதாகும்.

**5. கீழ்க்காணும் உரையாடலைச் செய்தியாக மாற்றுக.**

1. ùNeLQ ©u : நீவிர் விரும்பும் பரிசை யாம் தர விழைகின்றோம்.

2. அமைச்சர்: அரசே! நம்மால் சிறைப்படுத்தப்பட்ட சேரமான் இரும்பொறையின் உயிரனையர் இப்புலவர்; பெயர் பொய்கையார்.

**6. நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக.**

உரிமை விழைவு கொண்டது குற்றமா

அது எப்படிக் குற்றமாகும் ஆகாது

**7. கீழ்க்காணும் சொற்களுக்கு அகராதியைப் பயன்படுத்தி ஏற்ற பொருள் எழுதுக.**

இறுமாந்த, அறிவிலி, திருமுகம், களம்